# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# Annual Performance Report

# 2021



විදේශ අමාත්‍යාංශය

வெளிநாட்டு அமைச்சு

Foreign Ministry

# வெளிநாட்டு அமைச்சு

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# 2021

**வருடாந்த செயலாற்றுகை அறிக்கை- 2021**
**வெளிநாடு அமைச்சு**
**செலவினத் தலைப்பு இல. 112**

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| **அத்தியாயம் 01** | **அறிமுகம்/ நிறுவனத்தின் சிறப்புக்குறிப்பு** | 5 |
| | அமைச்சின் தொலைநோக்கு மற்றும் பணி இலக்கு | 7 |
| | கடமைகள் மற்றும் செயற்பாடுகள் | 8 |
| | நிறுவன வரைபடம் | 9 |
| | வெளிநாட்டு இராஜதந்திர பணியகங்களின் /பதவிகளின் ஒருங்கமைப்பு | 10 |
| | இவ்வமைச்சின் கீழுள்ள பிரிவுகள் | 11 |
| **அத்தியாயம் 02** | **முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்** | **12** |
| | செயலாற்றுகை மீள்பார்வை: மக்களை மையப்படுத்திய இராஜதந்திரம் | 21 |
| | கொன்சியுலர் சேவைகள் | 22 |
| | உலகளாவிய எல்லை/ உயர்மட்ட விஜயங்கள் | 24 |
| | செயலாற்றுகை மீள்பார்வை: ஒன்றுக்கொண்டு இணைந்த பிரிவுகள் | 26 |
| | ஐக்கிய நாடுகள் மற்றும் மனித உரிமைகள் பிரிவு | 26 |
| | பொருளாதார விவகாரங்கள் பிரிவு | 33 |
| | சமுத்திர விவகாரங்கள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற பிரிவு | 36 |
| | கொள்கை திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் மனிதவள அபிவிருத்தி பிரிவு | 40 |
| | பொது இராஜதந்திர பிரிவு | 43 |
| | சர்வதேச பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத தடுப்பு பிரிவு | 44 |
| | செயலாற்றுகை மீளாய்வு: பிராந்திய பிரிவுகள் | 47 |
| | ஆபிரிக்கா பிரிவு | 47 |
| | அமெரிக்கா பிரிவு | 48 |
| | கிழக்கு ஆசியா பிரிவு | 52 |
| | ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய பிரிவு | 56 |
| | மத்திய கிழக்கு பிரிவு | 59 |
| | தெற்கு ஆசியா மற்றும் சார்க் பிரிவு | 64 |
| | தென் கிழக்கு ஆசியா பிரிவு | 69 |
| | செயலாற்றுகை மீளாய்வு: தொழிற்பாட்டு பிரிவுகள் | 75 |
| | மனித வளங்கள் மற்றும் தூதரகப்பணியக முகாமைத்துவ பிரிவு | 75 |
| | சட்டப் பிரிவு | 77 |
| | வெளிநாட்டு சொத்து முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவு | 81 |
| | நெறிமுறைப் பிரிவு | 82 |
| | பொது நிருவாகப் பிரிவு | 83 |
| | உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணைப் பிரிவு | 85 |
| | 2021 இல் நடந்த குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் | 86 |
| **அத்தியாயம் 03** | **இந்த வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை** | 89 |
| | நிதிச் செயலாற்றுகை அறிக்கை | 89 |
| | நிதி நிலைப்பாட்டு அறிக்கை | 90 |
| | காசோட்ட அறிக்கை | 91 |
| | நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு | 92 |
| | வருவாய் சேகரிப்பின் செயலாற்றுகை | 93 |

| | | |
|---|---|---|
| | ஒதுக்கீடுகளின் பயன்பாட்டின் செயலாற்றுகை | 93 |
| | நிதி விதிமுறை 208 இன்படி, அமைச்சின் செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள் வழங்கல் | 94 |
| | நிதி சாரா சொத்துக்களை அறிவித்தலின் செயலாற்றுகை | 95 |
| | 2021 ஆம் வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை | 95 |
| | தேசிய பாதீட்டு முன்மொழிவு 2021 ஐ செயற்படுத்துவதிலான முன்னேற்றம் | 96 |
| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 97 |
| **அத்தியாயம் 04** | **செயற்பாட்டுச் சுட்டிகள்** | **106** |
| | நிறுவனத்தின் செயற்பாட்டுச் சுட்டிகள் (செயல் திட்டத்தை அடிப்படையாக் கொண்டது) | 106 |
| | பிரதான செயற்பாட்டுச் சுட்டிகள் அடைந்தமையின் வீதாசாரம் | 107 |
| **அத்தியாயம் 05** | **நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்தமையின் செயலாற்றுகை** | 124 |
| | இனங்காணப்பட்ட நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்கள் | 124 |
| | நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைதல் மற்றும் சவால்கள் | 124 |
| **அத்தியாயம் 06** | **மனிதவள சிறப்புக்குறிப்பு** | 126 |
| | பணிநிலைப்பிரிவு முகாமைத்துவம் | 126 |
| | மனிதவள அபிவிருத்தி | 128 |
| **அத்தியாயம் 07** | **இணக்கப்பாட்டு அறிக்கை** | 134 |

# அத்தியாயம் 01

**நிறுவன சுயவிவரம்**

## 1.1 வெளிநாட்டு அமைச்சு மற்றும் தூதரக வலையமைப்பு

வெளிநாட்டு அமைச்சின் நேரடி நிர்வாகத்தின் கீழ் வரும் வெளிநாட்டில் உள்ள இராஜதந்திரத் தூதரகங்கள் மற்றும் பணிமனைகளை இலங்கை தொடர்ந்தும் பராமரிக்கின்றது.

| | | |
|---|---|---|
| தூதரகங்கள் / உயர்ஸ்தானிகராலயங்கள் | - | 49 |
| ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர தூதரகங்கள் | - | 02 |
| பிரதி உயர்ஸ்தானிகராலயங்கள் | - | 01 |
| துணைத் தூதரக பொது அலுவலகங்கள் | - | 13 |
| பிரதிநிதி அலுவலகங்கள் | - | 01 |
| மொத்தம் | - | **66** |

பலதரப்பு மற்றும் பிராந்திய ஈடுபாடுகளை ஊக்குவித்தல், இருதரப்பு அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்துதல், பாதுகாப்பு மற்றும் மூலோபாய ஒத்துழைப்பு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, அபிவிருத்தி உதவி, கலாசார மற்றும் மக்களிடையேயான உறவுகள் ஆகியவற்றின் மூலம் இலங்கையின் தேசிய நலன்களைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் அடிப்படைப் பொறுப்பாகும். மேலும், வெளிநாட்டில் உள்ள இலங்கையின் புலம்பெயர் சமூகங்களுக்குத் தேவையான தூதரக உதவி மற்றும் தொழிலாளர் நலன்களை வழங்குவதற்கு வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள்ஃபணிமனைகள் பொறுப்பாகும். இந்த உறுதியான நோக்கங்களுக்கு மேலதிகமாக, உலகின் பல்வேறு புவிசார் அரசியல் நிலப்பரப்புகளில் அமைந்துள்ள ஒவ்வொரு வெளிநாட்டுத் தூதரகங்களை நிறுவுவதற்கு அருவமான, மூலோபாய மற்றும் நீண்ட கால நோக்கங்களின் பரந்த நோக்குநிலை எதிர்பார்ப்பு உள்ளது.

## இலக்கு

சர்வதேச சமூகத்திற்குள் பொறுப்புள்ள நாடாக இருத்தல் மற்றும் அனைத்து நாடுகளுடனும் நட்புறவைப் பேணுதல்.

## நோக்கம்

அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கைக்கு இணங்க, இலங்கையின் தேசிய நலன்களை சர்வதேச அளவில் மேம்படுத்துதல், முன்வைத்தல் மற்றும் பாதுகாத்தல் மற்றும் இலங்கையின் தேசிய நலன்களுக்கு இணங்க வெளிநாட்டு உறவுகளை நிர்வகிப்பது குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

## 1.3 வெளிநாட்டு அமைச்சின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள்

**பகுதி 1: பிரிவு(1)-இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானி இல:2194/74-25.09.2020**

**வெளிநாட்டு அமைச்சர்**

**1. நோக்கம்**

சர்வதேச அளவில் இருதரப்பு மற்றும் பலதரப்பு உறவுகள் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசாரத் துறைகள் மூலம் இலங்கையின் சித்திரத்தை உயர்த்தி அதன் மூலம் நட்புரீதியான மற்றும் அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையை ஏற்றுக்கொள்வதன் மூலம் இலங்கையின் அடையாளத்தை நிலைநாட்டுதல்.

**2. விடயங்கள் மற்றும் செயற்பாடுகள்**

சம்பந்தப்பட்ட அரச அமைச்சிற்கு கொள்கை வழிகாட்டுதலை வழங்குதல் மற்றும் வெளியுறவு விவகாரங்கள் தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல், பரிந்துரைக்கப்பட்ட சட்டங்கள், சட்டங்கள் மற்றும் கட்டளைகள், தேசிய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் திட்டத்தை செயற்படுத்துதல், அரச முதலீடு மற்றும் தேசிய அபிவிருத்தித் திட்டம், மற்றும் 'செழிப்பு மற்றும் சிறப்பின் காட்சிகள்' என்ற கொள்கை அறிக்கையின்படி, அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் பிற தேசிய கொள்கைகளின் அடிப்படையில் 'நட்பு மற்றும் அணிசேரா வெளியுறவுக் கொள்கையை' உருவாக்குவதற்கான கீழே குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் சட்டப்பூர்வ நிறுவனங்களின் கீழான விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான கொள்கைத் திட்டங்கள் மற்றும் திட்டங்களை உருவாக்குதல், செயற்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

**3. விசேஷ முன்னுரிமைகள்**

1. நாட்டின் சுதந்திரத்தை உறுதி செய்யும் நாடுகளுடன் சமமாக நட்புறவைப் பேணுதல்
ii. இருதரப்பு ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்தல், மற்றும் நாட்டின் நலன்களுக்கு பாதகமான இருதரப்பு ஒப்பந்தங்களை ஆய்வு செய்தல் மற்றும் ஒப்பந்தங்களை முடிப்பதில் உள்நாட்டு பொருளாதாரத்திற்கு தீங்கு விளைவிக்காத பின்னணியை உருவாக்குதல்.
iii. வெளிநாட்டு தூதரகங்களைத் தேர்ந்தெடுப்பதில், ஜனாதிபதியின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி, நாட்டின் வெளியுறவுக் கொள்கையின்படி நிறைவேற்றுவதற்குப் பங்களிக்கும் அளவுகோல்கள் பின்பற்றப்படுகிறதா என்பதையும், தூதரகங்களின் விரும்பிய நோக்கங்கள் அடையப்படுகின்றனவா என்பதையும் தொடர்ந்து மதிப்பீடு செய்தல்.

**4. தொடர்புடைய நிறுவன மற்றும் சட்ட கட்டமைப்பு**

| திணைக்களங்கள், சட்டபூர்வ நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் | நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்கள் மற்றும் கட்டளைகள் |
|---|---|
| 1. வெளிநாட்டில் உள்ள தூதரகங்கள்<br>2. தேசிய கடல் விவகாரக் குழு செயலகம்<br>3. அரசு சாரா அமைப்பின் செயலகம் | • 1981ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க தூதரக செயற்பாடுகள் சட்டம்<br>• 1996ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க இராஜதந்திர சிறப்புரிமைச் சட்டம்<br>• 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் (பதிவு மற்றும் மேற்பார்வை) சட்டம் |

## 1.4 வெளிநாட்டு அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு



## வெளிநாட்டில் உள்ள இராஜதந்திரத் தூதரகங்கள் / பணிமனைகளின் வலையமைப்பு



### 1.5 அமைச்சின் கீழ் உள்ள பிரிவுகள்

**குறுக்கு வெட்டு பகுதிகள் கொண்ட பிரிவுகள்**

ஐக்கிய நாடுகள் மற்றும் மனித உரிமைகள் பிரிவு

பொருளாதார விவகாரங்கள் பிரிவு

சமுத்திர விவகாரங்கள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றப் பிரிவு

கொள்கைத் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் மனித வள அபிவிருத்திப் பிரிவு

பொது இராஜதந்திரப் பிரிவு

சர்வதேச பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு பிரிவு

**பிராந்திய பிரிவுகள்**

ஆபிரிக்கா பிரிவு

அமெரிக்கா பிரிவு

கிழக்கு ஆசிய பிரிவு

ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய பிரிவு

மத்திய கிழக்கு பிரிவு

தெற்காசியா மற்றும் சார்க் பிரிவு

தென் கிழக்கு ஆசிய பிரிவு

**செயற்பாட்டு பிரிவுகள்**

கொன்சியூலர் விவகாரங்கள் பிரிவு

மனித வளங்கள் மற்றும் தூதரக முகாமைத்துவப் பிரிவு

சட்டப் பிரிவு

வெளிநாட்டு ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவு

நெறிமுறைப் பிரிவு

கணக்கு மற்றும் நிதிப் பிரிவு

பொது நிர்வாகப் பிரிவு

உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவு

## அத்தியாயம் 02

### முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

கொவிட்-19 நோய்ப்பரவலானது, 2020 ஆம், 2021 ஆம் ஆண்டுகளில் சர்வதேச நிலப்பரப்பில் ரீதியில் முன்னெப்போதுமில்லாத சவால்களையும் முன்பு ஆராயப்படாத வாய்ப்புக்களையும் கொண்டுவந்தது. இந் சவால்கள் சிலவற்றின் அளவு தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் காணாதவை. உலகெங்கிலும் உள்நாட்டிலும் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பெரும் சுருக்கங்கள் தொற்றுநோய்க்கு மத்தியில் ஒப்பீட்டளவில் சிறிய இலங்கைப் பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய சவாலாக அமைந்தன. ஏற்றுமதி வருமானம், சுற்றுலா வருவாய் மற்றும் வெளிநாட்டுப் பணம் அனுப்புதல் ஆகியவற்றின் வீழ்ச்சியின் அடிப்படையில் அந்நிய செலாவணி மீதான தாக்கம் இலங்கையின் பொருளாதாரத்தில் மந்தமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இந் வெளிப்புற தாக்கமும் சூழ்நிலைகளும், வெளிநாட்டமைச்சும் அதன் 66 தூதரக பணியகங்களின் ஒருங்கமைப்பும், அதன் இராஜதந்திர அணுகுமுறை மீது மீளக் கவனம் செலுத்தவும் மாற்றியமைக்கவுமான புதிய மூலோபாயத்தை கண்டுபிடிப்பதற்கும் அவற்றைப் பின்பற்றவும் தேவைப்பட்டது.

ஆகவே, தேசிய சொத்துக்களைப் பாதுகாத்தல், தேசிய நலன்களைப் பாதுகாத்தல் மற்றும் தேசிய பிம்பத்தை உருவாக்குதல் போன்ற இருதரப்பு உறவுகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகள் தொடர்ந்த அதேநேரம், புதிய பொறுப்புகளில் வெளியுறவு அமைச்சகத்தின் பங்கு தெளிவாக வரையறுக்கப்பட்டு, பொருளாதார உறவுகளை வலுப்படுத்துதல் முன்னிடத்தில் இருக்கிறது.

மேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் 'செழிப்பு மற்றும் மேன்மையின் காட்சி' என்ற தேசிய கொள்கைக் கட்டமைப்பையும் அதன் துறைசார் கொள்கைகளையும் பிரதிபலித்து, வெளிநாட்டமைச்சும் ஜனாதிபதி செயலகம் ஒன்றிணைந்து, 2020 இன் இறுதிப்பகுதியில் "2020 இற்கும் அதற்கப்பாலுக்குமான 20 அம்ச பிரதான வெளிநாட்டுக் கொள்கை வழிகாட்டல்கள்" என்ற தலைப்புள்ள கொள்கை ஆவணத்தை உருவாக்கி, அதை 2021 இன் ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றது. அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையின் தொலைநோக்கினை உள்ளடக்கிய இந் ஆவணமானது, இந் நிருவாகத்தின் முக்கிய மூன்று தூண்களான வெளியுறவுக் கொள்கை, தேசிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு குறித்த அரசாங்கத்தின் கொள்கைகளை ஒருங்கிணைத்து ஒத்திசைப்பதை நோக்கமாகக் கொண்டது.

#### இலங்கையின் இருதரப்பு இராஜதந்திர எல்லை

2021 ஆம் காலப்பகுதியில் பிற நாடுகளுடனான இலங்கையின் பரஸ்பர கூட்டுறவானது கொவிட்-19 காலத்திலும் முன்னோக்கிச் சென்றது. தனது உலகளாவிய கூட்டுறவினை உயர்மட்டத்திற்கு எடுத்துச்சென்ற இலங்கை, கூட்டுப்பங்குடைமைகளை ஆழமாக்கி, விரிவாக்கியதுடன், பிராந்திய மற்றும் சர்வதேச மன்றங்களில் ஒரு திடமான இராஜதந்திர ஈடுபாட்டினையும் பின்பற்றியது. மேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம மந்திரி மற்றும் கௌரவ வெளிநாட்டு அமைச்சர் ஆகியோர், பெரும்பாலும் மெய்நிகர் தளங்கள் மூலமாக, தத்தமது சரிநேர் தலைவர்களுடனும் உலகெங்குமிருந்தும் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்போருடனும் செயலீடுபாட்டுடன் இருந்தனர். இக்கூட்டங்களின்போது, இருதரப்பு உறவுகள் தொடர்பிலான முக்கிய விடயங்கள் மற்றும் பிராந்திய கூட்டுறவுகள் போன்றவை கலந்துரையாடப்பட்டன.

2021 இன்போது மேற்கொள்ளப்பட்ட முக்கிய உயர்மட்ட வெளிச்செல்லும் விஜயங்களாவன: செப்டெம்பரில் மேதகு ஜனாதிபதி மற்றும் கௌரவ வெளிநாட்டமைச்சர் பேரா.ஜி எல் பீரிஸ் ஆகியோர் ஐ.நா பொதுச்சபையின் உயர்மட்ட பிரிவில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் விஜயம், நவம்பரில் பிரித்தானியாவின் கிளாஸ்கோ நகரில் இடம்பெற்ற காலநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு ஒப்பந்தம் -UNFCCC CoP-26 இன் உலகத்தலைவர்களின் உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக மேதகு ஜனாதிபதி மற்றும் கௌரவ வெளிநாட்டமைச்சரின் விஜயம் மற்றும் 5 ஆவது இந்துசமுத்திர மாநாட்டிலும் 2020 டிசம்பரில் எக்ஸ்போவில் கலந்துகொள்வதற்காகவும் ஐக்கிய அரபு அமீரக விஜயம், செப்டெம்பரில் கௌரவ பிரதம மந்திரி மற்றும் வெளிநாட்டமைச்சரின் இத்தாலி விஜயம், மார்ச்சில் கௌரவ பிரதம மந்திரியின் பங்களாதேச விஜயம், அக்டோபரில் வெளிநாட்டமைச்சரின் பிரித்தானிய விஜயம், பின்னர் நவம்பரில் இந்துசமுத்திர வளைய நாடுகள் கூட்டமைப்பின் துணைத் தலைமைப் பதவியை ஏற்பதற்காக பங்களாதேச விஜயம், டிசம்பரில் கௌரவ பசில் ராஜபக்ஷ, நிதியமைச்சரின் இந்திய விஜயம், செப்டெம்பரில் பிராந்திய கூட்டுறவிற்கான

இராஜாங்க அமைச்சர், கௌரவ தாரக பாலசூரியவின் ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கான விஜயம், பின்னர் டிசம்பரில் ஓமானுக்கு விஜயம், அதன் பின் அக்டோபரில் கௌரவ வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் சந்தைப் பன்முகப்படுத்தலுக்கான இராஜாங்க அமைச்சர் கௌரவ பிரியங்கர ஜயரத்னவுடன் இணைந்து கட்டாருக்கு விஜயம், அதன் பின்னர் அக்டோபரில் அவர் சுற்றுலா அமைச்சர் கௌரவ பிரசன்ன ரணதுங்கவுடன் இணைந்து, பாரிஸ் சுற்றுலா வர்த்தக சந்தையில் கலந்துகொள்ள பாரிஸ் விஜயம், கௌரவ இராஜாங்க அமைச்சர் அஜிஜ் நிவார் கப்ரால் ஏப்ரலில் கட்டார், அக்டோபரில் டுபாய், நவம்பரில் ஓமான் விஜயம், டிசம்பரில் ரியாட் மற்றும் அபுதாபி விஜயம், அவருடன் கௌரவ விமல் வீரவன்ச இணைந்து ஜூன் இல் ரஷ்யாவிற்கு விஜயம், போக்குவரத்து அமைச்சர், கௌரவ பவித்திரா வன்னியாராய்ச்சி செப்டெம்பரில் ரஷ்யா விஜயம், போக்குவரத்து அமைச்சர் கௌரவ காஞ்சனா விஜேசேகர, செப்டம்பரில் ரஷ்யாவிற்கு விஜயம், ஜூலையில் கௌரவ நாமல் ராஜபக்ஷவின் டோக்கியோ விஜயம், பின் டிசம்பரில் கட்டார், அக்டோபரில் இந்தியா விஜயங்கள், இவரும் விமான போக்குவரத்து மற்றும் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் கௌரவ டி.வி.சானக்கவும் இணைந்து மார்ச் மாதம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் விஜயம், செப்டெம்பரில் கௌரவ உதய கம்மன்பிலவின் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் ஈரானுக்கான மற்றும் நவம்பரில் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கான விஜயம், ஆகஸ்டில் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் ஃபலீலின் ஈரான் விஜயம் ஆகியவை குறிப்பிட வேண்டிய சில விஜயங்களாகும்.

இக்காலகட்டத்தில் இடம்பெற்ற உயர்மட்ட உள்வருகைகள்: பெப்ரவரியில் பாகிஸ்தான் பிரதம மந்திரியின் விஜயம், ஜனவரியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கௌரவ. கலாநிதி ஜய்ஷங்கரின் விஜயம், டிசம்பரில் அவுஸ்திரேலிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், கௌரவ கரன் அன்ட்ரூஸின் விஜயம், ஏப்ரலில் சீன பாதுகாப்பு அமைச்சரின் விஜயம், நவம்பரில் ரஷ்ய பாதுகாபு கழக செயலாளரின் விஜயம், அக்டோபரில் இந்திய வெளிநாட்டமைச்சின் செயலாளரின் விஜயம், நவம்பரில் ஐ.நா உதவி செயலாளர் நாயகத்தின் விஜயம், அக்டோபரில் இந்திய இராணுவ தலைவரின் விஜயம், நவம்பரில் ஐ.நா சிறப்பு அறிக்கையாளரின் விஜயம், டிசம்பரில் ஐ.நா அபிவிருத்தி திட்டம், உதவி நிருவாகி மற்றும் ஆசியா பசுபிக் இற்கான ஐ.நா அபிவிருத்தி திட்ட பணிப்பாளர் திருமதி விக்னராஜாவின் விஜயம்.

இந்த ஆண்டில், எமது கூட்டுறவினை ஒரு நெருக்கமான நிலைக்கு கொண்டு வர அடிக்கடி ஈடுபடுவதன் மூலம் கொழும்பில் உள்ள தூதரகத் தலைவர்களுடன் தொடர்புகளை வலுப்படுத்த அமைச்சு முயற்சித்தது. இதன் விளைவாக, கௌவர வெளிநாட்டு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் கொழும்பில் இஸ்லாமிய நாடுகளின் தூதரகத் தலைவர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வை நடாத்தினார். இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டார். இந்த காலப்பகுதியில் இலங்கையின் முக்கிய அபிவிருத்திகள் குறித்து வதிவிட இராஜதந்திரப் படைக்கு தெரிவிப்பதற்காக அமைச்சினால் பல இராஜதந்திர விளக்கங்களும் நடத்தப்பட்டன.

கடந்த வருடத்தில், ஸ்பெயின் மற்றும் ருமேனியாவில் இலங்கைத் தூதரகங்கள் நிறுவுதல், கொல்கத்தா (இந்தியா) மற்றும் ஷெங்டு (சீனா) ஆகிய நகரங்களில் துணைத்தூதரகங்களை நிறுவுதல் போன்றவற்றுக்கான அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. மடகஸ்காரின் ஒரு துணைத்தூதரகத்தினை திறந்துவைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. லீச்டென்ஸ்டைனுடன் இருதரப்பு உறவுகளை மேலும் விரிவாக்குவதற்காக, இலங்கை மார்ச் 2021 இல் இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்தது.

வெளிநாட்டு அமைச்சானது, மிகவும் கவனமான பரிசீலனையைத் தொடர்ந்து, 31 டிசம்பர் 2021 முதல் நடைமுறைக்கு வரும்வகையில் நைஜீரியாவின் அபுஜாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலம், ஜேர்மனியின் பிராங்பேர்ட்டில் உள்ள இலங்கையின் துணைத் தூதரகம்; மற்றும் சைப்ரஸ் நிக்கோசியாவில் உள்ள இலங்கையின் துணைத் தூதரகம் ஆகிய மூன்று தூதரக பணியகங்களை/ பதவிகளை தற்காலிகமாக மூடுவதென்ற தீர்மானத்தினை எடுத்துள்ளது.
அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இத்தீர்மானமானது; வெளிநாட்டு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் இலங்கையின் வெளிநாட்டு தூதரக பணியகங்களின் ஒருங்கமைப்புக்களை மீளக்கட்டமைக்கும் செயன்முறையின் ஒரு பகுதியாகும். உலகளாவிய நோய்ப்பரவலால் எதிர்கொள்ளப்பட்டுள்ள பாரிய பொருளாதார சவால்களின் பின்னணியில், இருதரப்பு உறவுகளை திறம்பட நடத்துவதை உறுதி செய்யும் அதே வேளையில், வெளிநாடுகளில் இலங்கை தூதரக பணியகங்களை / பதவிகளைப் பராமரிப்பது தொடர்பான செலவினங்களைக் குறைத்தல் மற்றும் மிகவும் தேவையான வெளிநாட்டு கையிருப்புகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்த மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படுகிறது. மேலும் இவ்வமைச்சு, தற்போது வளர்ச்சியடைந்து வரும் நிலையிலுள்ள தனது பணிநிலைப்பிரிவு சீராக்கத்தினை, இவ்வமைச்சிலும் அதன் தூதரக பணியகங்களிலும் ஆரம்பித்துள்ளது.

நோய்ப்பரவலுக்கு மத்தியிலும் இப்பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் இலங்கை பல்வேறு பல்தரப்பு அரசியல் ஆலோசனைகளிலும் முக்கிய கூட்டங்களிலும் பங்கெடுத்தது: ஜனவரி மாதம் ஐரோப்பிய ஒன்றியம்- இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் 23 ஆவது அமர்வு, பெப்ரவரியில் ஜப்பான் இலங்கை கொள்கை உரையாடலின் 2 ஆவது அமர்வு, பெப்ரவரியில் பாகிஸ்தான்-இலங்கை கூட்டு பொருளாதார ஆணைக்குழுவின் 12 ஆவது அமர்வு, ஏப்ரல் மாதம் இலங்கை-நியூசிலாந்து உத்தியோகபூர்வ ஆலோசனைகள், முதலாவது அமர்வு ஜூன் மாதம் எத்தியோப்பியாவின் வெளிவிவகார அமைச்சுகளுக்கு இடையிலான இருதரப்பு ஆலோசனைகள், ஜூன் மாதம் துருக்கியுடனான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான 2 ஆவது கூட்டு ஆணைக்குழு, இலங்கைக்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான வர்த்தகம், பொருளாதாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான அரசாங்கங்களுக்கு இடையிலான ஆணைக்குழு ஜூன், 1 மற்றும் 2 ஆவது சுற்றுகளில் பங்களாதேஷ் - இலங்கை முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் ஜூன் மாதம் நடைபெற்ற வர்த்தக பேச்சுவார்த்தைக் குழுவின் முதல் சுற்று, ஜூலை மாதம் ஜெர்மனியுடன் வெளியுறவு அலுவலக ஆலோசனையின் (எஃப்ஓசி) முதல் சுற்று, செப்டம்பரில் சீனாவுடனான கூட்டு பொருளாதார வர்த்தக சபையின் 7 ஆவது அமர்வு, அக்டோபரில் ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை வேலை அபிவிருத்தி ஒத்துழைப்புக் கூட்டம், அக்டோபரில் ரஷ்யாவுடன் வெளியுறவு அலுவலக ஆலோசனைகள், அக்டோபரில் இந்தியா - இலங்கை கூட்டுப் பணிக்குழு கூட்டம், தன்னார்வ தேசிய மீளாய்வின் 2 ஆவது தொகுப்பினை இலங்கை தயாரிப்பதற்கான தேசிய வழிகாட்டல் குழு கூட்டங்கள் ஜூலையிலும், இதன் 2 ஆவது சுற்று நவம்பரிலும் இடம்பெற்றன. அக்டோபரில் பஹ்ரைனுடன் முதல் சுற்று அரசியல் ஆலோசனைக் கூட்டங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

**பன்முகத்தன்மைக்கான இலங்கையின் அணுகுமுறை**

இக்காலப்பகுதியில், குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இறையாண்மை, சுதந்திரம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் ஐக்கிய நாடுகளின் பல்தரப்பு இராஜதந்திரத்தில் இலங்கை பங்கேற்றது.

அணிசேரா இயக்கத்தின் (NAM) ஸ்தாபக உறுப்பினர் என்ற வகையில் இலங்கை, தொடர்ந்தும் NAM உடன் தீவிர பங்காற்றி, சர்வதேச குழுவின் பொறுப்பான உறுப்பினராக அதன் சர்வதேச கடமைகளை நிலைநிறுத்தியுள்ளதுடன், பொதுநலவாய நாடுகளின் உறுப்பினராக பிற நாடுகள், பிராந்திய கூட்டுறவுக்கான தெற்காசிய சபை (சார்க்), வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப, பொருளாதாரக் கூட்டுறவிற்கான முயற்சி (BIMSTEC), இந்துசமுத்திர வளைய நாடுகள் கூட்டமைப்பு (IORA), ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB), ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (உரையாடல் பங்காளியாக) மற்றும் கொழும்பு திட்டம் ஆகியவற்றுடன் தொடர்ந்தும் இடைவினையாற்றி வருகிறது.,

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில், இலங்கை தொடர்ந்தும் அரசியலமைப்பு ரீதியான உரிமைக்கட்டளைகள் மற்றும் சட்ட அமைப்புகளுக்கிணங்க மனித உரிமைகளை ஊக்குவித்தும் பாதுகாத்தும் வந்ததுடன், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச சமூகத்தின் ஊடாக சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுடனான தனது தொடர்ந்த மற்றும் நிலைபேறான ஈடுபாட்டையும் மேம்படுத்தியது. முக்கிய ஐ.நா கூட்டங்களில் பங்கேற்பதைத்தவிர, வெளிநாட்டமைச்சானது, பிற தொடர்புடைய அமைக்களுடனும் முகவரமைப்புக்களுடனும் ஒருங்கிணைந்து, உலகளாவிய கால ஆய்விற்குப் பதிலளிப்பதற்கான நடவடிக்கையை எடுத்தது. மேலும், 9 அடிப்படை ஐ.நா மனித உரிமைகள் ஒப்பந்தங்கள், மனித உரிமைகள் மீதான ஐரோப்பிய ஒன்றியம் – இலங்கை பணிக்குழு, ஆகியவற்றின் கீழ் தனது அறிக்கையிடல் கடப்பாடுகளையும் தொடர்ந்ததுடன், விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் சமூக பொருளாதாரம் போன்ற செயல் எல்லைகளில் பல்தரப்பு ஈடுபாட்டையும் உத்வேகத்துடன் பேணியது.

மனித உரிமைகள் கழகத்தின் 46 ஆவது அமர்வில், இலங்கை முன்னர் தான் ஏற்றுக்கொண்ட கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மனித உரிமைக்கழகத்தில் தொகுத்துரைத்தது. 2021 செப்டெம்பரில் ஜெனீவாவில் இடம்பெற்ற 48 ஆவது மனித உரிமைகள் கழகத்தின் அமர்வில், இலங்கையின் நிலைப்பாட்டினை இவ்வமைச்சு ஒருங்கிணைத்தபோது, கௌரவ வெளிநாட்டமைச்சர் ஒரு பதிவிடப்பட்ட அறிக்கையை முன்வைத்தார். இம்முயற்சிகளில் இலங்கை எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால்களில் ஒன்று, தவறான தகவல்களை எதிர்த்தல், சரியான பதிவுகளை முன்வைத்தல், நடந்தது என்ன என்பதற்கான துல்லியமான, குறிக்கோளுள்ள மற்றும் போரின் இறுதிக்கட்டத்தில் நிகழ்ந்தவை தொடர்பில் உண்மையான விவரங்களை முன்நிறுத்தல் என்பதாக இவ்வமைச்சு குறிப்பிட்டது.

நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் கடப்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக, இவ்வமைச்சானது, நீதி அமைச்சு மற்றும் பிற உள்நாட்டு இணை முகவரமைப்புக்கள் மற்றும் காணாமல் போனோருக்கான அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் இணக்கப்பாட்டுக்கான அலுவலகம் ஆகிய அமைப்புக்களுடன் இணைந்து தீவிரமாக செயற்படுகிறது.

சர்வதேச ஒப்பந்தங்கள் மீதான இலங்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக, ஏப்ரல் 2021 இல் வெளிநாட்டமைச்சானது, 20 இணை அமைச்சுக்களுடன்/ முகவரமைப்புக்களுடன் ஒரு பங்குதாரர் கூட்டத்தைக் கூட்டியது. 09 அடிப்படை மனித உரிமைகள் ஒப்பந்தங்கள் மற்றும் 2 விருப்பத்தெரிவு நெறிமுறைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் பதில்களை ஒருங்கிணைப்பதற்காக, இந்த ஒவ்வொரு முகவரமைப்பும் ஒரு குவிமையத்தைப் பெயர்குறிப்பிடுமாறு கோரப்பட்டது.

சர்வதேச மனித உரிமைகள் அறிக்கையிடல் கடப்பாடுகளில் சிவில் சமூகத்தின் தீவிரமான செயலீடுபாடுகளைப் பேணுவதற்கான மேதகு ஜனாதிபதியின் அர்ப்பணிப்பிற்கு அமைவாக, கௌரவ வெளிநாட்டமைச்சரின் தலைமையில் சிவில் சமூக அமைப்புக்களுடன் இவ்வமைச்சு ஆலோசனைகளை மேற்கொண்டது. நவம்பர் 2021 இல், சிவில் சமூகம் தொடர்பான சகல அம்சங்களையும் அதன் முயற்சிகளையும் ஒத்திசைவாக ஒருங்கிணைப்பதை உறுதிப்படுத்துவதற்காக அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகம், வெளிநாட்டு அமைச்சின் மேற்பார்வையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

சமூக மேம்பாடு மற்றும் மனித உரிமைகள் பிரச்சனைகள் தொடர்பான சிவில் சமூகத்தினரின் கரிசனைகளை கருத்தில்கொண்டு, அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட காத்திரமான நடவடிக்கைகளின் வெளிப்பாடே இதுவாகும். மேலும், பயங்கரவாத தடுப்புச்சட்டத்தை மீள்பரிசீலனை செய்தல் குறித்தும் அதில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், இலங்கை தரப்பினராகவுள்ள சர்வதேச நெறிமுறைகளுக்கமைவாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்குமென, சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுடன் தொடர்ந்து இடம்பெற்றுவரும் கலந்தாலோசனைகளிலும் இவ்வமைச்சு தீவிரமாக பங்கேற்றது.

கலாசார இராஜதந்திரக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், 2021 டிசம்பரில் பாரிஸில் நடந்த 'கட்புலனாகா கலாச்சார பாரம்பரியம் குறித்த அரசாங்கங்களுக்கிடையேயான குழுக் கூட்டத்தின்' 16வது அமர்விற்கு இலங்கை தலைமை தாங்கியது. அங்கு 'தும்பர ரத கலலா' செய்யும் கைவினை உலகின் கட்புலனாகா கலாச்சார பாரம்பரியமாக பொறிக்கப்பட்டது. இலங்கையின் பாரம்பரிய கைவினைப்பொருட்கள் மற்றும் சித்திரக்கலைக்கு இது ஒரு முக்கிய மைல்கல்லாகும்.

கருத்தில்கொள்ளப்படும் இக்காலப்பகுதியில், இலங்கையர்களின் நலன்களுக்காக, பல்தரப்பு ஈடுபாடு மூலமாக நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மீது தீவிரமாக கவனம் செலுத்தப்பட்டது. நிலையான அபிவித்திக் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதற்கு உயர் முன்னுரிமை வழங்குவதில் அரசாங்கம் கடமையுணர்வுடனான ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளது. இப்பின்னணியில், கௌரவ பிரதம மந்திரியின் தலைமையில் அமைச்சினுள்ளே ஒரு உயர்மட்ட வழிகாட்டல் குழுவை அமைப்பதில் வெளிநாட்டமைச்சு தனது பங்கினை ஆற்றியது.

நிலையான அபிவிருத்தி அறிக்கை 2021 இன் பிரகாரம், நாடுகளின் 2021 ஆம் ஆண்டுக்கான நிலையான அபிவிருத்தி தரவரிசைச் சுட்டியில் இலங்கை 7 ஆம் நிலைக்கு உயர்ந்துள்ளதுடன், உலகின் 165 நாடுகளில் 87 ஆவது நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்பதை இங்கு குறிப்பிடுவது தவிர்க்கமுடியாதது. நிலையான அபிவிருத்தியை அடைவதற்கான முழுமாற்றத்தைத் தரும் வழிகளைக் கண்டறியும் நோக்கில், சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் ஈடுபாட்டுடன் இருப்பதற்கும் இலங்கையின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், வெளியுறவு அமைச்சகம் நிலையான அபிவிருத்திக் கழகத்துடன் இணைந்து UNESCAP இன் ஒருங்கிணைப்புடன், 2021 நவம்பரில், "2030 நிகழ்ச்சி நிரலை முழுவதுமாக செயல்படுத்துவதை முன்னெடுத்துச் செல்லும் போது கோவிட்-19 இலிருந்து சிறப்பாக மீண்டு வருதல்" என்னும் தலைப்பில் 5ஆவது தெற்காசிய கருத்துக்களத்தினை நடத்தியது. கொவிட் 19 காரணமான பல்வேறு சமூக- பொருளாதார சவால்களுக்கிடையில் 2021 ஆம் ஆண்டுக்கான நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்களின் இந்த உறுதியான சாதனையானது, 2030 நிகழ்ச்சி நிரலுக்கான குறிக்கோள்களைப் படிப்படியாக எட்டுவதிலுள்ள இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மட்டத்தைச் சுட்டிக்காட்டுக்கிறது.

ஆயுதக்களைவின் கண்ணோட்டத்தில், இந் ஆண்டு, அணு ஆயுதங்களை தடை செய்வதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு வெளிநாட்டமைச்சு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றது, மற்றும் 1996 இல் கையெழுத்திடப்பட்ட விரிவான அணுசக்தி சோதனை தடையின் அவதானிப்புகளை அங்கீகரிக்க அழைப்பு விடுத்தது.

**பொது இராஜதந்திரம் மற்றும் இலங்கையின் பிரதிபிம்பத்திற்கு விரோதமான தகவல்களை எதிர்த்தல்**

2009 இல் முடிந் ஆயுதப்போர் தொடர்பான தவறான கருத்துக்கள் மற்றும் ஆதாரமற்ற துணிபுரைகளுக்கு எதிராகப் போராடுவதில் இலங்கை தொடர்ந்தும் சவால்களுக்கு முகங்கொடுத்து வருகிறது. எஞ்சியுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் (எல்.ரி.ரி.ஈ) மற்றும் புலம்பெயர்ந்தோரில் ஒரு பிரிவினர் காலத்திற்குக் காலம் விடுதலைப்புலிகளின் கோட்பாடுகளுக்கு ஆதரவான போராடங்களையும் இயக்கங்களையும் முன்னெடுத்தும், தவறான தகவல்களைப் பரப்பியும் இலங்கையின் பிரதிபிம்பத்தினைக் களங்கப்படுத்தி வருகின்றனர். இது தொடர்பில் தீவிரமாக கவனத்தில்கொள்ளும் வெளிநாட்டு அமைச்சானது, இலங்கையின் தேசிய நலன்களுக்கு விரோதமான இந்தப் பிரச்சனைகளையும் பல்வேறு பிரச்சனைகள் குறித்த சர்வதேச நிறுவனங்களிடமிருந்து வருகின்ற அழுத்தங்களையும் இராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் கையாண்டுவருகின்றது.

வெளிநாட்டு மண்ணில் அந்தமாதிரியான நடவடிக்கைகளுக்கு எதிராக வலுவான எதிர்ப்பினைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கையை இம்மீளாய்வுக்காலத்தில் இவ்வமைச்சு எடுத்தது. 18 மே 2021 இல் எல்.ரி.ரி.ஈ சார்பான தமிழ் புலம்பெயர்ந்தோரால் தூண்டப்பட்டு, அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் அறிமுகப்படுத்தப்பட்ட தீர்மானம் 413 இற்கு எதிரான கூட்டுப்பதிலை இவ்வமைச்சு முன்வைத்தது. 'தமிழ் இனப்படுகொலை விழிப்புணர்வு வாரம்' குறித்து ஒன்ராறியோ மாகாண சட்டமூலம் 104 ஐ கடுமையாக எதிர்த்து முறைப்பாடு செய்தது. குறிப்பாக நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய பகுதிகளில் இலங்கையின் தற்போதைய நேர்மறையான முன்னேற்றங்கள் குறித்து இந் நாடுகளின் கொள்கை வகுப்பாளர்களுக்கு எடுத்துச்சொல்வதற்கான நடவடிக்கையையும் எடுத்தது. ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி பிளஸ் நடைமுறைப்படுத்தல் குறித்த தனது அவதானிப்புக்களை இலங்கை சமர்ப்பித்ததுடன், அதன் வெளிநாட்டு தூதரகப் பணியக ஒருங்கமைப்புக்கள் மற்றும் உள்நாட்டு பங்குதாரர்களின் ஆதரவுடன் , ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரித்தானியாவில் பயங்கரவாத பட்டியலிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் (எல்.ரி.ரி.ஈ) நீக்கப்படுவதை வினைத்திறனுடன் எதிர்த்தது.

ஜூன் 2021 இல் இலங்கையின் நிலைமை குறித்த ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மானத்திற்கும், பொதுமைப்படுத்தப்பட்ட அமைப்பின் கீழ் பொருந்தக்கூடிய 27 சர்வதேச உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் இலங்கையின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக இலங்கைக்கு விஜயம் செய்த ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) GSP+ கண்காணிப்புக் குழுவின் அவதானிப்புகளுக்கும் பதிலளிக்கும் வகையில், இந் ஆண்டு செப்டம்பரில், வெளிநாட்டு அமைச்சு அதன் தூதரகப் பணியகங்களின் ஒருங்கமைப்பு மற்றும் உள்நாட்டு பங்குதாரர்களின் ஆதரவுடன் ஐ.ஒ ஜி.எஸ்.பி+ நடைமுறைப்படுத்தல் கண்காணிப்புச் செயன்முறை குறித்த தனது அவதானிப்புகளைச் சமர்ப்பித்தது. நல்லிணக்கம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மீளாய்வு, சிவில் சமூகத்துடனான ஈடுபாடு, SDG 16 முன்முயற்சி மற்றும் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் ஒத்துழைப்பு ஆகியவற்றில் முன்னேற்றம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்திற்குத் தெரியப்படுத்தவும் இலங்கை இச்ச ் தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டது.

தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதையும் பாதுகாப்பு ஒருங்கமைப்புக்களைக் கட்டமைப்பதையும் நோக்கமாகக்கொண்டு, இவ்வமைச்சானது இணை முகவரமைப்புக்களுடன் ஒருங்கிணைந்து பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான இருதரப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச ஒருங்கமைப்புக்களை உருவாக்கியது. 'யூரோஜஸ்ட்' இடையிலான குவிமையங்களை நிறுவுதலுக்கு ஏற்பாடு செய்தமை, 'யூரோபோல்' உடன் முறையான பணி ஒழுங்குகளை ஆரம்பித்தமை, ஐ.எஸ் மீதான உலகளாவிய கூட்டணியின் எதிர் ஐஎஸ் நிதிக் குழுவின் (சிஐஎஃப்ஜி) செயற்குழு கூட்டத்தில் பார்வையாளராக இலங்கை பங்கேற்றமை, 'கிறைஸ்ட்சேர்ச்'சின் நடவடிக்கைக்கான அழைப்பின் 2வது உச்சிமாநாடு-இணையம் மூலமான பயங்கரவாத உள்ளடக்கம் மற்றும் தீவிரமயமாக்கலை எதிர்த்து நடவடிக்கை எடுக்க அழைப்பு, பயங்கரவாத ஒத்துழைப்பு தொடர்பாக பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ் மற்றும் ஜெர்மனியுடன் இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், உள்நாட்டு முகவரமைப்புக்களின் பல திறன் மேம்பாட்டு திட்டங்களைத் தொடங்குதல், பயங்கரவாத உள்ளடக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கான மூலோபாயத்தை ஒருங்கிணைத்தல் போன்றவை இவற்றில் குறிப்பிடத் தக்கவையாகும். மேலும், மார்ச 2021 இல் நியூயோர்க்கில் நடைபெற்ற சர்வதேச பாதுகாப்பு (OEWG) பின்னணியில் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு துறையில் அபிவிருத்திகள் தொடர்பான திறந்தநிலை செயற்குழு தொடர்பான இலங்கையின் நிலைப்பாடு மற்றும் ஈடுபாட்டினை வெளிநாட்டு அமைச்சு ஒருங்கிணைத்தது.

ஒரு மூலோபாய தொடர்பாடல் அலகின் ஆதரவுடன், பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் சர்வதேச பாதுகாப்பு பிரிவு, பொது இராஜதந்திர பிரிவு ஆகிய தனது பிரிவுகளை வலுப்படுத்துவது மூலமாக, இவ்வமைச்சானது, எதிர்காலத்தில், வெளிநாடுகளில் இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு எதிரான

எந்தவொரு நடவடிக்கையையும் கவனத்தில் கொள்வதற்கான தனது பிரதிபலிப்புக்களை மேலும் வலுப்படுத்தும்.

**நிலைத்து நிற்கும் சமுத்திரங்கள் மற்றும் சுற்றுச்சூழல்**

தீவு நாடு என்ற வகையில், 2000- 2019 இற்கான உலகளாவிய காலநிலை இடர்வரவுச் சுட்டியின் பிரகாரம், மோசமான காலநிலைகளால் மிகவும் பாதிப்படையக்கூடிய 23 ஆம் தர வரிசையிலுள்ள நாடாக இலங்கை உள்ளதால், காலநிலைக்குச் சாதகமான ஒரு செயலூக்கமான வெளிநாட்டுக்கொள்கையைப் பின்பற்றும் நிலைப்பாட்டினை எடுத்துள்ளது. மேதகு ஜனாதிபதியின் தொலைநோக்கிற்கு அமைவாக, இவ்வமைச்சு, காலநிலை மாற்றத்திற்கான பசுமையானதும் நிலைத்துநிற்பதுமான தீர்வுகளை வழங்குவதற்குப் பாடுபடும் நாடாக இலங்கையை முன்னிறுத்துவதற்கான நடவடிக்கையை நிர்ணயித்தது. நவம்பரில் UNFCCC CoP-26 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக கௌரவ வெளிநாட்டு அமைச்சருடனான கிளாஸ்கோ விஜயத்தின் போது, உலகத் தலைவர்களின் அவசர உலகளாவிய காலநிலை நடவடிக்கைக்கு உறுதியளிப்பதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார். 2050 ஆம் ஆண்டளவில் இலங்கையில் புதிய நிலக்கரி எரிசக்தித் திறனைக் கட்டியெழுப்புவதை நிறுத்திவிட்டு, காபன் நடுநிலைமையை அடைவதை இலக்காகக் கொண்டதாக மேதகு ஜனாதிபதியின் அறிவிப்பு சர்வதேச சமூகத்தால் நன்கு பாராட்டப்பட்டது. மேலும், காலநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ள இலங்கை, 2030 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து 70% எரிசக்தி விநியோகத்தை உருவாக்க உறுதியளித்துள்ளது.

இவ்வமைச்சானது, காலநிலை மாற்றம் குறித்த சர்வதேச கூட்டுறவில் பங்கெடுத்ததுடன், உட்கட்டமைப்பு, வாழ்வாதார மேம்பாடு, ஆளுகை, கல்வி, தொழிற்றுறை, எரிசக்தி, விவசாயம், மனிதவள அபிவிருத்தி, பொது நிருவாகம் உட்பட்ட சுற்றுச்சூழல் தொடர்பான துறைகளில் செயற்றிட்டங்களுக்கான அபிவிருத்தி உதவியைப் பெறுவதில் பல முயற்சிகளை ஒருங்கிணைத்தது.

சதுப்புநில பாதுகாப்பு திட்டம் – புபுதுகம, புத்தளம், தேசிய கடலடிக்கேபிள் விரிவாக்கத்திறன் மற்றும் பாதுகாப்பு கட்டமைப்பு அபிவிருத்திக்காக இவ்வமைச்சு எடுத்துள்ள தலைமைத்துவ பங்கு, பொதுநலவாய குப்பை அகற்றல் திட்டம் தொடர்பான விடயங்களை ஒருங்கிணைத்தல் போன்ற முன்னெடுப்புகள், சிறப்புமிக்க சாதனைகளாக இங்கு குறிப்பிடத்தக்கவை. இந் மீளாய்வுக் காலகட்டத்தில், சர்வதேச கடல் அடித்தள அதிகாரசபையுடன் நெருக்கமான ஈடுபாட்டுக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன் செயலகத்துடன் தொடர்புகொள்வதற்கான ஒரு தேசிய குவிமையத்தை நியமிப்பதற்கான உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மனிதர்களால் உருவாக்கப்படும் பேரழிவுகளின் காரணமாக ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபாட்டினைக் கையாள்வதிலுள்ள சமகால சவால்களை எதிர்கொள்வதற்கு, வெளிநாட்டமைச்சு பல நடவடிக்கைகளை எடுத்ததுடன், 2021 இல் இடம்பெற்ற எம்.வி எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் பேரழிவு சம்பந்தமான விடயங்களுக்காக வெளிநாடுகளிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் உதவி கோருவதற்காக உடனுழைத்தன. இந்தவிதமான பேரழிவுச் சூழ்நிலைகளில் சர்வதேச ஆதரவை ஒருங்கிணைப்பதற்கான வெளிநாட்டமைச்சின் பங்கு, இலங்கைக்கு மிகமுக்கியமானதாகும்.

**பொருளாதார இராஜதந்திரம் மற்றும் விரிவான பிராந்திய ஈடுபாடு**

பாரம்பரிய அரசியல் இராஜதந்திரத்திலிருந்து பொருளாதார இராஜதந்திரம் தொடர்பான அதன் வெளியுறவுக் கொள்கை அணுகுமுறையை உரிமைச் சாசனப்படுத்தும் நோக்கில், வெளிநாட்டமைச்சின் பொருளாதார இராஜதந்திர திட்டம் (EDP), தேசிய கொள்கை கட்டமைப்புடன் ஒருங்கே நிகழுமாறு மீளவடிவமைக்கப்பட்டது. பொருளாதார பங்குடைமைகளையும் பிராந்திய பொருளாதார கூட்டுறவினையும் வலுவாக்குவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட பிராந்திய கூட்டுறவுக்கான இராஜாங்க அமைச்சானது; பொருளாதார உறவுகளை வளர்ப்பதற்காக, ஆசிய, ஆபிரிக்க நாடுகளுடன் புதிய வாய்ப்புக்களைத் தேடும் அதேவேளை, ஏற்கனவேயுள்ள வர்த்தக, மூலதன, தொழில் சந்தைகளை விரிவாக்குவதற்கான வலுவான நடவடிக்கையை எடுத்தது. 2021 இல் இரு அமைச்சுக்களும் இணைந்து, இணை முகவரமைப்புக்கள் மற்றும் தூதரகப் பணியக ஒருங்கமைப்பின் ஆலோசனையுடன், ஏற்றுமதிகளை பல்வகைப்படுத்தவும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கவும், வெளிநாட்டு வேலைவாய்ப்பினை விரிவாக்கவும் தொடர் முயற்சிகளை எடுத்தன.

வினைத்திறனுள்ள ஊக்குவிப்புச் செயற்பாடுகளை நடாத்துவதற்கான சாதகமற்றதும் வாய்ப்பற்றதுமான சூழலை உலகளாவிய நோய்ப்பரவல் ஏற்படுத்தியிருந்தபோதும், சுற்றுலா, ஏற்றுமதி வர்த்தகம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் முதலீடுகள் ஆகியவற்றில் இவ்வமைச்சு அமைத்திருந்த

இலக்குகளை தொடர்ந்தும் செயற்படுத்தும் வண்ணம், வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரக பணியகங்கள் வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தன.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி குவியம் முக்கியமாகவுள்ள துறைமுக நகர முதலீடுகள் ஊக்குவிக்கப்பட்டு, ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட சந்தைகளை ஒருங்கிணைக்கும் அதே வேளையில் இலங்கை தொழில்முயற்சியாளர்கள் வெளிநாட்டுச் சந்தைகளில் துணிகர முயற்சிகளில் இறங்குவதற்கு தீவிரமாக ஆதரவளிப்பதற்கும் அவர்களுக்கு உதவுவதற்கும் எமது தூதரக பணியகங்கள் மீளத் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த கடினமான காலங்களில் உள்ளூர் பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் தூதரகங்களால் எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகள், புதிய வாய்ப்புகளைக் கண்டறிய உதவியதுடன், தொழிற்றுறை மற்றும் விநியோகச் சங்கிலிகளை நிலையானதாகவும் திறந்ததாகவும் வைத்திருக்கவும், உதவியது. இந்நடவடிக்கைகள் உள்நாட்டுப் பொருளாதார மீட்சிக்கும் சமூக வளர்ச்சியை மேம்படுத்தவும் உதவியது.

இக்காலகட்டத்தில் பல்தரப்பு பொருளாதார இராஜதந்திரக் கண்ணோட்டத்தில், இலங்கை பல பிராந்திய நிறுவனங்கள் மற்றும் முன்னெடுப்புகளில் தலைமைப் பங்கினை வகித்தது. வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப, பொருளாதாரக் கூட்டுறவிற்கான முயற்சி (BIMSTEC) இன் தலைமை என்ற வகையில் இலங்கை, மூத்த அதிகாரிகள் கூட்டத்தின் சிறப்பு அமர்வுக்கு முன்னதாக 01 ஏப்ரல் 2021 அன்று, 17 ஆவது BIMSTEC அமைச்சர்கள் கூட்டத்தை நடாத்தியது. மேலும் இவ்வமைச்சு நடாத்தியது 4 முக்கிய கூட்டங்களில் BIMSTEC சாசனம், துறைகளை நெறிப்படுத்தல் மற்றும் BIMSTEC இன் உப துறைகள் ஆகியவை இறுதிப்படுத்தப்பட்டன. இலங்கை தலைமைதாங்கவிருக்கும் 5 ஆவது BIMSTEC உச்சிமாநாடு 2022 இன் முற்பகுதியில் கொழும்பில் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்போது, தலைமைத்துவம் தாய்லாந்திடம் கையளிக்கப்படும்.

இந் மீளாய்வுக்காலப் பகுதியில், இந்துசமுத்திர வளைய நாடுகளுக்கான (IORA) இலங்கையின் குவிமையமான வெளிநாட்டமைச்சு, 2021/2023 ஆம் தவணைக்கான IORA இன் உதவித் தலைமையாக, 2021 நவம்பரில் இடம்பெற்ற 21 ஆவது அமைச்சர்கள் குழு கூட்டத்தில் பெயர் குறிப்பிடப்பட்டது. மாசுபாடு தொடர்பான பேரழிவுகளில் இருந்து கடல்சார் கப்பல் பாதைகள் மற்றும் சமுத்திர இடத்தைப் பாதுகாப்பதற்கான கூட்டு நடவடிக்கைக்கு அது அழைப்பு விடுத்தது. மேலும், 2021 டிசம்பரில் அபுதாபியில் நடைபெற்ற 5 ஆவது இந்துசமுத்திர மாநாடு - IOC 2021 இல் கௌரவ வெளிநாட்டு அமைச்சரின் பங்கேற்பானது, இந்துசமுத்திரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் இலங்கையின் ஆர்வத்தை வெளிப்படுத்துவதில் குறிப்பிடத்தக்கதாகும். மேலும், இங்கு தலைமை நாடு என்ற வகையில் இலங்கை, கடல்சார் பாதுகாப்பு துறையில் முக்கிய பங்கை ஆற்றியதுடன், இதன் IORA பணிக்குழுவின் 2 ஆவது கூட்டத்தை 18, 19 மார்ச் 2021 இல் கூட்டியது.

ஆகஸ்ட் 2021 இல் கொழும்புத் திட்டத்தின் 47 ஆவது ஆலோசனைக்குழுக் கூட்டத்தை இலங்கை மெய்நிகராக நடாத்தியது. இதில் இலங்கை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற திட்டத்தின் கீழ், ‘நிலையான பசுமை நகரங்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் பசுமை இடங்களை அதிகரித்தல்’ ஆகிய விடயங்களை முன்னெடுத்துச்செல்ல உறுதியளித்தது. மேலும் இலங்கை முறையே நவம்பர் மற்றும் டிசம்பர் 2021 இல் கொழும்புத் திட்ட நிலைக்குழு கூட்டத்திலும் 304 ஆவது கொழும்புத் திட்டக் கழகத்திலும் கலந்துகொண்டது.

பொறுப்புள்ள தொழிலாளர் வளத்தைக்கொண்ட நாடு என்ற வகையில் இலங்கையின் பங்கினை இனங்கண்டு, அபுதாபி பேச்சுவார்த்தையின் அடுத்த தலைமையாக இலங்கையை நியமிப்பதற்கான கருத்தொற்றுமையை உருவாக்கும் விவாதங்களுக்கு தலைமை தாங்க இலங்கை கட்டளையிடப்பட்டு, அங்கு ஏகமனதாக ஒரு வேட்பாளரை முன்வைத்து தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளின் பல சுற்று விவாதங்கள் வெற்றிகரமான ஒரு முடிவை வழங்கின.

சாத்தியமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும், சாத்தியமான வர்த்தக பங்காளிகள், முதலீட்டாளர்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்களை ஈடுபடுத்தவும், மற்றும் கலாச்சார இராஜதந்திரம் மூலம் அதன் அழகு மற்றும் வளமான பாரம்பரியத்தை வெளிப்படுத்தவும் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சு நேரடியாகவும் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள அதன் தூதரகங்கள் மூலமாகவும், துபாயில் நடைபெறும் உலகின் மிகப்பெரிய சர்வதேச அரங்கான எக்ஸ்போ 2020 இல் இலங்கை பங்கேற்பதற்கும், புரவலர் நாட்டுடன் தொடர்பு கொள்ளவும் ஏற்பாடு செய்தது.

**மக்களை மையப்படுத்திய சேவை வழங்கல் மற்றும் வெளிநாட்டு இலங்கையர்களின் கொவிட் 19 கரிசனைகளுக்கான விரைவான பதில்வினை**

கொவிட் 19 நோய்ப்பரவல் காரணமாக ஊரடக்குச்சட்டம் விதிக்கப்பட்டபோதிலும், இவ்வமைச்சின் கொன்சியுலர் பிரிவானது 2021 காலகட்டத்தில் பொதுமக்களுக்காக பெரும்பாலும் திறந்தேயிருந்தது. முறையே 26.02.2021, 13.02.2021 மற்றும் 27.07.2021 ஆகிய திகதிகளில் கண்டி, திருகோணமலை மற்றும் குருநாகலை ஆகிய நகரங்களில் பிராந்திய கொன்சியுலர் அலுவலகங்கள் திறந்துவைக்கப்பட்டதன் மூலமாக, இச்சேவை பன்முகப்படுத்தப்பட்டது. இது கொழும்பத் தளமாகக் கொண்ட தலைமை அலுவலகம் மற்றும் யாழ்ப்பாணம் மற்றும் ஆகிய நகரங்களிலுள்ள ஏனைய பிராந்திய கொன்சியுலர் அலுவலகங்களுக்கு கூடுதலானதாகும். இந்த காலகட்டத்தில் கொன்சியுலர் பிரிவானது; 67,474 பொதுமக்களுக்குச் சேவை வழங்கி, 121,050 ஆவணங்களை அத்தாட்சிப்படுத்தியதன் மூலம் மொத்தமாக ரூ.92,288,900 வருவாயை ஈட்டியது. கிட்டத்தட்ட 178.5 மில்லியன் இலங்கை ரூபா பெறப்பட்டு, இழப்பீடுகளுக்காகவும் பாதிப்புக்களை ஈடுசெய்யவுமென 95 குடும்ப உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இப்பிரிவின் வெளிநாட்டு இலங்கையர்கள் அலகு பெப்ரவரி 2021 இலிருந்து புத்துயிரளிக்கப்பட்டு, நோய்ப்பரவல் காலத்தில் இலங்கையர்களின் தாய்நாடு திரும்பும் கோரிக்கைகளையும் விசாரணைகளையும் கையாள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட, 'இலங்கையை தொடர்பு கொள்க' வலைத்தளத்தை கையாளும் பொறுப்பு வழங்கப்பட்டது. இப்பிரிவு தற்போது முழுமையான சுயாதீனமான பிரிவாக புதுப்பிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 நோய்ப்பரவல் காலத்தில் வெளிநாடுகளில் சிக்கித்தவித்த இலங்கையர்களுக்கான இடைக்கால நிவாரணங்களை வழங்குவதற்காக, வெளிநாட்டமைச்சு 6.4 மில்லியன் இலங்கை ரூபாய்களைச் செலவிட்டது. உலர் உணவுகள், உள்நாட்டு போக்குவரத்துகள், தற்காலிக உறைவிடம், மருந்துகள் மற்றும் சில நிகழ்வுகளில் விமான சீட்டுக்கள் போன்றவற்றிற்காக இப்பணம் செலவழிக்கப்பட்டது.

கூடுதலாக, வெளிநாடுகளில் வேலைகளை இழந்தவர்களுக்கான மாற்று வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல், காலாவதியான வீசாக்களுக்கான பொது மன்னிப்பு, தண்டப்பணங்களுக்கு விலக்களித்தல், வீசாக்களியை நெறிமுறைப்படுத்தல், வெளிநாட்டு இராஜதந்திரிகள் நாடு திரும்புதல்/ அந்தந்த நாடுகளில் இருத்தல், பயண கட்டுப்பாடுகளால் இலங்கையில் சிக்கித்தவித் வெளிநாட்டவர்களுக்கு உதவுதல் போன்றவை தொடர்பில், இவ்வமைச்சு, சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டது. மேலும், இலங்கை தூதரக பணியக ஒருங்கமைப்பின் மூலமாக, பெருந்தொகையான மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், பாதுகாப்பு கருவிகள் ஆகியவற்றை உலகெங்குமிருந்தும் பெற்றுக்கொள்வதற்கான ஆதரவு தேடுதலும் இப்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டது. பிற நாடுகளின் 'தடுப்பூசி இராஜதந்திரம்' முயற்சிகள் இருதரப்பு மற்றும் இலங்கைக்கான COVAX - வசதி மூலம் இலங்கைக்கான செலவில்லா வசதிகள் இணை முகவரமைப்புகள் மற்றும் பல தூதரகத் தலைவர்களுடன் இணைந்து வெளிநாட்டு அமைச்சினால் திறம்பட ஒருங்கிணைக்கப்பட்டது.

**அமைச்சு மற்றும் தூதரக பணியகங்களின் நிருவாகம் மற்றும் நிதி முகாமைத்துவம்**

செலவுப்பயனுறுதியுள்ள, பொறுப்புள்ள மற்றும் அலுவலர்களுடன் நட்புறவுடனான சூழலை வெளிநாட்டமைச்சில் உருவாக்குவதற்காக, இந் மீளாய்வுக்காலத்தில் பல்வேறு நிருவாக மற்றும் நிதிசார் செயன்முறைகள் நெறிப்படுத்தப்பட்டன. இடமாற்ற வழிகாட்டுதல்களில் திருத்தம், இடமாற்றங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படும் பரிமாற்ற செயல்முறையை முறைப்படுத்துதல் ஆகிய சில இந் நடவடிக்கைகளில் அடங்கும். வெளிநாட்டு சேவை அதிகாரிகளுக்கு மற்ற நாடுகளால் நடைமுறைப்படுத்தப்படும் பிராந்திய கஷ்டங்களை வகைப்படுத்துவது அறிமுகம் செய்யப்பட்டது. தாய்நாட்டில் ஆட்சேர்ப்பு அடிப்படையில் நியமிக்கப்பட்ட அனைத்து ஊழியர்களுக்கும் மூன்று ஆண்டுகளுக்கு வேறு இடங்களுக்கு மாற்றம் அல்லது பதவி நீடிப்புகள் இல்லை என்ற உறுதியான கொள்கையும் இந்த காலகட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதேபோன்று, தாய்நாட்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு, வெளிநாட்டு தூதரக பணியகங்களில் சேவையாற்றுகின்ற அலுவலர்களுக்கு கல்வி உதவித்தொகைகள் வழங்குவதை நெறிப்படுத்துவதற்கான நடவடிக்கையையும் இவ்வமைச்சு எடுத்தது. பொறுப்பான சுமை பகிர்வு மற்றும் கூடிய பொறுப்புணர்வு என்பதன் அடிப்படையில், ஒரு அலுவலர் தனது 2 பிள்ளைகளுக்காக 25% கொடுப்பனவை வழங்கும் முறையை அறிமுகப்படுத்தும் ஒரு புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. அமைச்சின் அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் மூலமாக, வெளிநாட்டு இலங்கை தூதரக பணியகங்களில் நியமிக்கப்பட்ட,

தாய்நாட்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்கள் நாடு திரும்பவேண்டிய தேவையை நெறிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இலங்கை வெளிநாட்டுச் சேவை அதிகாரிகளின் தொழிற்றிறனை மேம்படுத்தும் நோக்கில், பிற நிறைவேற்றதிகார சேவைகளுக்கு இணையாக, இ.வெ.சேவைக்காக 16 சிறப்புத் தர பதவிகளை நடைமுறைப்படுத்தும் செயன்முறையானது தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கடைசியாக இ.வெ.சேவைக்கான ஆட்சேர்ப்பு 2018 இல் மேற்கொள்ளப்பட்டதால், இச்சேவையில் தொழிற்றிறன் மிக்க இராஜதந்திர சேவையாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காக, ஒரு திறந்த போட்டிப்பரீட்சை மூலமாக இ.வெ.சே அதிகாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஒரு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. வெளிநாட்டு தூதரக பணியகங்களில் சேவையாற்றுவதற்கு முகாமைத்துவ சேவை அலுவலர்கள் (MSO) மற்றும் தன் உதவியாளர்களுக்கான ஆட்சேர்ப்பு பரீட்சைகளை நடத்துவதற்கான வர்த்தமானிகள் இறுதிப்படுத்தப்பட்டு வருகின்றன.

கருத்தில்கொள்ளப்படும் இந்தக் காலப்பகுதியில், தூதரக பணியகங்களின்/ பதவிகளின் தலைவர்களாக 31 நியமனங்கள் செயன்முறைப்படுத்தப்பட்டு எளிதாக்கப்பட்டது. தூதரக பணியக தலவர்களுக்கான 08 பெயர் குறிப்பிடுதல்கள் வளர்ச்சி நிலையிலுள்ளன.

தற்சமயம் இலங்கை அரசாங்கம் தனது 26 தூதரக பணியகங்களில் சொந்தமாக வைத்துள்ள 46 ஆதனங்களில், கன்பராவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம், ஸ்டொக்ஹோமிலுள்ள இலங்கைத் தூதரகம், நைரோபியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் ஆகிய இலங்கை அரசாங்கத்தின் ஆதனங்களில் புனரமைப்பு/ அபிவிருத்தி வேலைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரோம், மிலான் மற்றும் சிங்கப்பூரில் ஆதனங்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் தற்சமயம் வளர்ச்சி நிலையிலுள்ளது.

மனித வளங்களிலுள்ள சில இடைவெளிகளைக் கவனத்தில் கொள்வதற்கும், வெளிநாட்டமைச்சுக்கு ஆதரவான நிபுணர் தொகுதியை வலுப்படுத்துவதற்கும், ஜனாதிபதி செயலகத்துடன் கலந்தாலோசித்து, அமைச்சின் கட்டமைப்பினுள் புதிய கூட்டு இயக்கங்களைக் கொண்டுவருவதற்காக, அமைச்சின் அதிகாரிகளும் வெளிப்புற நிபுணர்களும் கலந்துள்ள சர்வதேச கூட்டுறவு அலகு மற்றும் மூலோபாய தொடர்பாடல் அலகு ஆகியவற்றை இவ்வமைச்சு அமைத்துள்ளது.

சில பிரிவுகள் ஆரோக்கியமான பணிச்சூழலில் இயங்குவதற்குத் தேவையான அலுவலக இடத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில், இவ்வமைச்சை ஒரே கூரையின் கீழ் விரைவில் இடமாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தனியார் கட்டிடத்தில் இயங்கும் கொன்சியுலர் அலுவல்கள், பொருளாதார அலுவல்கள், நிருவாகம் மற்றும் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு ஆகிய பிரிவுகளுக்கான வாடகைச் செலவை இது கணிசமாகக் குறைக்கும்.

இவ்வமைச்சு தனது தூதரக பணியகங்களின் / பதவிகளின் செலவினங்களைச் சமாளிப்பதற்கு உள்ளக சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை அவ்வப்போது வெளியிடுவதன் மூலம் வரையறுக்கப்பட்ட வளங்களை கவனமாகவும் விவேகமாகவும் பயன்படுத்துவதற்கான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்களை அதிகபட்சமாகப் பயன்படுத்துவதன் மூலமும், அடமானங்கள் மூலம் சொத்துக்களைப் பெறுதல் மற்றும் முடிந்தவரை நேரடியாக வாங்குதல் போன்ற புதிய தெரிவுகளை ஆராய்வதன் மூலமும் உத்தியோகபூர்வ குடியிருப்புகள், சான்சரி கட்டிடங்கள் மற்றும் வீட்டு அடிப்படையிலான அதிகாரிகளின் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான வாடகைக் கட்டணங்களை முடிந்தவரையில் குறைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அந்நியச் செலாவணி பற்றாக்குறை காரணமாக, தொடர் செலவினங்களைக் குறைப்பதற்காக இராஜதந்திர அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பிரதிநிதித்துவ கொடுப்பனவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

மேலும், வெளிநாட்டு தூதரக பணியகங்களில்/ பதவிகளில், இணையத்துடன் இணைந் கணக்கியல் தொகுப்புகள், இருப்பு முகாமைத்துவ மென்பொருள் போன்ற டிஜிட்டல் மயமாக்கலைப் பயன்படுத்துவதன் மூலம், பெரும்பாலான மீண்டெழும் செலவினங்களைக் குறைப்பதற்கான சாத்தியக்கூறுகளை அமைச்சு கவனித்து வருகிறது. ஆனபோதிலும், சில குறிப்பிட்ட ஆரம்ப பிரச்சனைகள் காரணமாக, எதிர்பார்த்த மட்டங்களை விட குறைந்தளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இருந்தபோதிலும், இவ்வமைச்சு, ஏற்கனவேயுள்ள செயன்முறையைச் சுலபமாக்குவதற்கு புதிய மாற்றுவழிகளைத் தொடர்ந்தும் கண்டுபிடிப்பதுடன், தனது எதிர்கால செயற்பாடுகளில் டிஜிட்டல்

மயமாக்கப்பட்ட செயன்முறைகளைப் பயன்படுத்தல் மூலமாக மனிதவள திறனை மேம்படுத்தி, செலவினங்களைக் குறைக்கும்.

நாட்டின் வெளியுறவுக் கொள்கையை அமைச்சும் அதன் தூதரக ஒருங்கமைப்பும் கிடைக்கக்கூடிய வளங்களுக்குள் மிகுந்த அர்ப்பணிப்புடனும் கடப்பாடுடனும் தொடர்ந்து சிறப்பாகச் செயற்படுத்துவதை இது உறுதி செய்யும்.

முடிவாக, 2021 ஆம் ஆண்டில், உலகளாவிய கோவிட் 19 தொற்றுநோய்ப் பரவல் மற்றும் உலகெங்கிலுமுள்ள பொருளாதாரங்களின் சுருக்கங்களின் விளைவாக சவால்களை எதிர்கொள்ளவேண்டி இருந்தபோதிலும், வெளிநாட்டு அமைச்சினால் நாட்டின் தேசிய நலன்களை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் மற்றும் வெளிநாட்டு இலங்கையர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையின் முன்னுரிமைகளை வலுப்படுத் முடிந்தது.

**செயலாற்றுகை மீளாய்வு: மக்களை மையப்படுத்திய இராஜதந்திரம்**

**கொவிட்-19 நோய்ப்பரவலுக்கான வெளிநாட்டு அமைச்சின் ஏற்புத்தன்மை**

வெளிநாடுகளில் கோவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்ட இலங்கையர்கள் நாடு திரும்புதல் மற்றும் அவர்கள் நலன், கொள்வனவு செய்த அல்லது நன்கொடையாக அளிக்கப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் தடுப்பூசிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் அனுமதித்தல், தடுப்பூசி சான்றிதழ்களை அங்கீகரித்தல் உட்பட, வெளிநாடுகள் தொடர்பான விஷயங்களில் தொடர்புடைய தகவல்களை வழங்குவதற்காக, மார்ச் 2020 இல், வெளியுறவு அமைச்சகம் ஒரு கோவிட் – 19 குவிமையத்தை நிறுவியது.

கோவிட் - 19 குவி மையம் இலங்கையர்களுக்கு வெளிநாட்டு பயணத் தேவைகள் மற்றும் பிற தொடர்புடைய விசாரணைகள் பற்றிய தகவல்களை வழங்க அவரச தொலைபேசி அழைப்புகளை இயக்குகிறது.

2021 தொற்றுநோய்ப் பரவலின்போது சிக்கித் தவித்த இலங்கையர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்குவதற்காக வெளிநாட்டு அமைச்சினால் இலங்கை ரூபா 6.4 மில்லியன் வழங்கப்பட்டது. உலர் உணவுகள், உள்நாட்டு போக்குவரத்து, தற்காலிக தங்குமிடம், மருந்துகள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் விமான டிக்கெட்டுகளுக்காக இந் நிதி செலவிடப்பட்டது.

வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதரக பணியகங்கள் மூலம் வெளிநாட்டு அமைச்சு நாடு திரும்பியவர்களை பதிவு செய்து, சிறப்பு விமானங்களை ஒருங்கிணைத்து நாடு திரும்புவதற்கு வசதி செய்தது. 2021 ஆம் ஆண்டில் 116,000 இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவ்வமைச்சு, வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரக பணியகங்கள் மூலம் தடுப்பூசி நன்கொடைகளை எளிதாக்கியது. சீனா, இந்தியா (அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் COVAX வசதி மூலம்) மொத்தம் 7.9 மில்லியன் தடுப்பூசிகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. நன்கொடை மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகளை வழங்குவதற்கும் வசதி செய்யப்பட்டது. வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள், வெளிநாட்டு அரசாங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நலன்விரும்பிகளிடமிருந்து பெறப்பட்ட 130 க்கும் மேற்பட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் அத்தியாவசிய மருந்துகள் இதுவரை, அரசாங்க மருத்துவமனைகளின் கொவிட்-19 பிரிவுகள் மற்றும் அவசர பிரிவுகளுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையர்களுக்கான நுழைவுத் தேவைகள், பயணக் கட்டுப்பாடுகளை நீக்குதல் மற்றும் தடுப்பூசி சான்றிதழ்களை பரஸ்பரம் அங்கீகரிப்பது தொடர்பான விடயங்களை இவ்வமைச்சு, வெளிநாட்டு அரசாங்கங்களுடன் ஒருங்கிணைத்தது. இலங்கை இதுவரை 77 நாடுகளின் COVID-19 தடுப்பூசி சான்றிதழ்களை அங்கீகரித்துள்ளது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரக பணியகங்கள் நலன் விரும்பிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட பண நன்கொடைகளை, ஜனாதிபதி செயலகத்தில் நிறுவப்பட்ட "இடுகாமா" கொவிட் நிதியில் வரவு வைப்பதற்கு இவ்வமைச்சு ஏற்பாடு செய்தது. 2021ல் மொத்த பங்களிப்பு 15 மில்லியன் ரூபாய் ஆகும்.

இந்த அமைச்சு, வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரக பணியகங்களின் உதவியுடன் இலங்கையர்களின் வெளிநாட்டுப் பயணத்திற்குத் தேவையான கோவிட்-19 தடுப்பூசிகள் பற்றிய விரிவான தகவல் வழிகாட்டியைத் தயாரித்து, தொடர்புடைய அனைத்து அமைச்சகங்களுக்கும் வழக்கமான புதுப்பிப்பை வழங்குகிறது. இது ஜூன் முதல் டிசம்பர் 2021 வரை தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் கொழும்பில் அமைந்துள்ள இராஜதந்திர படையின் உறுப்பினர்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு COVID-19 தடுப்பூசி போடுவதற்கு இந்த அமைச்சு வசதி செய்தது.

இலங்கையில் தடுப்பூசி மீள்நிரப்பல் தொழிற்சாலையை நிறுவுவது குறித்து தற்சமயம் இவ்வமைச்சு, பெய்ஜீங்கிலுள்ள இலங்கை தூதரகத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுகிறது.

**அமைச்சின் கொன்சியுலர் சேவைகள்**

1981 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க தூதரகச் செயற்பாடுகள் சட்டம், மற்றும் அதைத்தொடர்ந்து, 2006 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சட்டத்திருத்தம் ஆகியவற்றின் பிரகாரம், கொன்சியுலர் விவகாரங்கள் பிரிவானது, இலங்கை இராஜதந்திரத் தூதரகங்கள் மற்றும் யாழ்ப்பாணம், மாத்தறை, கண்டி, திருகோணமலை மற்றும் குருநாகல் ஆகிய அதன் பிராந்திய தூதரக அலுவலகங்கள் மூலம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளுக்கு உதவுகிறது. ஆவண சான்றுப்படுத்தல், நாடுதிரும்புதல், இழப்பீடு, வெளிநாடுகளில் மரணம் மற்றும் பல்வகை விடயங்கள் என்ற ஐந்து பிரிவுகள் மூலமாக, கொன்சியுலர் விவகாரங்கள் பிரிவு தனது சேவைகளை வழங்குகிறது. கண்டி, திருகோணமலை மற்றும் குருனாகலை ஆகிய பிரதேசங்களிலும் அதன் அருகாமைப் பிரதேசங்களிலுமுள்ள குடிமக்களுக்கு கொன்சியுலர் உதவிகளை வழங்குவதற்காக அந்த பிராந்தியங்களில் முறையே 26.02.2021, 13.03.2021 மற்றும் 27.07.2021 ஆகிய திகதிகளில் பிராந்திய கொன்சியுலர் அலுவலகங்கள் திறக்கப்பட்டன.

இந்த மீளாய்வுக் காலத்தில் கொன்சியுலர் பிரிவினால் 122,468 பொதுமக்களுக்கு சேவை வழங்கப்பட்டு, சான்றுப்படுத்திய 226,033 ஆவணங்களால் மொத்த வருமானமாக இல.ரூ.176,667,700/- ஈட்டப்பட்டது.

பிறப்பு, திருமண இறப்புச் சான்றிதழ்கள் மற்றும் க.பொ.த சா/தரம் மற்றும் உயர் தர பரீட்சை சான்றிதழ்களை திறம்படச் சான்றுறுதிப்படுத்துவதற்கு வசதியாக, பதிவாளர் நாயகம் மற்றும் பரீட்சைகள் திணைக்களத்துடன் மின்னணு ஆவணச் சான்றளிப்பு முறைமையை (e-DAS) ஒருங்கிணைப்பதற்காக இப்பிரிவு பல கலந்துரையாடல்களை நடத்தியது. மேலும், வெளிநாடுகளில் வேலை தேடுவோருக்கு வினைத்திறனான சேவைகளை வழங்குவதற்காக இணையம் மூலமாக பொலிஸ் இசைவு மற்றும் பொலிஸ் அறிக்கைகளை அங்கீகரிக்கும் சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக இலங்கை பொலிஸ், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ICTA) மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (SLBFE) ஆகியவற்றுடன் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

இக்காலப்பகுதியில் வெளிநாட்டு இலங்கைத் தூதரக பணியகங்களின் உதவியுடன் கிடைக்கப்பெற்ற கிட்டத்தட்ட இல.ரூ.276.4 மில்லியன் இறந்தவர்களுக்கான இழப்பீடுகள் மற்றும் பிற கொடுப்பனவுகள், 138 குடும்ப உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

மொத்தம் 702 இறப்புகள் (149 கோவிட் மற்றும் 422 கோவிட் அல்லாத இறப்புகள் உட்பட) இறப்புப் பிரிவில் தெரிவிக்கப்பட்டு, உறவினர் அனுமதியுடன் உடல்களைத் திருப்பி அனுப்புவதற்கு/ புதைப்பதற்கு அல்லது தகனம் செய்வதற்கு வசதி செய்யப்பட்டது. இறந்த இலங்கையர்களின் இறப்பு மற்றும் தனிப்பட்ட உடமைகள் தொடர்பான உள்ளூர் இறப்பு சான்றிதழ்கள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களை வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் மூலம் பெற இறப்பு பிரிவு உதவியது.

இப்பிரிவின் நாடுதிரும்புதல் பிரிவு, வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு, வெளிநாட்டில் சிக்கித் தவிக்கும்/தடுக்கப்பட்ட இலங்கையர்களை அவர்களின் உறவினர்களின் கோரிக்கையின் பேரில் திருப்பி அனுப்புகிறது. இந்த காலகட்டத்தில், 85 சிறை வழக்குகள் உட்பட 878 நாடு கடத்தல் வழக்குகள் கையாளப்பட்டன. மேற்கூறிய காலப்பகுதியில், இலங்கை மீனவர்கள் மற்றும் வெளிநாடுகளில் அல்லது இலங்கையின் கடல் எல்லைக்கு வெளியே கைது செய்யப்பட்ட மீன்பிடி படகுகள் தொடர்பான பல வழக்குகள் கலந்துகொண்டு மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க இப்பிரிவு உதவியது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (SLBFE) பதிவு செய்யாமல், வேலையின் நோக்கத்திற்காக இலங்கையை விட்டு வெளியேறிய சிக்கித் தவிக்கும்/அனாதையான இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டுக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களின் நாடு திரும்புவதற்கான கோரிக்கைகளையும் இந்தப் பிரிவு எளிதாக்கியது.

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில், தோல்வியுற்ற புகலிடக் கோரிக்கையாளர்கள் இலங்கைக்குத் திரும்புவதற்கு வசதியாக 150 விண்ணப்பங்களை ‘மீள அனுமதித்தல் நேர்வு முகாமைத்துவ முறைமை (RCMS) கீழ் செயன்முறைப்படுத்த இப்பிரிவு ஏற்பாடு செய்தது.

பொலிஸ் இசைவுச் சான்றிதழ்கள், கடவுச்சீட்டு விடயங்கள், வெளிநாட்டுப் பட்டச் சான்றிதழ்கள் சரிபார்ப்பு, வெளிநாட்டில் உள்ள இலங்கை ஓய்வூதியர்களுக்கான உதவிகள், வெளிநாட்டில் இலங்கை வாகனசாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான உதவிகள், மீன்பிடிக் கப்பல்களை விடுவிக்க உதவுதல், சிக்கித் தவிக்கும் மீனவர்களை திருப்பி அனுப்புதல், பிறப்புச் சான்றிதழ் விநியோகம், குடியுரிமைச் சான்றிதழ்கள், மரண தண்டனை வழக்குகள் போன்றவை தொடர்பான உதவிகள், உள்ளிட்ட பல்வேறு கொன்சியுலர் விவகாரங்கள், இப்பிரிவின் பல்வகை விடயங்கள் பிரிவினால் கையாளப்பட்டன.




**தூதரக ஆவணங்கள் சரிபார்ப்பு அறிக்கை- 01.01.2021 முதல் 31.12.2021 வரை**

| கொன்சியுலர் அலுவலகம் | கையாளப்பட்ட ஆவணங்கள் | சேவை வழங்கப்பட்டவர்கள் | சேகரித்த வருவாய்(ரூ) |
|---|---|---|---|
| கொழும்பு (தலைமை அலுவலகம்) | 191,139 | 99,308 | 145,493,300.00 |
| யாழ்ப்பாணம் (பிராந்திய அலுவலகம்) | 15,135 | 7,886 | 14,363,500.00 |
| மாத்தறை (பி/அ) | 4,418 | 3,428 | 3,489,100.00 |
| கண்டி (பி/அ) | 5,511 | 4,835 | 5,263,100.00 |
| திருகோணமலை (பி/அ) | 3,352 | 2,651 | 2,867,600.00 |
| குருநாகலை (பி/அ) | 6,478 | 4,360 | 5,191,100.00 |
| மொத்தம் | 226,033 | 122,468 | **176,667,700.00** |






**வெளிநாட்டிலுள்ள இலங்கையர் பிரிவு**

2021 பெப்ரவரி முதல் 'இலங்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்' இணையவழி போர்ட்டலைக் கையாளும் பொறுப்புடன் அமைக்கப்பட்ட வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் பிரிவு, வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களின் விசாரணைகள்/கோரிக்கைகள், குறிப்பாக தொற்றுநோய் காலத்தில் அவர்களின் நாடு திரும்புதல் தொடர்பான விடயங்களை எளிதாக்கியது. 2021 பெப்ரவரி-செப்டம்பர் வரையிலான காலப்பகுதியில் 1800 க்கும் மேற்பட்ட விசாரணைகள் / கோரிக்கைகளுக்கு 'இலங்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்' இணையவழி போர்ட்டலில் பதிலளிப்பதனை இப்பிரிவு நிர்வகிக்கின்றது. மேலும், இந்தப் பிரிவு நேரடியாகப் பெறப்பட்ட மற்றும் பிராந்திய தூதரக அலுவலகங்கள் மூலம் பெறப்பட்ட விசாரணைகள்ஃகோரிக்கைகளை எளிதாக்கியுள்ளது. இந்த காலகட்டத்தில் 850 க்கும் மேற்பட்ட விசாரணைகள்ஃகோரிக்கைகளுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளன.

இப்பிரிவானது, சிறைச்சாலைகள்ஃதடுப்பு முகாம்களில் உள்ள இலங்கையர்கள், இலங்கை சமூகம்ஃவணிக சங்கங்கள், வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் தலைமையிலான சமய மற்றும் கலாச்சார அமைப்புக்கள் தொடர்பான தகவல்களை சேகரித்து தரவுத்தளத்தை உருவாக்கியுள்ளது. இந்தத் தகவல்களில் சில இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் கூட்டுத் தொடர்புகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

இந்த நோக்கத்திற்காக, இந் பிரிவு வெளிநாட்டு அமைச்சர் மற்றும் வெளியுறவுச் செயலாளருடன் மெய்நிகர் சந்திப்புகளை நடத்துவதற்கான முக்கிய பணிகளை அடையாளம் கண்டுள்ளது. சிங்கப்பூர் மற்றும் புருனே தாருஸ்ஸலாமில் உள்ள மத, வணிக மற்றும் சமூகத் தலைவர்களுடன் வெளிநாட்டு அமைச்சர் உரையாடுவதற்காக இந்தக் கலந்துரையாடல் தொடரின் முதல் கூட்டம் 01 ஜூலை 2021 அன்று நடைபெற்றது.

கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக இலங்கைக்குத் திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களுக்குத் தேவையான பயிற்சி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குவதற்கு இப்பிரிவு கொழும்பில் உள்ள சர்வதேச தொழிலாளர் நிறுவனத்துடன் ஒருங்கிணைத்துள்ளது. இது சம்பந்தமாக ஒரு மையப்படுத்தப்பட்ட தரவுத்தளத்தை உருவாக்க, அமைச்சின் சம்பந்தப்பட்ட பிரிவுகள், பங்குதாரர்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், இது 2022 ஜூன் 30க்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உலகளாவிய தொடர்பு - உயர்நிலை விஜயங்கள்

**2021 ஜனவரி முதல் டிசம்பர் வரை இலங்கைக்கு வெளிநாட்டு பிரமுகர்களின் உள்நோக்கிய விஜயம்**

**அரச தலைவர்கள்/பிரதமர்கள்**

| | |
|---|---|
| 01 | 2021 பிப்ரவரி 23 முதல் 24 வரை பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் பிரதமர் அதிமேதகு இம்ரான் கான் இலங்கைக்கு விஜயம் |
| 02 | 2021 ஜூலை 24-23 வரை மாலைதீவு ஜனாதிபதி அதிமேதகு இப்ராஹிம் முகமது சோலியின் தனிப்பட்ட விஜயம் |
| 03 | 2021 நவம்பர் 8-9 வரை மாலைதீவு ஜனாதிபதி அதிமேதகு இப்ராஹிம் முகமது சோலியின் அதிகாரப்பூர்வ விஜயம் |
| 04 | 2021 நவம்பர் 02 முதல் தாவூதி போஹ்ரா சமூகத்தின் உலகளாவிய ஆன்மீகத் தலைவரான சையத்னா முஃபத்தால் சைபுதீன் சாஹேப் அவர்களின் வருகை சோலியின் |
| 05 | 30 டிசம்பர் 2021 முதல் 02 ஜனவரி 2022 வரை மாலைதீவு ஜனாதிபதி அதிமேதகு இப்ராஹிம் முகமது சோலியின் சோலியின் |

**வெளிநாட்டு அமைச்சர்கள் மற்றும் பிரதி வெளிநாட்டு அமைச்சர்கள்**

| | |
|---|---|
| 01 | 05 முதல் 07 ஜனவரி 2021 வரை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கௌரவ கலாநிதி. எஸ். ஜெய்சங்கரின் விஜயம் |
| 02 | 2021 பிப்ரவரி 24ஆந் திகதி கௌரவ பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் முகமது குரேஷியின் விஜயம் |

**ஏனைய அமைச்சர்கள்**

| | |
|---|---|
| 01 | 2021 ஏப்ரல் 27 முதல் 29 வரை சீன மக்கள் குடியரசின் அரச கவுன்சிலரும் பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் வெய் ஃபெங்கேவின் விஜயம் |
| 02 | 2021 மே 24 முதல் 26 வரை இங்கிலாந்தின் தெற்காசியா மற்றும் பொதுநலவாய இராஜாங்க அமைச்சர் விம்பிள்டன் பிரபு அகமது அவர்களின் விஜயம் |
| 03 | 2021 டிசம்பர் 18 முதல் 21 வரை அவுஸ்திரேலியாவின் உள்துறை அமைச்சர் கௌரவ கரேன் ஆண்ட்ரூஸின் விஜயம் |

**இலங்கையின் வெளிப்புற விஜயங்கள் - ஜனவரி முதல் டிசம்பர் 2021 வரையான அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதமர், கௌரவ வெளிநாட்டு அமைச்சர் மற்றும் கௌரவ இராஜாங்க அமைச்சரின் விஜயங்கள்**

**அதிமேதகு ஜனாதிபதி**

| இல. | நாடு | காலம் | காரணம் |
|---|---|---|---|
| 1 | நியூயோர்க், அமெரிக்கா | 18-26 செப்டம்பர் 2021 | ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 76வது அமர்வில் கலந்து கொள்வதற்காக உத்தியோகபூர்வ விஜயம் |
| 2 | ஐக்கிய இராச்சியம், ஸ்கொட்லாந்து | 30 அக்டோபர் - 03 நவம்பர் | ஐ.நா. காலநிலை மாற்ற மாநாட்டில் (COP 26) கலந்துகொள்வதற்கான உத்தியோகபூர்வ விஜயம் |
| 3 | ஐக்கிய அரபு இராச்சியம் | 03-06 டிசம்பர் 2021 | 5வது இந்தியப் பெருங்கடல் மாநாட்டில் (IOC) கலந்து கொள்வதற்காக உத்தியோகபூர்வ விஜயம் |

**கௌரவ பிரதமர்**

| இல. | நாடு | காலம் | காரணம் |
|---|---|---|---|
| 1 | பங்களாதேஷ் | 19-20 மார்ச் 2021 | அரச விஜயம் |
| 2 | இத்தாலி | 10-16 செப்டம்பர் 2021 | பொலோங்கோவில் G20 சர்வமத மன்றத்தில் கலந்து கொள்ள |

**கௌரவ வெளிநாட்டு அமைச்சர்**

| இல. | நாடு | காலம் | காரணம் |
|---|---|---|---|
| 1 | இத்தாலி | 10-16 செப்டம்பர் 2021 | பொலோங்கோவில் G20 சர்வமத மன்றத்தில் கலந்து கொள்ள |
| 2 | அமெரிக்கா | 18-26 செப்டம்பர் 2021 | ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 76வது அமர்வில் கலந்து கொள்வதற்காக உத்தியோகபூர்வ விஜயம் |
| 3 | ஐக்கிய இராச்சியம், ஸ்கொட்லாந்து | 30 அக்டோபர் - 03 நவம்பர் 2021 | ஐ.நா. காலநிலை மாற்ற மாநாட்டில் (COP 26) கலந்துகொள்வதற்கான உத்தியோகபூர்வ விஜயம் |
| 4 | பங்களாதேஷ் | 15-17 நவம்பர் 2021 | 21வது IORA அமைச்சர்கள் கூட்டம் |
| 5 | ஐக்கிய அரபு இராச்சியம் | 07 டிசம்பர் 2021 | 5வது இந்தியப் பெருங்கடல் மாநாட்டில் (IOC) கலந்து கொள்வதற்காக உத்தியோகபூர்வ விஜயம் |

## செயலாற்றுகை மீளாய்வு: ஒன்றுக்கொன்று இணைந்த பிரிவுகள்

## ஐக்கிய நாடுகள் மற்றும் மனித உரிமைகள் பிரிவு

இலங்கையின் பல்தரப்பு உறவுகளின் பின்னணியில்; நியூயோர்க் மற்றும் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர தூதரகங்கள் மற்றும் வியன்னா, பாரிஸ், ரோம், நைரோபி, பாங்கொக் மற்றும் ஹேக் ஆகிய நகரங்களிலுள்ள ஐ.நா.வின் துணை நிறுவனங்களுக்கு அங்கீகாரம் பெற்ற தூதரகங்கள் / நிரந்தர தூதுக்குழுக்கள் ஆகியவை இந்தப் பிரிவின் கீழ் வருகின்றன.

**ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 76 ஆவது அமர்வு – நியூயோர்க், செப்டெம்பர் 2021**

2021 செப்டெம்பரில் இடம்பெற்ற ஐ.நா.பொ.சபையின் 76 ஆவது அமர்வில், மேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் இலங்கைக் குழு பங்கேற்பதற்கான நிலையான மற்றும் ஏற்பாட்டியல் சேவைகளை இவ்வமைச்சு செய்தது. 22 செப்டம்பர் 2021 அன்று ஐநா பொதுச் சபையின் உயர்மட்டப் பிரிவில் ஜனாதிபதி உரையாற்றியதுடன், ஐ.நா.பொ.

சபையின் 76 ஆவது அமர்வையொட்டி, 2021 செப்டம்பர் 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் நடைபெற்ற ஐ.நா உணவு அமைப்புகள் உச்சி மாநாடு மற்றும் ஐ.வின் எரிசக்தி தொடர்பான உயர்மட்ட பேச்சுவார்த்தையிலும் பங்கேற்றார். ஐ.நா செயலாளர் நாயகம் மேதகு அண்டோனியோ குட்டாரெஸ், குவைத் பிரதம மந்திரி மேன்மை தங்கிய ஷேக் சபா அல் சபா, லத்விய குடியரசின் ஜனாதிபதி, மேதகு எக்லிஸ் லெவிட்ஸ் மற்றும் மாலைதீவு ஜனாதிபதி மேதகு இப்ராஹிம் சொலீ ஆகியோருடனும் ஜனாதிபதி இருதரப்பு ஆலோசனைகளை மேற்கொண்டார்.

ஐ.நா 76 ஆவது உயர்மட்டப் பிரிவுக்கு ஜனாதிபதியுடன் சென்ற கௌரவ வெளிநாட்டு அமைச்சர்; அவுஸ்திரேலியா, இந்தியா, கஸகஸ்தான், நிகராகுவா, தாய்லாந்து, தென்னாப்பிரிக்கா, இந்தோனேசியா ஆகிய நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களுடனும் ஐக்கிய அரபு அமீரகத்தின் தொழிற்றுறை மற்றும் உயர் தொழில்நுட்ப அமைச்சர், பிரித்தானியாவின் தெற்காசியா மற்றும் பொதுநலவாய அமைச்சர் ஆகியோருடனும் இருதரப்பு ஆலோசனைகளை நடத்தினார். மேலும், பொதுநலவாய பொதுச் செயலாளர், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் பொதுச் செயலாளர் (OIC), CICA இன் நிருவாக இயக்குநர் மற்றும் ஐநா சபைக்கான புனிதப் பேரவையின் நிரந்தரக் கண்காணிப்பாளர் ஆகியோருடனும் அவர் இருதரப்பு சந்திப்புகளை நடத்தினார்.

**நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள்**:

ஐ.நா மனித உரிமைகள் கழகம், ஜெனீவா (46 ஆவது, 47 ஆவது மற்றும் 48 ஆவது அமர்வுகள்)

ஐ.நா மனித உரிமைகள் கழகத்தில் இலங்கையின் நிலைப்பாட்டிற்கு ஆதரவைப் பெறுவதற்காக, ஐ.நா.ம. உ கழகத்தின் அனைத்து உறுப்பினர்கள் மற்றும் சகல உறுப்பு நாடுகளின் அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் அரச தலைவர் மட்டத்தில் ஆதரவைப் பெறுவதற்கான இலங்கையின் தொடர்ச்சியான செயலீடுபாட்டினை இப்பிரிவு ஒருங்கிணைத்தது.

ஜெனீவாவில் மார்ச் (46வது அமர்வு) மற்றும் ஜூன் (47வது அமர்வு) மற்றும் செப்டெம்பர் - 2021 (48வது அமர்வு) ஆகிய மாதங்களில் இடம்பெற்ற மனித உரிமைகள் கழகத்தின் (HRC) வழக்கமான அமர்வுகளில் இலங்கையின் நிலைப்பாடுகளையும் இப்பிரிவு ஒருங்கிணைத்தது.

மனித உரிமைகள் கழகத்தின் 46 ஆவது மற்றும் 48 ஆவது அமர்வுகளின்போது, முறையே மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையும், இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கையும் மனித உரிமை ஆணையத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது, சம்பந்தப்பட்ட நாடு என்ற வகையில் இலங்கையின் அறிக்கையை கௌரவ வெளிநாட்டு அமைச்சர் முன்வைத்தார்.

மனித உரிமை கழகத்தின் மார்ச், ஜூன் மற்றும் செப்டெம்பர் அமர்வுகளின்போது, இலங்கை சில இடையீடுகளை மேற்கொண்டு, 46 கூட்டு அறிக்கைகள் மற்றும் 13 தீர்மானங்களுக்கு இணை அனுசரணை வழங்கியது.

மனித உரிமைகள் கழகத்தின் 46 ஆவது அமர்வைத் தொடர்ந்து, வெளிநாட்டு அமைச்சர் மற்றும் நீதி அமைச்சரை இணைத் தலைமையாகக் கொண்ட, மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஒரு ஒருங்கிணைப்புச் செயன்முறை முன்னெடுக்கப்பட்டது. OMP, OR, ONUR, HRCSL மற்றும் SDG கழகம்

உள்ளிட்ட உள்நாட்டு நிறுவனங்களின் பங்கேற்புடன் வெளிநாட்டு அமைச்சில் நடைபெற்ற 3 இணைப்புக் கூட்டங்களை இப்பிரிவு ஒருங்கிணைத்தது. (மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள முன்னேற்றம் பற்றிய குறிப்பு இணைக்கப்பட்டுள்ளது-குறிப்பு I)

**ஒப்பந்த அமைப்புகள் மற்றும் ஐ.நா சிறப்பு நடைமுறைகள் ஆணை வைத்திருப்போர்**:

9 அடிப்படை ஐ.நா மனித உரிமைகள் ஒப்பந்தங்களின் கீழ் இலங்கை தொடர்ந்தும் தனது அறிவித்தல் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்யும்.

- ஏப்ரல் 2021 இல், 9 அடிப்படை மனித உரிமைகள் ஒப்பந்தங்கள் மற்றும் பிற பல்தரப்பு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தங்களின் கீழ் அறிக்கையிடல் கடப்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக பங்குதாரர்களின் ஆலோசனைக் கூட்டங்கள் கூட்டப்பட்டன.

- மார்ச் 2022 இல் இடம்பெறத் திட்டமிடப்பட்ட ICCPR இன் கீழ் இலங்கையின் 6 ஆவது கால அறிக்கையின் மீளாய்வு, மற்றும் CEDAW இன் கீழ் இலங்கையின் 9 ஆவது கால அறிக்கையைச் சமர்ப்பித்தல் உட்பட, இந் ஒப்பந்தங்களின் பல அறிக்கைகளை/ மீளாய்வுகளைச் சமர்ப்பிப்பதற்கான ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றன.

2020 ஆம் ஆண்டில், கல்விக்கான உரிமைக்கான சிறப்பு அறிக்கையாளர் மற்றும் காரணங்கள் மற்றும் விளைவுகள் உட்பட அடிமைத்தனத்தின் சமகால வடிவங்கள் பற்றிய சிறப்பு அறிக்கையாளர், ஆகிய இரண்டு சிறப்பு நடைமுறை ஆணை வைத்திருப்போர் இலங்கைக்கு வருகை தருவதற்கு இலங்கை அரசாங்கம் உடன்பட்டிருந்தது.
2021 நவம்பர் 26 முதல் டிசம்பர் 3 வரை, காரணங்கள் மற்றும் விளைவுகள் உட்பட, அடிமைத்தனத்தின் சமகால வடிவங்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சிறப்பு அறிக்கையாளர் திரு. டோமோயா ஒபோகாடாவின் இலங்கை விஜயத்தை இந்தப் பிரிவு ஒருங்கிணைத்தது.

**மனித உரிமைகள் குறித்த ஐரோப்பிய ஒன்றியம் – இலங்கை பணிக்குழு**

29 செப்டெம்பர் 2021 அன்று இடம்பெற்ற, ஆளுகை, சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் குறித்த ஐ.ஒ- இலங்கை 5 ஆவது கூட்டத்தில் இப்பிரிவு பங்கேற்றது.

சிறப்பு நடைமுறைகள் ஆணை வைத்திருப்பவர்கள் உட்பட உள்நாட்டு நிறுவனங்களால் ஏற்பட்ட மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம், மனித உரிமைகள் பேரவையுடனான ஒத்துழைப்பு, உடன்படிக்கை அமைப்புகள் மற்றும் முன்னேற்றம் குறித்து இப்பிரிவு ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுக்கு புதுப்பித்தல்களை வழங்கியது.

**நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்கள்**

நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்கள் தொடர்பாக இடம்பெற்ற தேசிய வழிநடத்தல் குழு மற்றும் தொழில்நுட்ப குழு கூட்டங்களை இப்பிரிவு ஒருங்கிணைத்தது.

ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் (UNESCAP) தெற்கு மற்றும் தென்மேற்கு ஆசிய அலுவலகத்தின் ஒருங்கிணைப்புடன் 2021 நவம்பர் 15-17 வரை கொழும்பில், "2030 நிகழ்ச்சி நிரலை முழுமையாக செயற்படுத்துவதை முன்னெடுத்துச் செல்லும் அதேவேளை, கோவிட்-19 இலிருந்து மேலும் சிறப்பாக உருவாக்குதல்" என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்ற நிலையான அபிவிருத்தி இலக்குகள் குறித்த 5 ஆவது தெற்காசிய கருத்துக்களத்தை ஒழுங்கமைப்பதில் இப்பிரிவு நிலையான அபிவிருத்தி கழகத்திற்கு உதவியது.
இலங்கையில் நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதன் நிலைப்பாடு குறித்த தன்னார்வ தேசிய மதிப்பாய்வின் (VNR) இரண்டாவது தொகுப்பை முன்வைப்பதற்கான இலங்கையின் முன்னேற்பாடுகள் தொடர்பான தேசிய வழிநடத்தல் குழு கூட்டங்களில் வெளியுறவு அமைச்சகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆரம்ப விவாதங்களுக்கு இப்பிரிவு பங்களித்தது. ஜூலை 2021 இல் SDG களில் ஐக்கிய நாடுகளின் உயர்மட்ட அரசியல் மன்றம். இத்தொகுப்பு, நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்கள் குறித்த ஐ.நா உயர்மட்ட அரசியல் கருத்துக்களத்தில் ஜூலை 2021 இல் முன்வைக்கப்பட்டது.

**ஆயுதக்குறைப்பு:**

பல்தரப்பு ஆயுதக்குறைப்பு முயற்சிகளுக்கான இலங்கையின் நீண்டகால கடப்பாடுகளைக் கடைப்பிடித்து, இப்பிரிவு, 2021 இல் பிரதானமாக ஜெனீவாவிலும் நியூயோர்க்கில் ஐ.நா பொதுச்சபையில் முதல் குழுவில் இடம்பெற்ற தீர்க்காலோசனை உட்பட, ஆயுதக்களைவுக்கான மாநாடு, ஆட்களுக்கெதிரான கண்ணிவெடித் தடைச் சாசனம் தொடர்பான அமர்வுகளுக்கிடையிலான கூட்டம், உயிரியல் ஆயுதங்கள் மாநாட்டின் நிபுணர்களின் கூட்டம், கொத்தணிக் குண்டுகள் குறித்த மாநாட்டின் மாநிலக் கட்சிகளின் கூட்டம், ஆபத்தான தன்னாட்சி ஆயுத அமைப்புகளுக்கான அரசாங்க நிபுணர்களின் குழு (LAWS) போன்ற அயுதக்களைவு கூட்டங்களில் இலங்கையின் பங்கேற்பு மற்றும் அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக, சம்பந்தப்பட்ட இலங்கை தூதரகப்பணியகங்களுடன் இணைந்து செயற்பட்டது.

**ஆட்களுக்கெதிரான கண்ணிவெடி தடை சாசனம்**

ஆட்களுக்கெதிரான கண்ணிவெடி தடை சாசனத்தினை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக நிலுவையிலுள்ள பிரச்சனைகளை மீளாய்வு செய்வதற்காக, 29 ஏப்ரல் 2021 அன்று ஒரு சம்பந்தப்பட்ட தரத்தவரின் கூட்டம் இவ்வமைச்சில் இடம்பெற்றது. பாதுகாப்பு அமைச்சு, சட்டமாஅதிபர் திணைக்களம், சட்ட வரைஞர் திணைக்களம், இலங்கை இராணுவம், தேசிய கண்ணிவெடி செயற்பாட்டு நிலையம், நீதி அமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் வலதுகுறைந்தோருக்கான செயலகம் ஆகியவற்றிலிருந்து பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். இக்கூட்டத்தின் அடிப்படையில், ஆட்களுக்கெதிரான கண்ணிவெடி தடை சாசனத்தின் கீழ் இலங்கையின் கடப்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக, பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன:

i. 18 ஜூன் 2021 அன்று வருடாந்த வெளிப்படைத்தன்மை அறிக்கை சமர்ப்பிப்பு

ii. ஆட்களுக்கெதிரான கண்ணிவெடி தடை சாசனத்தின் கீழ் 'Art4 காலக்கெடுவிற்கு, கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு முன்னதாக, 24 ஆகஸ்ட் 2021 அன்று இலங்கை, கடைசியாக எஞ்சியிருந்த 11,840 தொகுதி நிலக்கண்ணி வெடிகளை அழித்தது. இச்சாதனை குறித்து, ஜெனிவாவிலுள்ள இச்சாசனத்தின் செயன்முறைப்படுத்தல் ஆதரவு அலகு (ISU) ஒரு கூட்டு பத்திரிகைக்குறிப்பினை வெளியிடப்பட்டது.

iii. 06 செப்டெம்பர் 2021 அன்று, ஆட்களுக்கெதிரான கண்ணிவெடியைத் தடை செய்யும் சட்ட மூலத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் அதைத்தொடர்ந்து அதை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியது.

iv. அனைத்து ஆட்களுக்கெதிரான கண்ணிவெடிகளையும் அழித்ததைக் குறிக்கும் வகையில் சர்வதேச பங்காளிகளின் பங்கேற்புடன் ஒரு சம்பிரதாய நிகழ்வை ஏற்பாடு செய்யவும், இது தொடர்பாக இலங்கையின் சாதனைகளுக்கு உரிய விளம்பரம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

76 ஆவது ஐ.நா.பொ சபையின் முதல் குழுவில் (ஆயுதக்குறைப்பு மற்றும் சர்வதேச பாதுகாப்பு) முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள் / முடிவுகள் தொடர்பான இலங்கையின் நிலைப்பாடுகளை வகுப்பதில் இப்ரிவு முன்னிலை வகித்தது.

அணுஆயுதங்களை தடைசெய்தல் குறித்த ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திடுவதற்காக, கௌரவ வெளிநாட்டு அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை, 20 டிசம்பர் 2021 அன்று அமைச்சரவை அங்கீகரித்தது.

1996 இல் கைச்சாத்திடப்பட்ட விரிவான அணுசக்தி பரிசோதனை தடை ஒப்பந்தத்தை இலங்கை உறுதிப்படுத்தியமைக்கான அவதானிப்புகள் கோரப்பட்டன.

இலங்கை இன்னும் அங்கம் வகிக்காத ஆயுதக்குறைப்பு ஒப்பந்தங்கள் தொடர்பான இலங்கையின் நிலைப்பாட்டை மீளாய்வு செய்வதையும் இப்பிரிவு ஆரம்பித்துள்ளது.

பல்வேறு நிகழ்ச்சிநிரல் வகைகளில் அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை கோடிட்டுக் காட்டுவதுடன், இப்பிரிவானது; 2021 இல் ஆயுதக்களைவு குறித்த மாநாட்டில், இளைஞர்கள் மற்றும் ஆயுதக்குறைப்பு மற்றும் பெண்கள் மற்றும் ஆயுதக்குறைப்பு பற்றிய இலங்கைக்கான அறிக்கைகளை வெளியிடுவதற்கான ஆயத்தங்களையும் செய்தது.

**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் பல்தரப்பு ஈடுபாடு :**

சர்வதேச அணுசக்தி முகவரமைப்புடன் (IAEA) இலங்கையின் ஈடுபாடு, இப்பிரிவினால் ஒருங்கிணைக்கப்படுகிறது. 2021 ஜூன் 7 முதல் 11 வரை நடைபெற்ற IAEA ஆளுநர்கள் சபையிலும், 2021 செப்டம்பர் 20-24 வரை நடைபெற்ற IAEA பொது மாநாட்டின் 65 ஆவது அமர்விலும் இலங்கை பங்கேற்றது.

மேலும் இப்பிரிவு, ஆகஸ்ட் 25-26 வரை நடைபெற்ற இலங்கைக்கான கட்டம் 1 - ஒருங்கிணைந்த அணுசக்தி உட்கட்டமைப்பு மீளாய்வுப் பணி (INIR) - IAEA நிபுணர்களுடன் மெய்நிகர் பங்குதாரர் ஆலோசனைகள் தொடர்பான பணிகளையும் ஒருங்கிணைத்தது. இலங்கையில் அணுசக்தியைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவதே INIR இன் நோக்கமாகும்.

மார்ச் 2021 மற்றும் 2021 டிசம்பர் 13 முதல் 17 வரை நியூயோர்க்கில் நடைபெற்ற சர்வதேச பாதுகாப்புச் சூழலில் (OEWG) ICT துறையில் மேம்பாடுகள் குறித்த வரம்புகளற்ற பணிக்குழுவுடன் தொடர்புடைய இலங்கையின் நிலைப்பாடு மற்றும் ஈடுபாட்டை இப்பிரிவு ஒருங்கிணைத்தது.

**சமூக-பொருளாதார செயற்களத்தில் பல்தரப்பு ஈடுபாடு**

சமூக-பொருளாதாரத் துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் பல்தரப்பு மன்றங்களில் இலங்கையின் ஈடுபாட்டை இப்பிரிவு தொடர்ந்து ஒருங்கிணைத்து வருகிறது.

இந் மன்றங்களுடனான வழமையான ஈடுபாடுகளுடன், இலங்கையிலிருந்து பின்வரும் உயர்மட்ட பிரதிநிதித்துவங்களையும் இப்பிரிவு ஒருங்கிணைத்தது;

i. ஜூன் 03, 2021 அன்று ரோமில் உணவு மற்றும் விவாசய நிறுவனத்தில் (FAO) நடைபெற்ற உலக உணவுப் பாதுகாப்புக்கான ஐக்கிய நாடுகளின் குழுவின் (CFS 48) உழவுச்சூழலியல் நிகழ்வின் 48 ஆவது அமர்வில் ஜனாதிபதியின் பங்கேற்பு.

ii. 2021 ஜூலை 26-28 வரை ரோமில் நடைபெற்ற ஐ.நா உணவு அமைப்புகள் உச்சி மாநாட்டிற்கு முன்னரான உச்சிமாநாட்டில் ஜனாதிபதியின் பங்கேற்பு. பிரதான உச்சிமாநாடு, ஐ.நா.பொ.சபைக் கூட்டத்திற்கு அண்மித்ததாக, 23 செப்டம்பர் 2021 அன்று இடம்பெற்றது.

iii. ியூயோர்க்கில் 13-14 ஜூலை 2021 நடைபெற்ற அணிசேரா இயக்கத்தின் அமைச்சர்கள் மட்டத்திலான அரையாண்டுக்கால மாநாட்டின் (இணையம் மூலமான) பொது விவாதத்தில் இலங்கையின் வெளிநாட்டமைச்சர் பங்கேற்பு.

iv. மே 2021 இல் மெய்நிகரக நடைபெற்ற 74 ஆவது உலக சுகாதார மாநாட்டில் சுகாதார அமைச்சரின் பங்கேற்பு மற்றும் கோவிட் -19 தொடர்பான கலந்துரையாடல்கள் உள்ளிட்ட உலக சுகாதார நிறுவனத்தின் கூட்டங்களில் இலங்கையின் பிரதிநிதித்துவம்.

v. ஐ.நா பொருளாதார மற்றும் சமூக கழகம் (ECOSOC) 2021 அமர்வின் உயர்மட்டப் பிரிவில் வெளிநாட்டு அமைச்சரின் பங்கேற்பு மற்றும் நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் 2021 ஜூலை 13 முதல் 16 வரை மெய்நிகராக நடைபெற்ற ECOSOC 2021 அமர்வின் பொது விவாதத்தில் வெளிநாட்டமைச்சின் செயலாளரின் பங்கேற்பு.

vi. பெய்ஜீங்கிலுள்ள இலங்கை தூதரகத்தில் 15 ஜூலை 2021 அன்று இடம்பெற்ற இளைஞர் திறன்கள் தினத்தில், பிராந்திய கூட்டுறவிற்கான இராஜாங்க அமைச்சர் கலந்துகொண்டமை.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி ஒத்துழைப்பு கட்டமைப்பின் (UNSDCF) 2023-2027 அபிவிருத்தி தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல்களுக்கும் இப்பிரிவு பங்களித்தது. ஜூலை 02, 2021 அன்று நடைபெற்ற முதலாவது கூட்டு தேசிய உயர்மட்ட வழிநடத்தல் குழுக் கூட்டத்திலும், அதைத் தொடர்ந்து நடைபெறும் பணி நிலைக் கூட்டங்களிலும் வெளிநாட்டு அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்புடன் (UNODC) இலங்கையின் ஈடுபாடு 2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது. போதைப்பொருள் கடத்தல், குற்றத்தடுப்பு, ஊழல் கடத்தல் மற்றும் சைஃபர் குற்றங்களையும் கருத்தில் கொள்ளுதல், போன்றவை தொடர்பாக இடம்பெற்ற கூட்டங்களில் இலங்கையின் பங்களிப்பு இப்பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்டது.

ஆகஸ்ட் 2021 இல் பண்டைய சிகிரியாவின் நகரத்தின் சிகிரியா பாறையின் சிங்கப் படிக்கட்டுகளின் சுவரோவியங்கள், பார்வையாளர் தளம், காற்றுத் தாழ்வார உலோகப் பாலம் மற்றும் துண்டு துண்டான பாறைப் பலகைகள் ஆகியவற்றைப் பழுதுபார்ப்பதற்கும் பலப்படுத்துவதற்கும் சர்வதேச உதவியாக யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய நிதியத்திலிருந்து இலங்கைக்கு 91,212 அமெரிக்க டொலர்கள் கிடைத்தன.

2021 டிசம்பரில் கொழும்பில் கட்புலனாக கலாச்சார பாரம்பரியம் தொடர்பான அரசுகளுக்கிடையேயான குழுக் கூட்டத்திற்கான 16 ஆவது அமர்வினை நடத்த யுனெஸ்கோ இலங்கைக்கு வாய்ப்பளித்தது.

அணிசேரா இயக்கத்தின் (NAM) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆளும் சபையின் தலைவராக செப்டம்பர் 2021 முதல் 3 வருட காலத்திற்கு இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டது.

நியூயோர்க்கில் 30 நவம்பர் 2021 இடம்பெற்ற, வெளிநாட்டு அமைச்சர்களுக்கான 45 ஆவது கூட்டத்தின் குழு 77இல் இலங்கை மெய்நிகராக பங்கேற்றதை இப்பிரிவு ஒருங்கிணைத்தது.

2021 டிசம்பரில் பாரிஸில் உள்ள கட்புலனாக கலாச்சார பாரம்பரியம் குறித்த அரசாங்கங்களுக்கு இடையேயான குழுக்கூட்டத்தின் 16 ஆவது அமர்வின் இலங்கையின் தலைமைத்துவம் தொடர்பான விடயங்களை இப்பிரிவு ஒருங்கிணைத்தது. இந் அமர்வின்போது, இலங்கையின் 'தும்பர ரட்ட கலலா' செய்யும் கைவினை அருவமான உலக கலாச்சார பாரம்பரியமாக பொறிக்கப்பட்டது.

**1. அபேட்சகங்கள்** :

ஐ.நா மற்றும் பிற சர்வதேச அமைப்புகளில் பல்வேறு பதவிகளுக்கு பிற நாடுகளால் முன்மொழியப்பட்ட வேட்புமனுக்களை ஆதரிப்பதன் மூலம் ஐநா உறுப்பு நாடுகளுடன் நட்புறவைப் பேணுவதற்கான இலங்கையின் முயற்சிகளை இந்தப் பிரிவு தொடர்ந்து ஒருங்கிணைத்தது. அதன்பிரகாரம், 2021 ஆம் ஆண்டில், நடைபெற்ற 45 பல்தரப்புத் தேர்தல்களில் 325 வாக்குகளுக்கு மேல் இலங்கையின் ஆதரவு வழங்குவதை இப்பிரிவு செயற்படுத்தியது. அவையாவன; UPU, ISO, IUCN, சர்வதேச அணுசக்தி முகவரமைப்பு (IAEA), இனப் பாகுபாட்டை ஒழிப்பதற்கான சாசனம் (CERD), புலம்பெயர்ந் தொழிலாளர்களின் உரிமைகள் (CMW), பொருளாதார மற்றும் சமூக கழகம் (EcoSoC), ஐ.நா பாதுகாப்பு கழகம், சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO), CED, OPCW, CTBTO, ASOSAI, சித்திரவதைக்கு எதிரான மாநாடு (CAT), IOPCF, ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (UNESCO), IMO, AALCO போன்றவை.

சர்வதேச தொழிலாளர் ஆணைக்குழு (ILC), பொருளாதார மற்றும் சமூக கழகம் (ECOSOC) மற்றும் சர்வதேச வர்த்தக சட்டத்திற்கான ஐக்கிய நாடுகளின் ஆணைக்குழு (UNCITRAL) ஆகியவற்றுக்கான இலங்கையின் வேட்புமனுக்களுக்கான பரஸ்பர ஆதரவுகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகளையும் இப்பிரிவு மேற்கொண்டது.

**2. ஐ.நா அதிகாரிகள் விஜயம்**

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், 2021 இல் பின்வரும் உயர்மட்ட ஐ.நா அதிகாரிகளின் விஜயம் இப்பிரிவினால் ஒருங்கிணைக்கப்பட்டது;

- 23-25 நவம்பர் 2021 இல் ஐ.நா அரசியல், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் சமாதான செயற்பாடுகள் திணைக்களத்தின் உதவி செயலாளர் நாயகம், திரு காலிட் கியரி அவர்களின் விஜயம்.
- 13-17 டிசம்பர் 2021 இல், ஐ.நா அபிவிருத்தி திட்டத்தின் உதவி செயலாளர் நாயகம், மற்றும் ஐ.நா அபிவிருத்தி திட்டத்தின் ஆசியா மற்றும் பசுபிக் இற்கான பிராந்திய பணியகத்தின் உதவி நிருவாகியான திருமதி கனி விக்னராஜா அவர்களின் விஜயம்

**குறிப்பு I**

**மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் பற்றியதிலான மேம்பாடு குறித்த புதுப்பிப்பு**

**காணாமல் போனோருக்கான அலுவலகம்**

1. காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் (OMP) அதன் சட்டப்பூர்வ பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளுடன் தொடர்ந்து செயற்படுகிறது. OMP இன் பணிகளை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் அதற்கான ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2. OMP ஆனது, 1 ஆம் கட்டமாக, மூன்று முக்கிய காரணிகளைக் குறிப்பிடும் (2000-2001 இற்கு இடைப்பட்ட வழக்குகள்) 6025 விண்ணப்பங்களின்/ கோப்புகளின் பதிவேடுகளை மதிப்பிடுவதற்கான செயன்முறையை விரைவுபடுத்த முடிவு செய்துள்ளது. அவையாவன;

   (i) மிக அண்மையில் நிகழ்ந்த காணாமல் போனவர்கள் குறித்த சம்பவங்கள் ;
   (ii) கணிசமான சாட்சியங்கள் ஏற்கனவே கிடைக்கக்கூடியதாகவுள்ள சம்பவங்கள்; அல்லது
   (iii) OMP இன் அபிப்பிராயப்படி, பொது முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள்

3. 2500 முறைப்பாடுகள் மொழிபெயர்க்கப்பட்டு, இடைக்கால அறிக்கை விசாரணை செயன்முறைக்கான மதிப்பீடு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இடைக்கால அறிக்கையுடன் வழங்கப்பட்ட 68 முறைப்பாடுகளும் இதில் அடங்கும். காணாமல் போனோர் அலுவலகத்தின் அனைத்து பிராந்திய ஒருங்கிணைப்பாளர்களும் மேற்கண்ட புகார்கள் குறித்து கிராம அலுவலர் மற்றும் உள்ளூர் காவல் நிலையத்தில் விசாரித்து, பின்வருவன தொடர்பில் புதுப்பித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்;
   - விண்ணப்பதாரி கடந்தகாலத்தில் ஏதாவது ஒரு முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளாரா என்பது
   - அலுவலர்கள் அல்லது அதிகாரிகள் அதுபற்றி விசாரணைகள் அல்லது புலன் விசாரணைகள் ஏதும் நடத்தினார்களா, அப்படியெனில் விபரங்கள்;
   - அலுவலர்கள் ஏதாவது முக்கியமான ஆதாரங்களைச் சேகரித்தார்களா, அவ்வாறெனில் அவற்றின் பிரதிகளைப் பெறுதல்

<u>இழப்பீடுகளுக்கான அலுவலகம் (OR)</u>

4. இழப்பீடுகளுக்கான அலுவலகம் (OR) 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31, 2021 வரை 5964 உரிமைக் கோரல்களைச் செயற்படுத்தியது. 2021 ஆம் ஆண்டில், இழப்பீடு வழங்குவதற்காக OR மொத்தமாக LKR 399.8 மில்லியனைப் பெற்று, முழு ஒதுக்கீட்டையும் இழப்பீடு வழங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

5. 2018 இன் இழப்பீடுகளுக்கான அலுவலக சட்ட இல.34 இன் கீழ் இழப்பீடு வழங்குவதற்கான கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள், 17 ஆகஸ்ட் 2021 அன்று அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. இது சட்டப்பூர்வ செயன்முறையை நிறைவு செய்து, OR சட்டத்திலுள்ள மையக் கொள்கைகளின் அடிப்படையில் OR இன் வேலைத் திட்டத்திற்கான அடிப்படையை வழங்குகிறது. இழப்பீடுகளுக்கான கொள்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

<u>தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் (ONUR)</u>

6. தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடன், 8 கருப்பொருட்களின் கீழ், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் (ONUR) தொடர்ந்தும் தனது ஆணையை நிறைவேற்றுகிறது.

7. 'நவீன சமுதாயத்தில் நிலையான அமைதி, பாதுகாப்பு மற்றும் நல்லிணக்கத்தைப் புரிந்துகொள்வதன் மூலம் வேறுபாடுகளைத் தீர்த்து வைத்தல்' என்ற கருப்பொருளின் கீழ் ONUR தனது முதல் சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டை 30 முதல் 31 அக்டோபர் 2021 வரை ஏற்பாடு செய்தது. நவீன பன்முக கலாச்சார சமூகத்தில் சமாதானத்தை கட்டியெழுப்புதல், நிலையான அமைதி, உரிமைகள் மற்றும் குடிமக்களின் பொறுப்புகள், நல்லிணக்கம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகள் தொடர்பான அனுபவங்கள், யோசனைகள், தகவல்கள் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளை பரிமாறிக்கொள்வதற்கும், பகிர்ந்து கொள்வதற்கும் முன்னணி கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள்

மற்றும் ஆராய்ச்சி அறிஞர்கள், வல்லுநர்களை ஒன்றிணைப்பது இம்மாநாட்டின் நோக்கமாகும். ஆராய்ச்சியாளர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் கல்வியாளர்களுக்கு மிக சமீபத்திய கண்டுபிடிப்புகள், போக்குகள் மற்றும் கவலைகள் மற்றும் நடைமுறை சவால்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்வுகள் ஆகியவற்றை முன்வைக்கவும் விவாதிக்கவும் இது ஒரு முதன்மையான இடைநிலைத் தளத்தை வழங்கியது.

நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்கள் 16

8. நிலையான அபிவிருத்தி அறிக்கை 2021 இன் படி, SDG களை அடைவதில் இலங்கை நிலையான முன்னேற்றத்தைக் காட்டுகிறது. SDG சாதனைகளில் இலங்கையின் உலகளாவிய தரவரிசை 7 நிலைகளால் அதிகரித்து 2021 இல் 15 நாடுகளில் 87 ஆவது இடத்தில் உள்ளது. 13 டிசம்பர் 2021 அன்று நீதி அமைச்சு மற்றும் நிலையான வளர்ச்சிக் கழகம் இணைந்து கூட்டிய SDG - 16 கூட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகத்தின் ஆலோசனை நடந்தது.

9. ஏழு முன்னுரிமைப் பகுதிகளின் கீழ் அமைச்சினால் தொடங்கப்பட்ட சாதனைகள், சவால்கள் மற்றும் சீர்திருத்த செயன்முறைகளை இந்த ஆலோசனைக் கூட்டம் பிரதிபலித்தது. SDG 16 துணைக் குழுக்களுக்கு சிவில் சமூகப் பிரதிநிதிகளை நியமித்தல், வெளிப்படையான அரசாங்கப் பங்காளித்துவத்தைப் பின்தொடர்தல், ONUR மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவுடன் ஒரு தனிக் கூட்டத்தை நடத்தி திட்டங்களை வடிவமைத்தல், ILO சாசனம், C190- வன்முறை மற்றும் துன்புறுத்தல் சாசனம் ஆகியவற்றை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்தல் ஆகிய முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு

10. உச்ச நீதிமன்றத்தின் தற்போதைய நீதிபதி நவாஸ் தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தனது இரண்டாவது இடைக்கால அறிக்கையை விரைவில் இலங்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

11. ஆணைக்குழுவானது BMICH இல் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் பொது அமர்வுகளை நடாத்தி வருகிறது. அதன் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து நீண்ட காலமாக பொதுமக்களுக்காக திறக்கப்பட்டுள்ளது. இதுவரை கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் ஆணைக்குழுவின் பொது அமர்வுகள் இடம்பெற்றுள்ளன. இந்த பொது அமர்வுகளில் 100க்கும் மேற்பட்ட சாட்சிகள் ஆணைக்குழுவில் சாட்சியமளித்துள்ளனர்.

சிவில் சமூகத்துடன் ஈடுபாடு

12. பல தசாப்தங்களாக, சமூக மற்றும் மனித அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களில் இலங்கையின் முன்னேற்றத்திற்கு சிவில் சமூகம் ஒரு முக்கிய பங்காளியாக இருந்து வருகிறது. எமது சர்வதேச மனித உரிமைகள் அறிக்கையிடல் கடப்பாடுகளில் சிவில் சமூகத்துடன் அரசாங்கம் செயலூக்கத்துடனான தொடர்புகளைப் பேணி வருகின்றது. இது குறித்து தொடர்ந்துவரும் நடவடிக்கையில் வெளிநாட்டு அமைச்சர் ஈடுபட்டுள்ளார். இது தொடர்பான தொடர் நடவடிக்கையில் வெளிவிவகார அமைச்சர் ஈடுபட்டுள்ளார். சமீபத்திய கூட்டம் ஒன்றில் ONUR மற்றும் SDG 16 இல் வழிநடத்தும் குழுவுடன் ஈடுபடுவதன் மூலம், ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் நிலையான அபிவிருத்திக் குறிக்கோள்களின் செயற்பாட்டிற்குப் பங்களிப்பதற்கு, சிவில் சமூகத்தின் நிபுணத்துவம் கோரப்பட்டது.

13. 17 நவம்பர் 2021 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள ஏற்பாடுகளின்படி, தேசிய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தின் செயற்பாடுகள், அதிகாரங்கள் மற்றும் ிருவாகம் என்பவை, வெளிநாட்டு அமைச்சின் அதிகார எல்லையின் கீழுள்ள நிறுவனமாக வைக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் மீளாய்வு

14. சர்வதேச நெறிமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக, பயங்கரவாத தடைச் சட்டத்தில் உள்ள முக்கிய விதிகளில் திருத்தங்களை முன்மொழிவதற்காக, 2022 ஜனவரி 10 அன்று, அமைச்சரவையின் ஒப்புதலை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. முன்மொழியப்பட்ட திருத்தங்கள் அடங்கிய சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் அதன் பின்னர் இறுதி ஒப்புதலுக்காக பாராளுமன்றத்தில் சட்டமூலத்தை தாக்கல் செய்வதற்கும் 25 ஜனவரி 2022 அன்று அமைச்சரவையின்

அங்கீகாரம் வழங்கப்பட்டது. இச்செயன்முறை விரைவாக முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 42 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது பாரிய திருத்தம் இதுவாகும்.

15. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், ஜனாதிபதி, இலங்கையின் அரசியலமைப்பின் 34 வது உறுப்புரையின் பிரகாரம் தனது அதிகாரங்களைப் பிரயோகித்து, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தண்டனை அனுபவித்து வரும் பதினாறு (16) விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு மன்னிப்பு வழங்கியுள்ளார்.

## பொருளாதார அலுவல்கள் பிரிவு

### இருதரப்பு மற்றும் பொருளாதார இராஜதந்திரம், தொழில்நுட்ப கூட்டுறவு பிரிவு

பொருளாதார அலுவல்கள் பிரிவு இருதரப்பு, பல்தரப்பு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான பொறுப்புக்களை மேற்கொண்டுள்ளது. இப்பிரிவானது வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, சுற்றுலா, தேயிலை ஊக்குவிப்பு மற்றும் அபிவிருத்தி உதவி ஆகிய துறைகளை சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுடன் நெருக்கமாக ஒருங்கிணைத்து, மற்ற நாடுகள் மற்றும் அமைப்புகளுடன் இருதரப்பு மற்றும் பலதரப்பு உறவுகளை நடத்துவதன் மூலம் இலங்கைக்கான நன்மைகளை உறுதி செய்கிறது. இப்பிரிவின் முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றான பொருளாதார இராஜதந்திரத் திட்டத்தின் கீழ், இவ்வருடத்தில் அடைய வேண்டிய பொருளாதார இலக்குகளுக்கான பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன..

பயனுள்ள ஊக்குவிப்பு இயக்கங்களை நடத்துவதற்கு உலகளாவிய தொற்றுநோயால் உருவாக்கப்பட்ட சாதகமற்ற மற்றும் அனுகூலமற்ற சூழ்நிலை இருந்தபோதிலும், மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் இப்பிரிவு, பல முக்கிய நிகழ்வுகளை உள்ளடக்கிய பல வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தது.

தூதரக பணியகங்களுக்கு 2021 ஆம் வருடத்திற்காக வழங்கப்பட்டுள்ள ஏற்றுமதி இலக்குகள்:

2021 ஆம் ஆண்டிற்கான மொத்த ஏற்றுமதி இலக்கு 15.72 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும், இது 12.14 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் 3.5 பில்லியன் டொலர்கள் சேவைகள் ஏற்றுமதியைக் குறிக்கிறது. 2021 ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலகட்டத்தில், தொற்றுநோய் மற்றும் விநியோகச் சங்கிலியில் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், இலங்கை 11.11 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வணிகப் பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது.

இலங்கை தேயிலைச் சபையுடன் (SLTB) இணைந்து இலங்கைத் தேயிலையை மேம்படுத்துவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பணிகளுக்கு 2021 - 2025 காலப்பகுதிக்கான ஏற்றுமதி இலக்குகளை நிர்ணயித்தல் மற்றும் கொடுக்கப்பட்ட இலக்குகளை அடைவதில் அந்தந்த தூதரகங்களின் முயற்சிகளுக்கு வசதியாக சந்தை தொடர்பாடல் திட்டங்கள் (MCPs) வழங்கப்பட்டமை. 2022 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி இலக்குகள் ஏற்கனவே தூதரக பணியகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இவ்வமைச்சு, இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழுவுடன் (SEC) இணைந்து, ஏப்ரல் 2021 இல் தொடர்ச்சியான மெய்நிகர் கூட்டங்களை ஆரம்பித்ததன் மூலம், இலங்கையை காட்சிப்படுத்த/ மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய அணுகுமுறையைத் தீர்மானிக்க SEC இற்கு உதவுவதற்கு தூதரகங்களுக்கு இயலச்செய்தது. முதலீட்டாளர்களின் வகைகள் மற்றும் முதலீட்டாளர்களை அணுகுவதற்கான முறைகளை அடையாளம் காண்பதற்காக 13 கூட்டங்கள் நடைபெற்றன.

பொருளாதார இராஜதந்திர பாதீட்டின் கீழ்; 2021 செப்டெம்பர் 14-15 திகதிகளில் லக்ஸம்பேர்க்கில் இடம்பெற்ற 'ஸ்பிரிங் யூரோப்' த.தொ.தொ இல் பங்கேற்பதற்கும், சீனாவில் 2021 நவம்பர் 5-10 இல் இடம்பற்ற 3 ஆவது சர்வதேச இறக்குமதி எக்ஸ்போவிற்குமான ஏற்பாடு.

ஒஸாகாவில் இடம்பெறவிருக்கும் எக்ஸ்போவில் இலங்கை பங்கேற்பதற்காக வர்த்தக அமைச்சுடன் ஒருங்கிணைப்பு.

வர்த்தகம், சுற்றுலா மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு குறித்தல் பெரும் எண்ணிக்கையான மெய்நிகர் கூட்டங்களை/ இணையதள மாநாடுகளை இப்பிரிவு நடாத்தி, பங்கேற்றது. 34 மெய்நிகர் கூட்டங்கள் இடம்பெற்றன.

2021 செப்டெம்பர் 24 அன்று மெய்நிகராக இடம்பெற்ற இலங்கை – சீனாவுக்கிடையிலான கூட்டு வர்த்தக, பொருளாதார ஒத்துழைப்புக் கூட்டத்தின் 7 ஆவது அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டு பங்கேற்கப்பட்டது.

இப்பிரிவு பொருளாதாரம், வர்த்தகம், சுற்றுலா மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு தொடர்பாக அந்தந்த இணை முகவரமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு கூட்டங்களில் கலந்துகொண்டது. கூடுதலாக, பல வர்த்தக/பொருளாதார ஒத்துழைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், இணை முகவரமைப்புக்கள், வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்கள் மற்றும் கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதரக தூதரகங்கள் ஆகியவற்றை ஒன்றிணைக்கும் ஒப்பந்தங்களுக்கு அனுசரணை வழங்கியது. மேலும் இருதரப்பு விஜயங்கள் மற்றும் இருதரப்பு அரசியல்/பொருளாதார ஒத்துழைப்பு அமர்வுகளுக்கு பொருளாதாரம் தொடர்பான உள்ளீடுகளை வழங்கியது.

ஸ்ரீலங்கா எயர்லைன்ஸ் லிமிடெட், சுகாதார அமைச்சு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை இலங்கை சுற்றுலா, பாதுகாப்பு அமைச்சு, மக்கள் வங்கி, இலங்கை மின்சார சபை போன்ற பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் 30 உலகளாவிய கேள்வி மனுக்கள் / கொள்முதல்கள் ஆகியவை, விளம்பரங்களுக்காக வெளிநாட்டு தூதரகங்களுக்கு அனுப்பப்பட்டன.

இம்மீளாய்வுக்காலத்தில்; 15 வர்த்தகம் தொடர்பான பிணக்குகள் மற்றும் 55 நுழைவு வீசாக்கள் மற்றும் 2 வதிவிட வீசாக்கள் தொடர்பான கொழும்பில் உள்ள சர்வதேச நிதி/அபிவிருத்தி நிறுவனங்களின் அலுவலகங்களின் பணியாளர்களின் 2 வழக்குகள் ஆகியவை இப்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டன.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் ஆகியவற்றின் ஆலோசனைச் சபைகளில் இவ்வமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தியமை.

இலங்கைக்கும் பங்களாதேசத்திற்கும் இடையிலான முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகளிலும், இலங்கையின் தேசிய வர்த்தக கொள்கை உருவாக்கம் குறித்த கலந்துரையாடல்களிலும் இப்பிரிவு செயலீடுபாட்டுடன் பங்கேற்றது.

சுங்க விடயங்களில் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர நிருவாக உதவி குறித்து இலங்கைக்கும் துருக்கிக்கும் இடையிலான உடன்படிக்கை 26 நவம்பர் 2021 அன்று கைச்சாத்தானது.

பிரேசிலுக்கு இலங்கை இளநீர் ஏற்றுமதியை விரிவாக்குவதற்கு, தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையுடன் பிரேசில் இலங்கைத் தூதரகம் இணைவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை மற்றும் மாலத்தீவுகளுக்கு இடையே படகு கட்டுதல், நறுக்குதல், உதிரி பாகங்கள் வழங்குதல் மற்றும் ஓய்வுநேர படகு தொழிலுக்கான பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் துறைகளை மேம்படுத்துவதற்காக, மாலைதீவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மற்றும் இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் மாலைதீவுகளின் தேசிய படகுச் சங்கம் (NBAM) மற்றும் இலங்கை படகு மற்றும் கப்பல் கட்டும் தொழில்துறையின் பிரதிநிதிகளுக்கு இடையிலான மெய்நிகர் சந்திப்பு 11 அக்டோபர் 2021 அன்று நடைபெற்றது.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான வர்த்தக வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக கொழும்பிலுள்ள ஷங்ரிலா ஹோட்டலில் 23 நவம்பர் 2021 அன்று நடைபெற்ற 33வது RCCI சர்வதேச சாதனை விருதுகள் மற்றும் வணிக வாய்ப்புகள் மாநாட்டிற்காக பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்திற்கு அனுசரணை வழங்கிமை.

2021 நவம்பர் 22 முதல் 25 வரை இலங்கைக்கு விஜயம் செய்த தென்னிந்திய விசைத்தறி சம்மேளனத்தின் வர்த்தகம் மற்றும் முதலீட்டுத் தூதுக்குழு; கௌரவ. வெளிநாட்டமைச்சின் செயலாளர், முதலீட்டுச்சபை அதிகாரிகள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பங்குதாரர்கள் ஆகியோருடனான சந்திப்புக்களை ஒருங்கிணைத்ததுடன் அதில் தீவிரமாகப் பங்குபற்றியமை.

கௌரவ வெளிநாட்டு அமைச்சர் மற்றும் கௌரவ சுற்றுலாத்துறை ஆகியோருடனான சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு குறித்த மெய்நிகர் சந்திப்பு ஒன்று 01 டிசம்பர் 2021 அன்று இடம்பெற்றது. அதன் விளைவாக, இலங்கைக்கு சுற்றுலாப்பயணம் மேற்கொள்ளவிருப்போருக்கான புதுப்பித்த தகவல்களை வழங்கும்

நோக்குடன், தூதரக பணியகங்களது இணைய தளங்கள் புதுப்பிக்கப்பட்டதுடன், ஸ்ரீலங்கா சுற்றுலா மற்றும் ஹலோ அகைன்’ ஆகிய இணையதளங்களுக்கும் இணைப்புக்கொடுக்கப்பட்டது.

**தொழில்நுட்ப கூட்டுறவு**

கொள்முதல்: இலங்கை விமான சேவை, பாதுகாப்பு அமைச்சு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம், அரச மருந்துக் கூட்டுத்தாபனம், இலங்கை கடற்படை, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம், இலங்கை துறைமுக அதிகாரசபை போன்ற நிறுவனங்களின் சர்வதேச அளவிலான 30 கொள்முதல் அறிவிப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

வீசா பிரிவு: JICA, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவங்களுக்கு 33 நுழைவு வீசாக்கள் மற்றும் 12 வதிவிட வீசாக்கள் பரிந்துரைக்கப்பட்டன.

**பொருளாதார அலுவல்கள் (பல்தரப்பு)**

பொருளாதார விவகாரப் பிரிவின் பல்தரப்புப் பிரிவானது; சர்வதேச, அரசுகளுக்கிடையேயான மற்றும் பிராந்திய நிறுவனங்களுடன் தொடர்புடைய பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்து இலங்கையின் கொள்கை நிலைப்பாடுகளை உருவாக்குவதற்கும், பலதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும் மற்றும் சர்வதேசரீதியில் அரசாங்கம் மேற்கொள்ளும் கடப்பாடுகளைப் பின்பற்றுவதிலும் ஈடுபட்டுள்ளது.

இந்துசமுத்திர வளைய நாடுகளின் சபைக்கான இலங்கையின் மையப்புள்ளியாக இப்பிரிவு செயற்படுகிறது. இதுசம்பந்தமாக, 57 கூட்டங்களை இப்பிரிவு ஏற்பாடு செய்து பங்கேற்றுள்ளது.

2021 நவம்பர் 15-17 வரை டாக்காவில் நடைபெற்ற 21 ஆவது அமைச்சர்கள் குழுக் கூட்டத்தில் (COM) இந்துசமுத்திர வளைய நாடுகள் சபை துணைத் தலைவர் பதவியை இலங்கை ஏற்றுக்கொண்டது. COM உடனான 23வது மூத்த உத்தியோகபூர்வ கூட்டத்தில் கௌரவ. வெளிநாட்டு அமைச்சர் வெளிநாட்டமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இந்த அமர்வின்போது, 2022-2026 ஆம் தவணைக்கான இந்துசமுத்திர வளைய நாடுகள் சபையின் இரண்டாவது செயல் திட்டத்திற்கான நிறுவன ரீதியான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் செயலீடுபாட்டை விரிவாக்குவதற்குமான ஒருங்கிணைக்கும் நாடாக இலங்கை தெரிவுசெய்யப்பட்டது.

2021 ஜூன் 8,14, 23, 24 மற்றும் 28 ஆகிய தேதிகளில் இந்துசமுத்திர வளைய நாடுகள் சபை (IORA) இன் புதிய பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான தகுதி மற்றும் அளவுகோல் தொடர்பான தேவைக்கேற்ற பணிக்குழுவை நடாத்திய இலங்கை அரசாங்கம், இறுதி அறிக்கையை 30 ஜூன் 2021 அன்று IORA செயலாளரிடம் சமர்ப்பித்தது.

IORA இல், இலங்கையானது கடல்சார் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு கிளஸ்டர் குழுவை தொடர்ந்து ஒருங்கிணைத்து வருகிறது, அதே நேரத்தில் பேரிடர் முகாமைத்துவம், சுற்றுலா மற்றும் கலாச்சார பரிமாற்றங்கள், சமுத்திர பொருளாதாரம் மற்றும் மீன்வள முகாமைத்துவம் குழுக்களிலும் தீவிரமாக பங்கேற்று வருகிறது.

ஆசியா மற்றும் பசிபிக்கிற்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் (UNESCAP) வருடாந்திர குழு அமர்வுகள் உட்பட, 27 கூட்டங்கள்/ பணிக்குழுக்கள்/ திறன் மேம்பாடு ஆகியவற்றில் அதிகாரிகள் பங்கேற்பதற்கும் இப்பிரிவு உதவியது. 2021 நவம்பர் 15-16 வரை நிலையான அபிவிருத்தி இலக்குகள் குறித்த 5 ஆவது தெற்காசிய மன்றத்தையும் (கோவிட் சூழ்நிலையில் இலங்கையில் நடைபெற்ற முதலாவது சர்வதேச மன்றம்) மற்றும் தெற்காசியாவில் நிலையான அபிவிருத்திக்கான பிராந்திய ஒத்துழைப்புக்கான கொள்கை உரையாடலையும், இலங்கையின் நிலையான அபிவிருத்தி கழகத்துடன் இணைந்து 2021 நவம்பரில் நடத்தியது.

பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான ((BIMSTEC) வங்காள விரிகுடா முன்முயற்சியினைத் தலைமை தாங்கும் இலங்கை; (BIMSTEC) சாசனம், துறைகளின் மற்றும் BIMSTEC துணைத் துறைகளின் சீரமைப்பு, இராஜதந்திர கல்லூரிகள் / பயிற்சி நிறுவனங்கள் இடையே பரஸ்பர ஒத்துழைப்பு பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தம், BIMSTEC உறுப்பு நாடுகளின் மற்றும் BIMSTEC மையங்கள்/நிறுவனங்களின் ஸ்தாபனத்திற்கான புரிந்துணர்வுச் சபை (MoA) வார்ப்புருவை இறுதி செய்தல் ஆகியவற்றுக்கான முக்கிய கூட்டங்களை நடத்தியது.

சிரேஷ்ட அதிகாரிகள் கூட்டத்தின் சிறப்பு அமர்வுக்கு முன்னதாக, 17ஆவது BIMSTEC அமைச்சர்கள் கூட்டத்தை 2021 ஏப்ரல் 1 அன்று இலங்கை நடத்தியது. 8 BIMSTEC கூட்டங்களில் அதிகாரிகள் பங்கேற்பதற்கு இப்பிரிவு ஏற்பாடு செய்தது. 28-29 அக்டோபர், 2021 அக்டோபர் 28-29 வரை போதைப் பொருட்கள், உளநிலை மாற்றும் போதை மருந்துகள் மற்றும் முன்னோடி இரசாயனங்கள் ஆகியவற்றில் சட்டவிரோத கடத்தலைத் தடுப்பதற்கான BIMSTEC துணைக் குழுவின் ஆறாவது கூட்டத்தை இலங்கை நடத்தியது.

2021 டிசம்பர் 5-10 காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்த BIMSTEC செயலாளர் நாயகம்: மேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம மந்திரி, கௌரவ வெளிநாட்டு அமைச்சர், கௌரவ சுகாதார அமைச்சர், சுதேச மருத்துவ ஊக்குவிப்புக்கான கௌரவ இராஜாங்க அமைச்சர், திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் கல்வி ஆராய்ச்சி மற்றும் புதுமை உருவாக்க கௌரவ இராஜாங்க அமைச்சர் ஆகியோரை மரியாதை நிமித்தமாக சந்தித்திருந்தார். 5 ஆவது BIMSTEC உச்சிமாநாட்டினை, 30 மார்ச் 2022 இல் கொழும்பில் மெய்நிகர் மற்றும் நேருக்கு நேர் என்ற முறையில் நடாத்த முன்மொழியப்பட்டது. பிற உறுப்பு நாடுகளால் நடாத்தப்பட்ட துறைசார் கூட்டங்களிலும் இலங்கை பங்கேற்றது.

கொழும்புத் திட்டத்தின் 47 ஆவது ஆலோசனைக் குழுக்கூட்டத்தை, இலங்கை 2021 ஆகஸ்ட் 10-12 களில் மெய்நிகராக நடாத்தியது. ஆலோசனைக் கூட்டத்தில் இலங்கை நாட்டுக்கான கருப்பொருள் அவணத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளுக்கேற்ப, உறுப்பு நாடுகளிடையே சிறந் நடைமுறைகள் மற்றும் நிபுணத்துவத்தினைப் பகிர்ந்துகொள்ளும் நோக்குடன், கொழும்புத் திட்டத்தின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற திட்டத்தின் கீழ் நிலையான பசுமை நகரங்களை கட்டியெழுப்புதல் மற்றும் பசுமை வெளியை அதிகரிப்பதற்கான விடயத்திற்குத் தலைமை தாங்குவதாக இலங்கை உறுதியளித்தது. 2022 இல் வெற்றிடமாகவுள்ள கொழும்புத் திட்டத்தின் செயலாளர் நாயகம் பதவிக்கு இலங்கையின் வேட்பாளராக தூதுவர் கிரேஸ் ஆசிர்வதத்தை இலங்கை அரசாங்கம் பரிந்துரைத்தது.

2021 கொழும்பு திட்ட நிலைக்குழு கூட்டம் 30 நவம்பர் 2021 அன்று நடைபெற்றது மற்றும் கொழும்பு திட்ட கழகத்தின் 304 ஆவது அமர்வு 10 டிசம்பர் 2021 அன்று நடைபெற்றது.

அபுதாபி பேச்சுவார்த்தைக்கான அடுத்த தலைவரை நியமிப்பதற்கான ஒருமித்த கருத்தை கட்டியெழுப்புவதற்கான கலந்துரையாடல்களுக்கு தலைமை தாங்க வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு வழங்கப்பட்டது. அங்கு ஒருமித்த வேட்பாளரை முன்வைத்து தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளுடனான பல சுற்று ஆலோசனைகள் வெற்றிகரமான முடிவை அளித்தன.

குறிப்பு விதிமுறைகளை (ToR) விவாதிக்கவும் மே 2022 இல் நியூயோர்க்கில் நடைபெறவுள்ள சர்வதேச இடம்பெயர்வு மீளாய்வு மன்றம் (IMRF) குறித்து உள்ளீடுகளைப் பெறவும் இப்பிரிவு 17 டிசம்பர் 2021 அன்று வெளிநாட்டுச் செயலாளர் தலைமையில் இணை அமைச்சுக்களுடன் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தது.

மேலும் இப்பிரிவு ஆசிய- ஆபிரிக்க கிராமிய அபிவிருத்தி நிறுவனம், ஆசிய கூட்டுறவு பேச்சுவார்த்தை (ACD), G77, UNCTAD, WTO, OECD, WEF, IOM, கொழும்பு செயன்முறை மற்றும் GFMD ஆகியவை குறித்து இணை அமைச்சுக்களுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டது.

## சமுத்திர விவகாரங்கள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற பிரிவு

### பல்தரப்பு உறவுகள்

**29 ஜனவரி 2021 அன்று வெளிநாட்டமைச்சின் செயலாளரால் நடாத்தப்பட்ட, கடல்சார் பாதுகாப்பு துறையில் பணிபுரியும் நிபுணர்களின்/ அதிகாரிகளின் கூட்ட ஒருங்கமைப்பு –** கடல்சார் பாதுகாப்புத் துறையில் உள்நாட்டு நிபுணர்களுடன் ஒரு முறைசார் ஒருங்கமைப்பினை உருவாக்கும் நோக்குடன் இப்பிரிவு மேற்படி கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. இது, கடல்சார் பணித் திட்டத்தின் இந்துசமுத்திர வளைய நாடுகளின் பணிக் குழுவின் நோக்கத்திற்கு இணைவானதாகும். சட்ட வல்லுநர்கள், புகழ்பெற்ற விஞ்ஞானிகள், ஆயுதப்படை நிபுணர்கள் மற்றும் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் அடங்கிய இந்த நிகழ்வில் முப்பது (30) அதிகாரிகள் கலந்துகொண்டனர். ஜெர்மன் சிந்திப்போர் குழுமமா மக்ஸ் பிளாங்க் அறக்கட்டளையின் ஆதரவுடன் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

**சர்வதேச கடற்படுகை அதிகாரசபையுடனான (ISA) இலங்கையின் செயலீடுபாடு - ISA செயலகத்துடன் இணைந்து செயற்படுவதற்கான ஒரு தேசிய குவி மையத்தை நியமித்தல் – 22 ஜனவரி 2021**. ஒரு தேசிய மையப் புள்ளியை நியமிக்கும் நோக்கத்துடனும் ISA உடன் பயனுள்ள ஈடுபாட்டிற்கான வழிமுறைகளைப் பற்றி விவாதிக்கவுமென, சம்பந்தப்பட்ட அரசாங்க முகவரமைப்புக்களுடன் இப்பிரிவு ஒரு பங்குதாரர் கூட்டத்தை ஏற்பாடு செய்தது. வெளிநாட்டமைச்சு (சமுத்திர விவகாரங்கள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் பிரிவு) ஒரு பங்குதாரர் குழுவால் ஆதரிக்கப்படும் தேசிய மையமாக இருக்க வேண்டுமென்பது பங்கேற்பாளர்களால் பரஸ்பரம் முடிவு செய்யப்பட்டது. இப்பிரிவு குழுவிற்கான குறிப்பு விதிகள் (ToR) வரைவினை உருவாக்கி, பங்கேற்பாளர்களின் கருத்துகள்/உள்ளீடுகளை தொகுத்து அதை இறுதி செய்யும் பணியில் உள்ளது.

**சதுப்புநில பராமரிப்பு திட்டம்- புபுதுகம, புத்தளம், 20 ஜனவரி 2021** - இப்பிரிவு, சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து 2018 ஆம் ஆண்டு முதல் பொதுநலவாய சமுத்திர சாசனத்தின் சதுப்புநில சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதார நடவடிக்கை குழுவை (MELAG) முன்னெடுத்து வருகிறது. கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம். சுற்றுச்சூழல் மற்றும் வனப் பாதுகாப்புத் துறை, சதுப்புநில பராமரிப்பாளர் திட்டத்தை (MCP) 20 ஜனவரி 2021 அன்று ஆரம்பித்தது.

**இந்துசமுத்திர வளைய நாடுகள் சங்கம் (IORA) தொடர்பான கூட்டங்கள்**

i) **கடல்சார் பாதுகாப்பு குறித்த IORA பணிக்குழுவின் 2 ஆவது கூட்டம் 18 – 19 மார்ச் 2021 –** இப்பணிக்குழுவின் பிரதான ஒருங்கிணைப்பாளர் என்ற வகையில் இப்பிரிவு ஒழுங்குசெய்த 2 ஆவது கூட்டத்தில் 2022-2026 தவணைக்கான புதிய பணித்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருவேறு மாதிரிகளில் இடம்பெற்ற இக்கூட்டத்தில், மட்டுப்படுத்தப்பட்ட அழைப்பாளர்களுடன் (முக்கிய அரசு நிறுவனங்களின் மூத்த அதிகாரிகள், IORA உறுப்பு நாடுகளில் இருந்து கொழும்பில் வசிக்கும் தூதரகத் தலைவர்கள், உரையாடல் கூட்டாளி நாடுகள் மற்றும் ஐ.நா அதிகாரிகள்) மெய்நிகராக ஒரு ஆரம்ப விழா நடாத்தப்பட்டது.

ii) **கடல்சார் பாதுகாப்பு குறித்த IORA இரண்டாவது பணிக்குழுவின் கொத்தணிக் கூட்டம், 09 செப்டெம்பர் 2021** – 2ஆவது IORA WGMSS பணித் திட்டத்தின் செயற்பாடுகளை 2 ஆவது IORA செயற்றிட்டத்துடன் மீண்டும் சீரமைப்பதற்கான உறுப்பு நாடுகளின் பரிந்துரைகளை விவாதிப்பத்தற்காக இப்பிரிவு இக்கூட்டத்தை நடத்தியது.

2 ஆவது IORA செயற்றிட்டத்தின் கடல்சார் பாதுகாப்பு அம்சத்தினை இறுதிசெய்வதில் இப்பிரிவு பல சுற்றுக்கள் கொத்தணி குழு (அவுஸ்திரேலியா, பங்களாதேசம், இந்தியா, இந்தோனேசியா, ஈரான், கென்யா, மடகஸ்கார், மொரிஷியஸ், தென்னாபிரிக்கா, தன்சானியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம்) ஆலோசனைகளுக்குத் தலைமை வகித்தது. மேலும், நவம்பர் 15, 16 ஆம் திகதிகளில் டாக்காவில் இடம்பெற்ற சிரேஷ்ட அதிகாரிகள் கூட்டத்தின் 23 ஆவது அமர்விலும் இலங்கை பிரதிநிதித்துவம் செய்து, கடல்சார் பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் உள்ளீடுகளை/ இடையீடுகளை வழங்கியது.

iii) **சிரேஷ்ட அதிகாரிகள் குழுவின் [CSO] 11வது IORA இரு ஆண்டுக் கூட்டத்தின் மெய்நிகர் கூட்டம், 15 - 16 ஜூன் 2021** - IORA WGMSS வேலைத் திட்டம் (2022-2026) மற்றும் மேற்படி வேலைத் திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்ட பிற தொடர்புடைய துணைப் பணிகள் பற்றிய புதுப்பிப்புகளை வழங்கியது.

iv) **இந்துசமுத்திர பிராந்தியத்தில் துறைமுக அரச கட்டுபாடு (PSC) மற்றும் கடல்சார் பாதுகாப்பு குறித்த இணைய மாநாடு, 04 மே 2021** - IORA WGMSS இன் முன்னணி ஒருங்கிணைப்பாளரான இப்பிரிவு மக்ஸ் பிளாங்க் அறக்கட்டளையுடன் இணைந்து இந்த இணைய மாநாட்டை ஏற்பாடு செய்தது. பதின்மூன்று (13) நாடுகளில் இருந்து முப்பத்தி ஒன்பது (39) பங்கேற்பாளர்கள், பெரும்பாலும் IORA உறுப்பு நாடுகள், இணையத்துடன் இணைந்துள்ள இக்கூட்டத்திற்கு பதிவுசெய்தனர். இது, சர்வதேச கடல்சார் அமைப்பு (IMO) மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட சர்வதேச விதிகள் மற்றும் தரங்களுடன் வணிகக் கப்பல் போக்குவரத்தை கடைபிடித்தல் மற்றும் சர்வதேச மீன்வளம் மற்றும் சர்வதேச மீன்வளத்தின் ஆளுகையின் பின்னணியில் துறைமுக மாநில அதிகார வரம்பை நிர்வகிக்கும் தற்போதைய சர்வதேச ஒழுங்குமுறை கட்டமைப்பின் நுண்ணறிவுகளை பங்கேற்பாளர்களுக்கு வழங்கியது. சர்வதேச மற்றும் உள்ளூர் பேச்சாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

**தேசிய கடலடிக்கேபிள் விரிவாக்கம் மற்றும் பாதுகாப்பு கட்டமைப்பினை உருவாக்குவதற்கான செயன்முறையை முன்னெடுத்தல் –** இலங்கைக்கு அண்மித்து அதிக கொள்ளளவான கடலடிக்கேபிள்கள் தரையிறங்குவதால்/ கடந்துசெல்வதால் முன்மொழியப்பட்ட இந்த கட்டமைப்பானது, கடலடிக்கேபிள்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த உதவும். இக்கேபிள்கள் இலங்கைக்கும் இன்னும்

பல இந்துசமுத்திர நாடுகளுக்கும் இலங்கை நியாயாதிக்கத்தின் கீழுள்ள கடற்படுகையின் மீதான தரையிறங்கும் இடங்களுக்கும் வாழ்வாதாரமாகவுள்ளன. தேசிய கடலடிக்கேபிள் பாதுகாப்பு மற்றும் விரிவாக்கத்திறன் கட்டமைப்பானது இலங்கையின் கடலடிக்கேபிள் வலையமைப்பு பாதுகாக்கப்படுவதையும் விரிவாக்கத்திறன் கொண்டதாக இருப்பதையும் உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை விவரிக்கிறது. சம்பந்தப்பட்ட திறத்தவர்களுடனான விரிவான ஆலோசனைகளுக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட இக்கட்டமைப்பானது, 15 ஜூலை 2021 அன்று மேதகு ஜனாதிபதியின் செயலாளரிடன் கையளிக்கப்பட்டது. நவம்பர் 2021 முதல் தேசிய பாதீடு தயாரிக்கும் செயன்முறை ஆரம்பிப்பதால், மூன்று (03) மாதங்களுக்குள் உரிய திருத்தங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதால், சட்டமியற்றும் செயற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டும் என ஜனாதிபதியின் செயலாளர் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்தார்.

**பொதுநலவாய குப்பை அகற்றல் செயற்றிட்டம் (CLiP) தொடர்பான விடயங்களை ஒருங்கிணைத்தல் -** இப்பிரிவு இலங்கைக்கான திட்டத்தை வெல்வதற்கான செயல்முறையைத் தொடங்கியது, இதன் விளைவாக கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை (MEPA), தொழிற்றுறை தொழில் நுட்ப நிறுவனம் (ITI), மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA) மற்றும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரகம் (NARA) ஆகியவை பிளாஸ்டிக்குகள், குறிப்பாக மைக்ரோ பிளாஸ்டிக்குகள், நதிகளுக்கான குப்பை வலைகள், இலங்கை கல்வியாளர்கள் மற்றும் இங்கிலாந்து ஆராய்ச்சி நிறுவனங்கள்/பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி ஒத்துழைப்பு, துறைமுகக் கழிவுகள் மற்றும் கைவிடப்பட்ட மீன்பிடி சாதனங்களை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றுக்கான ஆய்வு வசதிகளைப் பெற்றன. இதன் மூலம்; ஊடகப் பிரச்சாரங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான வசதிகள், உபகரணங்கள் மற்றும் இரசாயனங்கள், டி.வி. மற்றும் பிளாஸ்டிக் குப்பைகளால் ஏற்படும் தீமைகள் குறித்த சமூக ஊடகங்கள், பிளாஸ்டிக் மாசுபாடு குறித்த விழிப்புணர்வை உள்ளடக்கிய பாடத்திட்ட மேம்பாட்டிற்கான உதவியும் ஒதுக்கப்பட்டது. 20 ஆகஸ்ட் 2021 வரையிலான மொத்த திட்டச் செலவு 843,185 பிரித்தானிய பவுண்கள் ஆகும்.

**காலநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு மாநாடு (UNFCCC) COP 26, கிளாஸ்கோ, பிரித்தானியா, 31 அக்டோபர் - 12 நவம்பர் 2021**- இலங்கை இனி எந்த நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களையும் அமைக்காது என்று உறுதியளித் ஜனாதிபதியின் அறிக்கைக்கு இந்த பிரிவு பங்களித்தது. இந் சத்தியப்பிரமாணமானது, சர்வதேச ஊடகங்களில் இலங்கைக்கு பரவலான நேர்மறையான விளம்பரங்களை ஈட்டித்த ் தது.

காடுகள் மற்றும் நிலப் பயன்பாடு, கல்வி மற்றும் சுற்றுச்சூழல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆற்றல் மாற்றம், கடல்சார் பாதுகாக்கப்பட்ட பகுதிகள், முதலியன தொடர்பான 09 உறுதிமொழிகள் மற்றும் பிரகடனங்களில் இணைவதற்கு இலங்கைக்கான அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டது;

இலங்கை தூதுக்குழுவின் ஒருங்கிணைக்கப்பட்ட பங்கேற்பு மற்றும் தளத்தில் உள்ள முகவரமைப்புக்கள் மற்றும் அதி முக்கிய நபர்களுடன், குறிப்பாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைக்கான தொழில்நுட்பம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI) குறித்த சாத்தியமான பரிமாற்றத்திற்காக ஒருங்கிணைப்பு வாய்ப்புகளை ஏற்பாடு செய்தல்;

மேதகு இலங்கை ஜனாதிபதி, ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தின் (UNEP) நிறைவேற்றுப் பணிப்பாளர் உட்பட, உயர்மட்ட பேச்சாளர்களுடன் "நைட்ரஜனை மீளக்கண்டறிதல்: காலநிலை மாற்றம், சுகாதாரம், பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் வட்டப் பொருளாதாரத்திற்கான தீர்வுகள் மற்றும் ஒருங்கிணைப்புகள்" என்ற தலைப்பில் ஒரு மேலதிக நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பிரிவின் பணிப்பாளர் நாயகம் "புளூ கார்பன் மறுசீரமைப்பு நடவடிக்கை' என்னும் தலைப்பில் இவ்வமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

"பொதுநலவாயத்திலிருந்து உதாரணங்கள்" – 08/11, 'காலநிலையை மாற்றும் காரணி"- 09/11 குறித்த உயிர்பன்மைத்துவ சகோதரத்துவ குழு, "முக்கிய பாடங்களைப் பகிர்தல் – சதுப்பு நிலங்கள், பொதுநலவாயம் மற்றும் ரோட்டரி:- 10/11;

பொதுநலவாய செயலாளர் நாயகம், தெற்காசிய கூட்டுறவு சுற்றாடல் செயற்றிட்ட பணிப்பாளர் நாயகம், ஃபீஜி பிரதம மந்திரி, பிரித்தானியாவின் சுற்றாடல், உணவு மற்றும் கிராமிய விவகார இராஜாங்க செயலாளர், பெலிஸ் நாட்டின் சமுத்திர பொருளாதார அமைச்சு, விவசாயம், காலநிலை மாற்றம் மற்றும் சுற்றாடல் அமைச்சு, PEW அறக்கட்டளை, ரோட்டறி சர்வதேச தலைவர், இந்தியாவின்

சுற்றாடல், காடுகள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சின் செயலாளர் போன்ற பலருடன் தொடர்பாடல்கள் ஏற்படுத்தப்பட்டன.

**இயற்கைக்கான அரசிறைமை கடன் பரிமாற்றம்** - சீசெல்ஸ் பாதுகாப்பு மற்றும் காலநிலை தழுவல் அறக்கட்டளை (SEYCCAT) பிரதான நிறைவேற்றதிகாரி, சர்வதேச நிதியத்தின் உதவிப் பணிப்பாளர் மற்றும் 'பூமி மற்றும் பசுமைச் சமுத்திர எதிர்காலம்' இன் இணை ஸ்தாபகர் ஆகியோருடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

**முழுமையடையாத/ வளர்ச்சி நிலையிலுள்ள செயற்பாடுகள்: அமைச்சர்கள் மட்டத்திலான இந்துசமுத்திர மாநாடு** - இது 2021 ஆம் ஆண்டின் 3 ஆவது அல்லது 4 ஆவது காலாண்டில் நடத்த திட்டமிடப்பட்டு, பல்வேறு காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டது. இப்பிரிவின் நோக்கம் என்னவெனில், 2019 இல் தடம் 1.5 நிகழ்வை நடத்திய பிறகு, அடுத்ததாக ஒரு மந்திரி நிகழ்வாக இருக்க வேண்டும் என்பதே. அதைத் தொடர்ந்து, 2022 ஆம் ஆண்டில் உடல்ரீதியான பங்கேற்புடன் மற்றொரு தடம் 1.5 நிகழ்வை ஏற்பாடு செய்வது குறித்து பரிசீலிக்க வெளிநாட்டமைச்சின் செயலாளர் அறிவுறுத்தினார். தற்போது மக்ஸ் பிளாங்க் அறக்கட்டளையுடன் (ஜெர்மனி) தொடர்பு கொண்டுள்ள இப்பிரிவு, கருத்துத் தாள்/குறிப்பு, வெளியீடு ஆவணங்கள் மற்றும் ஒரு விவாதம்/மேம்படுத்தல், நிகழ்விற்கான சர்வதேச குழு உறுப்பினர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களின் சாத்தியமான பட்டியல் தயாரித்தல் ஆகியவற்றிற்கென பல கூட்டங்களை நடத்தியது .

**சதுப்புநில சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதார செயற்குழு பொதுநலவாய சமுத்திர சாசனத்தின் 3ஆவது கூட்டம் [MELAG] –** இந்நிகழ்வினை 2022 இல் இரண்டாவது பாதியில் நடத்த திட்டமிடப்படுகிறது.

**கடல்சார் விஞ்ஞான ஆராய்ச்சி (MSR) வழிகாட்டல்கள் மற்றும் விதிமுறைகளைத் தழுவுதல் –** இலங்கை கடற்பரப்பில் கடல்சார் ஆராய்ச்சியை மேம்படுத்தவும் ஊக்குவிக்கவும் ஒரு கடல்சார் விஞ்ஞான ஆராய்ச்சி இசைவுச் செயன்முறையை நடைமுறைமுறைப்படுத்துவதற்காக இப்பிரிவானது, சம்பந்தபட்டவர்களுடன் ஒரு விரிவான ஆலோசனையுடன் MSR தொடர்பான வழிகாட்டல்கள் மற்றும் விதிமுறை செயன்முறையை முன்னெடுத்தது. இந்த வழிகாட்டல் மற்றும் விதிமுறைகளுடன், அமைச்சரவைப் பத்திரமும், ஒரு பின்னணிக் குறிப்பும் அமைச்சரவையின் தேவையான இசைவிற்காக காத்திருக்கிறது.

**புதிய முயற்சிகள்**

**எம் வி எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் பேரழிவின் பதில்வினைக்கான மேற்கொள்ளப்பட்ட பணிகள் -** இப்பிரிவானது ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளருடன் இணைந்து, ஏற்பட்ட சூழலியல் சேதங்களின் மதிப்பீட்டை மேற்கொள்வதற்காக ஐ.நா சுற்றாடல் பாதுகாப்பு ஊடாக இலங்கைக்கு ஒரு நிபுணர் குழு அனுப்பப்படுவதை உறுதிசெய்தது. மேலும் அனைத்து வெளிநாட்டு உதவிகளையும் (நிதி, உபகரணங்கள் மற்றும் சட்ட உதவி) கொழும்பில் உள்ள தொடர்புடைய தூதரகங்கள் மற்றும் வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகத்துடன் ஒருங்கிணைத்து, மீட்பு நடவடிக்கைகளில் உதவ NARA க்கு உதவுவதற்காக 04 நாட்களுக்குள் இந்தியக் கப்பல் வருவதை உறுதி செய்ய முடிந்தது. மேலும், கடல் விலங்குகளின் மாதிரிகள் மற்றும் பிளாஸ்டிக் நர்டில் மாதிரிகள் புகழ்பெற்ற வெளிநாட்டு ஆய்வகங்கள் மற்றும் ஆய்வகங்களில் (Cefas, NOAA மற்றும் CEDRE, ALS, முதலியன) பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக அரசு நிறுவனங்களுக்கு (MEPA, DWC மற்றும் NARA) இடையே ஒருங்கிணைக்கப்பட்டது. சட்ட உரிமைகோரல். நீதி அமைச்சரின் அறிவுறுத்தலின்படி, ஒரு இடைக்கால பொறிமுறையுடன் இணைந்து, 'கடல்சார் பேரிடர் தயாரிப்பு பொறிமுறைக்கான' கருத்துக் குறிப்பை உருவாக்கி, திறன்கள் மற்றும் வளங்கள் மேட்ரிக்ஸை உருவாக்கியது. 180,000 அமெரிக்க டாலர் மதிப்புள்ள SLHC/சிங்கப்பூர் மூலம் MEPA இற்கு 08 கடற்கரை சுத்திகரிப்பாக்கிகளைப் பெறுவதற்கும் இப்பிரிவு ஒருங்கிணைத்தது**.**

இறந்த ஆமைகளைப் பகுப்பாய்வு செய்ய 03 இத்தாலிய நிபுணர்களைக் கொண்டு வருவதற்கு உதவியதுடன், வெளிநாட்டு ஆய்வகங்களில் ஆய்வு செய்ய மண், பிளாஸ்டிக் துகள்கள் மற்றும் உயிரி இனப்பிரிவுகளின் மாதிரிகளை அனுப்ப MEPA க்கு உதவியது.

**கடல்சார் பேரிடர் தயார்நிலை** – இப்பிரிவானது, இலங்கையின் கடல்சார் பேரிடர் தயார்நிலை தொடர்பான மூலவளங்கள் மற்றும் திறன்கள் மட்ரிக்ஸைத் தயாரித்து கொழும்பிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட இராஜதந்திர பணியகங்களுக்கு விநியோகித்தது. அவுஸ்திரேலியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து கடல்சார் பேரிடர் அதிகாரசபையை அமைப்பதில் இலங்கைக்கு ஆதரவான நிபுணர்களை அடையாளம் காண இந்தப் பிரிவு செயற்பட்டது.

**ஆற்றங்கரை பிளாஸ்டிக்குகள் தொடர்பான உலக வங்கி திட்டத்திற்கு உதவி பெறுவதற்கான அனுசரணை** - செஃபாஸ் (இது Defra – UK இன் கீழ் வருகிறது) உடனான நெருக்கமான ஒத்துழைப்பானது, நதிக்கரை பிளாஸ்டிக்குகளை நிவர்த்தி செய்வதற்கான மற்றொரு நிதியை அணுக இலங்கைக்கு உதவியது; பயனாளி இலங்கை முகவரமைப்புக்களான - NARA, ITI, MEPA மற்றும் CEA.

**நிலையான நைட்ரஜன் முகாமைத்துவம் தொடர்பான கொழும்பு பிரகடனம் -** காலநிலை மாற்ற ஆராய்ச்சியில் நைட்ரஜன் தொடர்பில் கவனம் செலுத்துவதற்காக முதன்முறையாக நைட்ரஜனைக் கொண்டுவருவது குறித்து இலங்கையின் சுற்றுச்சூழல் அமைச்சினை, கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் இங்கிலாந்தில் உள்ள சர்வதேச நைட்ரஜன் முகாமைத்துவ அமைப்புகளுடன் ஒருங்கிணைத்தமை.. 27 - 29 ஏப்ரல் 2021 இல் "COP26 இற்கு முந்தைய "காலநிலை மற்றும் பசுமை மீட்புக்கான நைட்ரஜன்" என்ற மெய்நிகர் நிகழ்விற்கு இப்பிரிவு பங்களித்தது (பணிப்பாளர் நாயகம் ஒரு மதிப்பீட்டாளராக இருந்தார்).
UNFCCC க்கு NDC களை சரியான நேரத்தில் சமர்ப்பிப்பதை உறுதிசெய்வதற்காக இப்பிரிவு பங்களிப்புச் செய்தது (ஜூலை 30.2021). நாட்டுக்காக சர்வதேச அரங்கில் நேர்மறை செயலெல்லையைப்பெற இலங்கையின் முக்கிய கடமைகளை (அதாவது 2030 இற்குள் 70% புதுப்பிக்கத்தக்க ஆற்றல், 2050 இற்குள் கார்பன் நடுநிலை மற்றும் புதிய நிலக்கரி இல்லை) மேற்கொண்டது**.**

கூடுதலாக, இப்பிரிவின் தலைவர், உலகின் பல சமுத்திரங்கள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான கருத்தரங்குகள்/ பட்டறைகள்/ இணைய மாநாடுகளில் மூலவள நபராக/ பேச்சாளராக அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தினார், இதில் DERANA 24 Nature 24 திட்டம் "காலநிலை மாற்றத்தைக் குறைப்பதற்கான இயற்கை சார்ந்த கடல் தீர்வுகள்" உட்பட 08/12 இல் "சமுத்திர உச்சிமாநாடு (மெய்நிகர்) எகனாமிஸ்ட் இதழால் ஏற்பாடு செய்யப்பட்டது.

வனவிலங்குகள், வனவியல் மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகளுக்கு சட்ட அமுலாக்கம், தலைமைத்துவம் மற்றும் தகவல் தொடர்பு திறன் ஆகியவற்றில் பயிற்சியளிக்க ஐக்கிய நாடுகளின் போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான அலுவலகத்துடன் (UNODC) ஒருங்கிணைப்பு.

கடல் பல்லுயிர், கடல் மாசுபாடு, நிலையான கடல் உணவுத் தொழில் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றை ஆதரிக்கும் பிரித்தானியாவின் Blue Planet Fund - Ocean Country Partnership Program உதவியை அணுகுவதற்கு இலங்கை முதன்மையான நாடு (15 நாடுகளில் ஒன்று) என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

கடல்சார் இடம்சார்ந்த திட்டமிடலைத் தொடங்குவதற்கான முறைசாரா விவாதங்கள் மற்றும் அதற்கான தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிக்கான சாத்தியமான ஆதாரங்களைக் கண்டறிதல்.

## கொள்கைத் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் மனிதவள அபிவிருத்திப் பிரிவு

கொள்கைத் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் மனிதவள அபிவிருத்திப் பிரிவானது, அரசாங்கத்தின் வெளிநாட்டுவுக் கொள்கையின் அடிப்படையில், கொள்கை நோக்கங்களைக் கண்டறிவதிலும், அவற்றைச் செயற்படுத்த வழிவகுப்பதிலும் வெளிநாட்டு அமைச்சில் முக்கிய பங்கு வகிக்கிறது. இப்பிரிவு இலங்கை வெளிநாட்டு சேவை அதிகாரிகள் (SLFS) மற்றும் தூதரக ஊழியர்களின் தொழில் வளர்ச்சி தொடர்பான விடயங்களையும் ஒருங்கிணைக்கிறது.

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் அமைச்சின் கொள்கை நோக்கங்களை அடைவதற்காக, இப்பிரிவு அமைச்சின் ஏனைய பிரிவுகள் மற்றும் வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதரகங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு, வருடாந்த செயலாற்றுகையை மதிப்பிடும் நோக்குடன், நிதியாண்டில் இறுதியில் அமைச்சுக்கான செயல் திட்டத்தைத் தயாரித்தது. அதன்படி, இப்பிரிவு 2020 ஆண்டு செயலாற்றுகை அறிக்கையை தயாரித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது. மேலும், அரசின் சட்டமன்றத் தேவையின்படி ஆண்டு பாதீட்டு குழுக் கூட்டத்தில் 2021 அக்டோபர் 2021 முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்துச் சமர்ப்பித்தது.

ஒழுங்குறுத்தல் தேவைகள் மற்றும் பாதீட்டு நோக்கங்களுக்காக 2022 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தையும் இப்பிரிவு தொகுத்துள்ளது. 'செழிப்பு மற்றும் மேன்மையின் காட்சி" என்கின்ற அதிமேதகு ஜனாதிபதி மற்றும் தேசிய கொள்கை கட்டமைப்பின்படி உருவாக்கப்பட்ட "2020 மற்றும் அதற்கு அப்பாலான 20 அம்ச முக்கிய வெளியுறவுக் கொள்கை வழிகாட்டுதல்கள்" பற்றிய ஆவணங்களை, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக, இப்பிரிவு வெளிநாடுகளில் உள்ள அனைத்து இலங்கை

தூதரகங்களுடனும் அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை முன்னுரிமைகளை அறிவிக்கும் கொழும்பில் இலங்கைக்கு அங்கீகாரம் பெற்ற தூதரகங்களுடனும் பகிர்ந்து கொண்டது.

நிறுவனத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் அமைச்சின் மனித வளத்தைப் பலப்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில், அரசாங்க சேவை ஆணைக்குழு (PSC), பரீட்சைகள் திணைக்களம் (DoE) மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் (DMS) ஆகியவற்றின் ஆலோசனையுடன் இப்பிரிவினால் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- 2020/2021 இற்கான இலங்கை வெளிநாட்டுச் சேவை தரம் III அதிகாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு. நாடளாவிய சேவைகளுக்கு இணையாக, தற்போது இ.வெ.சே ஆட்சேர்ப்பு பரீட்சையானது இரண்டு கட்டங்களாக நடாத்தப்படும். இவ்வாறாக இடம்பெறுவது இதுவே முதன்முறையாகும்.
- இ.வெ.சே அதிகாரிகளுக்கான 1 ஆவது மற்றும் 2 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையை நடாத்துதல்.
- அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் பரீட்சை திணைக்களத்துடன் கலந்தாலோசித்து, வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரக பணியகங்களில் முகாமைத்துவ சேவை அதிகாரிகள் மற்றும் தன் உதவியாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை 2020(2021) இனை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தலை அமைச்சு இறுதி செய்துள்ளது.

**குறிப்பு:**

- ஆனபோதிலும், நோய்ப்பரவல் காரணத்தினால், பல தடைகள் ஏற்பட்டு, பரீட்சை பிற்போடப்பட்டது.

- ிலவும் நிதிக் கட்டுப்பாடுகள், அமைச்சு/ தூதரக பணியகங்களின் விரிவாக்கம் மற்றும் அவற்றின் தற்போதைய பணியாளர் கட்டமைப்பை மறுமதிப்பீடு செய்ய வேண்டியதன் அவசியம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, வெளிநாட்டமைச்சின் செயலாளரின் வழிகாட்டுதலின் கீழ், பிற உள்ளக பங்குதாரர்களுடன் இணைந்து, இப்பிரிவு அமைச்சின் பணியாளர்களை பகுத்தறிவுபடுத்துவதற்கான தேவை குறித்த பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தது.
- i) லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தின் பணிநிலைப்பிரிவை சீரமைப்பதை ஆராய்தல், ii) ஒரு போட்டித் தேர்வு செயல்முறை மற்றும் கொள்கை உள்ளீட்டை வழங்குவதன் மூலம் அமைச்சுடன் இணைக்கப்பட்ட சில வகை அதிகாரிகளுக்கு வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களில் பணியாற்றுவதற்கான வாய்ப்புகளை அடையாளம் காணுதல் iii) ாடளாவிய சேவைகளுக்கு இணையான இ.வெ.சே அதிகாரிகளுக்கான புதிய பதவி உயர்வுத் திட்டத்தை அறிமுகப்படுத்தல் போன்ற பல்வேறு குழுக்களில் பங்கேற்றமை.

- இ.வெ.சே ஐ பொறுத்தமட்டில், அதன் சிறப்புத் தரத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆகியவற்றுடன் இப்பிரிவு விரிவான முறையில் ஈடுபட்டது. தகுதியான இ.வெ.சே அதிகாரிகள் மூலம், வெற்றிடமாகவுள்ள 16 சிறப்புத்தர பதவிகளை நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன்படி, இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

- ஆட்சேர்ப்பு செயன்முறையின் புதிய ஏற்பாடுகள் மற்றும் சிறப்புத் தர பதவிகள் இணைப்பு ஆகியவற்றை உள்ளடக்கி 2016 இன் இ.வெ.சே பிரமாணப்பத்திரத்தை திருத்துவதற்கு, அரசாங்க சேவை ஆணைக்குழுவுடன் இப்பிரிவு ஒருங்கிணைந்தது.

  ஜனாதிபதி செயலகத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில், வெளிநாட்டு அமைச்சின் கீழ் அர்ப்பணிக்கப்பட்ட சர்வதேச ஒத்துழைப்பு பிரிவு ஒன்றை உருவாக்குவதற்கான கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கான அங்கீகாரம் ஜனவரி 2021 இல் பெறப்பட்டு, அதிலுள்ள முன்மொழிவை செயற்படுத்துவதற்காக, கொள்கை திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் மனிதவள அபிவிருத்திப் பிரிவு இந் புதிய அலகுக்கு இடமளிப்பதற்காக, குறுகிய கால பதவிகளை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக, முன்னணி தனியார் நிறுவனங்களிலிருந்து ஆர்வமுள்ள இளம் தொழில் வல்லுநர்களிடமிருந்து பரிந்துரைகள் கோரப்பட்டு, இப்பிரிவை நிறுவுவது தொடர்பான ஒருங்கிணைந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆர்வமுள்ள தொழில் வல்லுனர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் பிரிவுத் தலைவர் பதவிக்கான நியமன மனுக்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதி செயலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- அமைச்சின் மூலோபாய தொடர்பாடல் பிரிவை அமைப்பது தொடர்பான பல ஒருங்கிணைப்பு கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களில் இப்பிரிவு பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டதுடன், மேலதிக நடவடிக்கைகளுக்காக முன்னர் தயாரிக்கப்பட்ட மூலோபாய தொடர்பிற்கான முன்மொழிவை அமைச்சில் சமர்ப்பித்துள்ளது.

- இப்பிரிவு இ.வெ.சே அதிகாரிகளால் அவர்களின் பட்டப்பின்படிப்பு தகைமைகள் தொடர்பான பிரதிநிதித்துவங்களை ஒருங்கிணைத்து, மற்றும் 2016 இன் இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பிரமாணக்குறிப்பின் பின்னிணைப்பு 'இ' இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, சர்வதேச உறவுகள் துறையுடன் தொடர்புடைய முதுகலைப் பட்டதாரி தகைமைகளின் ஏற்புத்தன்மையை ஆய்வு செய்வதற்கும் பரிந்துரைப்பதற்கும் நிறுவப்பட்ட நிலைக்குழுவில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவு சர்வதேச உறவுகள் துறையுடன் தொடர்புடைய பட்டப்பின்படிப்பு தகுதிகளின் புதிய சேர்க்கைகள் தொடர்பாக, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டுள்ளது.

- இப்பிரிவு அமைச்சிலுள்ள இ.வெ.சேவையிலுள்ள மற்றும் அச்சேவையில் இல்லாத அதிகாரிகளின் அறிவு, மற்றும் திறன்களை மேம்படுத்தும் நோக்குடன் பல பயிற்சித் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்தது. மேலும், இப்பிரிவு, பண்டாரநாயக்கா சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவகத்துடன் இணைந்து, இ.வே.சேவையின் தரம் 1 ஐச்சேர்ந்த 50 அதிகாரிகளின் முகாமைத்துவம், தலைமைத்துவம் மற்றும் தொழில் மேம்பாட்டு திறன்களை விருத்தி செய்வதற்கான, 3 ஆவது வினைத்திறன் காண் தடைதாண்டால் திறன் கட்டமைப்புத் திட்டத்தை நடாத்தியது.

  பெப்ரவரி மற்றும் ஆகஸ்ட்/செப்டெம்பர் மாதங்களில் புதிதாக நியமிக்கப்பட்ட தூதரக தலைவர்கள், பதவிகளின் தலைவர்கள் ஆகியோருக்கும், இடமாற்றத்தில் செல்லவுள்ள இராஜதந்திர அதிகாரிகளுக்கும், உள்ளக மற்றும் வெளிப்புற மூலவள நபர்களின் பங்கேற்புடன், மெய்நிகர் தளத்தில் இரண்டு ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சிகளும், ஒழுங்குசெய்யப்பட்டது.

  பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்புவதற்காக, இவ்வமைச்சின் சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் கலந்தாலோசித்து, தேசிய பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் சில தொடர்புடைய தலைப்புகளில் தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவனம் (INSS) சமர்ப்பித்த கொள்கை பரிந்துரைகளுக்கான அவதானிப்புகள் / பரிந்துரைகளைப் பெற்று, இப்பிரிவு ஒருங்கிணைந்த பதிலைத் தயாரித்தது. இ.வெ.சே அதிகாரிகள் தமது சேவையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, வெளிநாட்டமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின்படி, உத்தியோகமொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் 200 மணித்தியால தமிழ் மொழிப் பயிற்சியை இப்பிரிவு ஒழுங்கு செய்தது. வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரக பணியகங்களில் நியமிக்கப்பட்ட இ.வெ.சே அதிகாரிகளின் வாழ்க்கைத் துணைகளுக்கு 'சம்பளமில்லா லீவு' வழங்குவது தொடர்பில் முன்மொழியப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் அவதானிப்பினைப் பெறுவதற்கு இப்பிரிவு, சம்பந்தப்பட்ட தரப்பினருடன் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பான செயன்முறை இடம்பெற்று வருகின்றது.

  இனங்காணப்பட்ட 16 வெளிநாட்டு தூதரக பணியகங்களில் இலங்கை வெளிநாட்டுச் சேவை தரம் I அதிகாரிகளுக்கு "தூதுவர் தரவரிசை" பதவியை உருவாக்குவதற்கு வெளிநாட்டு அமைச்சினால் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவுடன், இப்பிரிவு ஒருங்கிணைந்து பணிபுரிகிறது. ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளரின் தலைமையிலான இக்குழு, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டது. இக்குழுவின் இறுதி அறிக்கை, வெளிநாட்டமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- இ.வெ.செ அதிகாரிகள் மத்தியில், கலந்துரையாடலை அடிப்படையாகக் கொண்ட பணிக்கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் நோக்குடன், இப்பிரிவு, சர்வதேச உறவுகள் மற்றும் இராஜதந்திரம் ஆகிய துறைகளிலுள்ள நடப்பு பிரச்சனைகள் குறித்த இரண்டு தொடர் கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்தது.

- தூதரக பணியக விபரக்கொத்து 2021 வெளியிடப்பட்டது.

- வெளிநாட்டமைச்சின் செயலாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ், தேவைப்படும்போது, பல்வேறு அறிக்கைகள், முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் அமைச்சின் பிரதான நிறைவேற்றுதல்களின் முன்னேற்ற அறிக்கைகள் ஆகியவற்றை இப்பிரிவு தயாரித்தது.

## பொது இராஜதந்திர பிரிவு

பொது இராஜதந்திரப் பிரிவானது; தகவல்கள் பரப்புதல் மற்றும் இலங்கையின் பிரதிபிம்பத்தினை வெளிநாடுகளில் வெளிப்படுத்தல் போன்றவற்றில் அரசாங்கத்திற்கும் வெளி நிறுவனங்களுக்கும் இடையிலான இடைமுகமாகும். இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் தொடர்பான மற்றும் நாட்டில் பொதுவாக நடைபெறும் நிகழ்வுகள்/ சூழ்நிலைகளை இந்தப் பிரிவு உள்ளடக்குகிறது. கூடுதலாக, இப்பிரிவு வெளிநாட்டில் உள்ள இலங்கை தூதரகங்கள் / பதவிகளில் நிகழ்வுகள் / அபிவிருத்திகள் பற்றிய தகவல்களை பரப்புகிறது.

**இப்பிரிவின் பிரதான செயற்பாடுகளின் செயலாற்றுகை**

இப்பிரிவு; அமைச்சின் அனைத்து அதிகாரிகள், தூதரகங்கள்/ பதவிகள் தொடர்பில் உள்ளூர்/வெளிநாட்டு ஊடகங்கள் மற்றும் இணையங்களில் வரும் முக்கிய செய்திகளையும் தினசரி அடிப்படையில் கண்காணித்து புதுப்பித்து வருகிறது. இவ்வமைச்சு மற்றும் இலங்கையின் பெயருக்கு களங்க ஏற்படுத்தும் செய்திகள், வெளிநாட்டமைச்சின் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, தேவைப்படின், மறுப்புச்செய்திகள் வெளியிடப்படுகின்றன.

மேலும், இந்த மீளாய்வுக் காலத்தில் பொது இராஜதந்திர பிரிவானது, ஊடக வெளியீடுகள், அறிக்கைகள், தூதரக செய்திகள் மற்றும் அறிவித்தல்களை உள்நாட்டு அச்சீடுகள் மற்றும் இணைய ஊடகங்களுக்கும் கொழும்பிலுள்ள வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடையேயும் பரப்புவதில் முக்கியமான பங்கை வகித்தது. இச்செய்திகள் வழமையான தொலைக்காட்சி, வானொலி செய்திகளிலும் இணையங்களிலும் வெளியிடப்பட்டன.

மேலும், பொது உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்காக, அனைத்து தூதரக பணியகங்களும்/ பதவிகளும் பொதுமக்களை இலக்குவைத்து தகவல்களை திறம்பட பரப்புவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன. அமைச்சின் ட்வீட்கள்/இடுகைகளை மீள 'ட்வீட் செய்ய/ மீளப்பதிவிடவும் அவை ஊக்குவிக்கப்படுகின்றன.




நோய்பரவல் காரணமாக, இக்காலப்பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட நிகழ்வுகளே இவ்வமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்டன. 27 ஜூலை 2021 அன்று இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 50வது ஆண்டு நிறைவை நினைவுகூரும் முகமாக இலங்கை மற்றும் சிங்கப்பூர் ஆகிய இரு நாடுகளிலும் முத்திரைகள் வெளியிடப்படுவதைக் குறித்து டிஜிட்டல்/அச்சு ஊடக ஊடகவியலாளர்கள் செய்தியாளர்களை செய்தியாளர்களுக்கு அமைச்சில் வைத்து நன்கொடையை வழங்குவதற்கு இப்பிரிவு ஏற்பாடு செய்தது. பிளாஸ்டிக் கழிவுகளை முற்றாக ஒழிக்கும் நோக்குடன், சிங்கப்பூரை தளமாகக் கொண்ட உலகளாவிய இலாப நோக்கற்ற நிறுவனமான 'அலையன்ஸ்' இடமிருந்து நன்கொடையாகப் பெற்ற 'பீச்டெக் ஹைட்ரோ' கடற்கரை துப்புரவு இயந்திரங்கள், கடலோரப் பாதுகாப்புத் துறையின் வெளியுறவுச் செயலாளரால் ஆகஸ்ட் 02, 2021 அன்று நீர்கொழும்பில் உள்ள சருக்குவா கடற்கரையில் பெறப்பட்டது.

இலங்கையின் பிரதிபிம்பத்தினை வெளிநாடுகளில் மேம்படுத்தும் நோக்குடம் இலங்கையில் படமெடுக்கும் வெளிநாட்டு ஊடகங்களுக்கு இப்பிரிவு வசதியேற்படுத்திகொடுத்தது. எனினும், கொவிட் பரவல் காரணமாக குறைந்த வெளிநாட்டு ஊடகத்தினரின் வருகையே காணப்பட்டது. ஆனபோதிலும், 2021, 01 மே இலிருந்து 01 ஜூன் வரையில் பிரித்தானியாவின் 'ஹம்பிள் பீ பிக்சர்ஸ்' இன் மூவர் அடங்கிய படக்குழு இலங்கை வந்திருந்தது. மேலும் ஒரு சுவீடன் ஊடக குழு, போலந்து டி.வி.என் ஊடக குழு, பிபிசி ஊடக குழு ஆகியவை, படப்பிடிப்பிற்காக இலங்கை வருவதற்கான சாத்தியக்கூறு தொடர்பில் விசாரித்திருந்தன.

குறிப்பாக இலங்கையில் கொவிட் அவசரகால சூழ்நிலைகளில், வர்த்தகம், முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலா ஊக்குவிப்பு தொடர்பான முக்கிய தகவல்கள் தொடர்பான கொள்கை அறிக்கைகள் மற்றும் உள்ளூர் அமைச்சுக்களின்/ நிறுவனங்களின் தினசரி புதுப்பிப்புகள் பற்றிய தகவல்களை இலங்கை தூதரக பணியகங்களுக்கு /பதவிகளுக்கு இப்பிரிவு தீவிரமாக வழங்கி வந்தது.

## சர்வதேச பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத தடுப்பு பிரிவு

விடுதலைப் புலிகள் தொடர்பான விடயங்கள்:

விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிடப்பட்டது இந்தக் காலப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியத்தில் பல மீளாய்வுகளுக்கு உள்ளானது. அதன் நீட்டிப்புக்கு ஆதரவாக ஆவணங்களைத் தொகுப்பதற்காக ஜனவரி 2021 மற்றும் ஜூலை 2021 இல் CNI அலுவலகம், CTID, DMI, SIS, சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றுடன் இந்தப் பிரிவு ஒருங்கிணைக்கப்பட்டதுடன் EEAS இன் SPD உடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது. பிரித்தானியாவில் TGTE இன் குற்றச்சாட்டில் POAC இன் வெளிப்படையான தீர்ப்பு, இங்கிலாந்தின் உள்துறைச் செயலாளருக்கு ஆதரவாக அமைந்தது. அவர் செப்டம்பர் 2021 இல் TGTE இன் விண்ணப்பத்தை நிராகரித்து, விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத பட்டியலில் தக்க வைத்துக் கொள்ள முடிவு செய்தார். இந்த முடிவை ஆதரிப்பதற்காக இப்பிரிவு, உள்ளக முகவரகங்களுடன் ஒருங்கிணைந்து, சம்பந்தப்பட்ட தகவல்களின் பல ஆவணங்கத் தொகுதிகளைச் சமர்ப்பித்தது. இத்தாலியில், செப்டம்பர் 2021 இல் 'இலங்கையில் இனப்படுகொலையை' அங்கீகரிப்பதற்கான நெறிமுறையை ஏற்றுக்கொண்டதன் பிரதிபலிப்பாக, இப்பிரிவு இத்தாலியிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் ஒருங்கிணைந்து இத்தாலிய அதிகாரிகளுடனும், கொழும்பில் உள்ள இத்தாலிய தூதரகத்தின் மூலமாகவும் இந்த விடயத்தை எடுத்துகொண்டது. குறிப்பிடத்தக்க நாட்கள் மற்றும் நிகழ்வுகளின்போது, கவனம் செலுத்தப்பட வேண்டிய வடிவங்கள் மற்றும் மேம்பாடுகளை அடையாளம் காண்பதற்காக, வெளிநாடுகளில் விடுதலைப் புலிகள் தொடர்பான சமூக ஊடகங்கள் மற்றும் அரசியல் நடவடிக்கைகளை இப்பிரிவு கண்காணித்தது. மேலும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளைத் தடைசெய்தல் தொடர்பாக, மேலும் உள்ளீடுகள் சம்பந்தப்பட்ட தூதரக பணியகங்களுடன் பகிரப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டது.

இலங்கை பாதுகாப்பு நிறுவனங்களின் வெளிநாட்டு வலையமைப்பை வலுப்படுத்துதலும் விரிவாக்கலும்:

இலங்கையின் புலனாய்வு மற்றும் சட்ட அமலாக்க முகவர் மற்றும் அவர்களின் வெளிநாட்டு சகாக்களுக்கு இடையில் ஒத்துழைப்பை எளிதாக்குவதற்காக, பயங்கரவாதம் மற்றும் வன்முறை தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவது தொடர்பான செயல்பாட்டு வலையமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, இப்பிரிவு புதிய உறவுகளை ஆரம்பித்து, ஏற்கனவே உள்ளவற்றை மேம்படுத்தியது.

இருதரப்பு :

- பங்களாதேசம் மற்றும் பிலிப்பைன்ஸ் உடனான பயங்கரவா ஒத்துழைப்பு குறித்த இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் பூர்த்திசெய்வதில் இப்பிரிவு வளர்ச்சி கண்டுள்ளது.
- மேலும் இப்பிரிவு ஜூலை 2021 இல், இந்தோனேசியா உடனான பயங்கரவாத எதிர்ப்பு குறித்த கூட்டுப் பணிக்குழுவின் 4 ஆவது மெய்நிகர் கூட்டத்தை ஒருங்கிணைத்து, அதன் குவி மையமாகவிருந்தது. பெறுபேற்று ஆவணம் ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், முயற்சிகளை செயற்படுத்துவதற்கான பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.
- ஜனவரி 2021 இல் மனிதக் கடத்தல் தொடர்பான இலங்கை- அவுஸ்திரேலியா கூட்டுப் பணிக்குழுக் கூட்டம், ஜனவரி 2021 இல் ஐ.ஒ- இலங்கை கூட்டு ஆணைக்குழு மற்றும் ஜூலை 2021 இல் இலங்கை – ஜேர்மனி இருதரப்பு அரசியல் ஆலோசனைகள் ஆகியவற்றில் இப்பிரிவு உள்ளீடுகளை வழங்கி, பங்கேற்றது. மேலும் அக்டோபர் 2021 இல் இலங்கை- ரஷ்யா இருதரப்பு அரசியல் ஆலோசனைகள்,

ஐ.நா.பொ.சபைக்கு மேலதிகமாக துருக்கிய சரிநேர் மந்திரிகளுடன் கூட்டம் ஆகியவற்றுக்கான உள்ளீடுகளும் வழங்கப்பட்டன.

பல்தரப்பு:

- Europol உடன் முறையான பணி ஏற்பாட்டைத் தொடங்குதல், இதன் முதல் சந்திப்பு பிப்ரவரி 2021 இல் CNI, SIS மற்றும் CTID மற்றும் Europol ஆகியவற்றுக்கு இடையே நடைபெற்றது. பேச்சுவார்த்தை டத்தப்பட வேண்டிய சட்ட ஒப்பந்தத்தின் வரைவு யூரோபோல் இடமிருந்து பெறப்பட்டு, உள்ளூர் முகவரமைப்புக்களால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

- ஐ.எஸ் அமைப்பு குறித்த உலகளாவிய விவாதத்தில் புலனாய்வு முகவரமைப்புகள் மற்றும் நிதிப் புலனாய்வு அலகு ஈடுபடுவதை உறுதிப்படுத்துவதற்காக, மே 2021 இல் இடம்பெற்ற, ஐ.எஸ் இற்கான நிதிவழங்கலை தடுப்பதற்கான உலகளாவிய கூட்டமைப்பின் செயற்குழு கூட்டத்தில் பார்வையாளராக இலங்கை முதல் தடவையாக பங்கேற்றது.

- இணையம் மூலமான பயங்கரவாத உள்ளடக்கம் மற்றும் தீவிரமயமாக்கலை எதிர்த்துப் போராடுவதற்கான "The Christchurch Call to Action" இன் இரண்டாவது உச்சிமாநாட்டில் இலங்கை பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. செப்டம்பர் 2019 இல் இக்குழுவில் சேர விருப்பம் தெரிவித்த பின்னர் இலங்கை முறையாக இக்கூட்டத்தில் ஈடுபட்டது இதுவே முதல் முறையாகும். நியூசிலாந்து பிரதமர் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி ஆகியோர் இணைத்தலைமை வகித்த இக்கூட்டத்தில் சகல பெரிய சமூக ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

- பயங்கரவாத எதிர்ப்பு வாரத்தில் இலங்கைக் குழு MOD, SIS, DMI மற்றும் பிறவுடன் முதன்முதலாகவும், ஜூன் 2021 இல் பயங்கரவாத எதிர்ப்பு முகவரமைப்பு தலைவர்களின் கூட்டத்திலும் பங்கேற்றது.

உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் சட்ட முகவரமைப்புக்களின் திறன் அபிவிருத்தி :

பல்தரப்பு: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து இருதரப்பு மற்றும் பலதரப்பு ஆதாரங்களில் இருந்து பயங்கரவாதம் மற்றும் வன்முறை தீவிரவாதம் ஆகிய துறைகளில் உதவிகளைப் பெற்றுள்ள இப்பிரிவு, உள்ளூர் நிறுவனங்களின் திறனை வளர்ப்பதில் இருதரப்பு மற்றும் பலதரப்பு முயற்சிகளை ஒருங்கிணைத்துள்ளது.

"பயங்கரவாதத்திற்கு எதிர்ப்பில் இலங்கைக்கு ஆதரவு" – எனும் ஐரோப்பிய ஒன்றிய திட்டம் தொடர்பாக போதைப்பொருட்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் அலுவலகம் (UNODC) உடன் ஒருங்கிணைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம், தீவிரவாதம் தொடர்பான விடயங்களைக் கையாளும் நிறுவனங்களின் திறனை வளர்ப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் 2021 ஆம் ஆண்டில் ஐ.நா முகவரமைப்புகள் மற்றும் உள்ளூர் நிறுவனங்களுக்கு இடையே 21 இற்கும் மேற்பட்ட திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாதம் தொடர்பான வழக்குகளை கவனிக்கும் (சட்டமா அதிபர் திணைக்களம், நீதித்துறை, பாதுகாப்பு வழக்கறிஞர்கள்) சட்ட நிறுவங்கள், விசாரணை மற்றும் பயங்கரவாத தாக்குதல்கள் பற்றிய ஆதாரங்களை சேகரித்தல் (பொலிஸ், நிதிப் புலனாய்வுப் பிரிவு (FIU), அரசாங்க ஆய்வாளர்கள் திணைக்களம் போன்றவை), அத்துடன் தாக்குதல்களைத் தடுப்பதில் சட்ட அமுலாக்க அதிகாரிகள் (பொலிஸ், சிஎன்ஐ அலுவலகம்) மற்றும் சிறைச்சாலைகள் இதில் அடங்கும்.

இப்பிரிவு உள்நாட்டு முகவரமைப்புக்களின் உபகரணத் தேவைகளை அடையாளம் காண்பதை ஒருங்கிணைத்துள்ளதுடன், இலங்கை கடற்படை, இலங்கை பொலிஸ் மற்றும் அரச பகுப்பாய்வாளர் திணைக்களம் போன்றவை UNODC மூலம் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் வசதி செய்துள்ளது.
இருதரப்பு: எல்லைப்பாதுகாப்பு தொடர்பில் திறன் கட்டமைத்தலில் ஒருங்கிணைப்பு சாத்தியக்கூறினை மேம்படுத்த, இப்பிரிவு, BRAC மற்றும் அமெரிக்க அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தி வருகிறது.

வன்முறைத் தீவிரவாதத்தை தடுத்தல் மற்றும் எதிர்த்தலுக்கான முயற்சிகளை ஆதரித்தல்:

இலங்கை தேடிவரும், வெளிநாடுகளில் வாழும் பல பயங்கரவாத சந்தேக நபர்களின் தகவல்களைப் பெறுவதற்கும், SIS மற்றும் தொடர்புடைய வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதற்கும் இப்பிரிவு வசதியளித்தது.

சட்டமாஅதிபர் திணைக்களத்தின் கோரிக்கையின் பேரில், இலங்கையில் ஈஸ்டர் ஞாயிறு நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காகவும் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்துடனும், இலங்கை நீதிமன்ற வழக்குகளில் சாட்சியங்களை வழங்குவதற்காக, தற்சமயம் ஈஸ்டர் தாக்குதல் குறித்து அமெரிக்க புலனாய்வாளர்களுடனும் ஒருங்கிணைந்து வருகிறது. மேலும், e-RCMS முறைமையின் விதிகளை மறுபரிசீலனை செய்வது குறித்து DIE, மாநில புலனாய்வு சேவை (SIS) மற்றும் கொன்சியுலர் பிரிவு மற்றும் சட்டப் பிரிவு ஆகியவற்றுடன், இலங்கைக்குத் திரும்புபவர்கள் தொடர்பான பாதுகாப்புக் கவலைகள் குறித்த ஏற்பாட்டைச் சேர்ப்பதற்காக இந்தப் பிரிவு கலந்துரையாடலைத் தொடங்கியது. இந்த முன்னுரிமைப் பகுதியின் கீழ், இப்பிரிவு, தீவிரமயமாக்கலை எதிர்த்துப் போராடுவதில் அடிமட்ட நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு பொறிமுறையை நிறுவுவதற்கு, CNI அலுவலகம், NGO செயலகம் மற்றும் உலகளாவிய சமூக ஈடுபாடு மற்றும் விரிவாக்க நிதியம் (GCERF) ஆகியவற்றுக்கு இடையே ஒருங்கிணைத்துள்ளது. உதவிக் கொடைகளுக்கான முதல் அழைப்பு பிரதான கொடைகளால் நீட்டிக்கப்பட்டது மற்றும் கொடை ஒதுக்கீடுகளைப் பெற அடையாளம் காணப்பட்ட மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட CBOக்களை உள்ளூர் முகமைகள் இறுதி செய்துள்ளன.

கூடுதலாக, நியூசிலாந்தில் நடந்த பயங்கரவாத தாக்குதலால் இப்பிரிவு கொழும்பிலுள்ள நியூசிலாந்து தூதுவருடனும், நியூசிலாந்து SIS இன் தலைவருடனும் MOD மற்றும் தீவிரவாதத்தில் சம்பந்தப்பட்ட தனிப்பட்டவர்கள் தொடர்பில், எதிர்காலத்தில் SIS உடன் இணைந்து ஒத்துழைப்பது பற்றி விவாதித்தது. Global Community Engagement and Resilience Fund (GCERF) இன் இலங்கை அதிகாரிகளுக்கான விஜயத்தை ஒருங்கிணைத்தது.

பயங்கரவாத தடுப்பு குறித்த சட்டக் கட்டமைப்பின் மேம்பாடு தொடர்பான ஆதரவு முயற்சிகள் :

இலங்கையின் சர்வதேச கடமைகள் மற்றும் உள்நாட்டு சட்டங்களுக்கு ஏற்ப பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) மறுபரிசீலனை செய்வதற்காக, ஜனாதிபதியின் செயலாளரின் அறிவுறுத்தலின் பேரில், சர்வதேசக் கடமைகளுக்கு இணங்க, அதை மறுபரிசீலனை செய்வதற்காக நிறுவப்பட்ட அதிகாரிகள் குழுவில், சட்டப் பிரிவுடன் இணைந்து, இப்பிரிவு வெளிநாட்டு அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. இறுதி அறிக்கையை அமைச்சரவை உபகுழுவிடம் சமர்ப்பிப்பதற்கான இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

தேசிய பாதுகாப்பின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கான பிற அம்சங்களை ஆதரித்தல்:

"சர்வதேச நாட்கள்" எனும் தொடர்பாடல் மூலோபாயத்தின் இலக்கு மூலோபாயத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், பல்வேறு முனைகளில் மிகைப்படுத்தப்பட்ட இலங்கை மீதான எதிர்மறையான செய்திகளை எதிர்த்துப் போராடுவதற்கு இலங்கை தூதரகங்கள் மூலமாகவும் இந்தப் பிரிவு செயல்பட்டு வருகிறது. ஐ.நா இற்கு சான்றளிக்கப்பட்டோரும் பிறரும் இலங்கையின் நேர்மறையான அம்சங்கள் அல்லது விடுதலைப் புலிகள் மீதான எதிர்ச் செய்திகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இவை; பெப்ரவரி மாதம் 'சர்வதேச சிறுவர் சிப்பாய்களின் பயன்பாட்டிற்கு எதிரான சர்வதேச தினம், மே மாதம் 'சகலரும் ஒன்றிணைந்து அமைதியாக வாழ்தலுக்கான சர்வதேச தினம்' ஆகஸ்ட் மாதத்தில் 'பயங்கரவாத தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் சர்வதேச தினம்' போன்றவையாகும்.

சமூக ஊடக தளங்களை திறம்பட பயன்படுத்துவதற்கும் பயங்கரவாத உள்ளடக்கங்களை கையாள்வதற்கும் அமைச்சிலும் தூதரக பணியகங்களிலுமுள்ள இ.வெ.சே அதிகாரிகளுக்கு Facebook மற்றும் Instagram பிரதிநிதிகளால் பயிற்சிகளை ஒழுங்கமைத்து நடத்துவதற்கு கொள்கைத் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் மனிதவள அபிவிருத்தி பிரிவுடன் இணைந்து இப்பிரிவு பணியாற்றியது.

## செயலாற்றுகை மேலோட்டம்: பிராந்தியப் பிரிவுகள்

## ஆபிரிக்கா பிரிவு

**இருதரப்பு உறவுகள்**

**மேதகு இலங்கை ஜனாதிபதிக்கும் எகிப்து மற்றும் கென்ய ஜனாதிபதிகளுக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல்**

இருதரப்பு கூட்டுறவுகளை வலுப்படுத்தும் நோக்குடன், முறையே 16 மார்ச் 2021 அன்று மேதகு இலங்கை ஜனாதிபதி எகிப்திய அரபுக் குடியரசின் ஜனாதிபதி மேதகு அப்டல் ஃபட்டா அல் சிசி அவர்களுடனும் 02 செப்டெம்பர் 2021 அன்று மேதகு கென்ய ஜனாதிபதி உஹுரர் முகை கென்யட்டா அவர்களுடனும் தொலைபேசி உரையாடல்களை மேற்கொண்டார்.

ஆபிரிக்க நாடுகளின் தூதுவர்களுடன் கௌரவ வெளிநாட்டமைச்சர் மற்றும் செயலாளர் ஆகியோர் மரியாதை நிமித்தமான சந்திப்புக்களை மேற்கொண்டனர்.

**இருதரப்பு ஆலோசனைகள்**

எத்தியோப்பியா மற்றும் இலங்கை வெளிநாட்டு அமைச்சர்களுக்கிடையிலான இருதரப்பு ஆலோசனைகளின் 1 ஆவது அமர்வு 09 ஜூன் 2021 அன்று மெய்நிகராக இடம்பெற்றது. அரசியல், பொருளாதாரம், சமூக மற்றும் கலாச்சார உறவுகளைப் பலப்படுத்துவதில் கவனம் செலுத்துவது தொடர்பில் இந்த ஆலோசனைகள் அமைந்தன.

எகிப்து, அல்ஜீரியா, மொரோக்கோ, மொரிஷியானா, சேஷெல்ஸ் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளுடன் இருதரப்பு ஆலோசனைகளை நடாத்துவதற்கான ஆரம்ப முயற்சிகள் எடுக்கப்பட்டன.

கோட் டெ வொய்ரெ உடன் இருதரப்பு ஆலோசனைகளுக்கான வரைவு உடன்படிக்கை முன்மொழியப்பட்டது.

இலங்கை- அல்ஜீரியா வெளிநாட்டு அமைச்சுக்களிடையிலான முதலாவது அமர்வு இருதரப்பு ஆலோசனைகள் 12 அக்டோபர் 2021 இல் மெய்நிகராக இடம்பெற்றது.

இடம்பெறும் பணி: பெப்ரவரி 2022 இல் இலங்கை- தென்னாபிரிக்கா இடையிலான பங்குடைமை கருத்துக்களத்தின் 8 ஆவது அமர்வு இடம்பெறவுள்ளது.

இலங்கை- எகிப்துக்கிடையில் இருதரப்பு ஆலோசனைகள் பெப்ரவரி 2022 இல் இடம்பெறும்

**மடகஸ்காரின் இலங்கை கொன்சியுலர் அலுவலகத்தை திறத்தல்**

ஆபிரிக்காவில் இராஜதந்திர இருப்பினை மேம்படுத்தும் நோக்குடன், மடகஸ்காரில் கொன்சியுலர் அலுவலகத்தினை நிறுவுவதற்கான ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மடகஸ்கார் அதிகாரிகளின் ஒப்புதலுக்காக அமைச்சு காத்திருக்கிறது.

**ஆபிரிக்க கண்டத்தில் இலங்கையின் இராஜதந்திர உறவுகளை விரிவாக்குதல்**

19 மார்ச் 2021 அன்று இலங்கை கபோனிய குடியரசுடன் இராஜதந்திர உறவுகளை நிறுவியது.

கமரூன் உடன் இராஜதந்திர உறவுகளை நிறுவுவதற்காக, நியூயோர்க்கிலுள்ள ஐ.நா நிரந்தர பிரதிநிதி உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கான ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன.

கொமொரோஸ் உடன் முறைசார் இராஜதந்திர உறவுகளை நிறுவுவதற்கான சம்பிரதாயங்களை பூர்த்திசெய்ய இப்பிரிவு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**பல்தரப்பு உறவுகள்**

**இலங்கை மீதான ஐ.நா மனித உரிமை கழக தீர்மானம்**

ஜெனீவாவில் இலங்கை மீதான ஐ.நா மனித உரிமை கழக தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்து எரித்ரியா மற்றும் சோமாலியா இலங்கைக்கு ஆதரவை வழங்கின. பேர்க்கினா ஃபாசோ, கமரூன், மொரிஷியானா, லிபியா, மலாவி, நமீபியா, செனகல், சூடான் மற்றும் டோகோ ஆகிய நாடுகள் இந்த வாக்களிப்பைத் தவிர்த்தன.

இலங்கையின் நிலைப்பாட்டிற்கு ஆபிரிக்க நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளில் இப்பிரிவு ஈடுபட்டது. ஐ.நா.ம.உ.கழகத்தில் இல்லாத பல நாடுகள் தற்சமயம் இலங்கைக்கு ஆதரவான அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

**பொருளாதார இராஜதந்திரம்**

ஆபிரிக்க நாடுகளுடனான பொருளாதாரம் தொடர்பான நிலுவையிலுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைகள் குறித்த தொடர்நடவடிக்கை மற்றும் மீளாய்வு.

**பாதுகாப்புக் கூட்டுறவு**

ஆபிரிக்க நாடுகளுடனான பாதுகாப்பு தொடர்பான நிலுவையிலுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைகள் குறித்த தொடர்நடவடிக்கை மற்றும் மீளாய்வு

**புலம்பெயர் தொழிலாளர் நலன், வெளிநாட்டு இலங்கையர் மற்றும் கொவிட் தொடர்பான செயற்பாடுகள்**

இப்பிரிவானது, ஜனாதிபதி செயலகம், சேஷெல்ஸிலுள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் சம்பந்தப்பட்ட முகவரமைப்புக்களுடன் உதவியுடன், கொவிட் 19 நோய்ப்பரவலால் சேஷெல்ஸ், மடகஸ்கார், எத்தியோப்பியா மற்றும் கென்யாவில் சிக்கித்தவித்த இலங்கையர்களை தாய்நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுத்தது. இதற்காக சிறப்பு வாடகை விமானங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன.

## அமெரிக்கா பிரிவு

லத்தீன் அமெரிக்கா மற்றும் கரிபியன் பிராந்தியத்திலுள்ள 33 நாடுகள், ஐக்கிய அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளை இப்பிரிவு உள்ளடக்குகிறது.

அதன்படி; பிரேசிலியா (பிரேசில்), ஹவானா (கியூபா), வாஷிங்டன் டிசி (அமெரிக்கா), ஒட்டாவா (கனடா) உயர் ஸ்தானிகராலயம் மற்றும் லொஸ் ஏஞ்ஜல்ஸ் மற்றும் ரொறன்ரோவில் உள்ள துணைத் தூதரகங்கள் மற்றும் இருதரப்பு பணிகள், நியூயோர்க்கில் உள்ள ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர தூது பிரிவின் எல்லைக்குள் வருகிறது. 2021 ஆம் ஆண்டில் இப்பிரிவின் முக்கிய பணித்துறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியது:

**இருதரப்பு உறவுகள்**

**இருதரப்பு இடைவினையாற்றல்கள்**

வெளிநாட்டு அமைச்சர் மற்றும் செயலாளரை சம்பந்தப்பட்ட நாடுகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களுடன், குறிப்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை துணைச் செயலர் வெண்டி ஷெர்மன், அரசியல் விவகாரங்களுக்கான அமெரிக்க துணைச் செயலாளர் விக்டோரியா நுலாண்ட் மற்றும் அமெரிக்க துணை வெளியுறவுச் செயலாளர் பொது இராஜதந்திரம் மற்றும் பங்களாதேஷ், பூட்டான், மாலத்தீவுகள், நேபாளம் மற்றும் இலங்கை கெல்லி கெய்டர்லிங் ஆகியோருடன் மெய்நிகர் சந்திப்புகள் உட்பட இடைவினையாற்றல்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டது.

மேற்கூறிய இலங்கைத் தூதரகங்கள் இடையீடு செய்பவர்களுடன் உரையாடலைத் தொடர்ந்தன, மேலும் அவர்களின் அங்கீகாரம் பெற்ற நாடுகளில் சூழ்நிலைகளைப் பொறுத்து ஈடுபாடுகளையும் மேம்படுத்தியுள்ளன. இந்த நாடுகளுடனான இலங்கையின் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதும் பரந் அளவிலான துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதும் இந் இடைவினையாற்றல்களின் முக்கிய நோக்கமாகும். பிரேசில், கொலம்பியா மற்றும் உருகுவே ஆகிய நாடுகளுடன் அரசியல் ஆலோசனைகளை ஆரம்பத்திலேயே நடத்துவதற்கான தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டது, மேலும் கொழும்பில் கூட்டாண்மை உரையாடலின் 4 ஆவது அமர்வை திட்டமிடுவது குறித்து அமெரிக்காவுடன் தொழில்நுட்ப மட்ட கலந்துரையாடல்கள் தொடங்கப்பட்டன.

தூதரக பணியகங்களும் கௌரவ உதவித்தூதர்களுடன் நெருக்கமாகப் பணியாற்றின. அந்நாடுகளின் மாகாணங்களிடனான /மாநிலங்களுடனான ஈடுபாடுகளை மேம்படுத்தும் நோக்கில் இலங்கைக்கான தூதுவர்கள் அந்நாடுகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். பிரேசிலிலுள்ள ரியோ டி ஜனீரோ மற்றும் சாஓ

போலோ, சிலி, கொலம்பியா, சுரினாம், பெரு, அர்ஜென்டினா, பொலிவியா, ஜமைக்கா, ஹைட்டி மற்றும் எல் சல்வடோர் ஆகிய நாடுகளில் உதவித் தூதரகங்கள் நியமிக்கப்பட்டன அல்லது சேவைகள் நீட்டிக்கப்பட்டன.

ஜூலை 2021 இல் அமெரிக்க காங்கிரஸின் 117வது அமர்விற்கு இலங்கை தொடர்பான அமெரிக்க காங்கிரஸின் கட்சிக்குழுக்கூட்டம் மீண்டும் பதிவு செய்யப்பட்டது. கட்சிக்குழுக்கூட்டத்தின் இணைத் தலைவர்கள் காங்கிரஸின் ராபர்ட் அடெர்ஹோல்ட் (குடியரசு/அலபாமா) மற்றும் காங்கிரஸ் உறுப்பினர் ஹாங்க் ஜான்சன் (ஜனநாயகக் கட்சி/ஜோர்ஜியா).

பெரு, சிலி மற்றும் கயானா ஆகிய நாடுகளுக்கான இலங்கை தூதரக பணியக சமகால அங்கீகாரத்துக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**மனிதக்கடத்தல் குறித்த அறிக்கை**

மனிதக் கடத்தலைக் கண்காணிப்பதற்கும் எதிர்த்துப் போராடுவதற்கும் (SNAP) தேசிய மூலோபாய செயல் திட்டம் (SNAP) 2021 மற்றும் இடைக்கால 2022, அமெரிக்க வெளியுறவுத் துறையின் ஆட்கடத்தல் அறிக்கைக்கு GoSL சமர்ப்பிப்பை இறுதிப்படுத்துவதற்காக, தேசிய மனித கடத்தல் எதிர்ப்பு பணிக்குழு கூட்டங்களில் இப்பிரிவு தீவிரமாக பங்கேற்றது. தொடர்நடவடிக்கை வினாக்களுக்கான பதில்களையும் வழங்கியது. இலங்கை அரசாங்கத்தின் இறுதி சமர்ப்பிப்பு, மார்ச் 2021 இல் அமெரிக்க தூதரகத்திற்கு வழங்கப்பட்டது. சமீபத்திய அமெரிக்க மனிதக்கடத்தல் அறிக்கை 2021 இன்படி, இலங்கைக்கு விலக்கு அளிக்கப்பட்டு, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இரண்டாம் நிலை கண்காணிப்புப் பட்டியலில் தக்கவைக்கப்பட்டுள்ளது.

**உடன்படிக்கைகள்/ புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடுதல்**

வர்த்தகம், தேசிய செலவினம் மற்றும் வருவாய் (PARTNER) செயற்பாட்டின் செயலாக்கக் கடிதம் (உதவி ஒப்பந்தம்) ஆகியவற்றில் முடிவுகளை விரைவுபடுத்துவதற்கான USAID கூட்டாண்மையில் கையொப்பமிடுதல்; அமெரிக்க விவசாயத் திணைக்களத்துடன் (McGovern-Dole திட்டம்) Market Alliances (PALAM/A) திட்டம் மூலமாக, சுயாட்சி, எழுத்தறிவு மற்றும் கவனிக்கும் தன்மை போன்றவற்றை ஊக்குவித்தல் குறித்து, கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு, நிதி அமைச்சு மற்றும் Save the Children ஆகிய நான்கு தரப்பினருடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் போன்றவை ஒழுங்குபடுத்தப்பட்டது. இலங்கையின் பாடசாலை உணவுத் திட்டத்திற்கு 26 மில்லியன் திட்டம் ஆதரவளித்தது. தேசிய விஞ்ஞான அறக்கட்டளை மற்றும். தேசிய அறிவியல் அறக்கட்டளை மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனம் ஆகியவற்றுடன் தொடர்புடைய பிரேசிலிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

**எதிர்மறையான/ உண்மையற்ற அறிக்கைகளை எதிர்த்தல்**

18 மே 2021 அன்று அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் காங்கிரஸ் உறுப்பினர் டெபொரா ரோஸால் (ஜனநாயக-வட கரோலினா) அறிமுகப்படுத்தப்பட்ட, "மே 18, 2009 இல் இலங்கையில் யுத்தம் முடிவடைந்து 12 வருடங்கள் நிறைவடைந்ததை இனங்கண்டு, இலங்கையில் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், புனரமைப்பு, இழப்பீடு மற்றும் சீர்திருத்தம், நிரந்தரமான அமைதியான அரசியல் தீர்வு மற்றும் இலங்கையின் அனைத்து மக்களுக்கும் வளமான எதிர்காலத்தை உறுதிசெய்வதற்காக இழந் உயிர்களை கௌரவித்தல், நீதிக்கான ஆதரவை வெளிப்படுத்துதல்" என்ற தலைப்பில் அமெரிக்க காங்கிரஸ் சபையின் 413 ஆம் பிரேரணையின் செயன்முறையை மற்றும் அது ஏற்றுக்கொள்ளப்படுவதைத் தடுப்பதற்கு பல முனை அணுகுமுறையை இப்பிரிவு எளிதாக்கியது. இதற்கான பதிலை இலங்கை அரசாங்கம், வோஷிங்டனிலுள்ள தூதரகம் மூலமாக வெளிநாட்டு விவகாரங்கள் குழுவின் தலைவர் மற்றும் தர நிலை உறுப்பினரிடமும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்திடமும் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்திலும் சமர்ப்பித்தது.

ஒட்டாவாவில் உள்ள உயர் ஸ்தானிகராலயம் மற்றும் டொராண்டோவில் உள்ள துணைத் தூதரகத்துடன் ஒருங்கிணைந்து கனடாவில் உள்ள இலங்கை தொடர்பான முக்கியப் பிரச்சினைகளை, குறிப்பாக தமிழ் இனப்படுகொலைக் கல்வி வாரம் தொடர்பான ஒன்ராறியோ மாகாண சட்டமூலம்-104, தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னங்கள் கட்டுதல் போன்றவை உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு பதில் வழங்கப்பட்டது.

இலங்கையின் தற்போதைய மேம்பாடுகள், குறிப்பாக நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய துறைகளில் அந் ந்த நாடுகளின் அங்கீகாரம் பெற்ற மூத்த அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு தொடர்ந்து விளக்கமளிக்கப்பட்டது.

வாஷிங்டனில் உள்ள தூதரகம் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை நினைவுகூரும் வகையில் ஒரு வட்ட மேசை விவாதத்தை நடத்தியது, இதில் இராஜாங்க திணைக்களத்தின் மூத்த பிரதிநிதிகள் மற்றும் பிற தொடர்புடைய உரையாளர்கள் கலந்து கொண்டனர்.

**பல்தரப்பு உறவுகள்**

ஒட்டாவாவில் உள்ள உயர் ஸ்தானிகராலயம், இது கியூபெக்கில் உள்ள மாண்ட்ரியலில் அதன் தலைமையகத்தைக் கொண்டுள்ள சர்வதேச சிவில் விமானப்போக்குவரத்து அமைப்பு (ICAO) தொடர்பான விட ஷயங்களை எளிதாக்கியது.

இந் அமைச்சின் ஐ.நா பிரிவு, ஐ.நா அமைப்புகளுக்கான தேர்தல்களில் இலங்கையின் வேட்பாளர்களுக்கு ஆதரவைப் பெறுவது மற்றும் ஜெனீவாவிலுள்ள ஐ.நா மனித உரிமைக் கழகத்தில் இலங்கையின் நிலைப்பாட்டிற்கான ஆதரவைப் பெறுவது தொடர்பாக செயலாற்றுகிறது. தூதரக பணியகங்கள் இதுவிடயத்தில் அந்தந்த அங்கீகாரம் பெற்ற நாடுகளிலுள்ள, சம்பந்தப்பட்ட அரசாங்க திணைக்களங்களுடன் / அதிகாரிகளுடன் மிஷன்கள் ஈடுபட்டுள்ளன.

**பொருளாதார இராஜதந்திரம்**

தூதரகங்கள் / உயர் ஸ்தானிகராலயங்கள் மற்றும் துணைத் தூதரகங்கள் மற்றும் இப்பிரிவு மூலமாக பொருளாதாரம் தொடர்பான விடயங்களை உறுதியான விளைவுகளுடன் மேம்படுத்துவதற்காக பல பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்தந்த சந்தைகளில் இலங்கை தயாரிப்புகள் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் கூட்டங்கள், வலைப்பதிவுகள், வலையமைப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல் / எளிதாக்குதல் மற்றும் அந் நாடுகளிலும் இலங்கையிலும் உள்ள தொடர்புடைய நிறுவனங்களுக்கு இடையே வணிக தொடர்புகளை ஏற்படுத்துதல் ஆகியவை இதில் அடங்கும். உத்தியோகபூர்வ வணிக மற்றும் அரசாங்கப் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருவதற்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டது.

வர்த்தக சம்மேளனங்களுக்கிடையில் இணைப்புகள் ஏற்படுத்தப்பட்டு பொருத்தமான இடங்களில் இலங்கை வர்த்தக சபைகள்/சபைகள் அந்தந்த நாடுகளில் புத்துயிர் பெற்றன அல்லது நிறுவப்பட்டன. தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் திறனை வளர்ப்பதற்கான வாய்ப்புகள் ஆகியவற்றிற்காக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடனான ஒத்துழைப்பும் தொடரப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுக நகர திட்டத்தை ஊக்குவித்தல் உட்பட, இலங்கைக்கான முதலீடுகளை ஊக்குவிக்கும் நிகழ்வுகள் / கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

வோஷிங்டனில் உள்ள தூதரகம், அமெரிக்க விவசாயத் துறையுடன் ஒருங்கிணைந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட வகை பழங்கள் மற்றும் தாவரங்களை ஏற்றுமதி செய்வதற்கு தேவையான அனுமதிகளைப் பெறுவதற்கும், அமெரிக்க GSP வசதியை விரிவுபடுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து பயிற்சி நிலையத்திற்கும் கனடா ஃப்ரேசர் வலி பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான கலந்துரையாடலை உயர்ஸ்தானிகரகம் வசதியேற்படுத்திக் கொடுத்தது. டொறொண்டோவ கொன்சியுலர் அலுவலகத்தின் ஆதரவுடன், நவம்பர் 2021 இல் சலுசல விற்பனை நிலையம் ஒன்று கனடாவில் ஆரம்பிக்கப்பட்டது. கியூபாவின் வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டு அமைச்சு இலங்கையின் மசாலா மற்றும் வாசனைப்பொருட்கள் ஏற்றுமதியாளர்களை கியூபா வர்த்தகர்களுடன் இணைக்க ஒப்புக்கொண்டது. பிரேசிலில் உள்ள தூதரகம், கரண்டிகள், கத்திகள், முள்கரண்டி மற்றும் பீங்கான் பொருட்கள், தேயிலை, தென்னை நார் பொருட்கள், துணிச் சாயங்கள், PVC குழாய்கள் ஆகியவற்றின் வருங்கால புதிய இறக்குமதியாளர்களை பிரேசில் மற்றும் பிற அங்கீகாரம் பெற்ற நாடுகளில் அடையாளம் கண்டுள்ளதுடன், வணிக பேச்சுவார்த்தைகளை தொடங்குவதற்கு இலங்கை நிறுவனங்களுடன் வணிக சந்திப்புகளும்ள் ஏற்பாடு செய்யப்பட்டன.

**பாதுகாப்புக் கூட்டுறவு**

செப்டம்பர் 2021 இல் நியூபோர்ட், ரோட் தீவில் உள்ள அமெரிக்க கடற்படை போர் கல்லூரியில் அமெரிக்க கடற்படை ஏற்பாடு செய்த 24 வது சர்வதேச கடல் சக்தி கருத்தரங்கில் (ISS) கலந்துகொள்வதற்காக கடற்படை தளபதியின் அமெரிக்க விஜயத்தையும் வில்ஸ்பாக், 70 ஆவது இலங்கை விமானப்படை

ஆண்டு விழாவிற்காக அமெரிக்காவின் பசிபிக் விமானப்படையின் தளபதி ஜெனரல் கென்னத்தின் வருகையும் ஒருங்கிணைக்கப்பட்டது.

இலங்கை அமெரிக்க இராணுவத்தினருக்கு இடையிலான கூட்டுப் பயிற்சிகளை இப்பிரிவு ஒருங்கிணைத்து எளிதாக்கியது. இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு அமெரிக்காவில் பாதுகாப்பான பயிற்சி வாய்ப்புகள் ஒதுக்கப்பட்டன.

ஒட்டாவாவில் உள்ள உயர் ஸ்தானிகராலயம், விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிடுவது தொடர்பாக 'பொதுப் பாதுகாப்பு கனடா'வுடன் தொடர்ந்து பின்தொடர்ந்து வந்தது, அது இன்னும் நடைமுறையில் உள்ளது.

பிரேசிலுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் மனித கடத்தல் மற்றும் நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான ஒப்பந்தங்கள்/ புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மீதான பேச்சுவார்த்தைகள் எளிதாக்கப்பட்டன. பிரேசிலில் இருந்து சம்பிரதாய துப்பாக்கிகளை வாங்குவதற்கு வழிவகுத்தது.

**பொது இராஜதந்திரம்**

ஒட்டாவாவில் உள்ள உயர் ஸ்தானிகராலயம், சர்வதேச அமைதியுடன் இணைந்து வாழும் சர்வதேச தினத்தன்று மெய்நிகர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது மற்றும் கோயில்கள் மற்றும் இலங்கை சங்கங்களால் நடத்தப்படும் மெய்நிகர் / தனிநபர் நிகழ்ச்சிகளில் பங்கேற்றது / உதவி செய்தது.

வோஷிங்டன் டி.சி.யில் உள்ள தூதரகம், வெளிநாட்டு இலங்கையர்கள் ஒருங்கிணைப்பு, இலங்கை நண்பர்கள், அமெரிக்க கூட்டாட்சி மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகள், தூதர்கள் மற்றும் உள்ளூர் சமூகத்தின் மற்ற பங்கேற்பாளர்களுடன் இணைந்து கலாச்சார நிகழ்வுகளை ஏற்பாடு செய்தது.

கியூபாவில் உள்ள இலங்கை சமூதாயத்தினர் மற்றும் மாணவர்களுக்காக பல சமூக நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு, இலங்கைக்கு ஆதரவாக அவர்களை ஒன்றிணைத்தது. இதேபோன்ற மெய்நிகர் நிகழ்வுகள் பிரேசிலில் நடத்தப்பட்டன.

**புலம்பெயர் தொழிலாளர் நலன், வெளிநாட்டு இலங்கையர் மற்றும் கொவிட் தொடர்பான செயற்பாடுகள்**

2021 ஆம் ஆண்டில் COVAX வசதி மூலம் இலங்கைக்கு 3.4 மில்லியன் மாடர்னா மற்றும் ஃபைசர்-பயோஎன்டெக் கோவிட்-19 தடுப்பூசியை நன்கொடையாக வழங்க உதவியது. அமெரிக்கா 17.9 மில்லியன் அமெரிக்க டாலர் மருத்துவப் பொருட்கள் மற்றும் முக்கியமான சேவைகளை வழங்கிய அதே வேளையில் 265 மில்லியன் டாலர் நிதியுதவி இலங்கைக்கு வழங்கப்பட்டது. தொற்றுநோய்க்குப் பிந்தைய பொருளாதார மீட்சிக்கு இலங்கை வங்கிகள் உதவுகின்றன.

உலக சுகாதார அமைப்பின் ஊடாக, கொவிட்-19 உடனடி உதவிக்காகவும் ஆரம்ப சுகாதார சேவையை நீண்டகாலமாக வலுப்படுத்துவதற்காகவும் கனடா 1.3 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியதுடன், கனடாவின் ஊடாக இலங்கைக்கான அவசர ஒட்சிசன் சிகிச்சை விநியோகங்களை கொள்வனவு செய்வதற்கு 1.0 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியது. கோவிட்-19 டூல்ஸ் ஆக்சிலரேட்டர் சப்ளைஸ் நிதி வசதிக்கான UNICEFஇன் அணுகலுக்கான பங்களிப்பு செய்யப்பட்டது. எட்மண்டனில் உள்ள இலங்கை கனடா நட்புறவுச் சங்கம் 6,350.00 கனேடிய டொலர்களை 'இடுகம – கோவிட் 19 சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்திற்கு' நன்கொடையாக வழங்கியது.

வோஷிங்டனிலுள்ள தூதரகம், வெளிநாடுவாழ் இலங்கையர்களின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து இலங்கையின் நலன்களை உணர்ந்து கொள்வதில் அவர்களின் ஆதரவைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு, அமெரிக்காவில் அமெரிக்கா முழுவதும் வாழும் இலங்கையர்கள், அமெரிக்க இலங்கையர்கள் மற்றும் 'இலங்கையின் நண்பர்கள்' ஆகியோருடன் தொடர்புகொள்வதற்கும், அவர்களைத் தொடர்புகொள்வதற்கும் நோக்கத்துடன் வெளிநாட்டு இலங்கையர் வலையமைப்பை (OSL) தொடங்கியுள்ளது.

ரொறன்ரோவிலுள்ள துணைத் தூதரகம், கனடாவில் வேலை தேடும் வருங்கால இலங்கையர்களுக்கு, அவர்கள் பெற்ற வேலை வாய்ப்புகளின் உண்மைத்தன்மையை சரிபார்த்து, முகவர்கள் மூலம் உதவியது. இது தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கும் துணைத் தூதரகம் உதவியது.

கொவிட்-19 உலக நோய்ப்பரவலால் சர்வதேச பயண கட்டுப்பாடுகள் காரணமாக அமெரிக்க பிராந்தியத்திலுள்ள இலங்கையர்களை தாயகம் அனுப்புவதற்கும், சம்பந்தப்பட்ட தூதரகங்களுடன் இணைந்து டொமினிக்கன் குடியரசு மற்றும் ஹெய்ட்டி இலிருக்கும் இலங்கையர்களுக்கான தடுப்பூசிகள் செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

**பிற**

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் மற்றும் சம்பந்தப்பட்ட இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து அமெரிக்க அதிகாரிகளுக்கான 298 இலவச வீசாக்களை இப்பிரிவு வழங்கியது.

ரொறொன்ரோவிலுள்ள இலங்கை கொன்சியுலரகம் 30 டிசம்பர் 2021 அன்று புதிய இடத்திற்கு மாறியது.

## கிழக்கு ஆசியா பிரிவு

**இருதரப்பு உறவுகள்**

வழக்கமான உயர் மட்ட தொடர்புகள் மூலம் பல துறைகளில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துதல்:

ஜப்பான் இலங்கை கொள்கை உரையாடலின் 2வது அமர்வு மற்றும் இலங்கை-நியூசிலாந்து உத்தியோகபூர்வ ஆலோசனைகளின் ஆரம்ப அமர்வு முறையே 10 பெப்ரவரி 2021 மற்றும் 08 ஏப்ரல் 2021 ஆகிய நாட்களில் நடைபெற்றது.

ஏப்ரல் 20 அன்று ஆசியாவிற்கான போவா மன்றத்தின் வருடாந்த மாநாட்டிலும், 20 மே 2021 அன்று ஜப்பான் நிக்கேய் நிறுவனம் ஏற்பாடு செய்த "ஆசியாவின் எதிர்காலம்" மாநாட்டிலும் ஜனாதிபதி மெய்நிகராக உரையாற்றினார். கௌரவ பிரதம மந்திரி, தையுவான் எரிசக்தி, காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் கருத்துக்களத்தில் 03 செப்டம்பர் 2021 அன்று உரையாற்றினார். வெளிநாட்டு அமைச்சர் கோவிட்19 ஒத்துழைப்பு மற்றும் கோவிட்-19 தடுப்பூசி ஒத்துழைப்பு குறித்த இரண்டு மெய்நிகர் நிகழ்வுகளில் கலந்து கொண்டார். கௌரவ நாமல் ராஜபக்ச ஜூலை 2021 இல் டோக்கியோவிற்கு விஜயம் செய்தார்.

இலங்கை – சீனா ஜனாதிபதிகளுக்கிடையிலான தொலைபேசி உரையாடல் 29 மார்ச் 2021 அன்று இடம்பெற்றது. இலங்கை வெளிநாட்டமைச்சர், சீனா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் கொரிய குடியரசு ஆகிய நாடுகளுடன் முறையே 24 பெப்ரவரி 2021, 09 ஜூன் 2021, 03 ஆகஸ்ட் 2021 மற்றும் 22 மார்ச் 2021 ஆகிய திகதிகளில் தனிவேறான பேச்சுவார்த்தைகளை நடாத்தினார்.

இலங்கை பாரளுமன்ற சபாநாயகர், சீன பாராளுமன்ற சபாநாயகருடன் 31 ஆகஸ்ட் 2021 அன்று மெய்நிகர் சந்திப்பினை மேற்கொண்டார்.

நியூசிலாந்து இலங்கையில் தனது புதிய வதிவிட இராஜதந்திர பணியகத்தினை 11 ஆகஸ்ட் 2021 அன்று ஸ்தாபித்தது.

2021 டிசம்பர் 18-21 காலப்பகுதியில் அவுஸ்திரேலிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், கௌரவ கரன் அன்ரூஸ், பா.உ இலங்கைக்கு ஒரு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டார். அதன்போது, இரு நாடுகளிடையிலும் ஆட்களை தாயகம் அனுப்புதல் மற்றும் மீளஅனுமதித்தல் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தானது.

ஹாங்காங் SAR மற்றும் Maco SAR இற்கான கௌரவ தூதரக நியமனங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2022 ஜனவரி 8-9 திகதிகளில் சீன வெளிநாட்டமைச்சரின் விஜயத்திற்கான ஆரம்ப தயார்நிலைகள்

2022 இல் இரு நாடுகளுக்கும் இடையே இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியதன் 70வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள்.

5-7 ஜனவரி 2022 இல் கொரிய குடியரசின் வெளியுறவு அமைச்சரின் உத்தியோகபூர்வ விஜயத்திற்கான ஆயத்த பணிகள்

**பல்தரப்பு உறவுகள்**

17 அக்டோபர் 2021 அன்று இலங்கை நடாத்திய சுற்றுலாத்துறை கூட்டுறவு குறித்த மெய்நிகர் வணிக இடைவினையாற்றல் அமர்வில், ஆசியாவில் இடைவினையாற்றல் மற்றும் தன்னம்பிக்கை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் குறித்த மாநாட்டின் (CICA) 27 உறுப்பு நாடுகள் கலந்துகொண்டன. ICA இன் சிரேஷ்ட அதிகாரிகள் குழு மற்றும் சிறப்பு பணிக்குழுக்கள் கூட்டத்தில் இப்பிரிவு இலங்கையை பிரதிநிதித்துவம் செய்தது. CICA செயல் திட்டம் 2021 இன் கீழ் இணைய கருத்தரங்கங்களில்/ பயிற்சித் திட்டங்களில் இலங்கையின் பங்கேற்பினை ஒருங்கிணைக்க, இணை முகவரமைப்புக்களுடன் இப்பிரிவு பணிபுரிந்தது. மெய்நிகராக 09 மற்றும் 11 டிசம்பர் 2021 இல் இடம்பெற்ற CICA இன் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் பணிக்குழு கூட்டங்களில் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது.

பாலி செயன்முறையில் பங்கேற்றதன் மூலம், திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப திறனை வலுப்படுத்துதல், ஆட்கள் கடத்தல் மற்றும் நபர்களை கடத்துவதை எதிர்ப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. செப்டம்பர் 2021 இல் ஆஸ்திரேலியாவுடன் நாடு திரும்புதல் மற்றும் மீள் ஒருங்கிணைப்பு தொடர்பான பாலி செயன்முறை 4 ஆவது பணிநிலை தொழில்நுட்ப வல்லுநர்கள் குழுவிற்கு இலங்கை இணைத் தலைமை தாங்கியது.

i. பல்தரப்பு கருத்துக்களங்களில் ஆதரவையும் நிதி உதவியையும் பெறுவதில் ஐ.நா முகவரமைப்புக்களுடன்/ சீன சர்வதேச அபிவிருத்தி கூட்டுறவு முகவரமைப்புடன் அடிக்கடி ஈடுபாடுகள் மேற்கொண்டமை
ii. ஐ.நா இளைஞர் தூதுவரின் பங்கேற்புடன் பீஜிங்கிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் ஐ.நா சர்வதேச இளைஞர் திறன்கள் தினம் கொண்டாடப்பட்டது.

நான்காவது ஐ.நா அமைதி காக்கும் அமைச்சர்கள் கூட்டம் மற்றும் ஆசிய பசுபிக் பிராந்திய அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகார சபையின் நான்காவது அமர்வில் இலங்கையின் கௌரவ சுற்றாடல் அமைச்சர் மெய்நிகராக பங்கேற்றார்.

**பொருளாதார இராஜதந்திரம்**

இலங்கை மற்றும் சீனாவின் கூட்டு பொருளாதார வர்த்தக ஆணைக்குழுவின் (JETC) 7ஆவது அமர்வு 24 செப்டம்பர் 2021 அன்று நடைபெற்றது.

கோவிட்-19 தொடர்பான பொருளாதார சவால்களின் எதிர்மறையான தாக்கங்களைக் குறைப்பதில் சீனா, ஜப்பான் மற்றும் கொரியா குடியரசு ஆகியவற்றுடன் நிதி ஒத்துழைப்பின் பேச்சுவார்த்தை மற்றும் ஒருங்கிணைப்பு.

கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை கைத்தொழில் வலயம், ஏறாவூர் துணி பூங்கா, மற்றும் இலங்கையின் ஏனைய சுதந்திர வர்த்தக வலயங்கள் போன்ற முதலீட்டுத் திட்டங்களை ஊக்குவித்தல்.

வெளிநாட்டு சேரிடங்களிலிருந்து சம்பந்தப்பட்ட இணை முகவரமைப்புக்களுடன் பெறப்பட்ட முதலீட்டு முன்மொழிவுகளின் ஒருங்கிணைப்பு: பயணிகள் வாகனம் இணைக்கும் ஆலை, பாதுகாப்பு கண்ணாடி தயாரிப்பு திட்டம், கோவிட் 19 தடுப்பூசி நிரப்பும் ஆலை, குடியிருப்பு ஆதன உருவாக்கம், சூரிய சக்தி மற்றும் காற்றாலை திட்டம், சிமெந்து ஆலை, பாடசலைகளுக்கான ஸ்மார்ட் வகுப்பறைகள்.

முதலீட்டுச் சபையுடன், சைனோஃபார்ம் கொவிட்-19 தடுப்பூசி மீள்நிரப்பல் ஆலையை நிறுவுவதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருகின்றன. இலங்கையில் ஒரு தொழில்நுட்ப மற்றும் விவசாய பல்கலைக்கழகத்தினை நிறுவுவதற்கான முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட சேரிடங்களிலுள்ள இலங்கைத் தூதரக பணியகங்கள்/ பதவிகள் மூலம் வர்த்தகம்-வணிகம் தொடர்புகள்/கண்காட்சிகள்/மெய்நிகர் தளங்கள் மூலம் இலங்கை தயாரிப்புகள்/சுற்றுலாவை மேம்படுத்துதல்.

i. **கொரிய குடியரசு**: தெங்குப் பொருட்கள், படகு மற்றும் கப்பல் கட்டுதல், இரத்தினம் மற்றும் கைகள் போன்ற மூன்று ஏற்றுமதி ஊக்குவிப்பு இணைய கருத்தரங்கங்களை

ஒழுங்குசெய்தமை மற்றும் இரண்டு வர்த்தக கண்காட்சிகளில் பங்கேற்றமை. இறக்குமதி பொருட்கள் கண்காட்சி 2021 மற்றும் சியோல் உணவு மற்றும் ஹோட்டல் கண்காட்சி 2021, கொரியாவிலுள்ள சாத்தியமான கொள்வனவாளர்களுக்கு இலங்கை ஏற்றுமதிகளை அறிமுகப்படுத்துவதற்காக சுமார் 70 B2B கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தது, கொரியாவில் "இலங்கை இரத்தினக்கல் வர்த்தக மையத்தை" நிறுவுவதற்கான முயற்சி, 10 இலங்கை நிறுவனங்களுக்கு வசதி. கொரியாவிலுள்ள XPrive வர்த்தக அபிவிருத்தி மேடையில் அவர்களின் சுயவிவரங்களை வெளியிட, இலங்கை முதலீட்டு மன்றம் 2021 இல் "கொரியா நாட்டு அமர்வை" இணைந்து ஏற்பாடு செய்தது, D-Camp Korea மற்றும் ஆடை மற்றும் ஜவுளித் துறையில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும், கொரியாவில் பங்கேற்பதற்காகவும் 02 இணைய கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டன. செப்டம்பர் 2021 இல் சர்வதேச சுற்றுலா நிகழ்ச்சி ஏற்பாடு.

ii. **ஜப்பான்**: 43 இலங்கை தயாரிப்புகளை வாங்கும் வருங்கால வாடிக்கையாளர்களுடன் நேருக்கு நேரான வணிக சந்திப்புகள், இலங்கையின் ஏற்றுமதி மற்றும் கலாச்சார ஆரோக்கியத்தை மேம்படுத்தும் 30 நேரடி மாநாடுகள், சுற்றுச்சூழல் சஃபாரி மற்றும் கல்வி சுற்றுலா, 16 சுற்றுலா மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு நிகழ்வுகளில் நேரடியாக கலந்துகொண்டமை. இலங்கையில் ஜப்பானிய கல்வியை முன்னேற்றுவதற்கு வசதியாக 08 நேரடி மாதாந்த கல்வி மற்றும் வேலைவாய்ப்பு விழிப்புணர்வு திட்டங்கள், ஜப்பானியர்களை இலங்கையில் ஆங்கிலம் கற்க ஈர்க்கும் திட்டம் ஆகியவை தொடங்கப்பட்டன. ஜப்பான் சர்வதேச உணவுக் கண்காட்சி, INCHEM டோக்கியோ 2021 கண்காட்சி, ஜப்பான் தேயிலை சங்கத்துடன் இணைந்து தேநீர் சுவைத்தல் அமர்வு மற்றும் மினாடோ மற்றும் ஷிபுயா நகரங்களில் சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வுகளில் பங்கேற்றமை. ஜப்பானின் மருபேனி கூட்டுத்தாபனத்தின் இலங்கைக்கான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீட்டு குழுவின் விஜயம். ஜப்பானில் வசிக்கும் இலங்கை தொழில் வல்லுநர்கள் மூலம் இலங்கை த.தொ நிறுவனங்கள் மற்றும் ஜப்பானிய நிறுவனங்களை இணைக்கும் வகையில் ஜப்பானை தளமாகக் கொண்ட இலங்கை த.தொ நிபுணர்களுக்கான தொழில் முனைவோர் பட்டறையை ஏற்பாடு செய்தமை.

iii. **சீனா**: வர்த்தகம், முதலீடு, சுற்றுலா மற்றும் கலாச்சார நிகழ்வுகளை நடத்தியமை /பங்கேற்றமை. சீனாவிற்கு வருடாந்தம் 4 மில்லியன் கிலோ இலங்கை தேயிலையை இறக்குமதி செய்வதற்கான சீன நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கான ஏற்பாடு. 4வது CIIE இல் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளை இறுதி செய்தமை. ஃஃப்யூஜியன்-இலங்கை பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பு மாநாடு, சீனா இலங்கை வர்த்தக மற்றும் பொருளாதார சங்கத்தை நிறுவியமை. தெற்கு-தெற்கு ஒத்துழைப்புக்கு சீனா வழங்கும் நிதியை அணுகுவதற்கு ஐ.நா, பெய்ஜிங்கில் உள்ள பலதரப்பு அமைப்பு, சி.ஐ.டி.சி.ஏ., மற்றும் இலங்கை இணை முகவரமைப்புக்களுடன் தொடர்ந்து கலந்துரையாடல். குவாங்டாங் வர்த்தகத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இலங்கைக்கான பெரிய அளவிலான முதலீடுகளை ஊக்குவிக்கும் இணைய கருத்தரங்கம். பெருமளவிலான அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் (25க்கும் மேற்பட்ட) மற்றும் மாகாண அதிகாரிகளுடன் தொடர்ந்த செயல் ஈடுபாடு.

iv. **அவுஸ்திரேலியா**: 21 மே 2021 அன்று ஆஸ்திரேலிய ே நீர் விற்பன்னர்களுடன் இணைந்து சர்வதேச தேநீர் தினம் கொண்டாடியமை; SLASSCOM உடன் இணைந்து IT மற்றும் BPM துறைகளில் சந்தை பரிந்துரை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டமை; 18 ஏப்ரல் 2021 அன்று "அவுருது பொல" சுற்றுலா ஊக்குவிப்பு திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டமை; இலங்கை தயாரிப்புகள், முதலீட்டு வாய்ப்புகள், சுற்றுலா, கல்வி, முதலிய இணைய கருத்தரங்குகளில் பங்கேற்றமை; "இலங்கையின் புவிசார் அரசியல் மற்றும் வர்த்தகம்" எனும் தலைப்பில் இணைய கருத்தரங்கு; பொருளாதார இராஜதந்திர திட்டத்தின் கீழ் பிரிஸ்பேன், குயின்ஸ்லாந்தில் வர்த்தக ஊக்குவிப்பு நிகழ்வுகள், அவுஸ்திரேலியா இலங்கை வர்த்தக சபையை நிறுவுதல், ஜூன் 2021 இல் இடம்பெற்ற இலங்கை முதலீட்டு மன்றத்தில் அவுஸ்திரேலியாவில் இருந்து 42 நபர்களின் பங்கேற்பு.

**பாதுகாப்புக் கூட்டுறவு**

28 ஏப்ரல் 2021 அன்று சீனாவின் பாதுகாப்பு அமைச்சரின் வருகை, மேதகு ஜனாதிபதி மற்றும் ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சருக்கிடையில் 06 ஜூலை 2021 அன்று தொலைமாநாடு; பிப்ரவரி, மார்ச் மற்றும் மே மாதங்களில் இராணுவம்/கப்பல்படை/ விமானப்படைத் தளபதிகள் ஆஸ்திரேலிய சகாக்களுடன் மெய்நிகர் தொடர்புகள்.

21 ஜனவரி 2021 அன்று இலங்கை- அவுஸ்திரேலியா மனித கடத்தல் மற்றும் பிற நாடுகடந்த குற்றங்கள் குறித்த 7 ஆவது கூட்டு பணிக்குழு மெய்நிகராக இடம்பெற்றது.

300,000 டோஸ் சைனோஃபார்ம் தடுப்பூசியை சீனாவிலிருந்து இலங்கை இராணுவத்திற்கு நன்கொடையாக வழங்க உதவியமை.

இலங்கைக்கான இராணுவக் கப்பல்களின் நல்லெண்ணப் பயணங்களை எளிதாக்கியமை மற்றும் இலங்கையிலுள்ள பாதுகாப்பு நிறுவனங்களுக்கு திறன் மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைத்தமை.

நியூசிலாந்து மஸே பல்கலைக்கழகத்திற்கும் இலங்கை கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கும் இடையில் மீளப்புதுப்பிக்கப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் 05 நவம்பர் 2021 அன்று கைச்சாத்திடப்பட்டது.

**பொது இராஜதந்திரம்**

இலங்கை தூதரகப் பணியகங்களால் ஒழுங்குசெய்யப்பட்ட மக்களுக்கிடையிலான தொடர்புகள், பொது இராஜதந்திரம் மற்றும் கலாச்சார இராஜதந்திரம் ஊக்குவிப்பு; சான்றளிக்கபட்ட நாடுகளிலுள்ள நிறுவனங்கள்/ கம்பனிகள்/ சபைகளால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளில் பங்கேற்றமை.

**புலம்பெயர் தொழிலாளர் நலன், வெளிநாட்டு இலங்கையர் மற்றும் கொவிட் தொடர்பான செயற்பாடுகள்**

கோவிட்-19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கு சீனா, ஜப்பான், கொரியா மற்றும் ஆஸ்திரேலியாவில் இருந்து கோவிட் 19 தொடர்பான தடுப்பூசிகள், மருத்துவ உபகரணங்கள், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் போன்றவற்றிற்கான நிதி உதவி சரியான நேரத்தில் வழங்குவதற்கான ஒருங்கிணைப்பு மற்றும் வசதி; ரூ. 900,000 “இடுகாமா” நிதி நன்கொடையின் ஒருங்கிணைப்பு;, ஆஸ்திரேலியா இலங்கையின் COVID 19 இற்காக AUD 11.7 மில்லியன் வழங்கியுள்ளது. சீனாவினால் வழங்கப்பட்ட 23 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசி மற்றும் 3 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசி டோஸ் நன்கொடை ஒருங்கிணைப்பு; சீனாவால் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள், ஒட்சிசன் செறிவூட்டிகள், அமெரிக்க டொலர் 500,000 மதிப்புள்ள மருத்துவ உபகரணங்கள் மற்றும் 32 ஐசியூ படுக்கைகள் மற்றும் 50 ஒட்சிசன் சிலிண்டர்கள், புற்றுநோய் சிகிச்சை மற்றும் கழிப்பறைகளுக்கு USD 365,000 ஐ கொரியா நன்கொடையாக வழங்கியது, டோக்கியோ இலங்கைத்தூதரகத்தினால் ரூ.43 மில்லியன் நிதி திரட்டப்பட்டது மற்றும் ஜப்பானிலிருந்து 1.45 மில்லியன் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் பெறப்பட்டன. .

கொரியாவிற்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இலங்கை ஊழியர்களின் நுழைவு தொடர்பான ஒருங்கிணைப்பு விடயங்கள், வேலைவாய்ப்பு அனுமதி முறையின் (EPS) கீழ் தொழிலாளர்களை அனுப்புதல் மற்றும் பெறுதல் தொடர்பாக இலங்கைக்கும் கொரியாவிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புதுப்பித்தல் செயன்முறையை எளிதாக்குதல்; இலங்கையிலிருந்து கொரியாவிற்கு புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் ஒதுக்கீட்டை அதிகரிப்பதில் கொரிய தரப்புடன் ஈடுபாடு.
இலங்கை பணியாளர்களை ஜப்பானில் வேலைக்கமர்த்துவதற்காக, ஜப்பான் எஹீம் தொழிற்சாலையுடன் இலங்கையின் 3 அமைச்சுக்கள்/ முகவரமைப்புக்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

சட்டவிரோதமாக குடியேறியவர்கள், நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள் மற்றும் வீசா நீட்டிப்புக்கு வசதியாக தூதரகங்கள் மூலம் கொன்சியுலர் உதவி வழங்கப்பட்டது; கோவிட் 19 தொற்று காரணமாக இலங்கையர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு குறைகளைத் தீர்த்துவைத்தமை; கையாளப்பட்ட இறப்பு வழக்குகள், தொழிலாளர் மற்றும் நலன் தொடர்பான பல வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டது. கொரியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜப்பான், சீனா மற்றும் பிற அங்கீகாரம் பெற்ற இடங்களில் தற்போது சிறைகளிலும் தடுப்பு மையங்களிலும் உள்ள இலங்கையர்களின் நலன் மற்றும் பிற தேவைகள் கவனிக்கப்பட்டு வருகின்றது.

## ஐரோப்பா, மத்திய ஆசியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய பிரிவு

**இருதரப்பு உறவுகள்**

**கூட்டு ஆணைக்குழுக்கள்/ (கூ.ஆ இருதரப்பு) /அரசியல் ஆலோசனைகள் நடாத்தியமை:**

15 ஜூன் 2021 இன் இலங்கை – ரஷ்யா இடையில் வர்த்தகம், பொருளாதாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப கூட்டுறவு குறித்த அரசாங்கங்களுக்கு இடையிலான ஆணைக்குழு கூட்டம் இடம்பெற்றது.

14 ஜூலை 2021 அன்று ஜேர்மனியுடன், முதன்முறையாக வெளிநாட்டு அலுவலக ஆலோசனை மெய்நிகராக இடம்பெற்றது.

11 ஜூன் 2021 அன்று, இலங்கை- துருக்கி இடையில் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப கூட்டுறவு குறித்த 2 ஆவது கூட்டு ஆணைக்குழு இடம்பெற்றது.

08 அக்டோபர் 2021 அன்று மொஸ்கோவில் ரஷ்யாவுடன் இருதரப்பு அரசியல் ஆலோசனைகள் இடம்பெற்றன. 08 நவம்பர் 2021 அன்று சுவிட்சர்லாந்துடன் 3 ஆவது வெளிநாட்டு அலுவலக ஆலோசனை இடம்பெற்றது.

27 அக்டோபர் 2021 அன்று மைக்கேல் நேஸ்பி பிரபுவால், பிரபுக்கள் சபையில் வழங்கப்பட்ட மதிய போசன விருந்தின் போது, கௌரவ வெளிநாட்டு அமைச்சர், பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற பிரமுகர்கள் மத்தியில் உரையாற்றினார்.

**இடம்பெற்றுவரும் பணிகள்**

பெப்ரவரி 2021 இல் ரஷ்யாவுடனான வர்த்தக, பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான 03 ஆவது IGC ஏற்பாடு; 2021 முதல் காலாண்டில் இலங்கைக்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான கூட்டு ஆணைக்குழுவின் முதல் கூட்டம் மற்றும் இலங்கை மற்றும் ரஷ்யாவிற்கு இடையிலான விவசாயம் தொடர்பான கூட்டுப் பணிக்குழு 2021 இன் முதல் காலாண்டில்; ஏப்ரல் 2021 இல் இலங்கை- நெதர்லாந்து இடையில் 70 ஆண்டுகள் இராஜதந்திர உறவுகள் நிறைவு; ரஷ்யாவுடன் 65 ஆண்டுகள் நிறைவு.

**இராஜதந்திர உறவுகள் நிறுவுதல், இலங்கை தூதரக பணியகங்கள் திறத்தல், கௌரவ உதவித்தூதர்கள் நியமனம்:**

ருமேனியா மற்றும் ஸ்பெயினில் இலங்கை தூதரக பணியகத்தினை திறப்பதற்கான அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டது மற்றும் சிசிலியில் தூதரகத்தைத் திறக்கும் பணி நடைபெற்று வருகிறது. லிச்சென்ஸ்டீனுடன் முறையான இராஜதந்திர உறவுகள் 05 மார்ச் 2021 அன்று நிறுவப்பட்டது.. ஜெர்மனிக்கான தூதரகங்கள்: ஹாம்பர்க் & ஷெல்ஸ்விக் - ஹோல்ஸ்டீன், ராடோல்ஃப்செல், பவேரியா ஆகிய தூதரக அதிகார வரம்பினுள் கௌரவ உதவித்தூதுவர்கள் நியமனம் எளிதாக்கப்பட்டது

**வெளியேறும், உள்வரும் உயர்மட்ட விஜயங்கள் மற்றும் அழைப்புகள் ஏற்பாடு**:

- 12- 14 செப்டெம்பர் 2021 இல் உலக ம கருதரங்கில் பிரதம மந்திரி கலந்துகொள்வதற்கான விஜயம்
- 12 செப்டெம்பர் 2021 இல் ஜி20 மதங்களுக்கிடையிலான கருந்தரங்கில் பிரதம மந்திரி, ஸ்லோவேனிய ஜனாதிபதியுடன் சந்திப்பு, மற்றும் முக்கிய உரைக்கான உள்ளீடுகள் வழங்கப்பட்டமை.
- இ˙ விஜயத்தின்போது பிரதம மந்திரி, முன்னாள் இத்தாலியின் ஐரோப்பிய ஆணைக்குழு தலைவருடன் சந்திப்பு.
- செப்டெம்பர் 2021 இல், வெளிநாட்டமைச்சர் ஜி.எல் பீரிஸ் இத்தாலியின் பொலொக்னா பேராயார், பொலொக்னா துணை வெளிநாட்டமைச்சர், துருக்கிய வெளிநாட்டமைச்சர் ஆகியோருடன் சந்திப்பு.
- செப்டெம்பர் 2021 இல் 76 ஆவது ஐ.நா.பொ.சபைக்கு மேலதிகமாக, துருக்கி வெளிநாட்டமைச்சருடன், ஜி.எல் பீரிஸ் சந்திப்பு

- 2-5 ஜூன் 2021 இல் அமைச்சர்கள் அஜித் நிவாட் கப்ரால், விமல் வீரவன்ச ஆகியோர், ரஷ்யாவில் இடம்பெற்ற 24 ஆவது சர்வதேச பொருளாதார கருத்தரங்கில் பங்கேற்பு.
- 5-8 செப்டெம்பர் 2021 இல் ரஷ்யாவில் இடம்பெற்ற 'OTDYKH பொழுதுபோக்கு கண்காட்சி' இல் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய பங்கேற்பு.
- 16-23 செப்டெம்பரின் அமைச்சர்கள் பவித்திரா வன்னியாராய்ச்சி மற்றும் காஞ்சன வீரசேகர ஆகியோர் ரஷ்யாவின் டூமா மாகாண தேர்தல் கண்காணிப்பிற்காக சென்றிருந்தனர்.
- 5-8 அக்டோபர் 2021 இல் சர்வதேச பிரெஞ்சு சுற்றுலாத்துறை கண்காட்சியில் அமைச்சர்கள் தாரக பாலசூரிய மற்றும் பிரசன்ன ரனதுங்க கலந்துகொண்டனர்.
- 09-10 செப்டெம்பர் 2021 இல் அமைச்சர் தாரக பாலசூரிய இலங்கை சுற்றுலா, முதலீட்டை ஊக்குவிக்க உக்ரெய்ன் விஜயம்.
- பேராசிரியர் ஜி.எல். பீரிஸின் ஐக்கிய இராச்சியத்திற்கான விஜயத்தின்போது, 25 - 28 அக்டோபர் 2021 காலத்தில், பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளர் கௌரவ எலிசபெத் ட்ரஸ், கௌரவ லிண்டே ஹொய்ல், சபையின் சபாநாயகர் மைக்கேல் நேஸ்பி பிரபு மற்றும் இலங்கைக்கான பிரித்தானியப் பிரதமரின் வர்த்தகத் தூதுவர் அபெசொக் டேவிஸ் ஆகியோரைச் சந்தித்தார்.
- 1-2 நவம்பர் 2021 இல் இடம்பெற்ற UNFCCC CoP-26 உலகத்தலைவர்கள் உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள ஜனாதிபதி பிரித்தானியா சென்றிருந்தார். அதன்போது, பஹ்ரெய்ன் அரசர், நேபாள பிரதம மந்திரி, உக்ரெய்ன் ஜனாதிபதி, சேபிய ஜனாதிபதி, பொதுநலவாய செயலாளர் நாயகம் மற்றும் உலக வர்த்தக நிறுவன பணிப்பாளர் நாயகம் ஆகியோருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடாத்தினார்.
- 22-24 நவம்பர் 2021 இல் ரஷ்ய பாதுகாப்புக் கழக செயலாளர் இலங்கை விஜயம். அதன்போது ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சுடன் ஆலோசனைகள் நடாத்தப்பட்டது.

பின்வரும் தொலைபேசி மற்றும் காணோளி அழைப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன;

- 07 ஜூன் 2021 அன்று கௌரவ தினேஷ் குணவர்த்தன – ரஷ்ய வெளிநாட்டமைச்சர்
- 15-16 ஜூலை 2021 இல் வெளிநாட்டமைச்சர், உஸ்பெகிஸ்தானில் இடம்பெற்ற 'மத்திய மற்றும் தெற்காசியா: பிராந்திய இணைப்புகை, சவால்கள் மற்றும் வாய்ப்புகள்' சர்வதேச மாநாட்டில் மெய்நிகராக கலந்துகொள்ள ஏற்பாடு
- ஜனவரி 2021 மற்றும் 17 ஜூன் 2021 இல் கௌரவ தினேஷ் குணவர்த்தன மற்றும் பிரித்தானிய அமைச்சர் தாரிக் அஹ்மத் இடையில் காணொளி அழைப்பு
- 29 ஜூன் 2021 இல் பிரித்தானிய வர்த்தக அமைச்சர்- கௌரவ தாரக பாலசூரிய
- 09 ஜூலை 2021 அன்று கௌரவ தினேஷ் குணவர்த்தன – லக்சம்பேர் வெளிநாட்டமைச்சர் இடையில் காணொளி அழைப்பு
- 09 செப்டெம்பர் 2021 இல் பேரா.ஜி.எல் பீரிஸ்- பிரித்தானிய அமைச்சர் தாரிக் அஹ்மட்

**முக்கிய இருதரப்பு உடன்படிக்கைகள்/ பு.உ.ப/ திட்டங்கள் ஏற்பாடு:**

- பிரித்தானியாவுடன் மைக்ரோ பிளாஸ்டிக் ஆய்வு குறித்த பு.உ.ஒ இற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு, கைச்சாத்திட தயார்.
- இலங்கை -ரஷ்யா இடையில் சுங்க விடயங்களில் பரஸ்பர உதவி மற்றும் ஒத்துழைப்பு குறித்த வரைவு உடன்படிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு, கைச்சாத்திட தயார்.
- செக் குடியரசுடன் கைதிகள் பரிமாற்றம் குறித்த பு.உ.ஒ பூர்த்தி, கைச்சாத்திட தயார் நிலையில் மற்றும் இருநாடுகளிலும் தூதரக அலுவலர் குடும்பங்கள் ஊதியம் பெறும் தொழில்களில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கும் வரைவு பு.உ.ஒ அமைச்சரவை அங்கீகாரத்திற்கு காத்திருப்பு.
- பிரித்தானியாவுடன் சுகாதார நலன் கூட்டுறவு குறித்த பு.உ.ஒ பேச்சுவார்த்தை பூர்த்தி, அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு, கைச்சாத்திட காத்திருப்பு
- விளையாட்டுத் துறையில் ஒத்துழைப்பு குறித்து ரஷ்யாவுடன் பு.உ.ஒ இற்கான பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தில் உள்ளது.
- ஜேர்மனியுடன், இரட்டை வரிவிதிப்பை தவிர்த்தல் குறித்த உடன்படிக்கையில் முன்னேற்றம்.
- காலியில் மஹாமோதர குழந்தைப்பேற்று மருத்துவ மனை (ஹெல்மெட் கோல் மருத்துவ மனை) ிருமாணிக்க ஜேர்மன் அரசாங்கத்தின் 25 மில்லியன் யூரோ( ரூ.357 பில்லியன்0 கடன் உதவி ஏற்பாடு.

இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகள்:

- அணுசக்தியை அமைதியான வழிகளில் பயன்படுத்துவது குறித்து ரஷ்யாவுடன் பு.உ.ஒ; சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் கைதி பரிமாற்றம் குறித்து இத்தாலியுடன் உடன்படிக்கை

புதுப்பித்தல்; ஜேர்மனியுடன் புலனாய்வு பகிர்வு மற்றும் பரஸ்பர பாதுகாப்பு உடன்படிக்கை; ஜேர்மனி மக்ஸ் பிளாங்க் நிறுவகம் மற்றும் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கிடையில் பு.உ.ஒ; ஹங்கேரியுடன் கல்வித்துறை கூட்டுறவு, விமான சேவைகள் உடன்படிக்கை, இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு உடன்படிக்கைகள்

**பொதுநலவாயம்**

- 20-21 மே 2021 இல் வருடாந்த பொதுநலவாய சுகாதார அமைச்சர்கள் கூட்டம் ஏற்பாடு
- 16 செப்டெம்பர்2 021 இல் பொதுநலவாய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பு
- ஜூன் 2022 இல் ருவாண்டாவில் இடம்பெறவுள்ள பொதுநலவாய தலைவர்கள் கூட்டட்தில் இலங்கை பங்கேற்பதற்கான ஏற்பாடு இடம்பெறுகின்றது.

**ஐரோப்பிய ஒன்றியம்**

- 25 ஜனவரி 2021 இல் ஐ.ஒ- இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் 23 ஆவது அமர்வு. அபிவிருத்தி ஒத்துழைப்பு கூட்டத்தில் ஐ.ஒ- இலங்கை பணிக்குழுவிற்கு ஏற்பாடு ஐ.ஒ ஜி.எஸ்.பி பிளஸ் நடைமுறைப்படுத்தல் கண்காணிப்பு செயன்முறைக்கான இலங்கையின் சமர்ப்பிப்பு. தொடர்நடவடிக்கை 25 ஜூன் 2021. ஐ.ஒ- இலங்கை கூட்டு வாசிப்பு குழு ஜூலை 2021 இல் நடைபெற்றது.

- 2021 செப்டெம்பர் 24 முதல் ஒக்டோபர் 05 வரை 27 சர்வதேச மாநாடுகளுக்கு இலங்கையின் EU GSP பிளஸ் இணக்கங்களை மீளாய்வு செய்ய ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பு பணிக்குழுவின் வருகையை எளிதாக்கியது. இந்த விஜயத்தின் ஒருபுறம், EU-SL செயற்குழு ஆளுகை, சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் பற்றிய செயற்குழு 29 செப்டம்பர் 2021 அன்று கொழும்பில் நடைபெற்றது, அங்கு அவர்கள் பிரச்சினைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தனர்.

- செப்டெம்பர் 2021 இல் 76 ஆவது ஐ.நா.பொ.சபைக்கு மறுபுறமாக ஜனாதிபதி, லத்விய ஜனாதிபதியைச் சந்தித்தார்.
- 24 செப்டெம்பர் 2021 இல்76 ஆவது ஐ.நா.பொ.சபைக்கு மறுபுறமாக பேரா.ஜி எல் பீரிஸ் பிரித்தானிய அமைச்சர் தாரிக் அஹ்மத் ஐ சந்தித்தார்.
- 12 செப்டம்பர் 2021 அன்று இத்தாலியின் போலோக்னாவில் இடம்பெற்ற G20 மதங்களுக்கு இடையிலான மாநாட்டில் பிரதம மந்திரி ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தலைவர் கௌரவ. டேவிட் சசோலியைச் சந்தித்தார்.
- 26 ஜனவரி 2022 இல் வர்த்தகம் மற்றும் பொருளாதார உறவுகள் ஒத்துழைப்புக்கான EU-SL பணிக்குழு, 02 டிசம்பர் 2022 இல் அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான EU-SL பணிக்குழு மற்றும் 31 ஜனவரி 2022 இல் EU-SL முதலீட்டாளர் உரையாடல் ஆகியவற்றிற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. வரவிருக்கும் EU-SL கூட்டு ஆணைக்குழு கூட்டம் 08 பிப்ரவரி 2022 அன்று பிரஸ்ஸல்ஸில் நடைபெறவுள்ளது.

**பொருளாதார இராஜதந்திரம்**

- கொஹுவல சந்தியில் மேம்பாலம் கட்டுவதற்கு ஹங்கேரியுடன் கடன் உடன்படிக்கை கைச்சாத்திட ஒருங்கிணைவு. ஹங்கேரியிடமிருந்து இதற்கான வட்டியற்ற கடன் பெறப்பட்டது.
- லக்ஸம்பேர்க் பங்குச்சந்தை மற்றும் EIB இடமிருந்து இலங்கையின் பசுமை திட்டங்களுக்கான ிலையான முதலீட்டை கவர்வதற்கான கலந்துரையாடல் இடம்பெற்று வருகிறது.
- இலங்கை – லக்ஸம்பேர்க் வர்த்தக சம்மேளனங்களுக்கிடையில் ஒரு வலைத்தள மாநாட்டினை பிரசல்ஸ் இலங்கை தூதரகம் ஒழுங்குசெய்தது.
- பிரித்தானியா- இலங்கை வர்த்தக சம்மேளனம், லண்டன் உயர்தானிகரகத்தினால் மீள ஆரம்பிக்கப்பட்டது.
- SLEMB/Paris organized of a webinar with பிரான்ஸிலுள்ள MEDEF மற்றும் METF உடன் CCI உடன் இணைந்து பாரிஸ் இலங்கை தூதரகம் ஒரு வலை மாநாட்டை ஒழுங்குசெய்தது

**பாதுகாப்பு கூட்டுறவு**

இவ்வமைச்சு, பிரசல்ஸ் இலுள்ள தூதரகத்துடன் இணைந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தொடர்ந்தும் பயங்கரவாத இயக்கமாக தடைசெய்வதற்கான பிரச்சாரத்தைத் தொடர்ந்தது. 19 ஜூலை 2021 அன்று, ஜனவரி 2022 வரை ஆறு மாதகாலம் நீடிக்கப்பட்டது.

**புலம்பெயர் தொழிலாளர்/ வெளிநாடு வாழ் இலங்கையர்**

பாதுகாப்பான மற்றும் சீரான முறையில் தொழிலாளர்கள் புலம்பெயர்தல் குறித்து இலங்கை-சுவிட்சர்லாந்து இடையில் உடன்படிக்கையின் 4 ஆம் கட்டத்தின் கைச்சாத்திடல் மற்றும் இறுதிப்படுத்தலுக்கான ஏற்பாடு. 07 செப்டெம்பர் 2021 இல் கைச்சாத்திடல்

**கொவிட் – 19 தொடர்பான உதவி**

- உலக சுகாதார நிறுவனம் மூலமாக இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் 2 மில்லியன் யூரோக்கள் உதவி
- வெளிநாடுகளிலுள்ள இலங்கையர் தாயகம் திரும்ப ஏற்பாடு. துருக்கியிலிருந்து பாதுகாப்பு உபகரணங்கள், சுவாச கருவிகள் நன்கொடைக்கு ஏற்பாடு, ரஷ்யாவிலிருந்து ஸ்புட்னிக் தடுப்பூசி. 600,000 அஸ்ரா செனகா தடுப்பூசிகளை ஐ.ஒ மற்றும் பிரித்தானியாவிலிருந்து கொண்டுவர கோரிக்கை.
- கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரக இராஜதந்திர அதிகாரிகள் அஸ்ரா செனகா டுப்பூசிகளை இறக்குமதி செய்ய ஏற்பாடு.
- நெதர்லாந்து தூதரக அலுவலர் ஜோன்ஸ்டன் அன்ட் ஜோன்ஸ்டன் தடுப்பூசியை இறக்குமதி செய்ய ஏற்பாடு.

## மத்திய கிழக்கு பிரிவு

**இருதரப்பு உறவுகள்**

**விஜயங்கள்**

இந்துசமுத்திர மாநாட்டில் கலந்துகொண்ட மேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள், அபுதாபியின் முடிக்குரிய அரசர் ஷேக் முகமட் பின் சயட் சுல்தான் அவர்களையும் ஐக்கிய அரபு அமீரக இராணுவப்படைகளின் பிரதி உயர் தலைவரையும் 4-7 டிசம்பர் 2021 காலப்பகுதியில் சந்தித்தார்.

கௌரவ. நாமல் ராஜபக்ஷ மற்றும் தூதுக்குழுவினர் டோஹாவிற்கு விஜயம் செய்து, 19 டிசம்பர் 2021 அன்று கட்டார் மாநில தொழிலாளர் அமைச்சர் டாக்டர் அலி பின் சயீத் பின் ஸ்மைக் அல் மர்ரி அவர்களைச் சந்தித்தனர்.

கௌரவ தாரக பாலசூரிய மற்றும் கௌரவ பிரியங்கர ஜயரத்ன ஆகியோர், 11 -15 அக்டோபர் 2021 இல் கட்டாருக்கு விஜயம் செய்தனர்.

19 டிசம்பர் 2021 அன்று ஓமானில் இடம்பெற்ற ஹொக்கி விளையாடுப் போட்டியில், கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி கௌரவ தாரக பாலசூரிய, கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இலங்கை பிரதமரின் விசேட செய்தியை எடுத்துச்சென்ற, பிரதிநிதி, நிதி, மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ. அஜித் நிவார்ட் கப்ரால் 2021 ஏப்ரல் 07 முதல் 10 வரை ஓமான் சுல்தானகத்திற்கு விஜயம் செய்து, சுல்தான் ஹைதம் பின் தாரிக்கிடம் பேச்சுவார்த்தை நடாத்தினார்.

11 முதல் 18 டிசம்பர் 2021 வரையிலான காலகட்டத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் மூத்த அதிகாரிகள் ரியாத், சவூதி அரேபியா (KSA), மற்றும்

அபுதாபி - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (UAE) ஆகிய நகரங்களுக்குச் சென்று மூத்த அதிகாரிகள் மற்ற முதலீட்டாளர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில் நவம்பர் 5 ஆம் தேதி இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் மூத்த அதிகாரிகள் துபாய்க்கு விஜயம் செய்து 2021 நவம்பர் 03 முதல் 09 வரையிலான காலகட்டத்தில் ஓமான் சுல்தானகத்தின் முதலீட்டாளர்களுடனான சந்திப்புகளில் கலந்து கொண்டனர்.

மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தலைமையிலான குழு 2021 அக்டோபர் 20-22 வரை கட்டார் மாநிலத்திற்கு விஜயம் செய்தது. தூதுக்குழு கட்டார் மத்திய வங்கியின் ஆளுநரான மாண்புமிகு ஷேக் அப்துல்லா அவர்கள், இலங்கை மத்திய வங்கிக்கும் கட்டார் மத்திய வங்கிக்கும் இடையிலான ஒத்துழைப்பு குறித்த கலந்துரையாடலை முன்னெடுத்தார்.

இந்த மீளாய்வுக் காலத்தில் ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள இலங்கை தூதரகம் பல உயர்மட்ட அமைச்சர் விஜயங்களை ஏற்பாடு செய்தது:- கௌரவ. நாமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் கௌரவ டி.வி.சானக்க அவர்கள் 2021 மார்ச் 07 முதல் 11 வரை; கௌரவ. உதய கம்மன்பில, 2021 செப்டெம்பர் 20 முதல் 24 வரை; இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படைகளின் தலைமைப் பணியாளர் பிப்ரவரி 21 முதல் 25 வரை; கௌரவ. சரத் வீரசேகர, பொது பாதுகாப்பு அமைச்சர் 12-16 டிசம்பர் 2021.
கௌரவ. மர்ஜான் ஃபலீல் (எம்.பி) இலங்கையின் ஜனாதிபதியை பிரதிநிதித்துவப்படுத்தி, ஆகஸ்ட் 5, 2021 அன்று ஈரான் இஸ்லாமிய குடியரசின் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி அயதுல்லா செயத் இப்ராஹிம் அவர்களின் பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டார்.

எரிசக்தி அமைச்சர் கௌரவ உதய கம்மன்பில அவர்கள் 2021 செப்டெம்பர் 24 முதல் 27 வரை ஈரானிய பெட்ரோலிய அமைச்சருடனான GASTECH மற்றும் ஈரான் இருதரப்பு சந்திப்பில் பங்கேற்பதற்காக ஐக்கிய அரபு அமீரகத்திற்கு விஜயம் செய்தார்.

ஓமான் சுல்தானகத்தின் வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து 2021 பெப்ரவரி 17 அன்று இலங்கைக்கும் ஓமான் சுல்தானகத்திற்கும் இடையில் இராஜதந்திர உறவுகளை நிறுவியதன் 40வது ஆண்டு நிறைவு நினைவுகூரப்பட்டது.

**மெய்நிகர் கூட்டங்கள் ஏற்பாடு :**

2021 மார்ச் 21 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி அவர்கள் இஸ்லாமிய நாடுகளுக்கான அமைப்பின் செயலாளர் நாயகம் டாக்டர் யூசுப் அல்-ஓதைமீனுடன் மெய்நிகர் சந்திப்பை நடத்தினார்.

11 ஆகஸ்ட் 2021 அன்று இலங்கையின் முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன சவூதி அரேபியாவின் வெளிவிவகார அமைச்சர் அடெல் பின் அகமது அல்-ஜுபைர் அவர்களுடன் சந்திப்பு.

இந்துசமுத்திர மாநாட்டிற்கு மேலதிகமாக, 05 டிசம்பர் அன்று, ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளியுறவு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு அமைச்சர் மாண்புமிகு . ஷேக் அப்துல்லா பின் சயீத் அல் நஹ்யான், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ ஜி எல் பீரிஸ் அவர்களைச் சந்தித்துப் பேசினார்.

8 ஜூலை 2021 அன்று மத்திய கிழக்குப் பிரிவில் உள்ள பதவிகளின் தலைவர், அந்தந்த தூதர்களுடன் செயலாளருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

வெளிநாட்டமைச்சர் மற்றும் செயலாளருக்கும் வதிவிட நாட்டு தூதரக தலைவர்களுக்கும் இடையிலான மரியாதை நிமித்தமான பல சந்திப்புக்களை இப்பிரிவு ஏற்பாடு செய்தது.

**மெய்நிகர் கூட்டங்கள் – அரசியல் ஆலோசனைகள் மற்றும் கூட்டு ஆணைக்குழு கூட்டங்களள:**

இலங்கைக்கும் பஹ்ரெய்னுக்கும் இடையிலான முதலாவது சுற்று அரசியல் ஆலோசனைக் கூட்டம், 21 அக்டோபர் 2021 அன்று மெய்நிகராக இடம்பெற்றது.

3 ஆவது சுற்று அரசியல் ஆலோசனைகளை 1 பெப்ரவரி 2022 இல் நடாத்த திட்டமிடப்பட்டது.

**<u>இலங்கை - ஐ.அ.அ கூட்டு ஆணைக்குழு</u>**

இலங்கை – ஐக்கிய அரபு அமீரகத்திற்கிடையிலான கூட்டு ஆணைக்குழுவானது, 2021 இன் கடைசிப்பாகத்திலோ அல்லது 2022 இல் முதல் காலாண்டின்போதோ, எக்ஸ்போ 2020 (அக்டோபர் 2021 – மார்ச் 2022) காலகட்டத்தில் உயர்மட்ட விஜயங்களின்போது நடாத்த திட்டமிடப்பட்டது

**இருதரப்பு ஒப்பந்தங்களின் தொடர்நடவடிக்கை/ இடம்பெறுவரும் பணிகள்:** இலங்கை அரசாங்கத்திற்கும் ஐ.அ.அமீரகத்திற்கும் இடையில் கொன்சியுலர் விடயங்கள் குறித்த பு..உ.ஒ 2018 இல் கைச்சாத்திடப்பட்டது. இருதரப்பிலும் நிலுவையிலுள்ள ஒரு இணைப்புக்குழுவை உருவாக்குவதற்கு இவ்வமைச்சும் ஐ.அ.அ அதிகாரிகளும் செயற்பட்டு வருகின்றனர்.

ஐக்கிய அரபு அமீரகத்திற்கும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இடையில் முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் பரஸ்பர பாதுகாப்பு தொடர்பான வரைவு ஒப்பந்தத்தை இலங்கை தரப்பு பகிர்ந்துள்ளது.

2021 செப்டம்பர் 1 முதல் 2 வரையிலான காலகட்டத்தில் முதல் சுற்று பேச்சுவார்த்தை நடைபெற்றது.

- 'செயலாளருடன் பேச்சு' அமர்வைத் தொடர்ந்து, நிலுவையிலுள்ள ஒப்பந்தங்களின் தற்போதைய நிலைப்பாட்டைப் பெறுவதற்கு, தூதரகங்களின் ஆலோசனையுடன் ஒப்பந்தங்களைப் பின்பற்றுவதற்கு இப் பிரிவு நடவடிக்கை எடுத்தது.

- கட்டார் மாநிலத்தில் இலங்கையின் மனிதவள வேலைவாய்ப்பை ஒழுங்குபடுத்துவது தொடர்பான ஒப்பந்தத்தின் கீழ், கட்டார்-இலங்கை இணைப்புக் குழு 16 ஜூன் 2021 அன்று (மெய்நிகராக) நடைபெற்றது.

**இறுதிப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள்:**

**ஓமான்:** இராஜதந்திர, சிறப்பு, சேவை மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுக்கள் வைத்திருப்போருக்கான வீசா தேவைகள் குறித்து, 17 பெப்ரவரி 2021 அன்று,இலங்கைக்குக்கும் ஓமான் சுல்தாகத்திற்கும் இடையில் ஒப்பந்தம்.

-இலங்கை - ஓமான் வர்த்தக சம்மேளனங்களுக்கிடையில் பு.உ.ஒ 07 ஜூலை 2021 அன்று கைச்சாத்திடப்பட்டது. .

- 26 ஜூலை 2021 அன்று நகர்ப்புற அபிவிருத்தி ஆணைக்குழுவிற்கும் ஓமான் ஷூமூக் இன்வெஸ்ட்மென்ட் எல்எல்சிக்கும் இடையே பிணைப்பற்ற ஒப்பந்தம் கையெழுத்தானது.

**ஈரான்:** ஈரானின் கைத்தொழில், சுரங்க மற்றும் வர்த்தக அமைச்சு மற்றும் இலங்கை பெருந்தோட்ட அமைச்சுக்கு இடையில் எண்ணெய் விலைக்கான நிலுவைத் தொகையைத் தீர்ப்பதன் மூலம் ஈரானுக்கு சிலோன் தேயிலை விற்பனையை அதிகரிப்பதற்கான முன்மொழியப்பட்ட திட்டம் தொடர்பான உடன்படிக்கை 21 டிசம்பர் 2021 அன்று கைச்சாத்திடப்பட்டது.

**பஹ்ரைன் :** இராஜதந்திர, சிறப்பு, சேவை மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுக்கள் வைத்திருப்போருக்கான வீசா தேவைகள் குறித்து, 23 செப்டெம்பர் 2021 அன்று,இலங்கைக்குக்கும் பஹ்ரய்னுக்கும் இடையில் ஒப்பந்தம்.

**இஸ்ரேல்:** இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான விமானப் போக்குவரத்து உடன்படிக்கையின் திருத்தங்கள் தொடர்பான நெறிமுறையில் கைச்சாத்திடுவதற்கான பேச்சுவார்த்தைகள் இறுதிப்படுத்தப்பட்டன. இஸ்ரேலில் குறிப்பிட்ட தொழிலாளர் சந்தைத் துறைகளில் (பராமரிப்புத் துறை) இலங்கைத் தொழிலாளர்களை தற்காலிகமாக வேலைக்கு அமர்த்துவதற்கான ஒப்பந்தம் 24 பெப்ரவரி 2020 அன்று கைச்சாத்திடப்பட்டது**.**

**<u>76 ஆவது ஐ.நா பொதுச்சபை 2021 இற்கு மேலதிகமாக இருதரப்பு கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.</u>**

- மேதகு கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் கட்டார் அமீர் அவர்களுக்கிடையில் இருதரப்பு கலந்துரையாடல்
- இருதரப்பு உறவுகளுக்கான சாத்தியங்கள்குறித்து இலங்கை வெளிநாட்டு அமைச்சருக்கும் இஸ்லானிய கூட்டுறவு சபையின் செயலாளர் நாயகம் மேதகு யூசஃப் அல் ஒதைமீன் அவர்களுக்கும் இடையில் கலந்துரையாடல்.
- லெபனான் குடியரசின் துணை பிரதம மந்திரி மாண்புமிகு திருமதி செய்னா அகார், வெளிநாட்டு மற்றும் பாதுகாப்பு அமைச்சருடன் இருதரப்பு சந்திப்பு

**பொருளாதார இராஜதந்திரம்**

- முதலீட்டுச் சபையுடன் இணைந்து, இலங்கையில் ஒரு வணிகச் செயன்முறை புறச்செய்விப்பு (BPO), பஹ்ரெய்னிலுள்ள இலங்கை தூதரகத்தினால் வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டது.

- 23-27 மார்ச் 2021 இல் டோஹாவில் இடம்பெற்ற "8 ஆவது கட்டார் சர்வதேச விவாசய கண்காட்சி 'அக்ரிடெக்- 2021' இல் இலங்கை தூதரகம் கலந்துகொண்டு, இலங்கையின் விவசாய உற்பத்திகள் மற்றும் சுற்றுலாவை விளம்பரப்படுத்தியது.

- சிலோன் பிஸ்கட் லிமிடெட் மற்றும் ட்ரட்லங்கா லிமிடெட் ஆகியவற்றிலிருந்து 78 புதிய இலங்கை உணவுப் பொருட்கள் ஏப்ரல் 2021 இல் SPAR ஓமானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

- பஹ்ரைனில் (29 செப்டம்பர் - 03 அக்டோபர் 2021) ஒரு பாரிய வர்த்தகம், சுற்றுலா மற்றும் தேயிலை ஊக்குவிப்பு நிகழ்வான "ஸ்ரீலங்கா ஃபெஸ்ட்" நிறைவு.

- இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் ஆதரவுடன் 26 அக்டோபர் 2021 அன்று தெஹ்ரான் இலங்கை தூதரக வளாகத்தில் சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வு "டெஸ்டினேஷன் ஸ்ரீலங்கா" வெற்றிகரமாக நடைபெற்றது.

- குர்திஸ்தானில் உள்ள இலங்கையின் கௌரவ துணைத் தூதரகம், அக்டோபர் 26 - 29 திகதிகளில் 'எர்பில் ஏசியன் எக்ஸ்போ 2021' ஐ குஷ்மா நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்தது. பக்தாத்/ இலங்கைத் தூதரகம், இலங்கை தேயிலைச் சபையின் ஆதரவுடன் 08 தேயிலை நிறுவனங்கள் கண்காட்சியில் பங்குபெற ஒப்புக்கொண்டது.

- இஸ்ரேல் - இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் இஸ்ரேல் - ஆசியா வர்த்தக சம்மேளனம் ஆகிய நாடுகளின் முதலீட்டு சபையுடன் (BOI) இணைந்து, தெல் அவிவ்/ இலங்கைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இலங்கையில் "வணிகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள்" தொடர்பான வலைத்தள மாநாடொன்று பிப்ரவரி 16, 2021 அன்று வெற்றிகரமாக நடைபெற்றது.

- கொவிட்-19 நோப்பரவல் காலத்தின்போது, ஒரு முன்னோடித் திட்டமாக, 'Bio Bubble' என்ற நோய் பரவலிலிருந்து பாதுகாக்கும் முறையில் இலங்கைக்கு இஸ்ரேல் உல்லாச பயண குழுக்களை அனுப்புவதற்கான தமது ஆர்வத்தினை, இஸ்ரேலின் முன்னணி தனியார் விமானப் போக்குவரத்து நிறுவனமான 'அர்கியா இஸ்ரேல் எயர்லைன்ஸ் லிமிட்டெட்' வெளியிட்டது.

- இலங்கையின் தேசிய ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம் (NCE), இஸ்ரேலிய வர்த்தக சம்மேளனம் (FICC) மற்றும் இஸ்ரேல் – இலங்கை வர்த்தக சம்மேளனம் ஆகியவற்றுடன் இணைந்து, 28.04.2021 அன்று, சந்தை விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, இருபதிற்கும் மேற்பட்ட இலங்கை ஏற்றுமதியாளர்களின் பங்கேற்புடன் "பாரம்பரிய சந்தைகளுக்கப்பால் வளர்தல்" என்ற கருப்பொருளின் கீழ், தூதரகம் வலைத்தள மாநாடொன்றை ஏற்பாடு செய்தது.

- இலங்கை தூதரகம்/ அபுதாபி மற்றும் இலங்கை கொன்சியுலர் அலுவலகம் /துபாய் ஆகியவை 'EXPO 2021' மற்றும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புச் சபை அமைப்பாளர்களுடன் வெற்றிகரமான விவாதங்களை ஒருங்கிணைத்து, பல தேவைகள் மற்றும் பல EXPO தள வருகைகளைப் பூர்த்தி செய்தன.

- 'Gulf Food Festival' இன்போது, சிலோன் தேயிலை மற்றும் பிற இலங்கை விளம்பரச் சின்னங்களை ஊக்குவிக்க, இலங்கை கம்பனிகளுக்கு, அபுதாபி இலங்கைத் தூதரகம் வசதியளித்தது.

- இலங்கை த.தொ துறையுடன் இணைந்து, இலங்கை கம்பனிகளுக்கான சந்தை வாய்ப்புக்களை அணுகுவதற்காக, 200 க்கும் மேற்பட்ட இலங்கை தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் முன்னணி IT நிறுவனங்களை உள்ளடக்கிய 'இலங்கை த.தொ தொழிற்றிறனாளர் சங்கம்' நிறுவப்பட்டது.

- பெப்ரவரி 2021 இல், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்துடன் இணைந்து, ஒரு வலைத்தள மாநாடு ஒழுங்குசெய்யப்பட்டது. இதில், 100 இற்கும் மேலான ஐக்கிய அரபு அமீரக பயண ஏற்பாட்டாளர்களுடன் இணைந்து, அந்நாட்டு பயணிகளுக்கான புதிய 'நோய்த்தடுப்பு விமானப் பாதுகாப்பு ஏற்பாடுகள்' பற்றி விளக்கப்பட்டது.

- 09 அக்டோபர் 2021 அன்று டமாஸ்கஸ், அல் புஸுரிய் சௌக் இல், சிரிய இராஜதந்திர ஒன்றுகூடல், சர்வதேச பஸாரில் சிலோன் தேயிலை வழங்கப்பட்டது.

- சவுதி அரோபியாவிற்கு மீன் உற்பத்திகளை ஏற்றுமதிசெய்வதற்கு, 17 இலங்கை மீன் ஏற்றுமதியாளர்கள் பதிவுசெய்யப்பட்டனர். கிரீன் டீ மற்றும் கராம்பு மீதான தற்காலிக தடைகள் நீக்கப்பட்டன.

- ஜெட்டாவிலுள்ள இலங்கை தூதரகம், 08-14 செப்டெம்பர் 2021 இல், லூலூ பல்பொருள் அங்காடியில்' இலங்கை உணவு வாரத்தினை ஒழுங்குசெய்தது.

**பிற :**

**குவைத் தூதுவர் மற்றும் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துடன் சந்திப்பு.**

- 20 ஜூலை 2021 இல் "செயலாளருடன் பேச்சு" ஐத் தொடர்ந்து, கடவுச்சீட்டு மற்றும் பிற குவைத்தில் குடிவரவு விடயங்கள் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக, குவைத்தில் உள்ள இலங்கைத் தூதுவர் மற்றும் இவ்வமைச்சின் மத்திய கிழக்குப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் பங்கேற்புடன், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகத்துடன் ஒரு மெய்நிகர் சந்திப்பை அமைச்சு ஏற்பாடு செய்தது.

- 21 ஜனவரி 2021 இல் வறுமையில் வாடிய 187 இலங்கையர்கள் தாய்நாட்டுக்கு அனுப்பப்பட்டனர். பெப்ரவரி 2021 இல் 800 உணவுப்பொதிகள் மற்றும் மருந்துகள் தேவையானவர்களுக்கு வழங்கப்பட்டன.

- 2023-2027 ஆம் தவணைக்கான நியூயோர்க் சர்வதேச சட்ட ஆணைக்குழுவிற்கான இலங்கையின் அபேட்சகத்திற்கு, ஜோர்டான் அரசாங்கம் தனது ஆதரவை வழங்கியது.

- 2021 ஜனவரி 1 முதல் 30 செப்டெம்பர் வரையில் இலங்கையர்களுக்கான 706 புதிய வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு, ஜோர்டானிலுள்ள இலங்கை தூதரகம் ஏற்பாட் செய்திருந்தது. தற்போது அங்கு 706 இலங்கையர்கள் வேலை பார்த்து வருகின்றனர்.

- இலங்கை சுகாதாரத் துறைக்கு; 460 ஒட்சிசன் கொள்கலன்கள், 22 ஒக்சிமீட்டர்கள் மற்றும் 10 ஒட்சிசன் சீராக்கிகள் ஆகியவற்றை விமானத்தில் அனுப்புவதற்கு கட்டாரிலுள்ள இலங்கை தூதரகம் ஏற்பாடு செய்தது. சுகாதாரத் துறையின் செய்திறனை மீட்பதற்காக, 'இடுமக-கொவிட்-19 சுகாதார நலன் மற்றும் சமூக பாதுகாப்பு நிதிய'த்தில் 5000- கட்டார் ரியால்கள் வைப்பிலிடப்பட்டது.

- 04 செப்டெம்பர் 2021 இல் சிரியாவிலுள்ள இலங்கை துணைத் தூதரக அலுவலகத்தில் இடம்பெற்ற நடமாடும் கொன்சியுலர் சேவையை, பெய்ரூட் இலங்கைத் தூதரகம் ஒருங்கிணைத்தது.
- நெவில் ஃபெர்னாண்டோ மற்றும் வத்துப்பிட்டிவவல வைத்தியசாலைகளுக்கு 60 ஒக்சிமீட்டர்களை வழங்குவதற்கு பெய்ரூட் இலங்கைத் தூதரகம் ஏற்பாடு செய்தது.

## தெற்காசியா மற்றும் சார்க் பிரிவு

**இருதரப்பு உறவுகள்**

**உயர்மட்ட உள்ளக விஜயங்கள்/ வெளிப்புற விஜயங்கள்**

ஜனவரி 2021 இல் இந்திய வெளிவிவகார அமைச்சர் கௌரவ. எஸ். ஜெய்சங்கர், 02-05 அக்டோபர் 2021 இல் இந்திய வெளியுறவுச் செயலாளர் மற்றும் விஜயம் 12 முதல் -16 அக்டோபர் 2021 வரை இந்திய இராணுவத் தளபதி ஆகியோரின் இலங்கை விஜயங்கள் இப்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

2015 முதல் தாமதமான, கொல்கத்தாவில் தொழில் துணைத் தூதரக ஜெனரல் அலுவலகத்தை நிறுவுதலுக்குத் தேவையான அனுமதிகளை இப்பிரிவு பெற்றுள்ளது. இந்த அலுவலகம் ஜனவரி 2022 இல் திறக்கப்படும்.

2021 பெப்ரவரி 23-24 இல் பாகிஸ்தான் பிரதமரின் விஜயமானது தொடர்ச்சியான சுமுகமான இருதரப்பு உறவுகளை அடையாளப்படுத்தியதுடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு பாகிஸ்தான் ஆதரவின் புதுப்பிக்கப்பட்ட உறுதிப்பாட்டையும் வழங்கியது. இந்த விஜயத்தை இப்பிரிவும் பாகிஸ்தானிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகமும் ஒருங்கிணைத்தன.

இப்பிரிவு மற்றும் பங்களாதேசத்திலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் ஆகியவை கௌரவ பங்களாதேச பிரதமரின் வருகையை ஒருங்கிணைத்தன. பங்களாதேச பிரதமரின் அழைப்பின் பேரில் 19-20 மார்ச் 2021 வரை இலங்கைப் பிரதமர் வங்காளதேசத்திற்கு விஜயம் செய்தார். ஒப்பந்தங்கள்/ புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் நாணய கொடுத்துமாறல் இசைவுக்கு கையெழுத்திட்டு இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கு இவ்விஜயம் பங்களித்தது.

22 செப்டெம்பர் 2021 அன்று இந்தியாவுக்கான இலங்கையின் புதிய உயர்ஸ்தானிகர் கௌரவ மிலிந் மொரகொட அவர்கள் தனது சான்றாதாரப் பத்திரங்களை இந்திய ஜனாதிபதியிடம் கையளித்தார்.

எம் வி எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் பேரழிவு தொடர்பில் இந்தியாவின் உதவியை, புதுடில்லி இலங்கை உயர்ஸ்தானிகரகம் ஒருங்கிணைத்தது.

இந்தியா இலங்கை இடையில் நோய்ப்பரவலற்ற பாதுகாப்பான விமானப் பயணத்தினை புதுடில்லி இலங்கை உயர்ஸ்தானிகரகம் ஏற்பாடு செய்தது.

அந்தமான் தீவுகளில் தடுத்துவைக்கப்பட்ட 12 இலங்கை மீனவர்களை விடுவித்து இலங்கைக்கு அனுப்புவதற்காக புதுடில்லி இலங்கை உயர்ஸ்தானிகரகம் இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தியது.

இப்பிரிவு மற்றும் புதுடில்லி இலங்கை உயர்ஸ்தானிகரகம் ஆகியவை, 20 அக்டோபர் 2021 அன்று குஷிநகர் சர்வதேச விமான நிலையத்திற்கான தொடக்க விமானத்தை ஏற்பாடு செய்வதற்கு இந்திய அரசு மற்றும் பிரதமர் அலுவலகத்துடன் ஒருங்கிணைத்தன.

சென்னை இலங்கை பிரதி உயர்ஸ்தானிகரகம், இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் தன்னார்வத்துடன் நாடு திரும்புவதை ஏற்பாடு செய்ய UNHCR உடன் ஒருங்கிணைந்தது.

நவம்பர் 17 அன்று, டாக்காவில் நடந்த இந்துசமுத்திர வளைய நாடுகள் கூட்டமைப்புக் கூட்டத்தின் மறுபுறமாக, இலங்கை வெளிநாட்டமைச்சர், வங்காளதேச பிரதமர், வெளியுறவு அமைச்சர் மற்றும் கப்பல் துறை அமைச்சர் ஆகியோருடன் இருதரப்பு கலந்துரையாடலை மேற்கொண்டார். இப்பிரிவு அனைத்து இருதரப்பு சந்திப்புகளுக்கும் வழிவகுத்தது. தற்போது பங்களாதேஷ் மற்றும் இலங்கை இடையே கரையோரக் கப்பல் போக்குவரத்து தொடர்பான ஒப்பந்தம் (CSC) மற்றும் பங்களாதேச கப்பல் கூட்டுத்தாபனம் (BSC) மற்றும் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் (PTA) ஆகியவை தொடர்பான

நிலுவையிலுள்ள ஒப்பந்தங்களை இறுதிப்படுத்த, சம்பந்தப்பட்ட துறை ரீதியான அமைச்சுக்களுடன் இணைந்து தொடர்நடவடிக்கைகளை இப்பிரிவு எடுத்து வருகின்றது.

டிசம்பர் 2021 இல் பங்களாதேச இராணுவ அதிகாரிகள் பயங்கரவாத எதிர்ப்பு குறித்த பயிற்சி திட்டங்களில் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளை இப்பிரிவு மேகொண்டது.

01-02 டிசம்பர் 2021 அன்று கௌரவ நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவின் இந்திய விஜயத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. இந்திய நிதி அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் புதுடில்லி இலங்கை உயர்ஸ்தானிகரகத்தினால் இருதரப்பு சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இந் விஜயத்தின் விளைவாக இந்தியாவிடமிருந்து பல நிதி உதவிகளை இலங்கை பெற முடிந்தது.

இந்தியாவின் குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தை திறந்து வைப்பதற்கு கௌரவ விளையாட்டுத்துறை அமைச்சர் தலைமையில் இலங்கையிலிருந்து 100 பௌத்த பிக்குகள் மற்றும் உயர்மட்ட பிரமுகர்கள் அடங்கிய ஆரம்ப விமானத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

பாகிஸ்தானில் இலங்கை பிரஜை ஒருவர் கொல்லப்பட்டதையடுத்து, உடனடியாக மேதகு ஜனாதிபதி, பாகிஸ்தான் பிரதமர் மற்றும் இருநாட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்களுக்கும் இடையில் தொலைபேசி உரையாடல்களை இந்தப் பிரிவு ஏற்பாடு செய்தது.

இஸ்லாமாபாத்தின் COMSATS பல்கலைக்கழகத்திற்கும் இலங்கை கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு உயர்ஸ்தானிகரகம் உதவியது.

02 நவம்பரில், கிளாஸ்கோ நகரில் இடம்பெற்ற COP 26 உச்சிமாநாட்டிற்கு மேலதிகமாக, நேபாள பிரதம மந்திரியுடன் இலங்கை ஜனாதிபதியின் சந்திப்புக்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

**பேச்சுவார்த்தை நடாத்தி, இறுதிப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள்**

இம்மீளாய்வுக் காலத்தில் நீண்டகாலமாக நிலுவையிலுள்ள பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் வரைவுகளை இவ்வமைச்சு இறுதிப்படுத்தியது; (1) இலங்கை- இந்தியா இடையில் பௌத்த உறவுகளை ஊக்குவிப்பதற்கான இந்தியாவின் நன்கொடையை நடைமுறைப்படுத்தலுக்கான பு.உ.ஒ (2) யாழ்ப்பாணம் கலாச்சார நிலைய நிருமாணத்திற்கான பு.உ.ஒ திருத்தம் (3) இந்தியாவின் சுஷ்மா ஸ்வராஜ் வெளிநாட்டுச் சேவை நிறுவகத்திற்கும் இலங்கை பண்டாரநாயக்கா சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவகத்திற்கும் இடையில் பு.உ.ஒ (4) பல பாதுகாப்பு கூட்டுறவு மற்றும் கல்வித்துறை பு.உ.ஒப்பந்தங்கள்.

27 ஜனவரி 2022 கைச்சாத்திட திட்டமிடப்பட்ட ஒரு பு.உ.ஒ இற்காக, நேபாளம், மொராங் தொழிற்றுறை சம்மேளனம் மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பாடலை தூதரகம் ஏற்பாடு செய்தது.

**பொருளாதார இராஜதந்திரம்**

**இந்தியா**

இந்தியாவில் உள்ள இலங்கை தூதரக பணியகங்கள்; வெற்றிகரமான வணிக ஒருங்கமைப்பு அமர்வுகள், வணிக- வணிக சந்திப்புகள் மற்றும் ஆலோசனைகள், முதலீடு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு இணைய கருத்துக்களங்கள், இடமளிக்கப்பட்ட வணிக விசாரணைகள், இந்திய சந்தைகளில் புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்துதல், கூட்டு முயற்சி ஒத்துழைப்புகள் மற்றும் முதலீட்டு முன்மொழிவுகளை மேம்படுத்துதல், சாத்தியமான முதலீட்டாளர்களை அடையாளம் கண்டு வர்த்தகம் மற்றும் முதலீடுகள் தொடர்பான கொள்கைச் சிக்கல்களை நிவர்த்தி செய்தல் ஆகியவற்றை வெற்றிகரமாக மேற்கொண்டன.

இந்திய மீனவர்கள் சம்பந்தப்பட்ட அதிகரித்து வரும் கடற்றொழில் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் பங்களிப்புடன் அனைத்து பங்குதாரர்களின் கூட்டம் கூட்டப்பட்டது.

**பாகிஸ்தான்**

பாகிஸ்தான்-இலங்கை கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவின் 12 ஆவது அமர்வு 3 பிப்ரவரி 2021 அன்று நடைபெற்றது. இஸ்லாமாபாத் இலங்கைத்தூதரகம் 18 பெப்ரவரி 2021 அன்று நடைபெற்ற வர்த்தகச் செயலாளர்கள் மட்ட பேச்சுக்களின் 7 ஆவது அமர்வுக்கு ஏற்பாடு செய்தது..

பாதுகாப்பு ஒத்துழைப்புக்காக 50 மில்லியன் டொலர் பாதுகாப்புக் கடனை பாகிஸ்தான் வழங்கியது. இலங்கை விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்காக 52 மில்லியன்களை வழங்கியது. பிப்ரவரி 2021 இல் மாண்புமிகு பாகிஸ்தான் பிரதமரின் வருகையின் விளைவாக பாகிஸ்தான் மருத்துவத் துறையில் 100 உதவித்தொகைகளை வழங்கியது.

கொழும்பில் சர்வதேச சாதனையாளர் விருது (IAA) விழாவிற்காக ராவல்பிண்டி வர்த்தக மற்றும் தொழில்துறை (RCCI) யிலிருந்து 120 பேர் கொண்ட தூதுக்குழு வருகைக்கு இலங்கை உயர்ஸ்தானிகரகம் உதவியது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கௌரவ பிரதமர் கலந்து கொண்டார்.

**பங்களாதேசம்**

2021 மார்ச் 19 முதல் 20 வரை பங்களாதேசத்திற்கு கௌரவ பிரதம மந்திர மேற்கொண்ட விஜயத்தின் விளைவாக, மே 2021 இல் இலங்கையுடனான 200 மில்லியன் டொலர் நாணய கொடுத்துமாறல் ஒப்பந்தத்தை பங்களாதேசம் அங்கீகரித்தது.

இலங்கைக்கும் பங்களாதேசத்திற்கும் இடையிலான முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையின் முதலாவது கூட்டம் 30 ஜூன் 2021 அன்று இலங்கை வர்த்தகத் திணைக்களத்தில் நடைபெற்றது.

07 நவம்பர் 2021 அன்று இலங்கை உயர்ஸ்தானிகரகம், இலங்கை மாநாட்டு பணியகத்துடன் ஒருங்கிணைந்து, சுற்றுலா தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, பங்களாதேச பங்குதாரர்களுடன் ஒரு இணைய கருத்தரங்கினை ஏற்பாடு செய்தது.

**நேபாளம்**

31 ஆகஸ்ட் 2021 இலிருந்து ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் கொழும்பிலிருந்து காத்மண்டுவிற்கு நான்கு நேரடி விமானப் போக்குவரத்தினை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளை, காத்மண்டுவிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து இப்பிரிவு மேற்கொண்டது.

காத்மண்டுவிலுள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழிற்றுறை இராஜாங்க அமைச்சு ஆகியவை ஒருங்கிணைந்து, 12 மார்ச் 2021 இல் இரத்தினக்கல் மற்றும் ஆபரணம் குறித்த இணைய கருத்தரங்கம் இப்பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

கட்டுமானத் துறையின் பங்காளிகள் மற்றும் நிறுவனங்களை ஒரே மேடையில் ஒன்றிணைத்த இணைய கருத்தரங்கம் ஒன்று 04 மே 2021 அன்று காத்மாண்டுவிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இலங்கை மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த இருபது கட்டுமான நிறுவனங்களிடையே ஒரு ஊடாடும் வணிக-வணிக அமர்வு மெய்நிகராக ஏற்பாடு செய்யப்பட்டது .

**மாலைதீவு**

20 டிசம்பர் 2021 அன்று இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் மாலைதீவு தேசிய வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்திற்கு இடையில் புதுப்பிக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

மாலைதீவில் இலங்கையின் கப்பல் போக்குவரத்து மற்றும் தளவாடங்கள் தொடர்பான முகவர் வர்த்தகத்தில் வெளிநாட்டு பங்குகளை வைத்திருப்பதில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து விவாதிக்க மாலைதீவின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருடன் இலங்கை உயர்ஸ்தானிகரகம் ஒரு சந்திப்பை நடத்தியது.

**பாதுகாப்புக் கூட்டுறவு**

2021 ஆகஸ்ட் 4 ஆம் திகதி இலங்கையில் பாதுகாப்புப் படைத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கு இடையிலான பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் மட்டத்திலான மெய்நிகர் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் ஒருங்கிணைப்புடன் இப்பிரிவு பங்கேற்றது.

பெங்களூரில் நடைபெற்ற "ஏரோ இந்தியா 2021" மற்றும் பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரியின் ஆய்வு சுற்றுப்பயணத்தின் சர்வதேச ஒத்துழைப்பு வருகை ஆகியவற்றில் இலங்கைப் பிரதிநிதிகள் பங்கேற்பதற்கு இலங்கை உயர்ஸ்தானிகரகம்/புதுடில்லி உதவியது.

இந்திய மற்றும் இலங்கை கடற்படை கப்பல்கள் மூலம் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு மருத்துவ தரம் வாய்ந்த ஒட்சிசனை கொண்டு செல்வதற்கும் இலங்கை உயர்ஸ்தானிகரகம்/புதுடில்லி உதவியது.

பங்களாதேசம், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் உள்ள இராணுவ வீரர்களுக்கு இலங்கையில் பாதுகாப்பு அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்வதற்கு இப்பிரிவு உதவியது.

இலங்கை விமானப்படையின் 70 ஆவது ஆண்டுவிழாவில் பங்கேற்பதற்காக, ஆறு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக, 03 மார்ச் 2021 அன்று இலங்கை வந்த வங்களாதேச விமானப்படைத் தளபதி எமார் சீஃப் மார்ஷல் மசிஹுஸ்ஸாமான் செர்னியாபாத்தின் விஜயம், இலங்கை உயர்ஸ்தானிகரகம்/பங்களாதேசம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் ஒருங்கிணைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டது.

06 செப்டம்பர் 2021 அன்று இடம்பெற்ற 14 ஆவது இந்தோ-பசிபிக் புலனாய்வுத் தலைவர்கள் மாநாட்டின் தொடக்க விழாவில் மாலைதீவு/இலங்கை தூதரகம் பங்கேற்றது. 2020 மார்ச் 18-25 வரை பாதுகாப்புப் படைத் தளபதி மற்றும் இலங்கை இராணுவத் தளபதியின் வருகையை இலங்கை உயர்ஸ்தானிகரகம்/ இஸ்லாமாபாத் எளிதாக்கியது.

2021 நவம்பர் 20 முதல் 24 வரையிலான காலபகுதியில், முத்தரப்புப் பயிற்சியான "தோஸ்தி XV" இல் பங்கேற்பதற்காக இலங்கை கடலோரக் காவல்படை கப்பலான "சுரக்ஷா" வருகையை இப்பிரிவு ஒருங்கிணைத்தது.

**பல்தரப்பு கூட்டுறவு**

இலங்கை உயர்ஸ்தானிகரகம்/ புதுடில்லி, ஐ.நா மனித உரிமை பேரவையின் 46 ஆவது அமர்வில் இலங்கை மீதான தீர்மானத்திற்கு எதிராகவும், இலங்கையின் அபேட்சகங்களுக்காகவும் ஆதரவைக் கோரியது.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் பாகிஸ்தான் இலங்கைக்கு தமது ஆதரவை வழங்கியுள்ளது.

நிலைபேறான நைட்ரஜன் முகாமைத்துவம் தொடர்பான கொழும்பு பிரகடனத்தின் பங்காளியாக இருக்கும் பாகிஸ்தான் இலங்கையர்களின் முயற்சிகளுக்கு தனது ஆதரவை வழங்கியது.

மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவளிக்க இலங்கை தூதரகம்/ காத்மாண்டு ஆதரவைக் கோரியதன் விளைவாக, நேபாளம் 2021 பெப்ரவரியில் 46 ஆவது அமர்வில் இலங்கையின் முன்னேற்றத்திற்கு ஆதரவாக ஒரு அறிக்கையை வெளியிட்டது.

2023-2027 காலத்திற்கான சர்வதேச சட்ட ஆணைக்குழுவிற்கான இலங்கை அபேட்சகத்திற்கு மாலைதீவு அரசாங்கத்திடம் இருந்து ஆதரவை, இலங்கை உயர்ஸ்தானிகரகம் கோரியது.

**பொது இராஜதந்திரம்**

அனைத்து தெற்காசிய தூதரகங்களும் பல்வேறு பிரச்சினைகளில் இலங்கையின் உத்தியோகபூர்வ நிலைப்பாடுகள் பற்றிய தகவல்களை உடனடியாகப் பரப்புவதற்கும், நாட்டின் நேர்மறையான பிம்பத்தை ஏற்படுத்துவதற்கும் சமூக ஊடகங்களை (ஃபேஸ்புக் மற்றும் ட்விட்டர்) தீவிரமாகப் பயன்படுத்துகின்றன.

**புலம்பெயர் தொழிலாளர் நலன், வெளிநாடுவாழ் இலங்கையர் மற்றும் கொவிட் தொடர்பான செயற்பாடுகள்**

புதுடில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகமானது; கோவிட் 19 தடுப்பூசிகள், 400 தொன்களுக்கும் அதிகமான மருத்துவ தர ஒட்சிசன், 30,500 டோஸ் ரெம்டெசிவிர் ஊசிகள், அவசரகால மருத்துவப் பொருட்கள், இந்தியாவில் இருந்து கட்டுப்படுத்தப்பட்ட மருந்து மருந்துகள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்தலையும் பொது முடக்கத்தின்போது இலங்கைப் பிரஜைகள் இந்தியாவிற்கு அவசர மருத்துவப் பயணங்களை மேற்கொள்வதையும் ஒருங்கிணைத்தது. இந்தியாவில் சர்வதேச பயணிகளுக்கான விமானப் பயண தடைகள் இருந்தபோதும் கூட, மிக அவசரமான மருத்துவ சிகிச்சை தேவைப்பட்ட இலங்கையர்களை இந்தியாவுக்கச் செல்வதற்கான வசதிகளை இவ்வமைச்சும் அதன் பணியகங்களும் ஏற்படுத்திக்கொடுத்தன. மார்ச் 2021 இல் இந்தியாவிலிருந்து இலங்கைக்கான வழமையான விமானப் போக்குவரத்துகள் மீள ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தன்னார்வத்துடன் இலங்கை திரும்ப விரும்பும் இலங்கை அகதிகளைத் தாயகம் அனுப்புவதற்கான வசதிகளும் மேற்கொள்ளப்பட்டன.

2021 பொது முடக்கத்தின்போது, இலங்கை உயர்ஸ்தானிகரகமானது 129 இலங்கை பிரஜைகளை இந்தியாவிலிருந்து தாயகத்திற்கு அனுப்பியது.

மாலைதீவு கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன் பிடித்தமைக்காக கைதுசெய்யப்பட்ட 41 மீனவர்கள் மற்றும் 8 மீன்பிடி படகுகளை நாட்டுக்கனுப்பு, மாலைதீவி இலங்கை உயர்ஸ்தானிகரகம் ஏற்பாடு செய்தது.

நேபாளத்திலுள்ள இலங்கை மாணவர்களுக்கான தடுப்பூசி வழங்கலில் முன்னுரிமையளிப்பதை ஊக்குவிக்க, காத்மண்டு இலங்கைத் தூதரகம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டது.

ஆப்கானிஸ்தானின் சட்டரீதியான அரசாங்கம் கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து, அங்குள்ள இலங்கையர்களைத் தாயகம் அனுப்புவதற்கான ஒழுங்குகளை இப்பிரிவு செய்தது. அதன்படி, 69 இலங்கையர்கள் பாதுகாப்பாக நாடு திரும்பினர்.

**சார்க்**

சார்க் கொவிட் -19 அவசரகால நிதியத்திற்கு இலங்கை 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியது. இந்த அவசரகால நிதியமானது, உறுப்பு நாடுகளின் அவசர மருத்துவ தேவைகளுக்காக செயன்முறைப்படுத்தப்படுகிறது.

கண்டி தேசிய வைத்தியாசலையில் கொவிட் தனிமைப்படுத்தல் பிரிவினை அமைப்பதற்காக, சார்க் அபிவிருத்தி நிதியம் 1 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியது.

சார்க் செயலகத்தின் குவி மையமான சார்க் பிரிவானது, பின்வரும் கூட்டங்களை/ செயற்பாடுகளை ஒருங்கிணைத்தது.

- சார்க் விவசாய நிலைய ஆளும் சபையின் 15 ஆவது கூட்டம் e
- கட்புலனாகா கலாச்சார பாரம்பரிய கட்டிடக்கலை குறித்த பயிற்சிப் பட்டறை
- காலநிலை மாற்றம் மற்றும் பேரழிவுகளின் தாக்கத்திலிருந்து கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான ஆய்வுக் கருத்தரங்கு மற்றும் ஆய்வு உதவித்தொகைகள்
- தெற்காசிய பிராந்திய நியமங்கள் நிறுவன(SARSO) ஆளும் சபையின் 10 ஆவது கூட்டம்
- உயிரி தொழில்நுட்பத்தின் தேசிய குவிமையத்தினை இனங்காணல்
- சார்க் காசநோய் மற்றும் எயிட்ஸ் நிலைய ஆளும் சபையின் 31 ஆவது கூட்டம்

சார்க் பிரிவு "சார்க் கலாநிதிப் பட்ட ஆய்வு (PHD) புலமைப்பரிசில்-2021" இனை ஏற்பாடு செய்தது. இது சார்க் விவசாய நிலையத்தால் தேசிய நீர்வள ஆதாரங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தினால் (NARA) இலங்கை தொழில் விற்பன்னர்களுக்கு வழங்கப்பட்டது.
சார்க் பிராந்திய/ சிறப்பு அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்கள் / இணைய கருத்தரங்குகள் இணை முகவரமைப்புக்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டது. சார்க் செயலகத்திற்கு இலங்கையிலிருந்து பொறுப்பதிகாரியைத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சையை/ நேர்காணலை இப்பிரிவு நடத்தியது.

## தென் கிழக்கு ஆசியா பிரிவு

**இருதரப்பு உறவுகள்**

மேம்பட்ட அரசியல் ஆலோசனைகள் மூலம் அங்கீகாரம் பெற்ற சேரிடங்களுடன் இருதரப்பு கூட்டுறவிற்கு புத்துயிரளித்தல்:

- மலேசியாவுடன் 1 ஆவது சுற்று, வியட்நாமுடன் 4 ஆவது சுற்று, தாய்லாந்துடன் 5 ஆவது சுற்று மற்றும் லாஓ உடன் 1 ஆவது சுற்று அரசியல் ஆலோசனைகள் நடாத்துவதற்கான தயார்ப்படுத்தல்கள்.

விவசாயம், பாதுகாப்பு, சுற்றுலா, விமான சேவைகள், சட்டவிரோத மனிதக்கடத்தலை தடுத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் குறித்து பிலிப்பைன்ஸ்/ தேர்தல் கூட்டுறவுடன் இருதரப்பு உடன்படிக்கைகளை புதுப்பித்தலுக்கான, இறுதிப்படுத்தலுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வியட்நாமுடன் சுங்க விடயங்கள், விவசாய கூட்டுறவு, இரகசிய தகவல்கள் பரிமாற்றம் மற்றும் பரஸ்பர பாதுகாப்பு குறித்து பரஸ்பர உதவிகள், தாய்லாந்துடன் கலாச்சார கூட்டுறவு; கம்போடியா மற்றும் லாஓ உடன் கலாச்சார கூட்டுறவு, கல்வி, சுற்றுலா, வியாபாரம், விளையாட்டு மற்றும் வர்த்தகம் குறித்த பரஸ்பர உதவிகள்.

உயர்மட்ட இடைவினையாற்றல்கள் மூலமாக இருதரப்பு உறவுகளை பலப்படுத்தல்: மார்ச் 2021 இல் மேதகு ஜனாதிபதிக்கும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதிக்கும் இடையில் தொலைபேசி உடையாடல், ஜனவரி 2021 இல் இரு நாடுகளதும் வெளிநாட்டு அமைச்சர்களுக்கும் இடையில் தொலைபேசி உரையாடல்.

சிங்கப்பூருடனான இராஜதந்திர உறவுகளின் 50 ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் வண்ணம் ஜூலை 2021 இல் முத்திரை வெளியிடப்பட்டது.

சிங்கப்பூரிலுள்ள கூட்டமைப்பு ஒன்றினால், இலங்கை கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 180,000 அமெரிக்க டொலர் மதிப்புள்ள 8 கடல் சுத்தமாக்கும் இயந்திரங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டமைக்கான ஏற்பாடு.

இலங்கைக்கும் மியான்மருக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணைக்குழுவின் 3வது அமர்வின் போது, இலங்கை கோரியதற்கிணங்க, மியன்மார் அரசாங்கத்திடமிருந்து கிட்டத்தட்ட ரூ.10,000,000 மதிப்புள்ள பளிங்கு பகோடா நன்கொடையாக வழங்கப்பட்டது

இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான பயணத்தில் தடுப்பூசி பெற்ற பயண வழி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.

எம் வி எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் சம்பவம் மற்றும் இலங்கைக்கு கடற்கரையை சுத்தம் செய்யும் இயந்திரங்களை நன்கொடையாக வழங்கிய சம்பவம் தொடர்பாக சிங்கப்பூர் கடல்சார் மற்றும் துறைமுக அதிகாரசபை மற்றும் வெளிநாட்டு அமைச்சின் அதிகாரிகளுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தப்பட்டது.

இலங்கைக்கும் வியட்நாமிற்கும் இடையில் விவசாய ஒத்துழைப்பு, சுங்க விவகாரங்களில் ஒத்துழைப்பு, பரஸ்பர பாதுகாப்பு மற்றும் இரகசிய தகவல் பரிமாற்றம் மற்றும் கல்வி ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இறுதிப்படுத்தப்பட்டமை மற்றும் கைச்சாத்திட தயார்ப்படுத்தல்.

**நடைபெறும் பணிகள்**

2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டு ஆணையத்தின் அடுத்த அமர்வைத் திட்டமிடுவதற்கு மலேசிய வெளியுறவு அமைச்சகத்துடன் இருதரப்பு விவாதங்கள் மற்றும் அதன் முடிவை விரைவுபடுத்த இருதரப்பு கருவிகளை மதிப்பீடு செய்வதற்கான கூட்டங்களைத் தொடர்ந்து நடத்தியமை.

இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையில் 3 ஆவது சுற்று அரசியல் ஆலோசனைகளை நடத்துவதற்கு 2022ஆம் ஆண்டின் 1ஆம் காலாண்டில் பிலிப்பைன்ஸ் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கை பாதுகாப்புத் திணைக்கள செயலாளர் ஆகியோர் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவின் சாத்தியமான உயர்மட்ட விஜயங்கள் பற்றிய கலந்துரையாடல்கள். வருடாந்த லக்ஷ்மன் கதிர்காமர் நினைவு விரிவுரை மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு பற்றிய சாத்தியமான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு பேச்சுவார்த்தையைத் தொடங்கியமை.

**பல்தரப்பு உறவுகள்**

ஐ.நா முகவரமைப்புகள், தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (ASEAN), ஆசிய பிராந்திய மன்றம் ARF, கொழும்புத்திட்ட அரச கல்லூரி (CPSC), ஐக்கிய நாடுகளின் ஆசிய மற்றும் பசிபிக் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழு (UNESCAP) மற்றும் பிராந்திய கார்பன் சுழற்சி மதிப்பீடு மற்றும் செயல்முறைகள் (ReCCAP) ஆகியவற்றுடன் அடிக்கடி ஈடுபாடு மற்றும் அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை நிறைவு செய்வதற்கு கூட்டாண்மைகளை உருவாக்குதல்.

ஜூன் 2021 இல் ஆசிய பிராந்திய மன்றம் ARF SOM மற்றும் ஆகஸ்ட் 2021 இல் 28 ஆவது ASEAN பிராந்திய மன்றத்தில் (வெளிநாட்டு அமைச்சர் நிலை) இலங்கை பங்கு பெற்றது. NPD பற்றிய ARF ISM ஆனது 2024 வரை இலங்கை, தாய்லாந்து மற்றும் அமெரிக்கா ஆகியவற்றால் இணைத்தலைமையில் இருக்கும் என்று முடிவு செய்யப்பட்டது. அமைதியான நோக்கங்களுக்காக அணுசக்தியைப் பயன்படுத்தும் பகுதிக்கு இலங்கை தலைமை தாங்கும்.

ஆசிய பிராந்திய மன்றம்: எதிர்கால செழிப்புக்காக இளைஞர் விவகாரங்களில் முதலீடு செய்வதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், இந்  ஆண்டு, புருனே, இந்தோனேசியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, நியூசிலாந்து, ஆகிய நாடுகளுடன் இணைந்து இளைஞர்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலை மேம்படுத்துவதற்கான கூட்டு அறிக்கைக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியது. மற்றும் கனடா/ இலங்கையில் உள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒத்துழைப்புடன், அனர்த்தம் ஏற்படக்கூடிய தென்கிழக்காசிய பிராந்தியத்தில் விசேட கவனம் செலுத்தி, அனர்த்த முகாமைத்துவத் துறையில், அடுத்த இடைக்கால வருடத்தில் ARF பட்டறையை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

77ஆவது ஐ.நா ஆசிய மற்றும் பசிபிக் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் ஆரம்ப அமர்வில் கௌரவ பிரதம மந்திரியின் செய்தி மற்றும் வெளிநாட்டமைச்சின் செயலாளரின் நாட்டின் அறிக்கை, 27 ஏப்ரல் 2021 அன்று மெய்நிகராக இடம்பெற்றது.
2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ASEAN இற்கு துறைசார் பேச்சுவார்த்தைப் பங்குடைமைக்கான ஆவணத்தை இலங்கை சமர்ப்பித்தது குறித்து உரையாசிரியர்களுக்கு இலங்கை தூதரகங்களின் தலைவர்கள் விளக்கமளித்தனர். மற்றும் ஒரு துறைசார் பேச்சுவார்த்தை பங்காளியாக ஆவதற்கான இலங்கையின் விண்ணப்பத்திற்கு ஆதரவைக் கோரினர்.

பாங்காக் இலுள்ள இலங்கைத் தூதுவர், போக்குவரத்து தொடர்பான 4 ஆவது அமைச்சர்கள் மாநாட்டின் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் மற்றும் அமைச்சர் பிரிவுக்கு தலைமை தாங்கினார்.

2021 நவம்பரில் கொழும்பில், இலங்கையின் நிலையான அபிவிருத்திக் குழுவின் ஒத்துழைப்புடன், நிலையான அபிவிருத்தி இலக்குகள் குறித்த 5ஆவது தெற்காசிய மன்றத்தை இலங்கை நடத்தியது.

**பொருளாதார இராஜதந்திரம்**

அங்கீகாரம் பெற்ற நாடுகளில் சாதகமான கொள்வனவாளர்/ முதலீட்டாளர்கள் மற்றும் இலங்கையில் உள்ள வர்த்தகக் கட்சிகள், சேம்பர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் இலங்கை தூதரகங்கள் மூலம் வர்த்தகம் மற்றும் வணிக தொடர்புகளை எளிதாக்கியமை, அங்கீகாரம் பெற்ற நாடுகளிலுள்ள பொது

மற்றும் தனியார் துறைகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி கொழும்பு துறைமுக நகர திட்டத்திற்கு முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் நாட்டில் அடையாளம் காணப்பட்ட பிற இடங்கள் மற்றும் கண்காட்சிகள்/மெய்நிகர் மாநாடுகள் மூலம் இலங்கை தயாரிப்புகள்/சுற்றுலாவை மேம்படுத்துதல் மற்றும் பிற தளங்கள்.

**இலங்கை தூதரகம்/ இந்தோனேசியா:** ஆக்கப்பூர்வமான பொருளாதாரம் மற்றும் அம்பாந்தோட்டை வலயத்தில் மின்சார வாகனங்கள், மருந்து உற்பத்தி மற்றும் ஜவுளி ஒத்துழைப்பு ஆகிய துறைகளில் முதலீட்டு திட்டங்கள் தொடர்பாக இலங்கையின் பிராந்திய கூட்டுறவு இராஜாங்க அமைச்சர் மற்றும் சுற்றுலா அமைச்சர் மற்றும் இந்தோனேசியாவில் இதுதொடர்பான சகாக்களுக்கு இடையில் சந்திப்புகளை எளிதாக்கியமை.

டிசம்பர் 2021 இல் இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு பணியகம் மற்றும் இந்தோனேசியாவின் தேசிய வர்த்தக சபையுடன் இணைந்து 19 பயண முகவர்கள் பங்கேற்ற ஒரு சுற்றுலா இணைய கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மின்சார வாகன துறையில் முதலீட்டை ஆராய்வதற்காக, முதலீட்டுச் சபை மற்றும் இந்தோனேசிய மின்சார வாகன தொழில் சங்கத்துடன் இணைந் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கையின் ரத்தினங்களை உயர்மட்ட இந்தோனேசிய நகை நிறுவனமாக மேம்படுத்துவதற்காக தூதரகம் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுஉடன் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்தது.

**இலங்கைத் தூதரகம்/ மலேசியா**: இலங்கையின் கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுக்கும் சம்பந்தப்பட்ட மலேசிய அரசாங்க முகவரமைப்புக்களுக்கும் இடையில் பனை எண்ணை கைத்தொழில் தொடர்பான விடயங்கள் தொடர்பான சந்திப்புகளுக்கு ஏற்பாடு.

இலங்கையை ஒரு சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவது குறித்து இலங்கை சுற்றுலாத்துறைக்கு இரண்டு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. 'சமயச் சுற்றுலாவை' மேம்படுத்துவதற்காக பௌத்த விகாரைகளுடன்/ நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டமை. முதலீடுகளை ஈர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளை தேடுவதற்காக பல மலேசிய நிறுவனங்களுடன் தொடர்ந்து இணைய கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

**இலங்கை தூதரகம்/ பிலிப்பைன்ஸ்:** ஒரு புகழ்பெற்ற பிலிப்பைன்ஸ் கூட்டு நிறுவனத்திற்கு (**Aboitiz Group)** முதலீட்டு வாய்ப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன**,** குறிப்பாக கால்நடைத் தீவன உற்பத்தியில் / தேங்காய் பதப்படுத்தும் துறையில் கூட்டு முயற்சி வாய்ப்புகளை ஆராய்வதற்காக புகழ்பெற்ற பிலிப்பைன்ஸ் தேங்காய் ஏற்றுமதி நிறுவனத்திற்கு சிலோன் பிஸ்கட் லிமிடெட் அறிமுகப்படுத்தப்பட்டது.

பிலிப்பைன்ஸுக்கு இலங்கையின் 'பட்டிக்' துணிகளைஏற்றுமதி செய்வதற்காக, இலங்கையின் Buddhi Batiks மற்றும் Kaftan One இடையே ஆக்கப்பூர்வமான உயர்நிலை கலாச்சார கூட்டு ஈடுபாட்டினை மேம்படுத்தியமை. உணவு உற்பத்தி, மீன்பிடி துறைகளில், பிலிப்பைன்ஸ் வணிக நிறுவனங்களுடன் விநியோக சந்திப்புகள், CDO, Frabelle, Century Pacific, முதலியவற்றுடன் சாத்தியமான கூட்டு முயற்சி கூட்டாண்மைகள் மற்றும் இலங்கை வணிக சகாக்களுடன் தொடர்புகளை எளிதாக்கியமை. ரியல் ஸ்டீல் கோர்ப்பரேஷனின் பிரதான நிதி அதிகாரியை டாவோவில் இலங்கையின் கௌரவ தூதராக நியமித்தமை மற்றும் இடுகம - கோவிட் 19 நிதிக்கு அமெரிக்க $ 20,000 நன்கொடை வழங்கப்பட்டமை. NAITAS இன் 25 உறுப்பினர்களுக்கு 'NKAR டிரவல்ஸ் மற்றும் டூர்ஸ்' இற்கான பிரத்யேக விளம்பர வலைத்தளத்தை நடத்துவதற்கும் வழிவகுத்தமை.

**இலங்கை தூதரகம்/ சிங்கப்பூர்:** பிரதானமாக கல்வி, ஃபின்டெக், படகு சவாரி, ரத்தினங்கள் மற்றும் ரியல் எஸ்டேட் ஆகியவற்றில் இலங்கை சிங்கப்பூர் வர்த்தக கழகத்தின் துணைக்குழு நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு. 2021 முதல் பாதியில் சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு பெறப்பட்ட அந்நிய நேரடி முதலீடு 18.077 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

2021 அக்டோபரில் இலங்கையில் நடைபெற்ற முதலாவது சர்வதேச மெய்நிகர் படகு கண்காட்சியில் 08 சிங்கப்பூர் படகு மற்றும் கப்பல் கட்டும் நிறுவனங்கள், துணை உற்பத்தியாளர்கள் மற்றும் பட்டய இயக்குனர்களின் பங்குபற்றுதலுக்கு இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் வர்த்தக அமைச்சுடன் ஒருங்கிணைக்கப்பட்டு வசதியளிக்கப்பட்டது. 2021 அக்டோபரில் "Food and Hotel Asia (FHA) Match: Fine food" நிகழ்வில் முன்னணி உணவு உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குனர்கள் இயற்கை, சேதன மற்றும் தாவர அடிப்படையிலான உணவுகளை காட்சிப்படுத்தினர். பல வகையான வேளாண்மைகளை அறிமுகப்படுத்த இலங்கையில் உள்ள ஏற்றுமதியாளர்கள் மற்றும்

சிங்கப்பூரில் உள்ள விநியோகஸ்தர்களுடன் ஒருங்கிணைப்பு -உற்பத்தி, இலங்கையிலிருந்து சிங்கப்பூருக்கு சிவப்பு பப்பாளியின் முதல் ஏற்றுமதிக்கு வழிவகுத்தது.

**இலங்கைத் தூதரகம்/ வியட்நாம்:** இலங்கை வர்த்தக சம்மேளனம்/இலங்கையின் தகவல் தொழில்நுட்பத் துறையின் அறிமுகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் முதலீட்டு ஊக்குவிப்பு வியட்நாமில் இருந்து கிட்டத்தட்ட 50 வெளிச்செல்லும் பயண முகவர்களுடன் நேருக்கு நேர் இணைய சந்திப்புகளை நடத்தியமை .

ஸ்மார்ட் சிட்டி மாநாடு மற்றும் DX Day வியட்நாம் 2021 இல் இணைந்து, மார்ச் மற்றும் டிசம்பர் 2022 இல் வியட்நாமில் 2 வர்த்தக கண்காட்சிகள் பரிந்துரைக்கப்பட்டது. வியட்நாமுக்கு இலங்கை கடல் உணவு மற்றும் இறைச்சி பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகளை விவாதிக்க வியட்நாமின் விலங்கு சுகாதாரத் துறையுடன் சந்திப்பு. வியட்நாமின் FLC குழுமத்தின் Bamboo Airways உடன் இலங்கைக்கு பட்டய விமானங்களை ஏற்பாடு செய்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. வர்த்தகம், முதலீடு, ஆலோசனை மற்றும் சுற்றுலாத் துறைகளில் இலங்கை மற்றும் வியட்நாமிய வணிக நிறுவனங்களுக்கு இடையே 14 வணிக சந்திப்பு மற்றும் வணிக ஒருங்கிணைப்பு அமர்வுகளை ஏற்பாடு செய்து, 11 வர்த்தக விசாரணைகளை எளிதாக்கியதுடன், இப்பிரிவு தலையிட்டு 01 வர்த்தக சர்ச்சையை இணக்கமாகத் தீர்த்து வைத்தது.

**இலங்கைத் தூதரகம்/ தாய்லாந்து:** தாய்லாந்திலுள்ள Toyota Daihatsu Engineering & Manufacturing Co. Ltd உடன் ஒத்துழைக்கவும் மற்றும் SCG Plc உடன் கூட்டுத் திட்டத்திற்காகவும் இலங்கையில் கிராஃபைனைப் பயன்படுத்தி பேட்டரி அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்றத்தைப் பின்தொடர்வதற்காக இலங்கை - தாய்லாந்து வர்த்தக பேச்சுவார்த்தைக் குழுவுடன் (SLINTEC) ஒருங்கிணைக்கப்பட்டது. தாய்லாந்து/ G-to-G அடிப்படையில் தாய்லாந்தில் இருந்து நெத்தலி இறக்குமதி செய்வதற்கான செயன்முறையை எளிதாக்கியமை மற்றும் நெத்தலி மற்றும் உலர் மீன்களை இறக்குமதி செய்ய தாய்லாந்துடன் பண்டமாற்று வர்த்தகத்திற்கான வாய்ப்பினைத் தேடியமை.

3வது இலங்கை -தாய்லாந்து வர்த்தக பேச்சுவார்த்தைக் குழு (SLTTNC), இலங்கைக்கும் தாய்லாந்திற்கும் இடையிலான வர்த்தகம் தொடர்பான விஷயங்களில் துணைக் குழுவின் 4வது சந்திப்புக்கான தேதிகளை இறுதி செய்தமை. கம்போடியா மற்றும் லாவோ PDR இற்கான இலங்கை தேயிலைச் சபை வர்த்தக முத்திரையை புதுப்பித்து, 'டில்மா டீ' உடன் இணைந்து 2 ஆவது YWCA கிறிஸ்துமஸ் அறக்கட்டளை கண்காட்சி சந்தையில் பங்கேற்றமை. 2021 அக்டோபரில் நடைபெற்ற மெய்நிகர் படகுக் காட்சிக்கு உரிய விளம்பரம் வழங்கிய தாய்லாந்து பயண முகவர் சங்கம் (TTAA) ஏற்பாடு செய்த இணைய மாநாட்டில் பங்கேற்றமை. தாய்லாந்தில் உள்ள ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸுடன் இணைந்து, தாய்லாந்து செல்வாக்கு செலுத்தும் முக்கிய நபரின் இலங்கை வருகையை ஆரம்பித்தமை.

**இலங்கைத் தூதரகம்/ மியன்மார்:** நாட்டில் நிலவும் அரசியல் ஸ்திரமின்மையின்போது, இலங்கை முதலீட்டாளர்களுக்கு/வணிக சமூகத்திற்கு உதவியமை. இலங்கைக்கும் மியான்மருக்கும் இடையே நேரடி விமான இணைப்பை ஏற்படுத்துவதற்காக அதிகாரிகள் மற்றும் மியான்மர் நேஷனல் ஏர்லைன்ஸ், மியன்மார் ஏர்வேஸ் இன்டர்நேஷனல் உள்ளிட்ட பங்குதாரர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டமை. கொழும்பு - யாங்கூன் - போத்கயா மற்றும் கொழும்பு - யாங்கூன் - காத்மாண்டு ஆகியவற்றுக்கு இடையேயான சர்க்யூட் இணைப்பு குறிப்பிடத்தக்க சமய சுற்றுலா தலங்களை இணைக்கிறது.

கொழும்பு துறைமுக நகரத் திட்டம் மற்றும் நாட்டில் அடையாளம் காணப்பட்ட ஏனைய இடங்களுக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக அங்கீகாரம் பெற்ற நாடுகளிலுள்ள அரச மற்றும் தனியார் துறைகளுடன் தொடர் கலந்துரையாடல்களை நடத்தியமை.

மூன்றாவது இலங்கை - தாய்லாந்து பேச்சுவார்த்தைக் குழு/ இலங்கைக்கும் தாய்லாந்திற்கும் இடையிலான வர்த்தகம் தொடர்பான விவகாரங்களுக்கான உப குழுவின் நான் காவது கூட்டம் மற்றும் கூட்டு விவசாய பணிக்குழுவின் கூட்டத்தை (JAWG) நடத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன.

கண்காட்சிகள்/மெய்நிகர் மாநாடுகள் மற்றும் பிற தளங்கள் மூலம் இலங்கை தயாரிப்புகள்/சுற்றுலாவை மேம்படுத்துதல்: சர்வதேச தேயிலை தினம்/ இந்தோனேசியாவின் போது சிலோன் தேயிலையை ஊக்குவித்தல்- ஜகார்த்தாவில் உள்ள ஆர்ட் பிளஸ் சஞ்சிகை மற்றும்

இலங்கை தேயிலை வாரியம் ஆகியவற்றுடன் இணைந்து, உயர்தர வாடிக்கையாளர்களை இலக்காகக் கொண்டு சிலோன் தேயிலையின் பிரத்தியேக டிஜிட்டல் அம்சம் ஆரம்பிக்கப்பட்டமை; சிங்கப்பூர்- இலங்கை இலவங்கப்பட்டை, சிலோன் தேயிலை மற்றும் தேங்காய் மாவு போன்றவற்றை ஈ-வர்த்தக சந்தையான "பண்ணையிலிருந்து சந்தை மேடைக்கு" அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியை நடத்தியமை; தாய்லாந்து- SLAITO இன் பங்கேற்பை எளிதாக்கியமை, SLTPB,TSLCC ஆனது ஜூலை 2021 இல் "தாய் முதல் உலக சுற்றுலா உரையாடல்" இணைய கருத்தரங்கில் மார்ச் 2021 இல் 'டில்மா டீ' உடன் இணைந்து 54வது இராஜதந்திர செஞ்சிலுவை பஜாரில் பங்கேற்றமை; வியட்நாம் சர்வதேச கண்டுபிடிப்பு கண்காட்சி 2021 இல் பங்கேற்பு.

**பாதுகாப்புக் கூட்டுறவு**

பாதுகாப்பு நிறுவனங்களிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துதல்/ அந் ˙த அங்கீகாரம் பெற்ற இடங்கள் வழங்கும் திறன் மேம்பாட்டு திட்டங்களில் ராணுவ அதிகாரிகளின் பங்கேற்பை ஒருங்கிணைத்தல்.

இலங்கைக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான நான்காவது கூட்டுப் பணிக்குழு 14 ஜூலை 2021 அன்று மெய்நிகராக நடைபெற்றது.

01 ஜூலை 2021 அன்று கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் இந்தோனேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது.

பாதுகாப்பு ஒத்துழைப்பு, புலனாய்வு பரிமாற்ற ஒத்துழைப்பு, நாடுகடந்த குற்றங்கள், அடிப்படைவாதம் மற்றும் வன்முறை தீவிரவாதம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு, அங்கீகாரம் பெற்ற இடங்களில் பாதுகாப்பு அதிகாரிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2022 - 2027 காலப்பகுதியில் பொலிஸ் விவகாரங்களில் இலங்கை மற்றும் வியட்நாம் இடையேயான ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது.

**பொது இராஜதந்திரம்**

வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, இலங்கை தூதரகங்கள்/வெளிநாட்டில் உள்ள பதவிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகள்/செயற்பாடுகள் மூலம் மக்கள் தொடர்புகள் போன்ற தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு பொருத்தமான அரசாங்க கொள்கைகளை திறம்பட ஊக்குவித்தல். அங்கீகாரம் பெற்ற இடங்களில் உள்ள நிறுவனங்கள், சங்கங்கள் போன்றவற்றால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளில் பங்கேற்றமை.

சிங்கப்பூரில் உள்ள மதத் தலைவர்கள் மற்றும் இலங்கை சங்கங்களுடன் வெளியுறவு அமைச்சருக்கும் பிராந்திய ஒத்துழைப்பு இராஜாங்க அமைச்சருக்கும் இடையிலான மெய்நிகர் தொடர்புகளை எளிதாக்கியமை; ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் இணைந்து, வருங்கால வியட்நாம் பிக்குகள், கன்னியாஸ்திரிகள், மற்றும் பாமரர்களுக்கு இலங்கையில் பௌத்த துறை கல்வியை மேம்படுத்துவதற்கு வசதி செய்தல்; வியட்நாமின் VASS/IISAS இலங்கை தொடர்பான சிறப்பு இதழில் இலங்கையைச் சேர்ந்த புகழ்பெற்ற அறிஞர்களால் எழுதப்பட்ட ஆறு ஆய்வுக் கட்டுரைகளின் வெளியீடு.

**கல்வி**

பிலிப்பைன்ஸ் ரோட்டரி சங்கம் Makati Circle of Friends மற்றும் கொழும்பு ரோட்டரி சங்கம் Reconnections ஆகியவற்றை ஒருங்கிணைத்து, SL மாணவர்களுக்கு ICT கல்வியில் 500 புலமைப்பரிசில்களை வழங்குவதற்கான ஒப்பந்தம்.

**புலம்பெயர் தொழிலாளர் நலன், வெளிநாட்டு இலங்கையர் மற்றும் கொவிட் தொடர்பான செயற்பாடுகள்**

கோவிட்-19 ஒத்துழைப்பு: நிதி உதவி பெறுவதில் சரியான நேரத்தில் தலையீடு/ஒருங்கிணைப்பு/ கோவிட் 19 தொடர்பான தடுப்பூசிகள், மருத்துவ உபகரணங்கள், அங்கீகாரம் பெற்ற இடங்களிலிருந்து வழங்குதல்: 300,000 Livinguard முகமூடிகளை நன்கொடையாக சிங்கப்பூர்/மருத்துவ வசதியுள்ள Temasek அறக்கட்டளை SLAS சங்கத்திற்கு அனுப்பியது. SLBA ஆல் பொது நிதி திரட்டும் பிரச்சாரத்தின் மூலம் 21,717.00 சிங்கப்பூர் டொலர் நிதி திரட்டப்பட்டது. சிங்கப்பூரிலுள்ள நலம் விரும்பி ஒருவரால் US$10,000

பெறுமதி மிக்க தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டது; சிங்கப்பூரில் உள்ள மகா கருணா பௌத்த சங்கத்தால் 250 ஒட்சிசன் செறிவூட்டிகளை நன்கொடையாக வழங்கப்பட்டது; 30 ஒட்சிசன் செறிவூட்டிகள், 108 ஒட்சிசன் தொட்டிகள், 62 சீராக்கிகள் மற்றும் ஊசியேற்றும் குழாய்கள் தாய்லாந்து வெளியுறவு அமைச்சு மற்றும் 160 ஒட்சிமீட்டர்கள் தாய்லாந்தில் உள்ள புத்த நிறுவனங்களின் நன்கொடை. வியட்நாம் அரசாங்கத்தால் 30,000 US$ மதிப்புள்ள RT PCR சோதனைக் கருவிகள் நன்கொடை.

மலேசியாவில் அதிக காலம் தங்கியிருக்கும் இலங்கைப் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாகத் திரும்புவதற்காகப் பொது மன்னிப்புக் காலம் உறுதி செய்யப்பட்டது. இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் அறிவுக்காக சிங்கப்பூரில் FAST மற்றும் CDE உடன் இணைந்து பட்டறைகள் நடத்தப்பட்டது மற்றும் தேவையான திறன்களை மேம்படுத்த குறுகிய கால பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் உள்ள இலங்கை தூதரகங்கள்/பதவிகள் மூலம் அங்கீகாரம் பெற்ற இடங்களில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளின் நலனை எளிதாக்குதல்: தூதரக உதவிகளை வழங்குதல், நாடு திரும்புதல், விசா நீட்டிப்பு மற்றும் கோவிட் 19 தொற்றுநோயால் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு குறைகளைத் தீர்த்தல், மரணங்கள், தொழிலாளர் நலன் தொடர்பான பல விடயங்ககளுக்கு தீர்வு காணல்.

மியன்மாரில் 12 இலங்கை மீனவர்கள் விடுதலை, 2 மீன்பிடி படகுகள் விடுவிப்பு. மியன்மார் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மேலும் 7 மீனவர்களை விடுவிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையர்களுக்கு புதிய வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்காக 10 கம்பனிகளுடன் கலந்துரையாடல்கள் நடந்தன.

2021 ஆம் ஆண்டில் உரிய நீதித்துறை செயன்முறையை முடித்த 113 இலங்கை கைதிகளை/ குற்றவாளிகளை மலேசியாவிலிருந்து நாடுகடத்துதல்/ நாட்டுக்கு திருப்பியனுப்புதல் எளிதாக்கப்பட்டது.

சிங்கப்பூரிலுள்ள இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு பொருத்தமான பணிச்சூழலை உருவாக்க ஊழியர்கள் மற்றும் முகவர்களுடன் தூதரகம் ஈடுபட்டுள்ளது மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான வழக்கமான நடமாடும் சேவைகள் வார இறுதி நாட்களில் இலங்கை பௌத்த கோவிலில் நடத்தப்படும்; மற்றும் தூதரக சேவைகள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான திறன்களை வளர்ப்பதற்கும், பயிற்சிகளை மேம்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வீட்டுப்பணி/ திறனற்ற தொழிலாளி என்ற நிலையில் இருந்து பகுதிசார் திறனுள்ள அல்லது திறனுள்ள தொழிலாளர்களாக அவர்களின் நிலையை மேம்படுத்துதல்.

2022 முதல் காலாண்டுக்குள் 2000 பதிவுசெய்யப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்பட்ட தாதிமார்களை வழங்குவதற்கான வாய்ப்பைப் பெற சுகாதாரத் துறை ஆட்சேர்ப்புகளுக்கு (MOHH) பொறுப்பேற்றுள்ள சிங்கப்பூர் அரசாங்கத்தின் துணை நிறுவனமான சுகாதார அமைச்சின் ஹோல்டிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

## பொது இராஜதந்திர பிரிவு

பொது இராஜதந்திரப் பிரிவானது; தகவல்கள் பரப்புதல் மற்றும் இலங்கையின் பிரதிபிம்பத்தினை வெளிநாடுகளில் வெளிப்படுத்தல் போன்றவற்றில் அரசாங்கத்திற்கும் வெளி நிறுவனங்களுக்கும் இடையிலான இடைமுகமாகும். இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் தொடர்பான மற்றும் நாட்டில் பொதுவாக நடைபெறும் நிகழ்வுகள்/ சூழ்நிலைகளை இந்தப் பிரிவு உள்ளடக்குகிறது. கூடுதலாக, இப்பிரிவு வெளிநாட்டில் உள்ள இலங்கை தூதரகங்கள் / பதவிகளில் நிகழ்வுகள் / அபிவிருத்திகள் பற்றிய தகவல்களை பரப்புகிறது.

**இப்பிரிவின் பிரதான செயற்பாடுகளின் செயலாற்றுகை**

இப்பிரிவு; அமைச்சின் அனைத்து அதிகாரிகள், தூதரகங்கள்/ பதவிகள் தொடர்பில் உள்ளூர்/வெளிநாட்டு ஊடகங்கள் மற்றும் இணையங்களில் வரும் முக்கிய செய்திகளையும் தினசரி அடிப்படையில் கண்காணித்து புதுப்பித்து வருகிறது. இவ்வமைச்சு மற்றும் இலங்கையின் பெயருக்கு களங்க

ஏற்படுத்தும் செய்திகள், வெளிநாட்டமைச்சின் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, தேவைப்படின், மறுப்புச்செய்திகள் வெளியிடப்படுகின்றன.

மேலும், இந்த மீளாய்வுக் காலத்தில் பொது இராஜதந்திர பிரிவானது, ஊடக வெளியீடுகள், அறிக்கைகள், தூதரக செய்திகள் மற்றும் அறிவித்தல்களை உள்நாட்டு அச்சீடுகள் மற்றும் இணைய ஊடகங்களுக்கும் கொழும்பிலுள்ள வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடையேயும் பரப்புவதில் முக்கியமான பங்கை வகித்தது. இச்செய்திகள் வழமையான தொலைக்காட்சி, வானொலி செய்திகளிலும் இணையங்களிலும் வெளியிடப்பட்டன.

மேலும், பொது உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்காக, அனைத்து தூதரக பணியகங்களும்/ பதவிகளும் பொதுமக்களை இலக்குவைத்து தகவல்களை திறம்பட பரப்புவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன. அமைச்சின் ட்வீட்கள்/இடுகைகளை மீள 'ட்வீட் செய்ய/ மீளப்பதிவிடவும் அவை ஊக்குவிக்கப்படுகின்றன.

நோய்பரவல் காரணமாக, இக்காலப்பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட நிகழ்வுகளே இவ்வமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்டன. 27 ஜூலை 2021 அன்று இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 50வது ஆண்டு நிறைவை நினைவுகூரும் முகமாக இலங்கை மற்றும் சிங்கப்பூர் ஆகிய இரு நாடுகளிலும் முத்திரைகள் வெளியிடப்படுவதைக் குறித்து டிஜிட்டல்/அச்சு ஊடக ஊடகவியலாளர்கள் செய்தியாளர்களை செய்தியாளர்களுக்கு அமைச்சில் வைத்து நன்கொடையை வழங்குவதற்கு இப்பிரிவு ஏற்பாடு செய்தது. பிளாஸ்டிக் கழிவுகளை முற்றாக ஒழிக்கும் நோக்குடன், சிங்கப்பூரை தளமாகக் கொண்ட உலகளாவிய இலாப நோக்கற்ற நிறுவனமான 'அலையன்ஸ்' இடமிருந்து நன்கொடையாகப் பெற்ற 'பீச்டெக் ஹைட்ரோ' கடற்கரை துப்புரவு இயந்திரங்கள், கடலோரப் பாதுகாப்புத் துறையின் வெளியுறவுச் செயலாளரால் ஆகஸ்ட் 02, 2021 அன்று நீர்கொழும்பில் உள்ள சருக்குவா கடற்கரையில் பெறப்பட்டது.

இலங்கையின் பிரதிபிம்பத்தினை வெளிநாடுகளில் மேம்படுத்தும் நோக்குடம் இலங்கையில் படமெடுக்கும் வெளிநாட்டு ஊடகங்களுக்கு இப்பிரிவு வசதியேற்படுத்திகொடுத்தது. எனினும், கொவிட் பரவல் காரணமாக குறைந்த வெளிநாட்டு ஊடகத்தினரின் வருகையே காணப்பட்டது. ஆனபோதிலும், 2021, 01 மே இலிருந்து 01 ஜூன் வரையில் பிரித்தானியாவின் 'ஹம்பிள் பீ பிக்சர்ஸ்' இன் மூவர் அடங்கிய படக்குழு இலங்கை வந்திருந்தது. மேலும் ஒரு சுவீடன் ஊடக குழு, போலந்து டி.வி.என் ஊடக குழு, பிபிசி ஊடக குழு ஆகியவை, படப்பிடிப்பிற்காக இலங்கை வருவதற்கான சாத்தியக்கூறு தொடர்பில் விசாரித்திருந்தன.

குறிப்பாக இலங்கையில் கொவிட் அவசரகால சூழ்நிலைகளில், வர்த்தகம், முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலா ஊக்குவிப்பு தொடர்பான முக்கிய தகவல்கள் தொடர்பான கொள்கை அறிக்கைகள் மற்றும் உள்ளூர் அமைச்சுக்களின் / நிறுவனங்களின் தினசரி புதுப்பிப்புகள் பற்றிய தகவல்களை இலங்கை தூதரக பணியகங்களுக்கு /பதவிகளுக்கு இப்பிரிவு தீவிரமாக வழங்கி வந்தது.

## செயலாற்றுகை கண்ணோட்டம்: தொழிற்பாட்டு பிரிவுகள்

## மனித வளங்கள் மற்றும் தூதரக முகாமைத்துவ பிரிவு

இப்பிரிவின் பிரதான பொறுப்பு, வெளிநாடுகளிலுள்ள 67 (வருட முடிவில் 63 ஆக்கப்பட்டது) இலங்கையின் இராஜதந்திரப் பணியகங்களின்/ பதவிகளின் சீரான நடைமுறை மற்றும் நிருவாகத்திற்கான வசதிகளை உறுதிப்படுத்துவதாகும். அதன்படி, அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் சம்பந்தப்பட்ட நிருவாக விதிமுறைகளின் பிரகாரம் இந்த தூதரக பணியகங்களுக்கான வளங்கள் மற்றும் வழிகாட்டல்களை இப்பிரிவு வழங்கியது. இலங்கை இராஜதந்திரப் பணியகங்களின்/ பதவிகளின் மனிதவள முகாமைத்துவ பிரச்சனைகள் இப்பிரிவினால் கையாளப்படுகிறது/ வழிகாட்டப்படுகிறது. *(தற்சமயம் ஆப்கானிஸ்தானின் அரசியல் சூழ்நிலைகள் காரணமாக, காபுலிலுள்ள இலங்கைத் தூதரகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. 36 தூதரகங்கள், 13 உயர்ஸ்தானிகரகங்கள், 2 ஐ.நா நிரந்தர வதிவிட உறுப்பினர்கள், 01 பிரதி உயர் ஸ்தானிகரகம், 13 கொன்சியுலர் அலுவலகங்கள் மற்றும் 01 பிரதிநிதி அலுவலகம் ஆகியவை உட்பட, மொத்தமாக 66 தூதரக பணியகங்கள் செயற்படுகின்றன.*

2021, ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையான காலப்பகுதியில் கீழே குறிப்பிட்ட சிறப்புப் பணிகள்/செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன;

இலங்கையின் முக்கியமான இருதரப்பு மற்றும் பல்தரப்பு உறவுகள் மற்றும் பொருளாதாரம், வர்த்தகம், அபிவிருத்தி மற்றும் பிற தேசிய நலன்களை விட்டுக்கொடுக்காமல், அந்நிய செலாவணி கையிருப்புகளைச் சேமிப்பதற்காக, அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கேப, இப்பிரிவானது 31 டிசம்பர் 2021 இன் படி வெளிநாடுகளில் உள்ள பின்வரும் இராஜதந்திர தூதரகங்கள்/பதவிகளை தற்காலிகமாக மூடப்படுவதை ஒருங்கிணைத்தது:

i. நைஜீரியா கூட்டாட்சிக் குடியரசிலுள்ள இலங்கையின் உயர்ஸ்தானிகரகம்
ii. ஜேர்மனி, ஃபிராங்க்ஃபேர்ட் இலுள்ள இலங்கை கொன்சியுலர் நாயகம் அலுவலகம்
iii. சைப்பிரஸ் இலுள்ள இலங்கை கொன்சியுலர் நாயகம் அலுவலகம்

35 தூதரக தலைவர்களின்/ பதவிகளின் நியமனங்கள் செயன்முறைப்படுத்தப்பட்டன. சியோல், அடிஸ் அபாபா, ரோம், கன்பரா மற்றும் மாலைதீவு உட்பட தூதரக தலைவருக்கான 10 நியமனங்கள் செயன்முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

40 தூதரக தலைவர்களின்/ பதவிகளின் கடமைக்கால நிறைவு தொடர்பான செயன்முறைகள் பூர்த்திசெய்யப்பட்டன.

ஜனாதிபதி செயலகத்திலிருந்தான இசைவு கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து, வர்த்தக திணைக்களத்திலிருந்து 22, பாதுகாப்பு அமைச்சின் 10 அதிகாரிகள், தொழிலாளர் அமைச்சிலிருந்து 10, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திலிருந்து 21, இலங்கை கணக்காளர் சேவையிலிருந்து 01 மற்றும் இன்னொருவர் என 77 இராஜதந்திர தரத்திலுள்ள அதிகாரிகளின் நியமனங்கள் செயன்முறைப்படுத்தப்பட்டன. அத்துடன் வர்த்தக திணைக்களத்திலிருந்து 04, பாதுகாப்பு அமைச்சின் 04 அதிகாரிகள், தொழிலாளர் அமைச்சிலிருந்து 01, மற்றும் 03 இ.நி.சே அதிகாரிகள் ஆகியோரின் கடமைக்காலம் முடிந்து திரும்புவதற்கான ஏற்பாடுகளும் நிறைவேற்றப்பட்டன. தூதரக பணியகங்களில் முகாமைத்துவ சேவை அலுவலரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டு, 114 அலுவலர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

(இதுவரையில் 111 அதிகாரிகள் தூதரக பணியகங்களில் கடமைகளை ஆரம்பித்துள்ளனர். 03 அதிகாரிகளுக்கான பயண ஏற்பாடுகள் செயன்முறைப்படுத்தப்பட்டு வருகின்றது).

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரக பணியகங்களில் தன்உதவியாளர் பணிநிலைப்பிரிவிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை நிறைவடைந்து நாற்பத்து நான்கு (44) பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் நாற்பத்தி ஒன்று (41) தன்உதவியாளர்கள் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

வெளிநாட்டிலுள்ள இலங்கை தூதரக பணியகங்களில்/பதவிகளில் இணைக்கப்பட்ட உள்நாட்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சுமார் 100 அலுவலர்களின் நியமனங்கள், பதவி நீட்டிப்புகள், பணிநீக்கங்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான விடயங்கள் கையாளப்பட்டன.

தூதரக தலைவர்களின் முப்பத்து மூன்று (33) அந்தந்த நாட்டுக்கான உத்தியோகபூர்வ விஜயங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஒன்பது நடமாடும் கொன்சியுலர் சேவைகள் நடாத்தப்பட்டன. த.தொ அலுஅலர் 4, தட்டச்சாளர் 4, கொன்சியுலர் உதவியாளர் 2 மற்றும் நெறிமுறை உதவியாளர் 3 உட்பட்டோர் இக்காலப்பகுதியில் இடமாற்றம் செய்யப்பட்டனர். சாரதிகள் மற்றும் உதவியாளர் 10 பேர், அமைச்சின் சாரதிகள் 14 பேர் ஆகியோரின் ஆட்சேர்ப்புத் தெரிவுக்கான பிரிவு பூர்த்திசெய்யப்பட்டது.

பெய்ஜிங் இலங்கை தூதரகத்திற்கான பிரதி தூதரக தலைவர் பதவிக்கும், டாக்கா உயர்ஸ்தானிகரகத்தில் வர்த்தக செயலாளர் பதவிக்கும் பணிநிலைப் பிரிவினை உருவாக்குவதற்கான அங்கீகாரம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்டது. மிலான் கொன்சியுலர் நாயகம் அலுவலகத்தில் முகாமைத்துவ அலுவலருக்கான பதவி உருவாக்கத்திற்கும் ரோம் தூதரகத்திலிருந்து வர்த்தக பிரிவை மிலான் கொன்சியுலர் நாயகம் அலுவலகத்திற்கு மாற்றுவதற்குமான அனுமதி காத்திருக்கப்படுகிறது.

20 இ.வெ.சே செயலாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான இடமாற்றச் சபை 2021/2022 செயன்முறை இலகுவாக்கப்பட்டது. இச்சபையின் பரிந்துரையில் இடமாற்றம் செய்யப்பட்ட 8 இ.வெ.சே அதிகாரிகளின் கடமை ஏற்புக்கான வசதியை இப்பிரிவு மேற்கொண்டது.

பாராளுமன்றம், ஜனாதிபதி செயலகம், சட்டமா அதிபர் மற்றும் கணக்காய்வாளர் நாயகம், ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் ஆகியவற்றுக்கான கேள்விகளுக்கான பதில்கள், பணியாளர் நியமனம், செலவின நடைமுறைகள் போன்ற விடயங்கள் தொடர்பான அறிக்கைகளை இப்பிரிவு தொடர்ந்து தயாரித்து வந்தது. தகவல் அறியும் உரிமை விசாரணைகளுக்கான உள்ளீடுகளைச் சமர்ப்பித்தல் மற்றும் இராஜதந்திர மற்றும் இராஜதந்திர அதிகாரிகளுக்கு எதிரான புகார்கள் தொடர்பான விடயங்களும் இந்தப் பிரிவால் கையாளப்பட்டன.

440 இற்கும் மேற்பட்ட தூதரக அலுவலர்களின் சம்பள மாற்றங்கள் செயன்முறைப்படுத்தப்பட்டன.

ருமேனியா மற்றும் ஸ்பெயினில் முன்மொழியப்பட்ட இரண்டு (02) தூதரகங்களுக்கான பணியாளர் பதவிகளை உருவாக்குவதற்கும், மடகாஸ்கரில் ஒரு (01) துணைத் தூதரக பொது அலுவலகத்தை நிறுவுவதற்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் (DMS) ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்தாலியின் சிசிலியில் உள்ள கொன்சியுலர் நாயகம் அலுவலகத்திற்கான பணிநிலைப்பிரிவினை உருவாக்குவதற்கான நிதி அமைச்சின் அங்கீகாரம் நிலுவையில் உள்ளது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவுடன் இணைந்து, 26 இ.வெ.சே அதிகாரிகளின் பதவி உயர்வுகள் செயன்முறைப்படுத்தப்பட்டன. மேலும் ஒரு பதவி உயர்வு வளர்ச்சி நிலையிலுள்ளது.

எட்டு இ.வெ.சே அதிகாரிகளின் இளைப்பாற்றுச் செயன்முறை பூர்த்தி, ஆறு செயன்முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தாய்நாட்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்களின் கல்வி உதவிப்பண கோரிக்கைகளை சீரமைத்தல் தொடர்பான புதிய சுற்றறிக்கை இல. 223, 20 ஏப்ரல் 2021 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி, 75% கல்வி உதவித்தொகை, 5-20 வயதுக்குட்பட்ட, அதிகபட்சம் இரு பிள்ளைகளுக்கு மட்டுமே வழங்கப்படும்.

தாய்நாட்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர்கள் நாடு திரும்பும் தேவைகளின் சீரமைப்பு தொடர்பான, 25 ஜனவர் 2021 ஆம் திகதிய புதிய தகவல் சுற்றறிக்கை இல. 222 வெளியிடப்பட்டது.

இடமாற்ற பயணத்திற்கான, செலவு ஈட்டுக் கோரிக்கை தொடர்பான, 05 மே 2021 ஆம் திகதிய, அமைச்சின் புதிய தகவல் சுற்றறிக்கை இல.224 வெளியிடப்பட்டது.

## சட்டப்பிரிவு

### இப்பிரிவின் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் மற்றும் சாதனைகள்

வெளிநாட்டு அமைச்சின் சட்டப் பிரிவின் பிரதான பணியானது, வெளிநாட்டமைச்சின் செயலாளரூடாக, சர்வதேச சட்டங்கள் குறித்த விடயங்களில் வெளிநாட்டு அமைச்சருக்கும், அமைச்சின் ஏனைய பிரிவுகளுக்கும், வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரக பணியகங்களுக்கும் சட்ட ஆலோசனைகள் வழங்குவதாகும். மேலும் இச்சட்டப்பிரிவானது, இலங்கை அரசாங்கத்தின் ஒப்பந்த களஞ்சியமாகவுமுள்ளது.

சட்டப் பிரிவு அனைத்து கொள்கை முடிவுகளின் சட்ட அம்சங்கள் மற்றும் குறிப்பாக பிராந்திய உரிமைகோரல்கள் மற்றும் எல்லைகள், பயங்கரவாதம் தொடர்பான பிரச்சனைகள், ஒப்பந்தங்களின் உறவுகளை அங்கீகரித்தல், இராஜதந்திர விலக்குரிமைகள் மற்றும் சலுகைகள், ஐ.நா.வின் பொருளாதாரத் தடைகள் ஆட்சி போன்ற அவ்வப்போது எழும் சர்வதேச பிரச்சினைகள் மற்றும் ஒருதலைப்பட்சமான தடைகள் போன்றவை பற்றியவற்றில் ஆலோசனைகளை வழங்குகிறது. சட்டப்பிரிவின் அதிகாரிகள், வெவ்வேறும் தொழில் விற்பன்னர் குழுக்களிலும் அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். 01 அக்டோபர் 2021 முதல் 31 டிசம்பர் 2021 வரையான காலகட்டத்தில் இப்பிரிவு, ஜனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இல. PS/SP/SB/ Circular/06/2019 இன் பிரகாரம், 250 இற்கும் மேற்பட்ட பு.உ.ஒப்பந்தங்களுக்கு/ உடன்படிக்கைகளுக்கு சட்ட அவதானிப்புகளை/ சட்ட இசைவுகளை வழங்கியது. கூடுதலாக, பின்வரும் முக்கிய செயலாற்றுகைகளையும் சட்டப்பிரிவு அடைந்தது;

**கடல் சட்டம் -** தேசிய அதிகார வரம்பிற்கு அப்பால் கடல் உயிரியல் பன்முகத்தன்மை பற்றிய சாசனம் குறித்த பேச்சுவார்த்தையை நடத்துவதற்கென திட்டமிடப்பட்ட 4 ஆவது அரசாங்கங்களுக்கு

இடையிலான மாநாட்டில் அமைச்சுக்களுக்கிடையிலான கரிசனைகளைக் கோருவதற்கும் இலங்கையின் நிலைப்பாட்டினை உருவாக்குவதற்கும் ஒரு தேசிய குழுவை ஸ்தாபிப்பதற்கு இச்சட்டப்பிரிவு முயற்சியெடுத்தது.

**இலங்கையின் கடலடி அடுக்குத்தட்டு குறித்த சமர்ப்பிப்பு** – இலங்கையின் சமர்ப்பிப்பிற்குச் சார்பாக, கடலடி அடுக்குத்தட்டு எல்லைகள் குறித்து ஐ.நா ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உபகுழுவிற்கும் இலங்கைக் குழுவிற்கும் இடையில் ஏற்கனவே 9 சுற்று கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. உப ஆணைக்குழுவின் அனைத்து மேலதிக தேவைகளும் வழங்கப்பட்டுள்ளன, மற்றும் கடலடி அடுக்குத்தட்டின் வெளிப்புற வரம்புகளை இறுதி செய்வதற்கு உட்பட்டு, இலங்கையின் கடலடி அடுக்குத்தட்டை நிறுவுவதற்குத் தேவையான நான்கு அளவுகோல்களை இலங்கை பூர்த்தி செய்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்வதன் மூலம் இலங்கையின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. துணை ஆணைக்குழுவுடனான கூட்டம், நியூயோர்க்கில் டிசம்பர் 15-18 வரை இடம்பெறும் அதன் 54 ஆவது அமர்வின்போது, நடைபெறும். இடைப்பட்ட காலத்தில், தேசிய சமுத்திர விவகாரங்கள் ஆணைக்குழுவானது, தென் மேற்கு பகுதி குறித்த இலங்கையின் 2 ஆவது சமர்ப்பிப்பில் ஈடுபடுகிறது. குறிப்பிட்ட பணித்தேவைகளில் சட்டப்பிரிவு தே.ச.வி. ஆணைக்குழுவிற்கு உதவி வருகிறது.

**விலக்குரிமைகள் மற்றும் முன்னுரிமைகள்** – வரவேற்கும் நாடு உடன்படிக்கையை நிறைவேற்ற GCF உடன் அமைச்சுக்களுக்கிடையிலான இரண்டு கூட்டங்கள் இடம்பெற்றன.

**சர்வதேச வர்த்தகச் சட்டம் குறித்த ஐக்கிய நாடுகள் சாசனம் (UNCITRAL**) – முதலீட்டு நாடுகளின் பிணக்குகளைத் தீர்த்தல் குறித்த UNCITRAL பணிக்குழு III இன் 40 ஆவது அமர்வு பெப்ரவரி 2021 மற்றும் மே 2021 இல் மெய்நிகராக இடம்பெற்றது. வெளிநாட்டு அமைச்சு மற்றும் சட்டமாஅதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகள் இலங்கையின் நிலைப்பாட்டைத் தெரிவித்தனர். பணிக்குழுவின் அமர்வுகள் காலத்திற்குக் காலம் இடம்பெற்றதுடன், சட்டமாஅதிபர் திணைக்களத்துடன் சட்டப்பிரிவு கலந்துகொண்டு, இலங்கையின் கருத்துக்களை வழங்கியது.

**முதலீடு –** சட்டமா அதிபர் திணைக்களம், முதலீட்டுச் சபை, இவ்வமைச்சின் சட்டப்பிரிவு மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரிவு ஆகியவற்றின் பிரதிநிதிகள் இணைந்து ஒரு புதிய இருதரப்பு முதலீட்டு ஒப்பந் மாதிரியை உருவாக்கின. இது பிற நாடுகளுக்கு அனுப்பப்பட்டு, இலங்கையுடன் முதலீட்டு ஒப்பந்தம் கோரப்பட்டது. சில நாடுகளுடன் இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நிலுவையிலுள்ளன. முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பரஸ்பரம் பாதுகாப்பு குறித்த இருதரப்பு ஒப்பந்தத்தின் இரு சுற்று பேச்சுவார்த்தைகள் ஐக்கிய அரபு அமீரகத்துடனும் டுபாயுடனும் முறையே 18-19 அக்டோபர் 2021 மற்றும் 24-26 நவம்பர் 2021 இல் மெய்நிகராக இடம்பெற்றன.

**மூலோபாய வர்த்தக கட்டுப்பாட்டு சட்டங்களை நடைமுறைப்படுத்தல்**- அமைச்சரவையினால், மூலோபாய வர்த்தக கட்டுப்பாட்டு சட்டங்களை நடைமுறைப்படுத்தல் சட்டக்குழு அங்கீகரிக்கப்பட்டு, அதில் சட்டப்பிரிவு பங்களிப்புக்களை வழங்கியது. இது குறித்த உள்நாட்டு சட்டவாக்க வரைவு இறுதிக்கட்ட த்திலுள்ளது.

**புலம்பெயர்தல்**:

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதக்கடத்தல் செயல் திட்டம் 2021-2025, மனிதக்கடத்தல் செயற்குழுவினால் இறுதிப்படுத்தப்பட்டது. இதில் சட்டப்பிரிவு பிரதிநிதிப்படுத்தியது. அமெரிக்க இராஜாங்க அமைச்சின் வருடாந்த மனிதக்கடத்தல் அறிக்கையின் 2 ஆம் அடுக்கு கண்காணிப்பு பட்டியலில் இலங்கை இடம்பெற்றுள்ளது.

**மீள அனுமதித்தல்** –

20 ஜூலை 2021 அன்று, 7 ஆவது வருடாந்த கூட்டு மீள அனுமதித்தல் குழு மெய்நிகராக கூடியபோது, நெறிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் முன்னேற்றமான கருத்தொருமைப்பாடு எட்டப்பட்டது. ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான, வரைவு மீள அனுமதித்தல் உடன்படிக்கையையும் அதன் நெறிமுறையை நடைமுறைப்படுத்தலையும் இறுதிப்படுத்துவதற்காக, மார்ச் 2021 இல் ரஷ்யாவுடன் 5 ஆவது சுற்று வல்லுனர் ஆலோசனைகள் மெய்நிகராக இடம்பெற்றது. 20 டிசம்பர் 2021 இல் அவுஸ்திரேலியாவுடன் மீள அனுமதித்தல் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது.

**பரஸ்பர சட்ட உதவி, நாடுகடத்தல் மற்றும் கைதிகள் மாற்ற கோரிக்கை** – இம்மீளாய்வுக்காலத்தில் 22 பரஸ்பர சட்ட உதவிக்கான கோரிக்கைகள், 4 நாடுகடத்தல் கோரிக்கைகள் மற்றும் 01 கைதி இடமாற்ற கோரிக்கை ஆகியவை எளிதாக்கப்பட்டன.

**சர்வதேச மனிதநேய சட்ட விடயங்கள்**

ஜெனீவா உடன்படிக்கையின் 70ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நிகழ்வில், இச்சாசனம் பொது தளத்தில் கிடைக்கச்செய்வதற்காக, தேசிய IHL குழுவிற்கு வழங்கப்பட்ட ஜெனீவா உடன்படிக்கைகளின் சிங்களம் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு தொடர்பான உத்தியோகபூர்வ சரிபார்ப்பைப் பெறுவதற்கு நீதி அமைச்சு மற்றும் சட்ட வரைவுத் துறையுடன் இணைந்து இப்பிரிவு பணியாற்றியது. ஆட்களுக்கெதிரான கண்ணிவெடி தடை சாசனம் மற்றும் கொத்தணிக் குண்டு ஒப்பந்தம் போன்றவற்றை உள்நாட்டு சட்டவாக்கங்களாக இறுதிப்படுத்துவதற்கான செயன்முறைகள் இடம்பெற்று வருகின்றன. 26-29 ஏப்ரல் 2021 இல் இணையம் மூலமாக நடைபெற்ற 5 ஆவது பொதுநலவாய சர்வதேச மனிதநேயச் சட்டக் குழுவின் கூட்டத்திற்கான நிலைப்பாட்டுப் புதுப்பித்தல்களை சட்டப்பிரிவு வழங்கியது. 2021 அக்டோபர் 26-28 வரை நடைபெற்ற ஆசிய-பசிபிக் தேசிய சர்வதேச மனிதநேய சட்ட மெய்நிகர் நிபுணர் பரிமாற்றம் மற்றும் ஆயுத ஒப்பந்தங்களைச் செயற்படுத்துவதில் தேசிய முன்னுரிமைகள் மற்றும் சர்வதேச மனிதநேயச் சட்டக் குழுவின் பங்கு பற்றிய உலகளாவிய மனிதநேயச் சட்ட கூட்டம் உட்பட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நடத்திய பல சர்வதேச மனிதாபிமான சட்ட மன்றங்களில் சட்டப் பிரிவு பங்கேற்றது.

**அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட சில குழுக்களிலும் பிற குழுக்களிலும் சட்டப்பிரிவின் அதிகாரிகள் உறுப்பினர்களாக நியமனம் –** தேசிய சமுத்திர விவகாரங்கள் குழுவிற்கான சட்ட உள்ளீடுகள் வழங்கப்பட்டன. அமெரிக்காவிற்கு சமர்ப்பிக்கும் வருடாந் மனிதக்கடத்தல் அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் இறுதிப்படுத்தலுக்கான கொள்கை வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. மூலோபாய வர்த்தக கட்டுப்பாடு குறித்த சட்டக்குழுவிற்கான கொள்கை மற்றும் மூ.வ.க குறித்த வரைவுச் சட்டங்களை இறுதிப்படுத்துவதற்கான சட்ட உள்ளீடுகள் வழங்கப்பட்டன. பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களை பட்டியலிடுதல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்தல் ஆகியவற்றில் UNSCR 1373 குழுவிற்கு சர்வதேச சட்டக் கண்ணோட்டத்தில் கொள்கை வழிகாட்டுதல் வழங்கப்பட்டது. அரச சார்பற்ற நிறுவன சட்ட மீளாய்வுக் குழுவிற்கு கொள்கை மற்றும் சட்ட வழிகாட்டுதல் வழங்கப்பட்டதுடன், சட்டத்தை இறுதி செய்யும் பணியில் உள்ளது. நிதிப் புலனாய்வு அலகு, தேசிய ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றில் வெளிநாட்டமைச்சின் செயலாளருக்கு உதவி, பிரதிநிதித்துவப்படுத்தியது. பணமோசடி தொடர்பான ஆசிய பசிபிக் குழு (APG) மற்றும் நிதி நடவடிக்கை பணிக்குழு (FATF) தொடர்பான அனைத்து அமைச்சின் பணிகளையும் இப்பிரிவு மேற்கொண்டது.

APG பரஸ்பர மதிப்பீட்டிற்குத் தேவையான நிதிப் புலனாய்வுப் பிரிவினால் நடத்தப்படும் தேசிய இடர் மதிப்பீட்டின் இரண்டு குழுக்களின் உறுப்பினராக, சட்டப் பிரிவு அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. வணிகக் கப்பல் சட்டம், 1971 இன் எண். 52 மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கும் கப்பல் முகவர் சட்டம், 1972 இன் எண். 10 ஆகியவற்றின் திருத்தங்களுக்கான தேசியக் குழுவிற்கு சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் தொடர்புடைய சர்வதேச மரபுத் தரங்களைப் பிரதிபலிக்கும் வகையில் உள்ளீடுகள் வழங்கப்பட்டன. பயங்கரவாதத் தடுப்புச் சட்ட மீளாய்வுக் குழுவில் சட்டப் பிரிவு பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது மற்றும் ஒதுக்கப்பட்ட சில முக்கியப் பணிகளை இறுதி செய்வதற்குக் குழுவிற்கு உதவும் உள்ளீடுகளை இப்பிரிவு வழங்கியது.

- கவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டம் மற்றும் அணுஆயுத/ அணுசக்தி குறித்த சட்ட கருத்தரங்கங்கள் மற்றும் கூட்டங்களில் பங்கேற்பு மற்றும் பங்களிப்பு.

**முதலீடு தொடர்பில் UNESCAP - FTA** – முதலீடு குறித்த ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐ.நா பொருளாதார, சமூக ஆணைக்குழு – சுதந்திர வர்த்தக உடன்படிக்கை காலத்திற்குக் காலம் புதுப்பிக்கப்பட்டது.

**BIMSTEC மற்றும் IORA** – சட்டப்பிரிவு பிரதிநிதித்துவம் செய்து, சட்ட அவதானிப்புக்களை வழங்கியது.

**ஜி.எஸ்.பி பிளஸ் செயன்முறை மற்றும் இலங்கைக்கெதிரான ஐ.நா மனித உரிமைக் கழக தீர்மானங்கள்** –சட்டப்பிரிவு தேவைப்படும்போது சட்ட உதவிகளை வழங்கியது.

**நீதிமன்ற வழக்குகள்** – வெளிநாட்டு அமைச்சினை பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள உயர் நீதிமன்ற அடிப்படை உரிமைகள் வழக்குகள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ரிட் விண்ணப்பங்கள் பற்றிய அவதானிப்புகளை சட்டப் பிரிவு செயற்படுத்தி வழங்கியுள்ளது.

**முழு அதிகாரங்களுக்கான சாதனங்களை வழங்குதல் -** கௌரவ அமைச்சரின் கையொப்பத்திற்காக, ஒன்பது முழு அதிகாரத்திற்கான சாதனங்கள் இப்பிரிவினால் தயாரிக்கப்பட்டன.

**அமைச்சரவை அவதானிப்புகள்** – இக்காலகட்டத்தில் கௌரவ வெளிநாட்டு அமைச்சரின் 90 அமைச்சரவை அவதானிப்புகள் சட்டப்பிரிவினால் தயாரிக்கப்பட்டன.

**வெளிநாட்டு அழைப்பாணைகள்** – 31 டிசம்பர் 2021 வரை இப்பிரிவு 220 வெளிநாட்டு அழைப்பாணைகளைச் செயன்முறைப்படுத்தியது.

**தகவல் அறியும் உரிமை கோரிக்கைகள் மற்றும் உடன்படிக்கைகள்/ புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

**தகவல் அறியும் உரிமை –** 31 டிசம்பர் 2021 வரை 17 கோரிக்கைகள் எளிதாக்கப்பட்டன.

**பேச்சுவார்த்தை நடத்தி முடிக்கப்பட்ட ஒப்பந்தங்கள்**

- 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆம் திகதி, செக் குடியரசுடன் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. துருக்கியுடனான சுங்க ஒத்துழைப்பு ஒப்பந்தம் 26 நவம்பர் 2021 அன்று கைச்சாத்திடப்பட்டது. 21 டிசம்பர் 2021 அன்று, தேயிலை/எண்ணெய் பண்டமாற்று ஏற்பாட்டிற்காக ஈரானுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

- புவியியல் குறியீடு மற்றும் சர்வதேச தர சான்றிதழின் வளர்ச்சியின் மூலம் மதிப்பு உருவாக்கத்தை ஆதரிப்பதற்காக; Agence Finacasise De Development (AFD) (முகவர்) இற்கும், Centre de Cooperation International Recherche Agronomique pour le Development (CIRAD) (தொழில்நுட்ப பங்காளர்) மற்றும் இலங்கை தேயிலைச் சபை (பயனாளர்) இடையில் முத்தரப்பு Fexte பங்குடைமை உடன்படிக்கை இசைவாக்கப்பட்டது.

- வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் நிதி ஏய்ப்பினைத் டுப்பதற்குமென, செக் குடியரசு, சைப்ரஸ், ஹங்கேரி, டென்மார்க், மால்டா, துருக்கி, இந்தியா (நெறிமுறை), உக்ரைன் மற்றும் சவூதி அரேபியா இராச்சியம் ஆகிய நாடுகளுடனான உடன்படிக்கைகளை இறுதிப்படுத்துவதில் இப்பிரிவு தீவிரமாகப் பங்கேற்றது.

- பிலிப்பைன்ஸ், மியன்மார், ஆப்கானிஸ்தான், பூட்டான், கம்போடியா, கனடா, கயானா ஆகிய நாடுகளுடனான விமா சேவைகள் உடன்படிக்கைகள் இறுதிப்படுத்தப்பட்டு வருகின்றன. இஸ்ரேலுடனான விமான சேவைகள் நெறிமுறை இறுதிப்படுத்தப்பட்டு, கைச்சாத்திட தயாராகவுள்ளது.

30 செப்டெம்பர் 2021 வரையான காலப்பகுதியில், சட்டப்பிரிவானது, கிட்டத்தட்ட 600 உடன்படிக்கைகள்/ பு.உ.ஒ ஐ பூர்த்திசெய்ததுடன், பல்வேறுபட்ட துறைகளில் 150 அளவிலானா ஆலோசனைகளையும் வழங்கியது.

“உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி” துறையில் 77 உடன்படிக்கைகள்/ புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்த 77 சட்ட அவதானிப்புக்களை இப்பிரிவு வழங்கியது.

ஒப்பந் களஞ்சிய பதிவுகளின்படி, இசைவு படுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களில்; பாதுகாப்பு ஒத்துழைப்பு, முதலீட்டு வாரியத்தில் ஒத்துழைப்பு, விசா விலக்குகள், இராஜதந்திர உறவுகள், அரசியல் ஆலோசனை/கூட்டு அறிக்கை, கலாச்சார ஒத்துழைப்பு, இளைஞர்கள் மேம்பாடு, தொழில் மற்றும் இதர பயிற்சி, விவசாய ஒத்துழைப்பு, சுற்றுலா, கல்வி மற்றும் பொழுதுபோக்கு. ஆகிய பகுதிகளில் 22 மட்டுமே சட்டப்பிரிவில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. ஆனபோதிலும் கைச்சாத்திடப்பட்ட பல உடன்படிக்கைகள்/ பு.உ ஒபந்தங்கள் இன்னமும் இணை முகவரமைப்புக்களிடமிருந்து கிடைக்கப்பெறவில்லை.

**பயங்கரவாத தடைச் சட்ட திருத்தம்** – பயங்கரவாத தடைச் சட்ட திருத்தங்களை இறுதிப்படுத்துவதில் சட்டப்பிரிவின் பிரதிநிதி கருவியாகவிருந்தார்.

**சட்டக் கருத்துக்கள் வழங்குதல்** – வெளிநாட்டமைச்சின் செயலாளருக்கும், அமைச்சின் ஏனைய பிரிவுகளுக்கும், வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களுக்கும், இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் மற்றும் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களுக்கும் இப்பிரிவினால் 30 இற்கும் மேற்பட்ட சட்டக் கருத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன.

## வெளிநாட்டு சொத்து முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பிரிவு

2021 ஆம் வருட காலத்தில் வெளிநாட்டு சொத்து முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவானது; வெளிநாடுகளில் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்களைப் புதுப்பித்தல்/ கட்டுதல், அசையும்/ அசையா சொத்துக்களைப் பராமரித்தல், சொத்துக்களை வாங்குதல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொண்டது. ஆனபோதிலும் கொவிட் 2021 நோப்பரவல் காரணமாகவும் பாதீட்டுக் கட்டுப்பாடுகள் காரணமாகவும் சில செயற்பாடுகள் பிற்போடப்பட்டன. மேலும், தூதரக பணியகங்களின் தலைவர்கள் உட்பட, தாய்நாட்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கிட்ட த்தட்ட 400 அலுவலர்களுக்கான பயண (உள்வருகை/ வெளிச்செல்லல்) மற்றும் ஏற்பாட்டு ஒழுங்குகளையும் இப்பிரிவு செய்தது.

இப்பின்னணியில், 2021 காலத்தில் இப்பிரிவின் குறிப்பிடத்தக்க வளர்ச்சிகளைப் பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்;

**வெளிநாட்டுச் சொத்துக்கள் பெறுகை மற்றும் பராமரிப்பு**

**அசையும் சொத்துக்கள்:**

**வாகனங்கள்**

செயற்பாட்டு குத்தகை மற்றும் நிதிக் குத்தகை முறைகள் மூலம், தேர்ந்தெடுக்கப்பட்ட பணிகள்/பதவிகளுக்கு 10 வாகனங்களை நேரடியாக வாங்குவதற்கு நிதி அமைச்சு அனுமதி வழங்கியது. ஆயினும், மேற்கூறிய வாகனங்களை கொள்வனவு செய்வதைத் தவிர்க்குமாறும், இன்றுவரை கொள்வனவு உத்தரவுகள் வழங்கப்படாவிடின், நிலவும் நிதி நெருக்கடிகளை கருத்தில் கொண்டு, மேற்படி கொள்முதலை 2022 ஆம் ஆண்டு வரை ஒத்திவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

**பிற பிரதான சொத்துக்கள்:**

வெளிநாடுகளிலுள்ள தூதரக பணியகங்களின் செயற்பாட்டிற்காக குறைந்தபட்ச தேவைகளை வழங்குவதற்காக, அவை விடுத்த கோரிக்கையின் பேரில், ஜனவரி முதல் டிசம்பர் 2021 இறுதி வரை, அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் வாங்குவதற்கும், தொழிற்சாலை, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வாங்குவதற்குமென இலங்கை 40.90 மில்லியன் ரூபாவை வழங்க அமைச்சு அனுமதியளித்தது.

அதேவேளை, இக்காலகட்டத்தில் வெளிநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்களைப் பராமரிப்பதற்காக, 3.65 மில்லியன் இலங்கை ரூபாய்களை வழங்குவதற்கும் இவ்வமைச்சு அங்கீகாரம் வழங்கியது.

**பாதுகாப்பு அஞ்சல் பிரிவு**

தற்போதைய தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக, பெரும்பாலான இடங்களுக்கு வழக்கமான விமானங்கள் வழக்கமான அடிப்படையில் இயக்கப்படவில்லை. எனவே, இப்பிரிவு DHL போன்ற உலகளாவிய விரைவு அஞ்சல் சேவை நிறுவனங்களுடன் தங்கு தடையற்ற சேவையை ஆரம்பித்து, வெளிநாடுகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கை தூதரகங்களுக்கு இராஜதந்திர பைகளை அனுப்பி வைப்பதற்காக, தபால் பைகளை உரிய நேரத்தில் விரைவாக வழங்குவதை உறுதி செய்தது.

மேலும், பல்வேறு தலைநகரங்களில் இருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட கோவிட் 19 தொடர்பான மருத்துவ உபகரணங்கள்/பாதுகாப்புப் பொருட்களை அந்தந்த தூதரகங்கள் மற்றும் உள்ளூர் சுகாதார அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து அனுப்புவதற்கு இப்பிரிவு உதவியது.

### தகவல் தொழில்நுட்ப அலகு

த.தொ பிரிவு வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரக பணியகங்கள் / பதவிகள் மற்றும் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள பிற நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து தினசரி அடிப்படையில் கிடைக்கும் 600 – 700 தொலைநகல்கள் மற்றும் மின்னஞ்சல்களைக் கையாளுகிறது. தகவல் தொழில்நுட்பப் பிரிவு வாரத்தின் ஏழு நாட்களும் 24 மணி நேரமும் வேலை செய்கிறது. இவ்வலகின் பணியாளர்கள் சுழற்சிமுறை நேர அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

### பயண அலகு

பயண அலகு, 2021 காலத்தில் 23 உத்தியோகபூர்வ விஜயங்களைக் கையாண்டு, அரசாங்க அதிகாரிகளின் தனிப்பட்ட மற்றும் உத்தியோகபூர்வ விஜயங்களுக்காக 349 TPN களை வழங்கியது.

## நெறிமுறைப் பிரிவு

2021 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான செயல் திட்டத்தின் அடிப்படையில், வெளிநாட்டு அமைச்சின் நெறிமுறைப் பிரிவானது, கீழ்வரும் பணிக்கடப்பாடுபாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றியது. இங்கு இணைக்கப்பட்டுள்ள பட்டியலின்படி, இப்பிரிவு உயர்மட்ட விஜயங்களையும் ஒருங்கிணைத்தது.

வெளிநாடுகளில் கௌரவ துணைத்தூதுவர்களை நியமித்தல் தொடர்பான நிறுவன ரீதியான செயன்முறைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம், 10 புதிய உதவி தூதர்கள் மற்றும் 5 புதிய வெளிநாட்டு கௌரவ தூதர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். மேலும் 19 சேவை நீடிப்புக்களும் வழங்கப்பட்டன.

ஆறு (06) கொன்சியுலர் நாயகங்கள், பதினெட்டு (18) தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள், ஒரு (1) பிரதி உயர்ஸ்தானிகர் உட்பட்ட இருபத்தைந்து (25) தூதரக தலைவர்கள் நியமிக்கப்பட்டனர்.

இருபத்து நான்கு தூதுவர்கள் தமது சான்றாதாரப் பத்திரங்களைச் சமர்ப்பித்தனர்.

| | |
|---|---|
| முக்கிய பிரமுகர் ஒதுக்கீடுகள் | – 480 |
| இராஜதந்திரிகள் மற்றும் கௌரவ துணைத்தூதுவர்களுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் | – 702 |
| இராஜதந்திரிகளுக்கு வழங்கப்பட்ட விமான நிலைய அனுமதிச்சீட்டுகள் | – 176 |
| இராஜதந்திர இசைவாணைகள் | |
| விமானம் | - 110 |
| கப்பல் | - 47 |
| வீசா வழங்குதல் | |
| தூதரகங்கள்: | |
| நுழைவு வீசா | -1218 |
| வதிவிட வீசா | - 745 |
| நிறுவனங்கள்: | |
| நுழைவு வீசா | - 483 |
| வதிவிட வீசா | - 289 |
| சுங்க இசைவுச் சான்றிதழ்களுக்கான அனுமதி | - 1318 |
| இராஜதந்திரிகளுக்கான புதிய வாகனங்களின் பதிவு | - 105 |
| அகற்றப்பட்ட தீர்வையற்ற வாகனங்கள் | - 225 |
| வழங்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திர அனுமதிகள் | - 130 |

## பொது நிருவாகப் பிரிவு

அமைச்சின் பொது நிருவாகப் பிரிவானது; நிருவாகக் கொள்கை திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல், அனைத்து செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு அலுவல்கள், மனித வள திட்டமிடல் மற்றும் நாடளாவிய சேவைகளிலுள்ள அலுவலர்களின் முன்னேற்றம், அபிவிருத்தி அலுவலர்கள், முகாமைத்துவ சேவை அலுவலர்கள், ஆரம்ப சேவைகள் மற்றும் இலங்கை வெளிநாட்டுச் சேவை தவிர்ந்த, திணைக்கள சேவைகள் போன்ற பரந்தளவிலான துறைகளுக்குப் பொறுப்பானதாகும். இதேபோன்று; வெளிநாட்டமைச்சின் செயலாளரின் வழிகாட்டலுக்கேற்ப அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் பாராளுமன்ற கேள்விகளுக்கான பதில்களைத் தயாரித்தல், பாராளுமன்ற குழுக்கள் மற்றும் ஆலோசனைக் குழுக்களுக்கான பதில்களைத் தயாரித்தல் போன்றவையும் நிருவாகப் பிரிவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

வழமையான கடமைகளைத் தவிர, 01 ஜனவரி 2021 முதல் 31 டிசம்பர் 2021 வரையான காலப்பகுதியில் பொது நிருவாகப் பிரிவினால் செயலாற்றப்பட்ட சிறப்புப் பணிகள் பின்வருமாறு:

**மனிதவள முகாமைத்துவம்**

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்  இடமாற்ற திட்டம் மூலமாக இவ்வமைச்சில் சேவையாற்றுவதற்கு திறமை வாய்ந்த முகாமைத்துவ சேவை அலுவலர்களை தெரிவு செய்வதற்காக, இணையம் மூலமான நேர்காணல்கள் நடாத்தப்பட்டன. 98 விண்ணப்பதாரிகள் நேர்காணப்பட்டு, தெரிவு செய்யப்பட்டவர்கள் தொடர்பில் அரசாங்க சேவைகள் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

அமைச்சின் மனித வளங்களை வலுப்படுத்தலைப் பொறுத்தவரையில், ஊழியர் செயலாற்றலை மேம்படுத்தவும், உற்பத்தித்திறனை ஊக்குவிக்கவுமென தொடர்ந்த பயிற்சித் திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன;

- இலங்கை மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழக பட்டதாரிகள், டிப்ளோமா சான்றிதழ் வைத்திருப்போர் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி நிறுவக மாணவர்கள் ஆகியோருக்காக உள்ளக பயிற்சிகள் வழங்கப்பட்டன. 50 மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது.
- கீழ்நிலை அலுவலருக்கு Advanced Ms Excel பயிற்சி
- வெளிநாட்டு தூதரக பணியகங்களில் சேவையாற்ற நியமிக்கப்பட்ட முகாமைத்துவ சேவை அலுவலர்களுக்கு கொன்சியுலர் சேவைகள் விழிப்புணர்வுத் திட்டம்
- ரநிலை அதிகாரிகளுக்காக, தேசிய மொழி நிறுவக திணைக்களத்தில் 200 மணித்தியால தமிழ் மொழி கற்கை நெறி .
- சேவைக் காரணங்களுக்காக 03 தரநிலை அதிகாரிகளுக்கு பட்டப்பின் டிப்ளோமா ஏற்பாடு செய்யப்பட்டது.
- அமைச்சின் அபிவிருத்தி அலுவலர் மற்றும் முகாமைத்துவ சேவை அலுவலர்களுக்காக திறன் கட்டமைப்பு பயிற்சி
- முகாமைத்துவ சேவை அலுவலர்களுக்காக அமைச்சில் நில அளவைச் சபையின் செயன்முறைகள் .
- அபிவிருத்தி அலுவலர் மற்றும் முகாமைத்துவ சேவை அலுவலர்களுக்காக ஒழுங்காற்றுச் செயன்முறை
- அலுவலக உதவியாளர்கள் மற்றும் வாகன சாரதிகளுக்காக இணையம் மூலமான அடிப்படை ஆங்கில கற்கை நெறி.

**சிறப்புத் தொழிற்பாடுகள் மற்றும் பராமரிப்பு அலுவல்கள்**

கொவிட்-19 நோய்ப்பரவலை எதிர்கொள்வதற்கு உதவும் சேவைகள் – வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரக பணியகங்களிலிருந்து திறமையாக ஒருங்கிணைக்கப்பட்டு தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் பிற சுகாதார உபகரணங்கள் பெறப்பட்டன. சகல அலுவலர்களதும் சுகாதாரம் மற்றும் தேகநலனை உறுதிசெய்வதற்காக பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன..

**தகவல் பாதுகாப்பு மேம்பாடு**

- .தொ பிரிவு தொடர்ந்தும் உயர்மட்ட இருதரப்பு, பல்தரப்பு மெய்நிகர் மற்றும் இருவேறு விதமான கூட்டங்களுக்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்கியது. 2021 ஜனவரி முதல் டிசம்பர் வரை 350 இற்கும் அதிகமான மெய்நிகர் கூட்டங்களுக்கு தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டது.

- அதிகரித்த மெய்நிகர் மாநாடுகள், தொலை வேலை முறைகள் மற்றும் புதிய சைஃபர் பாதுகாப்பிற்கான ஆபத்துக்களுக்கு ஆதரவளிப்பதற்காக, வலையமைப்பு மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் புதுப்பிக்கப்பட்டன.

- காகித பாவனை மற்றும் காபன் எச்சங்களைக் குறைத்து, ஈ-சைஃபர் தளத்தை அறிமுகப்படுத்தல் குறித்த கொள்கைகள் மற்றும் உட்கட்டமைப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

**பாராளுமன்ற விவகாரங்கள்**

- பல்வேறு அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பில் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்கள் சமர்ப்பித்தமைக்கு மேலதிகமாக, 26 அமைச்சரவைப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் அமைச்சரவை செயலகத்துடன் திறமையாக ஒருங்கிணைக்கப்பட்டது.

- அமைச்சு ஆலோசனைக்குழு மற்றும் பொது மனுக்கள் குறித்த குழு ஆகியவற்றிற்கு பதில்களை/ அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் ஒருங்கிணைக்கப்பட்டது.

**கொள்முதல் மற்றும் பராமரிப்பு**

- பொருந்தக்கூடிய விதிமுறைகளின்படி அனைத்து கொள்முதல் நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் செய்யப்பட்டன. உத்தியோகபூர்வ குடியிருப்புகள் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு பொருட்கள், பணிகள் மற்றும் சேவைகளை வாங்குவதற்காக 92 மில்லியன் செலவிடப்பட்டது. வெளிநாடுகளிலுள்ள அனைத்து இலங்கை தூதரக பணியகங்களின் தேவைகளுக்காக 2021 ஆம் ஆண்டில் 9 மில்லியன் பெறுமதியான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

- கட்டிடத் திணைக்களம், அரசாங்கத் தொழிற்சாலை மற்றும் மேல் மாகாண அதிகாரிகளின் (தொழில்துறை அபிவிருத்தி அதிகாரசபை) உதவியுடன் குடியரசுக் கட்டிடத்தின் வழக்கமான மற்றும் முறையான பராமரிப்பு தொடர்ந்த அதேவேளை, அதன் தொல்பொருள் மதிப்பு மற்றும் நேர்த்தியும் பாதுகாக்கப்பட்டது.

**ஏற்பாட்டியல் சேவைகள்**

- கண்டி, திருகோணமலை மற்றும் குருநாகலையில் 3 பிராந்திய கொன்சியுலர் அலுவலகங்கள் ஸ்தாபிப்பதற்கான ஒருங்கிணைப்பு மற்றும் ஏற்பாடு.

- வெளிநாட்டு அமைச்சினை ஒரே கட்டிடத்தில் இடம் மாற்றுவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் 06.09.2021 அன்று பெறப்பட்டது. இதை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

- நாடளாவிய அளவில் ஊரடங்குச் சட்டம் மற்றும் தனிமைப்படுத்தல் காலங்களின்போதும், வேலைக்குச் சமூகமளித்த கிட்டத்தட்ட அனைத்து அலுவலர்களுக்குமான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக, ஒப்பிடக்கூடிய எண்ணிக்கையிலான வாகன சாரதிகளுடன், 82 வாகனங்களின் தொகுதி திறமையாகப் பயன்படுத்தப்பட்டது.

- பொது நிதிக் கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, புதிய வாகனங்களை வாங்குவதில் கூடுதல் சுமையை ஏற்படுத்தாமல், இயங்கும் நேர பராமரிப்புக்காக போதுமான முதலீடுகளுடன், தற்போதுள்ள வாகனத் தொகுதியைத் தொடர அமைச்சு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

## உள்ளக கணக்காய்வு மாற்றும் விசாரணைப் பிரிவு

இப்பிரிவின் பிரதான பொறுப்புக்களாவன; அமைச்சு, வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரக பணியகங்கள்/ பதவிகள் மற்றும் இவ்வமைச்சின் அதிகார எல்லைக்குள் வரும் பிற நிறுவகங்களின் உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையை கண்காணித்தலும் மதிப்பிடலும் உட்பட, ஒட்டுமொத்த செயலாற்றுகை மற்றும் இணக்கத்திற்கான உச்ச மூலோபாய வழிகாட்டலை வழங்குவதாகும்.

- இவ்வமைச்சு, மற்றும் அதன் அதிகார எல்லைக்குள் வரும் பிற நிறுவனங்கள், தூதரக பணியகங்கள் ஆகியவற்றிற்காக 28 கணக்காய்வு விசாரணைகளை இப்பிரிவு மேற்கொண்டது.
- சம்பந்தப்பட்ட பிரிவுகள் மற்றும் தரப்பினருடன் ஒருங்கிணைந்து, 06 மார்ச் 2019 இல் இடம்பெற்ற COPA கூட்டத்தின்போது ஆலோசிக்கப்பட்ட 11 விடயங்கள் குறித்து, தொடர்நடவடிக்கை எடுக்கப்பட்டது.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களின் தீர்மானங்கள் குறித்து தொடர்நடவடிக்கை எடுக்கப்பட்ட து
- 13 கணக்காய்வு கேள்விகளுக்கான பதில்களைத் தொகுப்பதற்கான ஒருங்கிணைப்பு- 13 பதில்கள் வழங்கப்பட்டன.
- ரோம் இலுள்ள இலங்கைத் தூதரகம் தொடர்பாக இடம்பெற்றுவரும் உயர்நீதிமன்ற வழக்கில், இவ்வமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தி தகவல்கள் வழங்கப்பட்டன.

## *2021 இல் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்*




*2021நவம்பர் 01ஆந் திகதி ஐக்கிய இராச்சியம், ஸ்கொட்லாந்தில் நடைபெற்ற 'COP26' உலகத் தலைவர்கள் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றினார்*



*வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஐ.நாவின் உதவிச் செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜாவுடன் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான முன்னேற்றம் குறித்து கலந்துரையாடினார்.*



*அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸுடன் விரிவான கலந்துரையாடல்*



*வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சருடன் எரிசக்தி பாதுகாப்பு, அதிகரித்த வேலை வாய்ப்புக்கள் குறித்து கலந்துரையாடல்*



ஐக்கிய நாடுகளின் விஷேட அறிக்கையாளர் வெளிநாட்டு அமைச்சருடன் சந்திப்பு

மறைந்த பிரியந்த குமாரவின் குடும்பத்தின் நிதிப் பாதுகாப்பு தொடர்பான விவகாரங்கள் தொடர்பாக இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவருடன் வெளிநாட்டு அமைச்சர் கலந்துரையாடல்





பிம்ஸ்டெக்கின் செயலாளர் நாயகம் டென்சின் லக்பெலின் விஜயத்தின் போது, பிம்ஸ்டெக்கிற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை வெளிநாட்டு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் உறுதிப்படுத்தினார்.

'உலகளாவிய தொற்றுநோய்களுக்கு மத்தியிலும் நிலையான அபிவிருத்தி இலக்குகளில் இலங்கை தனது உலகளாவிய தரவரிசையை மேம்படுத்தியுள்ளது': நிலையான அபிவிருத்தி இலக்குகள் குறித்த 5வது தெற்காசிய மன்றத்தில் வெளியுறவுச் செயலாளர் தெரிவிப்பு






பிம்ஸ்டெக் செயலாளர் நாயகம் டென்சின் லெக்பெல் டாக்காவில் வெளிநாட்டு அமைச்சர் பீரிஸை மரியாதை நிமித்தம் சந்திப்பு



*லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் இலங்கை - ஐக்கிய இராச்சிய வர்த்தக சம்மேளனத்தை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் மற்றும் பிரித்தானியப் பிரதமரின் விசேட வர்த்தகத் தூதுவர் மேர்வின் டேவிஸ் பிரபு ஆகியோர் இணைந்து திறந்து வைத்த போது வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உரையாற்றினார்*

*CICA இன் 6வது அமைச்சர்கள் கூட்டத்தில் இலங்கை பங்கேற்பு*





*மொஸ்கோவில் நடைபெற்ற இருதரப்பு அரசியல் ஆலோசனைகளில் இலங்கையும் ரஷ்யாவும் வலுவான பங்காளித்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்தின*

*கோவிட்-19 மருத்துவ உபகரணங்கள் நன்கொடை*









## அத்தியாயம் 03

### 31 டிசம்பர் 2021 உடன் முடிவடைந்த வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை

### 3.1 நிதி செயலாற்றுகை அறிக்கை

ஏசீஏ- எப்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

| பாதீட்டு 2021 | | குறிப்பு | உண்மை நிலை 2021 | உண்மை நிலை திருத்தப்பட்ட 2020 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 9,369,712,663 | 9,385,178,602 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 2,076,010,925 | 1,452,471,015 | ஏசீஏ-4 |
| 35,000,000 | முற்பணக் கணக்குகள் | | 51,762,773 | 43,380,027 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| **35,000,000** | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **11,497,486,361** | **10,881,029,644** | |
| **35,000,000** | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **11,497,486,361** | **10,881,029,644** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | **100,000,476** | **943,415** | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **11,397,485,885** | **10,880,086,229** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | ஏசீஏ-2(ii) |
| 7,319,339,500 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 6,803,407,447 | 6,639,945,810 | ஏசீஏ-2(ii) |
| 4,210,440,500 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 3,907,979,711 | 3,289,376,733 | ஏசீஏ-2(ii) |
| 616,300,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 470,003,154 | 437,731,433 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ii) |
| 40,500,000 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | 6,368,744 | 5,238,253 | ஏசீஏ-2(ii) |
| **12,186,580,000** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **11,187,759,056** | **10,372,292,229** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 350,220,000 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 120,744,787 | 132,234,122 | ஏசீஏ-2(ii) |
| 106,180,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 63,415,740 | 70,399,078 | ஏசீஏ-2(ii) |
| 2,400,000 | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 4,000,000 | திறன் விருத்தி | 14 | 2,062,858 | 1,109,935 | ஏசீஏ-2(ii) |
| 40,000,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 1,737,946 | - | ஏசீஏ-2(ii) |
| **502,800,000** | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **187,961,331** | **203,743,135** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | **2,050,025,630** | 1,595,777,211 | ஏசீஏ-4 |
| 40,000,000 | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | **39,143,701** | 46,903,083 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | 66,006 | |
| **40,000,000** | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **2,089,169,331** | **1,642,746,300** | |
| **12,729,380,000** | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | **13,464,889,718** | **12,218,781,664** | |
| **(12,729,380,000)** | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | **(2,067,403,833)** | **(1,338,695,435)** | |
| | **பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி** | | (3,076,705,760) | (2,217,937,991) | ஏசீஏ-7 |
| - | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | 1,009,301,927 | 879,242,556 | ஏசீஏ-3 |
| | | | (2,067,403,833) | (1,338,695,435) | |

## 3.2 31 டிசம்பர் 2021 உடன் முடிவடைந்த வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை

ஏசீஏ -பீ

2021 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2021 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|---|
| நிதி சொத்துக்கள் அற்றது | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரன | ஏசீஏ-6 | 12,740,581,583 | 12,716,440,231 |
| நிதி சொத்துக்கள் | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 111,099,792 | 123.736.361 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | 1,009,301,927 | 876,242,556 |
| மொத்த சொத்துக்கள் | | 13,860,983,302 | 13,716,419,148 |
| தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு | | | |
| தேறிய பெறுமதி | | (263,943,109) | (230,908,697) |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 12,740,581,583 | 12,716,440,231 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| வைப்பக் கணக்குகள் | ஏசீஏ-4 | 375,042,901 | 354,645,059 |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | 1,009,301,927 | 879,242,556 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 13,860,983,302 | 13,719,419,148 |

பக்க இலக்கம் 06 முதல் 78 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 79 முதல் 133 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

மேலும் நிதிக்கட்டுப்பாட்டிற்கான பயனுள்ள உள்கட்டுப்பாட்டு அமைப்பு அறிக்கையிடும் நிறுவனத்தில் இருப்பதனையும், நிதிக்கட்டுப்பாட்டிற்கான உள்கட்டுப்பாட்டு அமைப்பின் செயல்திறனை கண்காணிக்க அவ்வப்போது மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன் அத்தகைய அமைப்புகளை திறம்பட செயல்படுத்துவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுவதையும் உறுதிப்படுத்துகிறோம்

.................................
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி: Admiral Prof. Jayanath Colombage, Secretary, Foreign Ministry, Colombo 01.
திகதி :25.02.2022

.................................
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி: Admiral Prof. Jayanath Colombage, Secretary, Foreign Ministry, Colombo 01.
திகதி :25.02.2022

.................................
பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் : U.G.C. Abeyrathna, Chief Accountant, Foreign Ministry, Colombo-01.
திகதி :25.02.2022

2

## 3.3 31 டிசம்பர் 2021 உடன் முடிவடைந்த வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை

ஏசீஏ- சீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான

காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | திருத்தப்பட்ட |
|---|---|---|
| | 2021 ரூபா | 2020 ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 3,221,067,854 | 2,389,880,478 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 9,278,182,565 | 9,293,333,341 |
| முற்பணங்களை அறவிடல் | 56,789,023 | 63,627,057 |
| வைப்புக்களின் பெறுகை | 2,076,010,925 | 1,452,471,015 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **14,632,050,367** | **13,199,311,891** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 11,183,873,316 | 10,370,961,874 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | - | - |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 149,014,309 | 220,670,748 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 100,000,476 | 943,415 |
| முற்பணக் கொடுப்பனவு | 44,334,666 | 49,671,064 |
| வைப்புக் கொடுப்பனவு | 2,050,025,630 | 1,595,777,211 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **13,527,248,397** | **12,238,024,312** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **1,104,801,970** | **961,287,579** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | | 24,648,585 |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | - | **24,648,585** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 187,030,142 | 198,538,869 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **187,030,142** | **198,538,869** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(187,030,142)** | **(173,890,284)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | **917,771,828** | **787,397,295** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளுர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | | |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | **917,771,828** | **787,397,295** |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **91,530,099** | **91,845,261** |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **1,009,301,927** | **879,242,556** |

3

## 3.4 நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

**<u>அறிக்கையிடலின் அடிப்படை</u>**

**1) <u>அறிக்கையிடல் காலம்</u>**

இந் நிதி அறிக்கைகளின் அறிக்கையிடல் காலம், 2021 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலாகும்.

**2) <u>அளவீட்டின் அடிப்படை</u>**

குறிப்பிட்ட சொத்துக்களின் மறுமதிப்பீட்டின் மூலம் மாற்றியமைக்கப்பட்ட வரலாற்றுச் செலவில் நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, வேறுவிதமாக குறிப்பிடப்படாவிட்டால், மாற்றியமைக்கப்பட்ட பண அடிப்படையில் கணக்கிடப்படும்.

நிதி அறிக்கைகளின் புள்ளிவிவரங்கள் இலங்கை ரூபாவுக்கு அண்ணள்வான தொகையில் தரப்பட்டுள்ளன.

**3) <u>வருவாயை இனங்காணல்</u>**

சம்பந்தப்பட்ட வருவாய் காலத்தைப் பொருட்படுத்தாமல், கணக்கீட்டு காலத்தில் காசு பெறுகைகளின் பரிமாற்றம் மற்றும் பரிமாற்றம் அல்லாத வருவாய்கள் இனங்காணப்படுகின்றன..

**4) <u>ஆதனம், தொழிற்சாலை மற்றும் உபகரணங்களை இனங்காணல் மற்றும் அளவீடு</u>**

சொத்து, தொழிற்சாலை மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படியானது, சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மை நிறுவனத்திற்குச் செல்லும் மற்றும் சொத்துக்களின் விலை நம்பகத்தன்மையுடன் அளவிடப்படும் போது அது அங்கீகரிக்கப்படுகிறது.

சொத்து, தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள் ஒரு செலவில் அளவிடப்படுகின்றன. செலவு மாதிரி பொருந்தாதெனில், மீள் மதிப்பீட்டு மாதிரி பொருந்தக்கூடியதாயிருக்கும்.

**5) <u>சொத்து, தொழிற்சாலை மற்றும் உபகரணங்களின் ஒதுக்கங்கள்</u>**

இந்த ஒதுக்க கணக்கு, சொத்து, தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள் தொடர்பான கணக்கு ஆகும்.

**6) <u>காசு மற்றும் காசுக்கு சமமானவை</u>**

காசு மற்றும் காசுக்கு சமமானவை; 31 டிசம்பர் 2021 அன்று கையிருப்பிலுள்ள உள்நாட்டு நாணயத் தாள்கள் மற்றும் சிலறைகள் உள்ளிட்டவையாகும்.

**7) <u>நிதி அறிக்கைகளின் வடிவங்களில் மாற்றங்கள் மற்றும் ஒப்பீட்டு புள்ளிவிவரங்களைச் சரிசெய்தல்</u>**

2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளில் செய்யப்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப 2020 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டு புள்ளிவிவரங்களில் தொடர்புடைய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

### 3.5 வருவாய் சேகரிப்பு செயலாற்றுகை

| வருவாய் குறியீடு | வருவாய் குறியீட்டின் விவரம் | வருவாய் மதிப்பீடு 2021 | | சேகரித்த வருவாய் (31.12.2021 வரை) | |
|---|---|---|---|---|---|
| | | மூலம் | இறுதி | தொகை (ரூ.) | இறுதி வருவாய் மதிப்பீட்டின் % |
| 2002-01-01 | அரசாங்க கட்டிடங்கள் மற்றும் வீட்டு வசதிக்கான வாடகை | 2,900 | 2,900 | 2,881 | 99% |
| 2002-02-99 | பிற நலன்கள் | 5,000 | 5,000 | 5,581 | 112% |
| 2003-02-07 | கடவுச்சீட்டுகள், வீசா, இரட்டைக்குடியுரிமைக்கான கட்டணங்கள் | 1,950,000 | 2,250,000 | 2,309,679 | 103% |
| 2003-02-13 | பரீட்சைகள் மற்றும் பிற கட்டணங்கள் | 35 | 15 | 15 | 100% |
| 2003-02-14 | மோட்டார் போக்குவரத்து திணைக்களம் - மோட்டார் போக்குவரத்துச் சட்டம் மற்றும் பிற பெறுகைகள்) | 20,000 | 25,500 | 25,027 | 98% |
| 2003-02-99 | கொன்சியுலர் கட்டணங்கள் | 500,000 | 500,000 | 674,576 | 135% |
| 2003-99-00 | பிற பெறுகைகள் | 150,000 | 100,000 | 163,848 | 164% |
| 2004-01-00 | சமூக பாதுகாப்பு பங்களிப்புகள்- மத்திய அரசாங்கம் | 30,000 | 38,000 | 35,353 | 93% |
| 2004-02-00 | சமூக பாதுகாப்பு பங்களிப்புகள் (மாகாண சபைகள்) | 450 | 700 | 681 | 97% |
| 2006-02-01 | மூலதனச்சொத்துக்களின் விற்பனை (வாகனங்கள்) | 4,000 | 6,000 | 3,289 | 55% |
| 2006-02-02 | மூலதனச் சொத்துக்களின் விற்பனை (பிற) | 200 | 200 | 138 | 69% |
| **மொத்தம்** | | **2,662,585** | **2,928,315** | **3,221,068** | |

### 3.6 ஒதுக்கீட்டு பயன்பாட்டின் செயலாற்றுகை

**ரூ.000**

| ஒதுக்கீட்டின் விதம் | ஒதுக்கீடு 2021 | | நடப்பு செலவினம் (31.12.2021 வரை) | இறுதி ஒதுக்கீட்டின் பயன்படுத்தபட்ட ஒதுக்கீட்டு வீதம் (31.12.2021 வரை) |
|---|---|---|---|---|
| | மூலம் | இறுதி | | |
| **மீண்டெழும்** | 12,208,580 | 2,186,580 | 11,187,759 | 92% |
| **மூலதனம்** | 480,800 | 502,800 | 187,961 | 37% |
| **மொத்தம்** | **12,689,380** | **12,689,380** | **11,375,720** | |

## 3.7 நிதி விதிமுறைகள் 208 இன்படி, அமைச்சு செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட கொடுப்பனவு

ரூ. ,000

| தொடர் இல. | ஒதுக்கீடு பெறப்பட்ட அமைச்சு/ திணைக்களம் | ஒதுக்கீட்டின் நோக்கம் | ஒதுக்கீடு | | | நடப்புச் செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டு % |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மூலம் | இறுதி ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| 001 | ஜனாதிபதி அலுவலகம் | அதிமுக்கிய பிரமுகர் விஜயங்கள் | | 23,885,138.00 | 23,885,000.00 | 24,757,000.00 | 104% |
| 002 | பிரதம மந்திரி அலுவலகம் | இராஜாங்க விஜயம் 19-20 மார்ச் 2021 | | 35,684,102.55 | 35,684,000.00 | 35,402,000.00 | 99% |
| 005 | அமைச்சரவை அலுவலகம் | அதிமுக்கிய பிரமுகர் விஜயங்கள் | | 2,579,205.00 | 2,579,000.00 | 2,579,000.00 | 100% |
| 101 | புத்தசாசன அமைச்சு | சமய நிகழ்வுகளுக்கான செலவுகள் | | 3,719,493.57 | 3,719,000.00 | 3,709,000.00 | 100% |
| 103 | பாதுகாப்பு அமைச்சு | பாதுகாப்பு சிறப்பதிகாரியின் செலவினங்கள் | | 2,275,533.18 | 2,276,000.00 | ,341,000.00 | 59% |
| 126 | கல்வி அமைச்சு | கியூப பட்டதாரி மாணவருக்கான உதவித்தொகை, ஒருங்கிணைப்பு அதிகாரியின் சம்பள கொடுப்பனவு, UNESCO பங்களிப்பு | | 39,976,563.41 | 39,977,000.00 | 8,977,000.00 | 22% |
| 160 | சுற்றாடல் அமைச்சு | அதுமுக்கிய பிரமுகர் விஜயங்கள் | | 1,709,760.00 | 1,710,000.00 | 1,753,000.00 | 103% |
| 222 | இலங்கை இராணுவம் | கடல் மார்க்கமான பயண மிகை பயண பொதிகள், சட்ட கட்டணங்கள் மற்றும் உத்தியோகபூர்வ வாகன பழுது திருத்தியமை | | 34,880,062.73 | 34,880,000.00 | 27,996,000.00 | 80% |
| 223 | இலங்கை கடற்படை | எரிபொருள் கொள்வனவு | | 11,814,250.00 | 11,814,000.00 | 11,748,000.00 | 99% |
| 225 | பொலிஸ் திணைக்களம் | வருடாந் நிதி பங்களிப்பு – INTERPOL பொது செயலகம் | | 7,718,235.00 | 7,718,000.00 | 7,680,000.00 | 100% |
| 290 | மீன்பிடி, மீன்வள திணைக்களம் | மீனவர்களை தாயகம் அனுப்புதல் | | 7,331,275.77 | 7,331,000.00 | 7,227,000.00 | 99% |
| 295 | வர்த்தக திணைக்களம் | வர்த்தக ஊக்குவிப்புச் செயற்பாடுகள் | | 6,681,586.00 | 6,682,000.00 | 5,911,000.00 | 88% |
| 419 | பிராந்திய கூட்டுறவிற்கான இராஜாங்க அமைச்சு | இராஜாங்க விஜயம், பிற செலவினங்கள் | | 8,652,000.00 | 8,652,000.00 | 8,652,000.00 | 100% |
| 423 | மருந்துப்பொருட்கள் உற்பத்தி, வழங்கல் மற்றும் விதிமுறைகள் இராஜாங்க அமைச்சு | பரிசோதனைத் தொகுதிகளுக்கான செலவு | | 1,323,000.00 | 1,323,000.00 | 1,282,000.00 | 97% |

## 3.8 நிதிசாரா சொத்துக்கள் அறிக்கையிடலின் செயலாற்றுகை

ரூ. ,000

| சொத்து குறியீடு | குறியீடு விவரணம் | ஆய்வுச் சபையின் அறிக்கையின்படி 31.2.2021 அன்று நிலுவை | நிதி நிலைப்பாட்டு அறிக்கையின்படி 31.12.2021 அன்று நிலுவை | கணக்கெடுக்கப்படாதது | அறிவித்தல் முன்னேற்ற வீதம் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | | 10,059,336,000 | - | 100% |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணம் | | 1,586,989,000 | - | 100% |
| 9153 | காணி | | 1,010,362,000 | - | 100% |
| 9154 | கட்புலனாக சொத்துக்கள் | | 27,909,000 | - | 100% |
| 9155 | பௌதிக சொத்துக்கள் | | - | - | 100% |
| 9160 | நடைபெறும் பணி | | 55,985,000 | - | 100% |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | | - | - | 100% |

## 3.9 2021 ஆம் வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதி செயலாற்றுகை

(ரூ. 000’)

| பிரிவு | மதிப்பீடு 2021 | நடப்பு 2021 | பற்றாக்குறை/ மிகை | *வேறுபாட்டிற்கான பிரதான காரணங்கள் |
|---|---|---|---|---|
| **வருவாய் (பொருத்தமெனில்)** | **2,928,315** | **3,221,068** | | வருட முடிவில் கொவிட் -19 நோய்ப்பரவல் குறைந் தால் வருவாய் அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட்டது. |
| **மொத்த செலவினம்** | **12,689,380** | **11,375,720** | | |
| மீண்டெழும் | 12,186,580 | 11,187,759 | | 01. ற்போதைய சூழ்நிலை காரணமாக<br>02. திறைசேரியால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களின்படி செலவினம் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. |
| முதலீடு | 502,800 | 187,961 | | 01. ற்போதைய சூழ்நிலை காரணமாக<br>02. கன்பரா மற்றும் ஸ்டொக்ஹோம் தூதரக பணியகங்களில் புனரமைப்பு பணிகளுக்காக எதிர்பார்த்த செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை. புனரமைப்புக்களுக்கான ஆரம்ப பணிகள் 2022 இல் தொடங்கப்படும்.<br>03. திறைசேரியால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களின்படி செலவினம் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.<br>04. மூலதன ஒதுக்கீட்டின் கீழ் கட்டாய சேமிப்புக்களின் சாத்தியக்கூறு பற்றி பொது திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது. |

*வருவாய் மற்றும் செலவினங்களின் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளுக்கான பிரதான காரணங்கள் சுருக்கமாக இங்கே குறிப்பிடப்படுதல் வேண்டும்

## 3.10 3.10 தேசிய பாதீட்டு முன்மொழிவு 2021 ஐ நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம்

| பாதீட்டு முன்மொழிவு இல. | முன்மொழிவு (சுருக்கமாக) | ஒதுக்கப்பட்ட நிதி | எதிர்பார்க்கப்படும் விளைவு (பொருத்தமெனில்) | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பௌதிக % | நிதிசார் % |
| **23** | வெளிநாட்டு பொருளாதார உறவுகள் | **ரூ. மில்லியன். 750.0**<br>**குறிப்பு - 01 *** | **குறிப்பு- 01 *** | **இல்லை** | **இல்லை** |

**குறிப்பு - 01 ***

**(கொவிட்-19 நோய்ப்பரவல் காரணமாக எதிர்பார்த்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை )**

## கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

(இரகசியமானது) (வரைவு)

**கணக்காய்வாளர் நாயகத்தின் சுருக்க அறிக்கை**

எனது குறிப்பு இல: PAF/A/FM/01/FS/2021

செயலாளர்
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

31 டிசம்பர் 2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் நிதி அறிக்கைகள் குறித்த, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்ட பிரிவு 11(1) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்தின் சுருக்க அறிக்கை

### 1. நிதி அறிக்கைகள்

**1.1 தகுதிவாய்ந்த கருத்து**
கருத்து பின்னர் சமர்ப்பிக்கப்படும்

**1.2 கருத்தின் அடிப்படை**
பின்னர் சமர்ப்பிக்கப்படும்

**1.3 நிதி அறிக்கைகள் தொடர்பில் பிரதான கணக்கியல் அதிகாரி மற்றும் கணக்கியல் அதிகாரி ஆகியோரின் பொறுப்பு**

மோசடி அல்லது பிழைகள் காரணமாக, தவறான அறிக்கையாக இல்லாமல் நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் அவசிமானது என்பதை தீர்மானிப்பவர் கணக்கியல் அதிகாரி என்பதால், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகளின்படியும், 2018 ஆம் ஆண்டின் இல.19 தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆவது பிரிவின்படியும், உண்மையான மற்றும் நியாயமான கண்ணோட்டத்தை வழங்கும் நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் கணக்கியல் போன்ற உள்ளக கட்டுப்பாடுகளுக்கும் கணக்கியல் அலுவலரே பொறுப்பாவார்.

இவ்வமைச்சிற்கான வருடாந்த மற்றும் காலத்திற்குக் காலமான நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு ஏதுவாக, 2018 இன் தேசிய கணக்காய்வுச் சட்ட இலக்கம் 19 இன் உப பிரிவு 16 (1) இன் பிரகாரம், இவ்வமைச்சு, தனது சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியவற்றை புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் முறையாகப் பேணவேண்டிய தேவையுள்ளது.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் உபபிரிவு 38(1) (இ) இன் அடிப்படையில், பிரதான கணக்கியல் அதிகாரி மற்றும் கணக்கியல் அதிகாரி ஆகியோர்; நிதிக் கட்டுப்பாட்டிற்கான வினைத்திறனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு ஒன்று அமைச்சில் இருப்பதை உறுதிசெய்து, அத்தகைய அமைப்பின் வினைத்திறனைக் கண்காணிப்பதற்கு காலத்திற்குக் காலம் மீளாய்வுகளை மேற்கொண்டு, அதற்கேற்ப அத்தகைய அமைப்புகளை திறம்பட செயற்படுத்துவதற்குத் தேவையான மாற்றங்களையும் செய்வர்.

**1.4 நிதி அறிக்கைகளின் கணக்காய்வு குறித்த கணக்காய்வாளரின் பொறுப்பு**

நிதி அறிக்கைகள் ஒட்டுமொத்தமாக தவறான அறிக்கையிலிருந்து விடுபட்டுள்ளதா, மோசடி அல்லது பிழை காரணமாக உள்ளதா என்பதைப் பற்றிய நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும், எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் சுருக்க அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உத்தரவாதம் என்பது ஒரு உயர் மட்ட உத்தரவாதமாகும், ஆனால் இலங்கை கணக்காய்வு தரநிலைகளுக்கமைவாக நடாத்தப்படும் கணக்காய்வானது, அது இருக்கும்போது எப்போதுமே பொருள் தவறாகக் கண்டறியப்படும் என்பதற்கு உத்தரவாதம் அல்ல. மோசடி அல்லது பிழையிலிருந்து தவறான அறிக்கைகள் உருவாகக்கூடும், மேலும் அவை தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ, இந்த நிதி அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயனாளர்களின் பொருளாதார முடிவுகளை நியாயமான முறையில் பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வுத் தரநிலைகளுக்கமைவாக, கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதிலும் தொழில்ரீதியான நியாயத்தை பயன்படுத்துவதுடன் தொழில்முறை ஐயங்களையும் பேணுகிறேன். மேலும் நான்;

- மோசடி அல்லது பிழையின் காரணமாக, தவறான நிதி அறிக்கைகளின் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பீடு செய்து, அந்த அபாயங்களுக்கு பதிலளிக்கும் வகையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்தி மற்றும் எனது கருத்துக்கான அடிப்படையை வழங்கப் போதுமான மற்றும் பொருத்தமான தணிக்கைச் சான்றுகளைப் பெறுகிறேன். மோசடியானது; ஏமாற்றுவேலை, போலிப்பத்திரம் எழுதுதல், வேண்டுமென்றே புறக்கணித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை மீறுதல் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளதால், மோசடியின் விளைவாக ஏற்படும் தவறான அறிக்கையைக் கண்டறியாத ஆபத்தானது, பிழையின் விளைவாக ஏற்படும் ஒன்றை விட அதிகமாகும்.

- சூழ்நிலைக்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வு தொடர்பான உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிதலைப் பெறுகிறேன், ஆனால் திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் செயற்றிறன் பற்றிய அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படும் கணக்கியல் கொள்கைகளின் பொருத்தமான தன்மை மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் அது தொடர்பில் முகாமைத்துவத்தின் வெளிக்கூறல்களை மதிப்பிடுகிறேன்.

- வெளிக்கூறல்கள் உட்பட, நிதிசார் அறிக்கைகளின் ஒட்டுமொத்த முன்வைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மற்றும் நிதிசார் அறிக்கைகள் நியாயமான முன்வைப்பினை எட்டும் விதத்தில் அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதை மதிப்பீடு செய்கிறேன்.

எனது கணக்காய்வின்போது நான் கண்டறிந்த உள்ளக கட்டுப்பாட்டிலுள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட, குறிப்பிடத்தக்க கணக்காய்வு முடிவுகள் தொடர்பாக, கணக்கியல் அதிகாரியுடன் நான் தொடர்பு கொள்கிறேன்.

**1.5. பிற சட்டத் தேவைகள் குறித்த அறிக்கை**

2018இன் தேசிய கணக்காய்வுச் சட்ட இல.19 இன் உப பிரிவு 6 (1) (ஈ) இன் தேவைக்கேற்ப,

அ) பின்வரும் விடயங்களில் மாற்றங்கள் காரணமாக, நிதி அறிக்கைகள் முன்னைய வருடத்துடன் ஒத்துப்போகவில்லை:

| விடயம் | மீளாய்வு வருட காசோட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பெறுமதி (ரூ.) | கடந் வருட கணக்காய்வு அவதானிப்புகளின்படி குறிப்பிட்டிருக்கவேண்டிய பெறுமதி (ரூ.) | வித்தியாசம்(ரூ.) |
|---|---|---|---|
| (i) னிப்பட்ட ஊதியங்கள் மற்றும் தொழிற்பாட்டு செலவினங்கள் | 10,370,961,874 | 10,061,370,232 | 309,591,642 |
| (ii) முன்பண கொடுப்பனவுகள் | 49,671,064 | 49,605,057 | 66,007 |
| (iii) கட்டிடம் அல்லது பௌதிக சொத்துக்கள் கொள்முதல் | 198,538,869 | 70,399,077 | 128,139,792 |

(iv) முன்னைய வருட காசோட்ட அறிக்கையில், உதவித்தொகைகள் மற்றும் இடமாற்றங்களுக்கென ரூ. 437,731,433 குறிப்பிடப்பட்ட போதிலும், மீளாய்வு வருடத்தின் காசோட்ட அறிக்கையானது அந்தமாதிரியான பெறுமதியைக் குறிப்பிடவில்லை. மேலும், முன்னைய வருடத்தின் காசோட்ட அறிக்கையில், திறைசேரிக்கு தீர்த்து வைக்கப்பட்ட கட்டுநிதி நிலுவை எதுவும் காட்டப்படவில்லை

எனினும், மீளாய்வு வருடத்தின் காசோட்ட அறிக்கையில், திறைசேரிக்கு தீர்த்து வைக்கப்பட்ட கட்டுநிதி நிலுவை ரூ.943,415 என காட்டப்பட்டுள்ளது.

அ) முன்னைய வருடத்திற்கான நிதி அறிக்கைகள் தொடர்பான எனது பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

**1.6 நிதி அறிக்கைகள் குறித்த கருத்துகள்**

**1.6.1 கட்டுநிதி சரிசெய்தல் அறிக்கை**

பின்வரும் அவதானிப்புகள் பெறப்பட்டன;

அ) பிற செலவின தலைப்புகளால் மேலதிக 'பி' கணக்கிற்கான வைப்புக்களின் மதிப்பு ரூ.8,115,205 எனினும், கட்டுநிதி சரிசெய்தல் கணக்கில் அந்த மதிப்பு ரூ.8,115,205 என சரிசெய்யப்பட்டுள்ளது.

ஆ) பிற செலவின தலைப்புக்களால் மேலதிக 'பி' கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட பணத்தின் மதிப்பு ரூ.304,973 எனினும், கட்டுநிதி சரிசெய்தல் கணக்கில் அந் மதிப்பானது ரூ.313,723 என சரிசெய்யப்பட்டுள்ளது.

**1.6.2 நிதி செயலாற்றுகை அறிக்கை**

பின்வரும் அவதானிப்புகள் பெறப்பட்டன;

அ) திறைசேரி கணினி அச்சுப்பிரதிகளின்படி, வைப்புக்களின் மதிப்பு ரூ. 2,094,037,896 ஆனது, நிதி செயலாற்றுகை அறிக்கையில் ரூ. 2,076,010,925 எனக் குறிப்பிடப்பட்டது. நிதி செயலாற்றுகை அறிக்கையில் வைப்புத்தொகை ரூ. 18,026,971 என குறைவாக சரிசெய்யப்பட்டது.
ஆ) பெற்றுக்கொண்ட முன்பணத்தின் மதிப்பு ரூ 51,762,773 என நிதி செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், திறைசேரி கணினி அச்சுப்பிரதியின்படி அந் மதிப்பு 51,771,520 ஆக இருந்ததால், பெற்றுக்கொண்ட முன்பணத்தில் ரூ. 8,747 குறைவாக சரிசெய்யப்பட்டது. மேலும், திறைசேரி கணினி அச்சுப்பிரதியின்படி, முன்பண கொடுப்பனவுகளின் மதிப்பு ரூ. 39,134,791 என்றபோதும், நிதி செயலாற்றுகை அறிக்கையில் அந்த மதிப்பு ரூ.39,143,710 ஆக குறிப்பிட்டபடியால், முன்பண கொடுப்பனவுகள் ரூ.8,750 ஆல் மிகைப்படுத்தப்பட்டது.
இ) திறைசேரி கணினி அச்சுப்பிரதியின்படி, நிதி செயலாற்றுகை அறிக்கையில், வைப்புக்களின் கொடுப்பனவு மதிப்பு ரூ.2,073,640,054 என குறிப்பிடப்பட்டிருக்கவேண்டியிருந்தாலும், அந் பெறுமதி ரூ.2,050,025,630 என குறிப்பிடப்பட்டுள்ளதால், நிதிசெயலாற்றுகை அறிக்கையில் வைப்புக்களின் கொடுப்பனவானது, ரூ.23,614,424 குறைவாக சரிசெய்யப்பட்டது.

**1.6.3 நிதி நிலைப்பாட்டு அறிக்கை**

**1.6.3.1 நிதி சாரா சொத்துக்கள்**

திறைசேரி அச்சுப்பிரதி (SA-10) இன் பிரகாரம், வாகனங்களின்ன் கொள்வனவிற்காக ரூ.21,206,909 உம், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் சாதனங்களுக்கு ரூ.42,208,832 ஆகவும் செலவிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனபோதிலும், திரண்ட நிதிசார சொத்துக்களின் அறிக்கை (SA -82) இல் ரூ. 21,206,909 இற்கு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை. மற்றும், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் சாதனங்களுக்கான மதிப்பு ரூ. 12,757,712 என்பதாக மட்டுமே பதிவிடப்பட்டிருப்பதால், அந்த மதிப்பானது, ரூ.29,451,120 இனால் குறைத்துக்கூறப்பட்டது.

**1.6.4 காசோட்ட அறிக்கை**

**1.6.4.2 தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசோட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் பெறப்பட்டன;

அ) கூட்டு நிலுவை பரிசோதனையின்படி, தனிப்பட்ட ஊதியங்கள் மற்றும் தொழிற்பாட்டுச் செலவினங்களின் மதிப்பு ரூ. 0,837,484,562 ஆனபோதிலும், குறிப்பிட்ட மதிப்பானது ரூ. 11,183,873,316 ஆக பதிவு செய்யப்பட்டதால் அது, ரூ.346,388,754 இனால் மிகைப்படுத்தப்பட்டது.

ஆ) கூட்டு நிலுவை பரிசோதனையின்படி, மானியங்கள் மற்றும் இடமாற்றங்களின் மதிப்பு ரூ. 470,003,154 ஆனபோதும், குறிப்பிட்ட மதிப்பானது இல்லை என பதிவுசெய்யப்பட்டதன் விளைவாக, ரூ.470,003,154 இனால் குறைத்துக்கூறபட்டது.

**1.6.4.2 முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசோட்டம்**

காசோட்ட அறிக்கையில், பௌதிக சொத்துக்களின் கொள்வனவு மற்றும் பிற முதலீடுகள் பெறுகையின் கீழ், ரூ.187,030,142 என குறிப்பிடப்பட்டிருந்தாலும், கூட்டு நிலுவை பரிசோதனையின்படி அந்த மதிப்பானது ரூ. 63,415,742 என்பதால், ரூ. 123,614,400 இனால் மிகைப்படுத்தப்பட்டது.

**1.6.5 கணக்காய்விற்கான சான்றுகள் போதாமை**

பின்வரும் அவதானிப்புகள் பெறப்பட்டன;

| விடயம் | தொகை ரூ. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று |
|---|---|---|
| (அ) மீளாய்வுக் காலத்தில் 54 வெளிநாட்டு இராஜதந்திர தூதரக பணியகங்களின் மீண்டெழும் மற்றும் மூலதல செலவினம் | மீண்டெழும் 6,315,346,016<br>மூலதன 91,171,076 | - 13 தூதரக பணியகங்கள் தொடர்பான மீண்டெழும் மற்றும் மூலதன கொடுப்பனவுகள்<br>- பல்வேறு வரவுச்சீட்டு கோப்புகளுக்கான மெறுமதிகள் தவிர்ந்த வரவுச்சீட்டு கோப்புகள் |
| (ஆ) பூர்த்திசெய்யப்படாத கட்டிடங்கள் | 55,984,547 | - உடைமை மற்றும் இருப்பினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |
| (இ) வைப்புகள் | 1,452,471,015 | - முன்னைய வருட நிலுவைகளுடன் ஒப்பிடும் அறிக்கைகள் |
| (ஈ) முன்பண பெறுகைகள் | 43,380,027 | |
| (உ) அலுவலக கட்டிடங்கள் | 9,730,692,636 | - ஒவ்வொரு சொத்தும் னித்தனியாக இனங்காணப்படும் விதத்தில் மூலதன சொத்துக்கள் பதிவேடு |
| (ஊ) பயணிகள் வாகனங்கள் | 1,055,280,776 | |
| (எ) கலப்பு நகர சொத்துக்கள் | 1,010,362,062 | |
| (ஏ)உத்தியோகபூர்வ வதிவிடங்கள் | 317,741,508 | |
| (ஐ)வாகனங்கள் அப்புறப்படுத்தல் | 39,119,254 | |
| (ஒ)சொத்துக்கள் பெறுகை | 63,415,740 | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

நிதி விதிமுறை 50 (II) இற்கிணங்க, மதிப்பீடுகளை முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பது கணக்கியல் அதிகாரியில் பொறுப்பாகும். இவ்வாறு செய்யாத காரணத்தினால், 51 வீதம் முதல் 100 வீதம் வரையிலான ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் 28 செலவின தலைப்புக்கள் பயன்படுத்தப்படவில்லை .

**2.2 அரசாங்க அலுவலர்களுக்கான முன்பணங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் பெறப்பட்டன.

அ) அரசாங்க அலுவலர்களுக்கான 'பி' கணக்கிற்கான முன்பணத்தின்படி, 24 அலுவலர்களிடமிருந்து கூடுதலாக அறவிடப்பட்டதன் நிலுவையான ரூ.215,322, ஆனது, இந்த அறிக்கை தயாரிக்கப்பட்ட திகதி வரையில் தீர்க்கப்படவில்லை.

ஆ) சேவையிலிருந்து நீங்கிய அலுவலர்களிடமிருந்து மீளப்பெறவேண்டிய தொகையான ரூ.1,098,606 மற்றும் 2-3 வருடங்களாக நிலுவையிலுள்ள கடன் தொகை ரூ.435,660 மற்றும் இதில் ரூ.535,671 தொகை கடன், 5 வருடங்களுக்கு மேலாக நிலுவையிலுள்ளது.

இ) சேவையிலிருந்து நீக்கப்பட்ட 05 அலுவலர்களின் கடன் நிலுவைத் தொகை ரூ.299,955 ஆனது ஐந்து வருடங்களுக்கு மேலாக நிலுவையிலுள்ளதுடன், இந்த தொகையை மீட்பதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

ஈ) வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட இரண்டு அலுவலர்களிடமிருந்து ரூ.130,551 தொகையை மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படுதல்

நிதி அறிக்கைகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பு இல. iii இன் கீழ் வருகின்ற பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் அறிக்கையானது, திறைசேரியினால் வெளியிடப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுடன் (SA-92) ஒத்ததாகவிருத்தல் வேண்டும். நிதி அறிக்கைகளின் குறிப்பு இல. iii இல் ஒவ்வொரு செலவின தலைப்பான ரூ. 115,320,800 குறிப்பிடப்பட்ட அதேவேளை, SA-92 இன்படி, அந் நிலுவைத் தொகை ரூ. 250,194,868 ஆகும்.

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் பெறப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் குறிப்பு | விவரணம் |
|---|---|
| **அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஸ்தாபன கோவை** | |
| (i) பந்தி xix இன் பிரிவு 5.2.5 | அரசாங்க வதிவிடத்தில் வசிக்கும் திருமணமாகாத ஒரு அலுவலருக்கான மாத வாடகைக்கு, அவருடைய சம்பளத்திலிருந்து 7 ½ வீதம் கழிக்கப்படுதல் வேண்டுமெனினும், 12 ½ வீதம் அறவிடப்பட்டமை மூலம், விதிகளுக்கு இணங்கவில்லை. |
| (ii) பந்தி xix இன் பிரிவுகள் 8.1, 8.2 | அரசாங்க வதிவிடங்களிலுள்ள மின்சார சாதனங்கள், பிற உபகரணங்கள் மற்றும் கருவிகளின் இருப்பு பட்டியலானது, அந் வதிவிடங்களின் பராமரிப்பிற்குப் பொறுப்பானவர்களால் பேணப்பட்டிருக்கவேண்டுமெனினும், வெளிநாட்டு அமைச்சின் அரசாங்க வதிவிடங்கள் தொடர்பில் அவ்வித பதிவேடுகள் எதுவும் பேணப்படவில்லை. |
| **ஆ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி விதிமுறைகள் (FR)** | |
| (i) FR 104 | 1 முதல் 10 வருடங்களில், ரூ.3,990,669 தொகை சேதங்களை ஏற்படுத்திய 13 மோட்டார் வாகன விபத்துக்கள் தொடர்பிலும், 2010 இல் இடம்பெற்ற, ரூ.1,991,695 பெறுமதியான ஒரு வாகன திருட்டு தொடர்பிலும் எந்த நடவடிக்கையும் இந்த விதிமுறைப்படி எடுக்கப்படவில்லை. |
| (ii) FR 104 (i) | 1 முதல் 5 வருட காலப்பகுதியில், 05 தூதரக பணியகங்கள் தொடர்பிலான, ரூ.403,777 பெறுமதியான பொருட்களின் இழப்பு தொடர்பில், அதற்குப் பொறுப்பானவர்களிடம் விசாரணை நடாத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டுமெனினும், அது நடத்தப்படவில்லை. |
| (iii) FR 106 | 9 முதல் 15 வருட காலப்பகுதியில் 5 தூதரக பணியகங்கள் தொடர்பில் ஏற்பட்ட பற்றாக்குறை, கையாடல் மற்றும் பிற காரணங்களால் ஏற்பட்ட, ரூ.17,201,664 தொகை பண இழப்பு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (iv) FR 371 | தேவைப்பட்ட நோக்கம் பூர்த்தியடைந்த உடனேயே உப கட்டுநிதிகள் தீர்க்கப்பட்டிருத்தல் வேண்டுமெனினும், 7 முதல் 28 வருட காலப்பகுதியில், 12 தூதரக பணியகங்கள் தொடர்பில் தீர்க்கப்படாத முன்பண தொகையாக ரூ.1,804,674 உள்ளது. |
| (v) FR 565 (2) | பெறப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட அனைத்து வைப்புத்தொகைகளும் |

| | |
|---|---|
| | பொது வைப்புத்தொகைக் கணக்குகளின் கீழ் தினசரி இடுகையிடப்பட வேண்டும் என்றாலும், வெளிநாட்டு தூதரக பணியகங்களுடன் தொடர்புடைய பொது வைப்புத்தொகைக் கணக்குகளின் தொடக்க நிலுவைகளிலிருந்து செலுத்தப்பட்ட பணம் கணக்காய்வுத் திகதியான ஏப்ரல் 05, 2022 வரை இடுகையிடப்படவில்லை. |
| (vi) FR 565 (3) | வைப்பு பேரேட்டின் கடைசி சில பக்கங்கள் இருப்புக் கணக்கிற்கு ஒதுக்கப்பட்டு, முந்தைய மாத இருப்பு மற்றும் அனைத்து தினசரி பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளின் மொத்தத்தை உள்ளிட்ட பிறகு இருப்பு கணக்கு சமநிலைப்படுத்தப்பட வேண்டும் என்றாலும், அத்தகைய இருப்புக் கணக்கு அமைச்சகத்தின் வைப்பு கணக்குகளுக்கு தயாரிக்கப்படவில்லை. |
| (vii) FR 565 (5) | வைப்புக்களின் மாதாந்த சுருக்க அறிக்கை அடுத்த மாத இறுதிக்குள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்றாலும், அது அனுப்பப்படவில்லை. |
| (viii) FR 571 | வைப்பீடு செய்யப்பட்ட நாளிலிருந்து 2 வருடங்கள் கடந்துள்ள கோரப்படாத வைப்புத்தொகைகள் அரசாங்க வருவாயில் வரவு வைக்கப்பட வேண்டும் என்றாலும், ரூ. 32,601,682 தொகை வைப்புக்கள் தொடர்பில் அமைச்சு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. |
| இ) 09 அக்டோபர் 2015 ஆம் திகதிய, அராசங்க நிதி திணைக்கள சுற்றறிக்கை PFD/RED/2015/08 பொது (i) இன் பிரிவு 4.3 (உ) (i) மற்றும் (ii) | இச்சுற்றறிக்கையின்படி அரசாங்க அலுவலர்களின் காலாவதியான முன்பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றாலும், அடையாளம் தெரியாத கடன் நிலுவை ரூ. 1,499,176 ஆனது, 05 ஆண்டுகளுக்கும் மேலாக மீட்கப்படாமல் இருந்தது. |
| ஈ) 29 டிசம்பர் 2017 ஆம் திகதிய அரசாங்க கணக்குகள் திணைக்கள சுற்றறிக்கை இல: 262/2017 | இளைப்பாறிய மற்றும் காலஞ்சென்ற அலுவலர்களின் முன்பணங்களைத் தீர்ப்பதற்கான உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவேண்டும் எனினும், காலஞ்சென்ற 06 அலுவலர்களின் கடன் நிலுவையான ரூ. 465,050 இல், ரூ 273,560 தொகை 05 வருடமாக தீர்க்கப்படாமலுள்ளது. |
| அரசாங்க கொள்வனவு விதிமுறைகள் 2006 இன் விதிமுறை 4.2.1 மற்றும் 4.2.2 | குறைந்தபட்சம் மூன்று வருட காலத்திற்கு திட்டமிடப்பட்ட கொள்முதல் நடவடிக்கைகளை பட்டியலிடும் முதன்மை கொள்முதல் திட்டம் மற்றும் காலவரிசைப்படி விவரிக்கும் ஒரு கொள்முதல் நேர அட்டவணை, ஒவ்வொரு தனிப்பட்ட கொள்முதல் நடவடிக்கையின் படிகள், தொடங்கிய தருணத்திலிருந்து அது முடிவடையும் வரை தயாரிக்கப்படவில்லை. |

**2.6 முன்பணங்கள் வழங்கலும் தீர்த்தலும்**

பின்வரும் அவதானிப்புகள் பெறப்பட்டன;

**அ) கட்டுநிதிக் கணக்கு, இல: 7002-0-0-035/13**

(i) 2013 இல் கட்டுநிதி கணக்கின் நிலுவையானது, முன்னைய வருடத்தில் ரூ.91,530,099 ஆக இருந்தபோதிலும், மீளாய்வு வருடத்தில் அது ரூ. 89,919,237 ஆகவிருந்தது ரூ.1,610,863 அல்லது 1.7% போன்ற ஒரு சிறு விகிதம் மட்டுமே தீர்க்கப்பட்டது.

(ii)

- 2013 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முந்தைய காலகட்டங்களுடன் தொடர்புடைய தீர்க்கப்படாத முன்பணங்களில், கட்டுநிதியின் மீதி ரூ. 89,919,237 ஆனது, வெளிநாட்டுத் தூதரகங்களில் பணிக்கமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளுக்கான 248 பாதுகாப்பு வைப்புத்தொகைகளுக்காக செலுத்தப்பட்ட ரூ. 60,051,898 முன்பணத்தை உள்ளடக்கியது. ரூ. 478,980 பாதுகாப்பு முன்பணத்தைத் தவிர, 248 பாதுகாப்பு முன்பணங்களில் எஞ்சியுள்ள மொத்தம் ரூ.59,572,918 தொகையான 247 பாதுகாப்பு முன்பணங்கள், வெளிநாட்டு தூதரகபணியக அலுவலர்களினால் பயன்படுத்தப்படாத வீடுகளுக்கான முன்பணங்களாக வைக்கப்பட்டன.

- பயன்படுத்தப்படாத வீடுகளுக்கு வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்புத் தொகையில் ரூ. 12,440,021 20 ஆண்டுகளைக் கடந்தது, ரூ. 43,292,731 10-20 ஆண்டுகள்

தாண்டியது மற்றும் மீதமுள்ள ரூ. 3,840,166 07 வருடங்களை கடந்திருக்கிறது. 01 செப்டெம்பர் 2009 ஆம் திகதிய உள்ளக சுற்றறிக்கை இல.250 இன் மூலமாக, வெளிநாட்டு நிருவாகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம், இந்த முன்பணங்களை மீட்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார் எனினும், அது பின்பற்றப்படவில்லை.

(iii) ரூ.29,840,341 மதிப்புள்ள தேவை நிமித்தமான 127 உப கட்டுநிதிகள், ரூ.89,919,237 கட்டுநிதி நிலுவையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதில் ரூ.699,358 ஆனது 20 வருடத்திற்கு மேலாகவும், ரூ.12,840,889 10-20 வருடங்களுக்குள்ளும், எஞ்சியுள்ள ரூ.16,327,094 ஆனது 07 வருடங்களுக்கு மேலாகவும் நிலுவையிலுள்ளது. நிதி விதிமுறை 371 இன் பிரகாரம், தேவை பூர்த்தியானவுடனேயே அந்த தேவை நிமித்தமான உப கட்டுநிதிகள் தீர்க்கப்பட்டிருத்தல் வேண்டுமெனினும், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், இவற்றில் 72 முன்பணங்கள், என்ன தேவைக்காக பெறப்பட்டன என்பது உறுதிப்படுத்தப்படவில்லை

**ஆ) இல. 7002-0-0-035/21 ஐக் கொண்ட கட்டுநிதிக் கணக்கு**

(i) மீளாய்வு வருடத்தின் இறுதி திகதியன்று, வெளிநாட்டு தூதரக பணியகங்களின் தீர்க்கப்படாத முன்பணங்களான ரூ. 365,235,118 ஆனது, ரூ. 919,382,691 கட்டுநிதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டது. இப்பெறுமதியில், ரூ. 344,210,756 ஆனது, வெளிநாட்டு தூதரக பணியகங்களில் நியமனம் பெற்ற அலுவலர்களுக்கு வழங்கப்படும் வீடுகளுக்கான பாதுகாப்பு முன்பணங்களை உள்ளடக்கியது.

(ii) ரூ. 19,536,652 ஆனது, வெளிநாட்டு தூதரக பணியகங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளுக்கான பாதுகாப்பு வைப்புத்தொகைகளில், அலுவலர்கள் வசிக்காத வீடுகளுக்காக செய்யப்பட்ட 46 வைப்புத்தொகைகளுடன் சம்பந்தப்பட்டதாகும். இப்பெறுமதியின் ரூ. 3,020,376 ஆனது, 10 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்களாகும். அதேவேளை, ரூ. 16,516,276 ஆனது, 04 இலிருந்து 10 வருடங்கள் வரை காலம் வரையில் உள்ள வைப்புக்களாகும்.

(iii) தூதரக பணியகங்களின் தீர்க்கப்படாத முன்பணங்களான ரூ.21,024,362 தொகையானது, தேவை நிமித்த உப கட்டுநிதிகளாகும். அந்த முன்பணங்களில் ரூ. 3,931,910 தொகையானது, 2018 ஆம் வருடத்திற்கு முந்திய காலத்துடனும், ரூ. 2,433,646 தொகை 2019 ஆம் வருடத்துடனும், ரூ. 4,272,499 2020 ஆம் வருட த்துடனும் சம்பந்தப்பட்டது. நிதி விதிமுறை 371 இன்படி, இந்த தேவை நிமித்த உப கட்டுநிதிகள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**2.6 வங்கி கணக்குகளின் தொழிற்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் பெறப்பட்டன;

(அ) வைப்புச் செய்யப்பட்ட ஆனால் பற்றுவைக்கப்படாத காசோலைகள்

பின்வரும் தூதரக பணியகங்களால் வைப்புச்செய்யப்பட்ட காசோலைகள், கணக்காய்வுத் திகதி வரையிலான காலம் வரையிலும் பணமாக்கப்படவில்லை. 3-11 வருடங்கள் கடந் நிலையிலும் கூட, இது தொடர்பில் எந் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

| தூதரக பணியகம் | கணக்கு இல. | நாணயம் | காசோலைகளின் எண்ணிக்கை | பெறுமதி | விவரணம் (தொடர்புபட்ட வருடம்) |
|---|---|---|---|---|---|
| கன்பரா | 012094004427941 | அவுஸ்திரேலிய டொலர் | 3 | 402 | 2010 மற்றும் 2011 |
| பேர்லின் | 100700000237745500 | யூரோ | 1 | 110 | 2017 |

(ஆ) பணம் கையாடல்/ திருட்டு

பின்வரும் தூதரக பணியகங்களால் கணக்காய்விற்கென சமர்ப்பிக்கப்பட்ட வங்கி நிலுவை அறிக்கைகளில் பணம் கையாடல் மற்றும் திருட்டு என குறிப்பிட்டிருந்த சம்பவங்கள் குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

| தூதரக பணியகம் | கணக்கு இல. | நாணயம் | பெறுமதி | விவரணம் |
|---|---|---|---|---|
| லொஸ் ஏஞ்சல்ஸ் | 7260025932 | அமெரிக்க டொலர் | 1,583 | 2011 இல் திருட்டு என குறிப்பிடப்பட்டுள்ளது |
| மொஸ்கோ | 40807840800000000255 | அமெரிக்க டொலர் | 105<br>50 | 2002 மற்றும் 2003 இல் பணம் வைப்புச்செய்யப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. |

### 2.7 பிரதான கணக்கியல் அதிகாரியால் வழங்கப்படவேண்டிய உத்தரவாதங்கள்

2018 இன் தேசிய கணக்காய்வுச் சட்ட இல.19 இன் பிரிவு 38 இன் பிரகாரம், பின்வரும் விடயம் தொடர்பில் பிரதான கணக்கியல் அதிகாரியால் உத்தரவாதங்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டுமெனினும், அவை வழங்கப்படவில்லை:

அமைச்சின் நிதிக் கட்டுப்பாடுகளுக்கான ஒரு வினைத்திறனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்று அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்படுவதுடன், அந் முறைமை சிறப்பாக தொழிற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு, காலத்திற்குக் காலம் அது மீளாய்வு செய்யப்பட்டு, அவசியமான மாற்றங்கள் செய்யப்படுவதை உறுதிப்படுத்தி, மீளாய்வுகள் எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு, அவற்றின் பிரதி ஒன்று கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிப்பதை பிரதான கணக்கியல் அதிகாரி உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். ஆனால், எந்தவொரு மீளாய்வும் மேற்கொண்டதாக எந்தவொரு அறிக்கையும் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

#### 3.1.1 எதிர்பார்த்த பெறுபேற்றினை அடைவதில் தோல்வி

பின்வரும் அவதானிப்புகள் பெறப்பட்டன;

அ) வெளிநாட்டமைச்சின் கொன்சியுலர் பிரிவில் பொதுமக்களால் வழங்கப்படும் க.பொத சா/த, உ/த சான்றிதழ்கள் மற்றும் பிறப்பு, திருமண மற்றும் இறப்பு சான்றிதழ்களை அத்தாட்சிப்படுத்தும் மின்னியல் தரவு அத்தாட்சிப்படுத்தல் முறைமை (e-DAS) ஐ, பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் பரீட்சைகள் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைக்கும் திட்டமானது, இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட திகதி வரையில் பூர்த்தி செய்யப்படவில்லை.

ஆ) அமைச்சின் கொன்சியுலர் பிரிவினால் வழங்கப்படும் சேவைகளுக்கான கட்டணங்களை மீளாய்வு செய்யும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதாக, இந்த ஆண்டுக்கான செயல் திட்டத்தில் திட்டமிடப்பட்டபோதும், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

### 3.2 சொத்து முகாமைத்துவம்

கொழும்பு 08, எல்விட்டிகல மாவத்தை இலுள்ள 117 வட்ட தொடர்மாடி வீட்டுத் தொகுதியில் 20 வீட்டு அலகுகளை கொள்வனவு செய்வதற்காக இவ்வமைச்சினால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூ. 70,638,545 தொகை செலுத்தப்பட்டபோதிலும், 17 வீட்டு அலகுகளுக்கான உறுதிகளைப் பெறுவதற்கான நடவடிக்கை இதுநாள் வரையில் எடுக்கப்படவில்லை.

### 3.3 இழப்புகள் மற்றும் பாதிப்புகள்

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரக பணியகங்களில் இடம்பெற்ற 55 சம்பவங்களால் ஏற்பட்ட ரூ.29,185,385 தொகை இழப்புகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட கால ஆய்வின்படி, இழப்புகள் மற்றும் கைவிடலின் அறிக்கையின் இல.02 நிகழ்ச்சி நிரலின் கீழ், மீட்கப்படவேண்டிய, கழிக்கப்படவேண்டிய

அல்லது கைவிடப்படவேண்டியவைகள் அவதானிக்கப்பட்டது, அத்தொகையிலிருந்து ரூ.2,254,421 ஆனது 10 வருடங்களுக்கும் மேலாகிவிட்ட அதேநேரம், 5 இலிருந்து 10 வருடங்கள் வரையான காலப்பகுதியில் ரூ.21,626,285 எஞ்சியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

### 3.4 நிருவாக பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் பெறப்பட்டன;

அ) அவுஸ்திரேலியா, சுவீடன் மற்றும் கென்யா ஆகிய நாடுகளில் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள் இருந்தபோதிலும், அவற்றை உகந்தளவில் பயன்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆ) 07 ஆகஸ்ட் 2018 ஆம் திகதிய கட்டளை இல.07 குறித்த அரசாங்க கணக்கு குழுவானது, தூதரக பணியகங்களுக்கு அலுவலர்களை நியமிப்பதில், ஒவ்வொரு நாட்டிற்குமான முறையான பிரிவுகளை ஆராய்ந்து ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டிருந்த போதிலும், வருட முடிவில் கூட அந் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### அலுவலர் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் பெறப்பட்டன;

அ) மீளாய்வுக்குட்பட்ட வருடத்திற்காக இவ்வமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின்படி, அங்கீகரிக்கப்பட்ட நடப்பு ஆளணி பின்வருமாறு:

| ஆளணியின் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | நடப்பு ஆளணி | வெற்றிடங்கள் | ஆளணி மிகை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 318 | 183 | 135 | |
| உயர்தர நிலை | 08 | 01 | 07 | |
| இரண்டாம் நிலை | 369 | 398 | | 29 |
| ஆரம்ப நிலை | 125 | 117 | 08 | |
| | **820** | **699** | **150** | **29** |

இரண்டாம் நிலையில் அங்கீகரிக்கப்பட்ட 369 ஆளணியில் முறையே 74 அபிவிருத்தி அலுவலர்களும், 169 முகாமைத்துவ சேவை அலுவலர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் நடப்பு எண்ணிக்கை முறையே 85 மற்றும் 207 ஆக இருப்பதனால், மிகை 12 மற்றும் 38 ஆகவுள்ளது.

ஆ) இலங்கை ஜனநாயக குடியரசின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடத்தை விதிகள் அத்தியாயம் xiii இன் உறுப்புரை 154 இன்படி, 20 பெப்ரவரி 2009 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல:1589/30 இல், அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்ற ஒருவரை மீள பதவியில் அமர்த்தும் அதிகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு மட்டுமே உள்ளது, மற்றும் உறுப்புரை 157 இன்படி, அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர், ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே மீளவும் வேலைக்கு அமர்த்தப்படலாம். அம்மாதிரியான நியமனமானது, ஒரு வருடத்திற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளபோதும், 28 ஆகஸ்ட் 2019 அன்று ஓய்வுபெற்ற ஒரு அதிகாரியை, 01 செப்டெம்பர் 2019 இலிருந்து மூன்று வருடங்களுக்கு ரொறொண்டோ துணை உயர்ஸ்தானிகரகத்தில், தாய்நாட்டில் நியமனம் பெற்ற தன் உதவியாளராக நியமனம் செய்தமையானது, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கணக்காய்வாளர் நாயகம்

* இந்த வரைவு அறிக்கையின் கணக்காய்வாளர் நாயகத்தின் இறுதி அறிக்கையானது, (சிங்கள மூலம்) இம்முழு அறிக்கையின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 04

### செயலாற்றுகைச் சுட்டிகள்

### அமைச்சின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)

**இருதரப்பு, பிராந்திய மற்றும் பல்தரப்பு ஈடுபாட்டின் மூலம் வெளிநாடுகளில் இலங்கையின் தேசிய நலனை வலுப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்குமான 2021 ஆம் ஆண்டின் செயல் திட்டத்தின்படி, அமைச்சினால் பயன்படுத்தப்படும் பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளின் வெளியீட்டின் சுருக்கம்**.

